Registered as Newspaper

# உதயன் சஞ்சீவி

சுடர் : 36 கதிர் : 136 | ஞாயிற்றுக்கிழமை | பங்குனி 29 நாள் 11 ஏப்ரல் 2021 | வள்ளுவர் ஆண்டு 2051

பக்கங்கள்: 20+24 விலை : ரூ.40 செய்தி : 021 493 0000 விளம்பரம்: 021 493 1111

கொரோனாப் பெருந்தொற்று எதிரொலி

# இழுத்து மூடப்பட்டன யாழ். திரையரங்குகள்

யாழ்ப்பாணம், ஏப்ரல் 11

யாழ். மாவட்டத்தில் அனைத்துத் திரையரங்குகளும் மறு அறிவித்தல் வரை மூடப்படுகின்றன என்று வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார்.

19

யாழ்ப்பாணத்தில்

## 17 பேருக்கு தொற்றுறுதி



யாழ்ப்பாணம், ஏப். 11

யாழ்ப்பாணத்தில் மேலும் 17 பேருக்கு கொரோனாத் தொற்று உள்ளமை நேற்று சனிக்கிழமை கண்டறியப்பட்டுள்ளது என்று வடமாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர்

19

## தடைசெய்யப்பட்ட மாத்திரைகளுடன் மூவர் கைது

வவுனியா, ஏப். 11

வவுனியா நகரப்பகுதியில் அமைந்துள்ள வர்த்தக நிலையமொன்றில் தடைசெய்யப்பட்ட மாத்திரைகளை வைத்திருந்த

19

சிமெந்துத் தொழிற்சாலையின்

## 100 கோடி பெறுமதியான இரும்புகளில் மோசடியா?

யாழ்ப்பாணம், ஏப். 11

யாழ்ப்பாணம் - காங்கேசன்துறை சிமெந்துத் தொழிற்சாலையில் சுமார் 100 கோடி ரூபா பெறுமதியான இரும்புகளைதென்னிலங்கையைச் சேர்ந்தவர்களுக்கு வழங்கு

19

## சைவ சமயத்துக்கு முன்னுரிமைகோரி 11 மாவட்டங்களில் நேற்றுப் போராட்டம்

கொழும்பு, ஏப். 11

அரசமைப்பில் சைவ சமயத்துக்கு முன்னுரிமை கோரி நாடு முழுவதும் நேற்று உணவுத் தவிர்ப்புப் போராட்டம் நடத்தப்பட்டது. யாழ்ப்பாணம், சாவகச்சேரி மறவன்புலவு சச்சிதானந்தனின் ஏற்பாட்டிலேயே இந்த உணவு

19

பாற்பண்ணை கிராமத்தில்

## பாரதிபுரத்தில் கண்காணிப்பு ஏனையவை விடுவிக்கப்படும்

யாழ்ப்பாணம், ஏப். 11

திருநெல்வேலி பாற்பண்ணை கிராமத்தில் பாரதிபுரம் பகுதி தவிர்ந்த ஏனைய பகுதிகள் கண்காணிப்பு வலயத்தி

19

புனர்வாழ்வு பெற்ற

## போராளியினுடைய பெயரில் வீதி; பயங்கரவாத தடைச்சட்டம் பாயுமாம்

பிரதேச சபைத் தவிசாளருக்கு பொலிஸார் கைது மிரட்டல்

கிளிநொச்சி, ஏப். 11

கிளிநொச்சி சாந்தபுரத்தில் புனர்வாழ்வு பெற்ற முன்னாள் போராளியின் பெயரில் வீதி திறக்கப்பட்டுள்ளது. வீதியின் பெயரை மாற்றாவிடின், தமிழீழ விடுதலைப் புலிகளை மீளுருவாக்கம் செய்ய முற்பட்ட குற்றச்சாட்

19




## நீதிமன்றத்தினுடைய முடிவுகள் டக்ளஸூக்கு எவ்வாறு தெரியும்?

விக்னேஸ்வரன் எம்.பி. சாட்டையடி

யாழ்ப்பாணம்.ஏப்.11

மணிவண்ணன் யாழ் நீதிமன்றத்தில் பிணையில் விடுதலை செய்யப்படுவதற்கு முன்னரேயே அவர் பிணையில் விடுதலை செய்யப்படுவார் என்றும் பொலிஸார் இவ்

19




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# அரசியல் பழிவாங்கல்கள்: அறிக்கை நாடாளுமன்றில்

எதிர்க்கட்சிகள் எதிர்ப்பு

**கொழும்பு, ஏப்.11**

**கடந்த ஆட்சியில் 2015 ஆம் ஆண்டு முதல் 2019ஆம் ஆண்டுவரை நடந்தவை என்று கூறப்படும் அரசியல் பழிவாங்கல்கள் தொடர்பில் விசாரணைகள் நடத்துவதற்காக நியமிக்கப்பட்ட ஜனாதிபதி ஆணைக்குழுவின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துவதற்கான யோசனை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ளது.**

இந்த யோசனை பிரதமர் மஹிந்த ராஜபக்சவால் எதிர்வரும் 21ஆம் திகதி நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ளது. இந்த விவகாரம் தொடர்பில் எதிர்வரும் 22 மற்றும் 23 ஆம் திகதிகளில் நாடாளுமன்றில் விவாதம் நடத்தப்படலாம் என்று அறிய முடிகின்றது.

அதேவேளை, அரசியல் பழிவாங்கல்கள் தொடர்பாக விசாரணை நடத்துவதற்காக நியமிக்கப்பட்ட ஜனாதிபதி ஆணைக்குழுவின் அறிக்கை அரசியல் உள்நோக்கம் கொண்டது.

எதிரணி உறுப்பினர்கள் 10 பேரின் குடியுரிமையைப் பறிப்பதற்கான யோசனையும் அதில் உள்ளது என்று எதிர்க்கட்சிகள் குற்றஞ்சாட்டி வருகின்றன.

இந்த ஆணைக்குழு நீதிமன்ற அதிகாரத்தைக் கூட சவாலுக்கு உட்படுத்தியுள்ளது என்றும், அந்த ஆணைக்குழுவின் பரிந்துரைகள் நடைமுறைப்படுத்துவதை தடுப்பதற்கான சட்ட நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படவுள்ளன என்றும் எதிர்க் கட்சிகள் தெரிவித்துள்ளன. (எ-44)

# பங்காளிகளை சந்திக்கிறார் பிரதமர் மஹிந்த

கொழும்பு, ஏப். 11

சிறிலங்கா பொதுஜன பெரமுன தலைமையிலான அரசில் அங்கம் வகிக்கும் பங்காளிக்கட்சிகளின் தலைவர்களுக்கும், பிரதமர் மஹிந்த ராஜபக்சவுக்குமிடையில் எதிர்வரும் 19 ஆம் திகதி முக்கியத்துவமிக்க சந்திப்பொன்று இடம் பெறவுள்ளது.

இச்சந்திப்பின்போது எட்டப்படும் தீர்மானத்தின் அடிப்படையிலேயே கூட்டணியின் தலைவிதி நிர்ணயிக்கப்படும் என அரசியல் வட்டாரங்களில் இருந்து அறியமுடிகின்றது.

அரசில் அங்கம் வகிக்கும் சிறிலங்கா சுதந்திரக்கட்சி உட்பட 11 கட்சிகள் இணைந்து மே தின நிகழ்வை தனியாகவும், ஆளுங்கூட்டணியின் பிரதான பங்காளியான சிறிலங்கா பொதுஜன பெரமுன தனியாகவும் மே தின நிகழ்வுகளை நடத்துவதற்கு தயாராகிவருகின்றமை ஆளுந்தரப்புக்குள் பெரும் சலசலப்பை ஏற்படுத்தியுள்ளது. அதேபோல மாகாணசபை தேர்தல் முறைமை தொடர்பில் ஆளுந்தரப்பால் முன்வைக்கப்பட்ட புதிய யோசனைக்கு 11 பங்காளி கட்சிகளும் எதிர்ப்பை வெளியிட்டுள்ளன.

இவ்வாறானதொரு பின்புலத்திலேயே ஆளுங்கட்சி பங்காளிகளை பிரதமர் சந்திக்கின்றார்.

கூட்டணிக்குள் ஏற்பட்டுள்ள முரண்பாடுகளுக்கு இதன்போது முடிவு கட்டப்படலாம் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. (ஒ.44)

# மைத்திரி –விமல் இரகசிய சந்திப்பு

**பரபரப்பாகும் கொழும்பு அரசியல்**

கொழும்பு, ஏப். 11

ஆளும் கூட்டணிக்குள் மோதல்கள் வலுப்பெற்று வரும் நிலையில், சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவரும் முன்னாள் ஜனாதிபதியுமான மைத்திரிபால சிறிசேனவுக்கும், தேசிய சுதந்திர முன்னணியின் தலைவரும் அமைச்சருமான விமல் வீரவன்சவுக்கும் இடையில் இரகசிய சந்திப்பு நடைபெற்றுள்ளது என அரசியல் வட்டாரங்களில் தெரிவிக்கப்படுகின்றது.

ஆளும் கூட்டணியிலுள்ள சிறிலங்கா பொதுஜன பெரமுன தவிர்ந்த ஏனைய கட்சிகளின் தலைவர்கள், சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் தலைமையகத்தில் கடந்த 8ஆம் திகதி சந்தித்துக் கலந்துரையாடினர்.

இந்தச் சந்திப்புக்குப் பின்னரான ஓர் நாளிலேயே மைத்திரி, விமல் சந்திப்பு நடைபெற்றுள்ளது எனக் கூறப்படுகின்றது. (ஒ.இ)

# பிரேத அறைக்குள் உயிர்த்தெழுந்த நபர்

மருத்துவமனையில் பரபரப்பு

கொழும்பு,ஏப்.11

உயிரிழந்து விட்டார் என்று பிரேத அறையில் சேர்க்கப்பட்டிருந்த நபர், திடீரென உயிர்த்தெழுந்ததால், மருத்துவமனையில் பரபரப்பு ஏற்பட்டது.

நீர்கொழும்பு மருத்துவமனையில் இந்தச் சம்பவம் நடந்துள்ளது. சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டிருந்த 40 வயதுடைய நபரை, பரிசோதித்த மருத்துவர் அவர் உயிரிழந்து விட்டார் என்று தெரிவித்து, அவரைப் பிரேத அறைக்கு மாற்றுமாறு தெரிவித்துள்ளார்.

பிரேத அறையில் சேர்க்கப்பட்டிருந்த நபரின் அசைவை அடுத்து, குடும்பத்தினர் கூச்சலிட்டு அழுதுள்ளனர்.

அந்த நபர் தான் உயிரிழக்கவில்லை என்பதை உறுதிப்படுத்தும் வகையில், தனது கைகளை உயர்த்தியுள்ளார். இதனை அடுத்து மருத்துவமனை ஊழியர்கள் அவரை உடனடியாக சிகிச்சைக்கு அழைத்துச் சென்றனர்.

குறித்த நபரின் உடலில் சீனியின் அளவு குறைந்த நிலையில், அவர் கோமா நிலையில் இருந்துள்ளமை பரிசோதனைகளில் தெரியவந்துள்ளது.

இந்த நிலையில் அவர் உயிரிழந்து விட்டார் என்று தெரிவித்த மருத்துவருக்கு எதிராக ஒழுங்காற்று நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்று மருத்துவமனையின் நிர்வாகப்பிரிவு தெரிவித்துள்ளது. (ப-4)

# சி.ஐ.டி. பணிப்பாளராக ரொஹான் நியமனம்

கொழும்பு,ஏப்.11

குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் புதிய பணிப்பாளராக சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ரொஹான் பிரேமரத்ன நியமிக்கப்பட்டுள்ளார்.

உடன் நடைமுறைக்கு வரும் வகையில் இந்த நியமனம் வழங்கப்பட்டுள்ளது என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளரும், பிர திப் பொலிஸ்மா அதிபருமான அஜித் ரோஹண தெரிவித்துள்ளார்.

இந்தத் திணைக்களத்தின் பணிப்பாளராகக் கடமையாற்றிய நிஷாந்த சொய்ஸா, கொழும்பு குற்றத்தடுப்புப் பிரிவின் பணிப்பாளராக இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார். அவரது வெற்றிடத்துக்கு சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ரொஹான் பிரேமரத்ன நியமிக்கப்பட்டுள்ளார். (ப-4)

# மாணவர்கள் கௌரவிப்பு

கிளிநொச்சி,ஏப்.11

கிளிநொச்சி திருவையாறு மகா வித்தியாலயத்தில் கடந்த வருடம் தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களுக்கான கௌரவிப்பு நிகழ்வு கடந்த புதன்கிழமை நடைபெற்றது.

பாடசாலை அதிபர் கி.விக்னராஜா தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் விருந்தினர்களாக வித்தியாலயத்தின் முன்னாள் அதிபர்களான க.மதுரநாயகம் மற்றும் ப.சிறிதரன் ஆகியோர் கலந்து கொண்டனர். (ஐ-222)

# ஜெனிவா தீர்மானங்களில் தமிழருக்கு தொடர் ஏமாற்றமே!

வெளியில் கூறமுடியாமல் திக்குமுக்காடுகின்றோம் என்கிறார் சிறிதரன் எம்.பி.

கொழும்பு, ஏப். 11

ஐ.நா. தீர்மானங்களில் சர்வதேச விசாரணை உள்ளது என்று நாம் மக்களிடம் சொல்லிக் கொண்டிருப்போம். ஆனால் அப்படி எதுவும் நடப்பதில்லை. அதில் நாம் ஏமாற்றப்பட்டு, இலங்கை அரசுகளே வெற்றியடைகின்றன. இவ்வாறு தெரிவித்துள்ளார், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன். ஜெனிவா விடயங்கள் பலரால் கையாளப்பட வேண்டியவை. நாம் கூடியிருந்து கதைக்க வேண்டும். அதை வழிநடத்தவேண்டியவா தலைவர் சம்பந்தன். ஆனால் அவருக்கு முதுமையால் இயலாமை ஏற்பட்டுள்ளது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பி னர்கள் பலர் இந்த விடயங்களை மனதுக்குள் வைத்துப் பொருமிக் கொண்டிருக்கிறார்கள். அதனை வெளியில் சொல்ல முடியாமல் இருக்கிறார்கள் என்று சிறிதரன் தெரிவித்தார். ஊடகம் ஒன்றுக்கு நேற்று வழங்கிய நேர்காணலில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

“காணாமல் ஆக்கப்பட்டோர் அலுவலகத்தை கொண்டுவந்தது, ஐ.நா. பிரேரணையி லிருந்து தப்பிக்கவே. இதில் தாம் வெற்றியடைந்து விட்டோம் என்று முன்னாள் அமைச்சர் மங்கள சமரவீர அண்மையில் ஒரு கருத்தைக் கூறியிருந்தார். அரசு வெற்றியடைந்தால் தமிழர்கள் தோல்வியடைந்தார்கள் என்பது தானே பொருள். 2015ஆம் ஆண்டு தீர்மானத்தில் சர்வதேச விசாரணை உள்ளது, சர்வதேச விசாரணை நடக்கப் போகிறது என நாம் சொன்னோம். ஆனால், நாம் ஏமாற்றப்பட்டுள்ளோம். 2015 ஆம் ஆண்டில் இந்தத் தீர்மானத்தில் சர்வதேச விசாரணை உள்ளது என்று நாம் அடித்துச் சொன்னோம். ஆனால் ஒரு [illegible]கூட நகரவில்லை. காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கான அலுவலகம் இழுத்து மூடப்படுகிறது.

தற்போது கொண்டு வரப்பட்டுள்ள தீர்மானம் தொடர்பாக கஜேந்திரகுமார் பொன்னம்பலம் சொல்பவற்றில் உண்மையுண்டு. இந்தத் தீர்மானத்தில் நம்பிக்கையீனமுண்டு. இந்த தீர்மானங்களின் மூலம் நாம் ஏமாற்றப்படுகிறோம். சர்வதேச விசாரணை நடந்து விட்டது என்று கூறுகின்றார்கள். அது எப்பொழுது நடந்தது, யார் நடத்தியது என்பதை நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர்கூட அறியவில்லை. இது ஒருவர் அல்லது இருவர் கையாளும் விடயமல்ல என்பதை சம்பந்தன் ஐயா புரிந்து கொள்ள வேண்டும்- என்றார். (த-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







## சம்பத் Dream Planner உடன் உங்களதும் பிள்ளையினதும் கனவுகளை நனவாக்கிடுங்கள்.

தனிநபர் முதலீட்டு திட்ட பெறுமதி (ரூ.)

| முதலீட்டு காலம் | 50,000/- | 100,000/- | 500,000/- | 1,000,000/- | 5,000,000/- |
|---|---|---|---|---|---|
| | மாதாந்த தவணைக் கட்டணம் (ரூ.) | | | | |
| 2 | 1,952 | 3,903 | 19,515 | 39,029 | 195,144 |
| 3 | 1,260 | 2,520 | 12,598 | 25,196 | 125,980 |
| 4 | 915 | 1,830 | 9,149 | 18,298 | 91,486 |
| 5 | 709 | 1,417 | 7,085 | 14,169 | 70,841 |

தனிநபர் முதலீடுகளுக்கு 6.25% அதியுயர் வட்டி

சிறுவர் முதலீட்டு திட்ட பெறுமதி (ரூ.)

| முதலீட்டு காலம் | 500,000/- | 1,000,000/- | 2,000,000/- | 5,000,000/- | 10,000,000/- |
|---|---|---|---|---|---|
| | மாதாந்த தவணைக் கட்டணம் (ரூ.) | | | | |
| 5 | 6,991 | 13,981 | 27,962 | 69,905 | 139,809 |
| 6 | 5,621 | 11,242 | 22,484 | 56,210 | 112,420 |
| 7 | 4,647 | 9,293 | 18,586 | 46,464 | 92,928 |
| 8 | 3,921 | 7,841 | 15,681 | 39,201 | 78,401 |
| 9 | 3,359 | 6,717 | 13,434 | 33,585 | 67,170 |
| 10 | 2,913 | 5,825 | 11,650 | 29,123 | 58,246 |

சிறுவர் முதலீடுகளுக்கு 6.75% அதியுயர் வட்டி

உங்கள் தேவைக்கேற்ப மேலுள்ள முதலீட்டுத் திட்டம் ஒன்றினை தெரிவு செய்து, மாதாந்தம் ஒரு நிலையான தொகையை உங்களதும், உங்கள் பிள்ளையினதும் எதிர்காலத்திற்காக சேமித்து அதியுயர் வட்டி வீதங்களுடன் கனவுகளை நனவாக்கிடுங்கள்.

- ஆரம்ப வைப்பு குறைந்தபட்சம் ரூ.2000
- தவணை கொடுப்பனவு தொகைகள் செலுத்தப்படும்போது கிட்டிய ரூ.100 இற்கு அண்ணளவாக்கப்படும்.
- முதிர்வு தொகை தவணை கட்டண திகதிக்கு ஏற்ப வேறுபடும்.

சம்பத் வங்கி
எதிர்காலத்தின் முன்னோடிகள்

0112 30 30 50 | www.sampath.lk | Sampath Bank Fitch Ratings AA-(lka)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்



## ஆத்திரக்காரனுக்கு புத்தி மட்டு

அருண்டவன் கண்ணுக்கு இருண்டதெல்லாம் பேய் என்பது ஒரு மரபு வழித் தமிழ்ப் பழமொழி. இலங்கையில் பேரினவாத மேலாதிக்க சிந்தனை கொண்ட அனைவரதும் மட்டுமல்ல அவர்களின் அடி தொடர்ந்து ஆட்சி அதிகார சுகபோக வசதிகளை அனுபவித்துவரும் பலரது நிலை இதுதான் என்பதை ஆட்சியாளரின் அண்மைக் கால செயற்பாடுகளில் பெரும்பாலானவை ஊர்ஜிதம் செய்கின்றன.

சுயசிந்தனையின்றிச் செயற்படுகின்ற அவர்களது பலவீனமானதும் பரிதாபகரமானதுமான நிலையே இதற்குக் காரணம் எனலாம். அது தேசிய ரீதியில் ஆபத்தானதும் சர்வதேச மட்டத்தில் கடுமையான கண்டனத்துக்கும் கவலைக்குரியதுமாக வெளிப்படையாகவே விமர்சிக்கப்படும் விடயமாகியுள்ளது. அண்மையில் ஜெனிவாவில் நடைபெற்று முடிந்த மனித உரிமைகள் பேரவை அமர்வில் இலங்கைக்கு எதிராக நிறைவேற்றப்பட்ட தீர்மானமானது ஆட்சியாளரை மிகவும் கிலேசம்கொள்ள வைத்துள்ளது என்றால் மிகையில்லை.

தெனாவெட்டாக 'நாம் யாருக்கும் கட்டுப்படோம்! எவரும் எமது இறைமையில் தலையிட முடியாது! ஐ.நா. தீர்மானத்தை அனைத்து தரப்பினரும் ஒன்று திரண்டு எதிர்க்க வேண்டும்' என ஜனாதிபதி முதல் அமைச்சரவைப் பிரமுகர்கள் வரை வீராவேச வசனங்களை அன்றாடம் பேசியும், அறிக்கைகள் விட்டும் வருகின்றனர். அவர்களிடம் அதிகார பலம் அதீதமாக இருந்தாலும் ஆன்மபலம் இல்லாத காரணத்தால் தேசிய ரீதியிலான எரியும் பிரச்சினைகளில் அவர்கள் தொலைநோக்கு சிந்தனையில்லாது தடுமாறி முடிவெடுக்கும் நிலைமையே ஏற்பட்டுள்ளது.

ஜெனிவாவின் தீர்மான முடிவுகளில், பின்னணிச் சக்திகளாக புலம்பெயர் தமிழ் அமைப்புகளும் விடுதலைப் புலிகளின் ஆதரவுச் சக்திகளும் சில சர்வதேச நாடுகளும் இயங்கின என்ற அரசின் விடாப்பிடியான நிலைப்பாடு ஆட்சியாளரின் சிந்தனையை நியாயத்தின்பால் செல்ல அனுமதிப்பதாக இல்லை. இதுவே இலங்கையின் ஆட்சியாளரைத் தொடர்ந்தும் தவறான முடிவுகளை நோக்கித் தள்ளி வருகின்றது.

வெறுமனே பயங்கரவாதத் தடைச் சட்டத்தை, தொடர்ந்து தமது பாதுகாப்புக்கான ஆயுதமாகத் தக்க வைத்துக்கொண்டு சிறுபான்மை இனத்தவரை அச்சுறுத்தி புலிப் பயங்கரவாதம், இஸ்லாமிய அடிப்படைவாதம் போன்ற வார்த்தைப் பிரயோகங்களை மேற்கொண்டு அதனால் பௌத்த சிங்கள மக்களை மிரள வைத்தும், தமது பாரம்பரிய அரசியல் அதிகார இருப்பை தக்கவைத்துக் கொள்ளலாம் என்று அரசு நம்பக்கூடும்.

அது எவ்வளவு ஆபத்தானது என்பதை ஒரு காலத்தில் இதே நிறைவேற்று அதிகாரக் கதிரைகளில் அமர்ந்து ஆட்சி செய்த ஜே.ஆர். முதல் மைத்திரி வரையிலானோருக்கு ஏற்பட்ட வரலாற்றுப் பின்னடைவுகளை தற்போதைய அதிகார பீடத்தவர் மீள ஒரு தடவை அசைபோட்டுப் பார்த்தல் நலம்.

இந்த வகையில் யாழ். மாநகர முதல்வர் மணிவண்ணன் பயங்கரவாதத் தடுப்புப் பிரிவினரால் கைதுசெய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டு விசாரிக்கப்பட்ட பின் உடனேயே விடுவிக்கப்பட்ட சம்பவத்தை அணுக முடியும். ஜனநாயகத்தில் நம்பிக்கைகொண்ட சக்திகளும் உண்மையாகவே சட்டம், ஒழுங்கு நீதித்துறைசார் நியாயஸ்தர்களும் இவ்விடயத்தை எப்படிப் பார்க்கிறார்கள் என்பது அரசுக்கும் புரியாததல்ல.

ஆனால் வெறும் வீம்புக்கு மேற்கொள்ளும் நடவடிக்கைகள் யாவும் ஆட்சியாளருக்கு அபகீர்த்தியையும் அரசின் மீது அவநம்பிக்கையையும் மட்டுமே ஏற்படுத்தும் என்பதை சொல்லி வைக்க விரும்புகிறோம்.

ஏன் மணிவண்ணனைக் கைது செய்தனர்? அவர் எவ்வாறு விசாரிக்கப்பட்டார்? ஏன் உடனடியாக விடுதலை செய்யப்பட்டார்? என்ற கேள்விகளுக்கான விடை தேடல் என்பது அரசின் கையறு நிலையை வெளிப்படுத்துவதாகவே அமையும். ஆத்திரக்காரனுக்கு புத்தி மட்டு என்பதை மணிவண்ணன் விடயத்திலும் நிரூபித்து சர்வதேசத்தின் முன்னால் மூக்குடைபட்டுள்ளது இலங்கை அரசாங்கம். இப்படி அவமானப்படுவது இலங்கைக்கு ஒன்றும் புதிதல்லவே.



# வடக்கில் தொல்பொருள் அகழ்வுப் பணி நேரில் பார்வையிட்டே அனுமதிக்கப்படும்

*இராஜாங்க அமைச்சர் விதுர விக்ரமநாயக்க தெரிவிப்பு*

கொழும்பு, ஏப்.11

**கிளிநொச்சி உருத்திரபுரீஸ்வரர் ஆலயம் மற்றும் புத்தூர் நிலாவரைக் கிணறு ஆகியவற்றை நேரடியாக பார்வையிடாமல் அகழ்வுப் பணிகள் இடம்பெறமாட்டாது என தொல்பொருள் இராஜாங்க அமைச்சர் விதுர விக்ரமநாயக்க உறுதி அளித்துள்ளார் என்று தெரிவிக்கப்படுகிறது.**



யாழ்.மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களில் திடீரென தொல்பொருள் திணைக்களம் தமிழ் மக்களுடைய பிரதேசங்களில் தமது செயற்பாடுகளை முன்னெடுப்பது தொடர்பில் மக்கள் அதிர்ச்சி அடைந்துள்ளனர். இது தொடர்பான கண்டனங்களும் வெளியிடப்பட்டுள்ளன.

இது தொடர்பில் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை தொல்பொருள் இராஜாங்க அமைச்சர் விதுர விக்ரமநாயக்க தலைமையில் கொழும்பில் இடம்பெற்ற கலந்துரையாடலின்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது;

வடக்கில் இடம்பெறும் தொல்பொருள் விடயங்கள் தொடர்பாக அந்தந்த மாவட்டங்களின் பிரதேச மற்றும் மாவட்ட அபிவிருத்தி கலந்துரையாடல்களுக்கு தெளிவுபடுத்த பணிப்பாளர் ஒருவர் நியமிக்கப்படுவார். தற்போது சர்ச்சையில் உள்ள உருத்திரபுரீஸ்வரர் ஆலயம் மற்றும் நிலாவரை கிணறு ஆகிய பிரதேசங்களுக்கு நான் நேரடியாக சென்று ஆராயும் வரை அகழ்வாராய்ச்சிகள் மேற்கொள்ளப்படமாட்டாது. தொல்பொருள் சம்பந்தமான அகழ்வாராய்ச்சிகள் இடம்பெறும் பகுதிகளில் உள்ள பிரதேச சபை, பிரதேச செயலகம் ,மாவட்டச் செயலகம் ஆகியவற்றுக்கு அகழ்வாராச்சி தொடர்பாக திணைக்களத்தால் முன்கூட்டியே அறிவுறுத்தப்பட வேண்டும் - என்றார். (ப-20)

# சா/த, உ/த பரீட்சைகள் பிற்போடப்பட்டன

கொரோனா நெருக்கடி காரணமாக கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சை மற்றும் உயர்தரப் பரீட்சை என்பவை பிற்போடப்பட்டுள்ளன என்று கல்வி அமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

உயர் தரப் பரீட்சைகள் ஒக்ரோபர் மாதம் 4ஆம் திகதி ஆரம்பமாகி 30ஆம் திகதி வரை நடைபெறும். சாதாரண தரப் பரீட்சைகள் 2022ஆம் ஆண்டு ஜனவரி மாதம் இறுதி வாரத்தில் ஆரம்பிக்கப்படும். ஐந்தாம் தரப் புலமைப் பரிசில் பரீட்சையை ஒக்ரோபர் மாதம் 3ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நடத்த திட்டமிடப்பட்டுள்ளது.

வருடத்தில் 200 நாள்கள் பாடசாலைகளில் கற்றல் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட வேண்டும். கொரோணாவால் உரிய காலத்தில் தேசிய பரீட்சைகள் எவையும் கடந்த ஆண்டு இடம்பெறவில்லை. கடந்த ஆண்டுக்கான சாதாரண தரப் பரீட்சையே இந்த ஆண்டுதான் நடைபெற்றது. 2021ஆம் ஆண்டு பாடசாலைகளில் கற்றல் நடவடிக்கைகளை 150 நாள்களாக குறைக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

2021 ஆம் ஆண்டுக்கான தேசிய பரீட்சைகளுக்கு தோற்றும் பரீட்சார்த்திகள் பரீட்சைக்குத் தயாராக போதுமான கால அவகாசம் வழங்கப்பட்டுள்ளது. வழங்கப்பட்டுள்ள காலத்தை மாணவர்கள் சிறந்த முறையில் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் - என்றார். (ஒ.இ)

# தென்னைகளை வெட்டத் தடை

*அடுத்த வாரம் வர்த்தமானி*

கொழும்பு,ஏப்.11

தென்னை மரங்களை வெட்டுவதற்குத் தடை விதிக்கும் வர்த்தமானி அறிவிப்பு, அடுத்த வாரம் வெளியிடப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

நாட்டுக்குத் தேவையான தேங்காய் எண்ணெயில் 80 வீதம் வெளிநாடுகளில் இருந்தே இறக்குமதி செய்யப்படுகின்றது. இலங்கையில் தேங்காய் எண்ணெய் உற்பத்தியை அதிகரிப்பதற்கு தென்னை மரங்கள் பற்றாக்குறையாக உள்ளமையே அதற்குக் காரணம்.

இந்த நிலையில் தென்னை மரங்களைப் பாதுகாக்க பெருந்தோட்டத்துறை அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது என்று அறியமுடிகிறது. (ப-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







# கொவிட் கட்டுப்பாட்டை மீறி போட்டிகள்; தடுத்து நிறுத்தியது சுகாதாரத் தரப்பு

## வடமராட்சி கற்கோவளம் பகுதியில் சம்பவம்

பருத்தித்துறை, ஏப். 11

கொவிட் கட்டுப்பாட்டை மீறும் வகையில் நடைபெற்ற கழகத் துடுப்பாட்ட தொடர் போட்டிகளை பருத்தித்துறை சுகாதாரப் பிரிவினர் நேற்றுத் தடுத்து நிறுத்தினர். அதில் விருந்தினர்களாகக் கலந்துகொண்டிருந்த அரச அதிகாரிகளையும் வெளியேற்றினர்.

சுகாதாரத் திணைக்களத்தின் அனுமதியின்றி, கொவிட் 19 கட்டுப்பாடுகளை மீறும் வகையில் கற்கோவளம் பகுதியில் நடத்தப்பட்ட கழகத் துடுப்பாட்டத் தொடரே தடுத்து நிறுத்தப்பட்டது என்று தெரிவிக்கப்பட்டது.

பருத்தித்துறை பொதுச் சுகாதாரப் பரிசோதகர் ஆ.ஜென்சன் றொனால்ட் தலைமையில் சென்ற பொதுச் சுகாதாரப் பரிசோதகர் குழுவினர், குறித்த போட்டிகளைத் தடுத்து நிறுத்தினர். கொரோனாப் பரவல் யாழ்ப்பாணம் மாவட்டத்தில் தீவிரமாகியுள்ள இந்தவேளையில், சமூகப் பொறுப்புணர்வற்று நோய்க்கட்டுப்பாட்டு விதி முறைகளை மீறி முகக்கவசம் அணி



யாது, தனியாள் இடைவெளி பேணாது, கைகளைத் தூய்மையாக்கும் வசதிகள் இன்றி, சுகாதாரப் பகுதியினரின் எந்தவோர் அனுமதி[illegible] ஞர்கள் [illegible] நடத்தியுள்ளனர்.

இது தொடர்பாக அவசர இடர்கால தொலைபேசி இலக்கத்தினூடாகவும் பொதுமக்கள் ஊடாகவும் பொதுச் சுகாதாரப் பரிசோதகர் ஆ.ஜென்சன் றொனால்ட்டுக்கு தகவல் வழங்கப்பட்டுள்ளது.

சுகாதாரத் தரப்பினர், சம்பவ இடத்துக்குச் சென்றபோது, அங்கு பெரும் எண்ணிக்கையான இளைஞர்கள் கூட்டம் கூட்டமாக, கொவிட் கட்டுப்பாட்டை மீறும் விதமாக குழுமியிருந்தனர். நிகழ்வில் இராணுவ மேஜர் தர அதிகாரியொருவரும் கிராம அலுவலர் ஒருவரும் விருந்தினர்களாகக் கலந்துகொண்டிருந்தனர். கிராம அலுவலர் அந்த இடத்தை விட்டு திடீரென விலகிச்செல்ல சுகாதாரத் தரப்பினர் இராணுவ அதிகாரியை அழைத்து, இது தொடர்பில் அறிவுறுத்தி வெளியேற்றினர். போட்டிகளும் இடைநிறுத்தப்பட்டன. கடந்த வாரமும் [illegible]போன்றதொரு சம்பவம் புலோலி வட[illegible]க்கு பல்லப்பை பகுதியில் இடம்பெற்றது என்றும் தெரிவிக்கப்பட்டது. (கு-9)

### புத்தாண்டு வழிபாட்டில் சுகாதாரத்தைப் பேணவும்

புத்தாண்டை முன்னிட்டு புது வருட வழிபாடுகளை மேற்கொள்வோர் கோவில்களில் சுகாதார விதி முறைகளைக் கடைப்பிடித்து செயற்படுமாறு சாவகச்சேரி சுகாதார மருத்துவ அதிகாரி அறிவித்துள்ளார்.

யாழ். மாவட்டத்தில் கொரோனாத் தொற்று அதிகரித்துவரும் நிலையில் புதுவருட தினத்தன்று கோவில்களில் சிறப்பு வழிபாடுகளுக்கு கோவில்களின் நிர்வாகத்தினர் அனுமதி கோரி வருகின்றனர்.

இந்த நிலையில் கை கழுவுதல், முகக்கவசம் அணிதல், சமூக இடைவெளிகளைப் பேணுதல் போன்ற சுகாதார நடைமுறைகளைக் கடைப்பிடிக்குமாறும் அவர் மேலும் அறிவித்துள்ளார். (ஜ-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பிரதான சூத்திரதாரி

# நௌபர் மௌலவி இல்லையென்றால் யார் என்று அம்பலப்படுத்துங்கள்!!!

### எதிர்க்கட்சிகளுக்கு சவால் விடுக்கிறார் அமைச்சர் சரத் வீரசேகர

**கொழும்பு, ஏப். 11**



**பல்வேறு அறிக்கைகளின் அடிப்படையிலேயே ஈஸ்டர் தாக்குதலின் பிரதான சூத்திரதாரி நௌபர் மௌலவி என்று அறிவித்தேன். அவர் பிரதான சூத்திரதாரி இல்லை என்று சொல்பவர்கள், யார் சூத்திரதாரி என்பதை ஆதாரங்களுடன் அம்பலப்படுத்தட்டும். இவ்வாறு பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் சரத் வீரசேகர தெரிவித்தார்.**

நாடாளுமன்றத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற விவாதத்தில் பங்கேற்று உரையாற்றுகையிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஈஸ்டர் தாக்குதலுடன் தொடர்புடைய சந்தேகநபர்கள் 32பேருக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்வதற்கு சட்டமா அதிபர் இரவு பகலாகச் செயற்பட்டு வருகின்றார்.

அமெரிக்காவில் இரட்டைக்கோபுர தாக்குதலின் சூத்திரதாரியான சேக் மொஹமட் 18 ஆண்டுகளாகச் சிறையில்தான் இருக்கின்றார். அவருக்கு எதிராக இன்னமும் வழக்குத் தாக்கல் செய்யப்படவில்லை. இந்தியாவின் முன்னாள் பிரதமர் ராஜிவ் காந்தி கொலை வழக்கின் சூத்திரதாரிகளுக்கு தண்டனை வழங்குவதற்கு இந்தியாவுக்கு பல வருடங்கள் சென்றன.

எதிர்க்கட்சியினர் சிறுபிள்ளைத்தனமான குற்றச்சாட்டுக்களை முன்வைக்கின்றனர். நௌபர் மௌலவி பிரதான சூத்திரதாரி இல்லை என்று சொல்கின்றார்கள். அப்படியானால் சாட்சியங்களுடன் சூத்திரதாரி யார் என்பதை அவர்கள் வெளிப்படுத்தவேண்டும்.

அரச புலனாய்வுத்துறையின் அறிக்கை, பொலிஸாரின் அறிக்கை, விசாரணை அறிக்கை, வெளிநாட்டு புலனாய்வுத்துறையின் அறிக்கை, அமெரிக்க இராஜாங்கதிணைக்களத்தின் அறிக்கை மற்றும் சஹ்ரானின் மனைவியின் சாட்சியம் என்பவற்றை அடிப்படையாகக் கொண்டே நான் அதனைத் தெரிவித்திருந்தேன்.

சிறுபான்மையினரின் வாக்குகளுக்காக முன்னைய அரசு தேசிய பாதுகாப்புத் தொடர்பில் அக்கறை செலுத்தவில்லை.

2018ஆம் ஆண்டு மே மாதம் சஹ்ரானின் செயற்பாடு தொடர்பான எச்சரிக்கைக் கடிதம் புலனாய்வுத்துறை பிரதானியால் அனுப்பப்பட்டது. அந்த ஆண்டு டிசெம்பர் மாதம் மாவனல்ல புத்தர் சிலை உடைப்புத் தொடர்பில் புலனாய்வுத்துறை அறிவித்தும் உரிய விசாரணை நடைபெறவில்லை.

ஈஸ்டர் தாக்குதலுக்கு 5 வாரங்களுக்கு முன்னர் கூட சஹ்ரானின் சகோதரர்கள் தொடர்பான தகவல்களை முன்வைத்து அவர்களைக் கைதுசெய்யுமாறு புலனாய்வுத்துறை கோரியது. அவர்கள் கைதாகி உடனேயே விடுவிக்கப்பட்டார்கள். இரணைதீவில் 2 பொலிஸார் சுட்டுக் கொல்லப்பட்ட சம்பவம் தொடர்பில் உரிய விசாரணைகள் நடக்கவில்லை. இவையெல்லாவற்றுக்கும் மேலாக ஈஸ்டர் தாக்குதலுக்கு இரண்டு தினங்களுக்கு முன்னர் மோட்டார் சைக்கிள் ஒன்றை வெடிக்க வைத்துப் பரிசீலனை செய்த சம்பவம் தொடர்பில் விசாரணை உரியமுறையில் நடைபெறவில்லை. இவற்றையெல்லாம் செய்திருந்தால் ஈஸ்டர் தாக்குதலை நிச்சயம் தடுத்திருக்க முடியும்.

சஹ்ரானுக்கு 2015ஆம் ஆண்டுக்கு முன்னர் அரசு நிதி வழங்கியதாகக் கூறப்படுகின்றது. அவருக்கோ அவரது வலையமைப்புக்கோ எந்தவொரு நிதியும் வழங்கப்படவில்லை.

தாக்குதலுடன் தொடர்புடைய குற்றவாளிகளுக்கு தகுதி தராதரம் பாராது தண்டனை வழங்கப்படும். அவர்களின் அனைத்துச் சொத்துக்களும் அரசுடமையாக்கப்படும். அதன் ஊடாக பாதிக்கப்பட்டவர்களுக்கு மேலதிக இழப்பீடு வழங்குவது தொடர்பிலும் பரிசீலிக்கப்படும், என்றார். (ஒ.இ)

---

## உயிர்த்த ஞாயிறு தாக்குதலுக்கு இப்ராஹிமின் குடும்பமும் நிதி

### சரத் வீரசேகர மற்றொரு தகவல்

கொழும்பு,ஏப்.11

நாட்டில் நடத்தப்பட்ட உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதலுக்கு, இப்ராஹிம் என்ற நபர் தனது குடும்பத்துடன் உதவி வழங்கியுள்ளார் என்று பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் சரத் வீரசேகர தெரிவித்துள்ளார்.

இப்ராஹிம் என்ற நபர் தற்போது குடும்பத்துடன் தடுத்து வைக்கப்பட்டுள்ளார்.

இப்ராஹிமின் இரு புதல்வர்கள் தற்கொலை குண்டுத்தாக்குதலை மேற்கொண்டனர். மகளும் தெமட்டகொடையில் தற்கொலை குண்டுத்தாக்குதலை மேற்கொண்டார்.

இப்ராஹிம் உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதலுக்காக 50 மில்லியன் ரூபாவைச் செலவிட்டுள்ளார்.

சஹ்ரான் ஹாசிம் மற்றும் அவரது சகாக்களிடம் 30 மில்லியன் ரூபா மீட்கப்பட்டது. அந்தப் பணத்தைப் பயன்படுத்தி ஆடம்பர வாழ்க்கையை அவர்கள் வாழ்ந்திருக்கலாம். ஆனால் இஸ்லாமிய அரசை உருவாக்குவதற்காக அந்த நிதியைப் பயன்படுத்தியுள்ளனர்.

எந்த நாடும் இந்த நிதியை வழங்கவில்லை என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ப-4)

---

## கூட்டணியை பலவீனப்படுத்த ஆளுங்கட்சிக்குள்ளேயே சதி

### திஸ்ஸ விதாரண சுட்டிக்காட்டு

ஆளும் தரப்பின் ஒரு சிலரது வெறுக்கத்தக்க பேச்சுக்களே கூட்டணியைப் பலவீனப்படுத்துகின்றன. முரண்பாடுகளை ஏற்படுத்தி கூட்டணியைப் பலவீனப்படுத்தி 2014 ஆம் ஆண்டு காணப்பட்ட அரசியல் சூழலை ஏற்படுத்துவதே அவர்களது நோக்கமாகக் காணப்படுகின்றது.

இவ்வாறு லங்கா சமசமாஜக் கட்சியின் தலைவர் திஸ்ஸ விதாரண தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

பொதுஜன பெரமுன தலைமையிலான கூட்டணியின் பங்காளிக் கட்சிகள் இடம்பெற்று முடிந்த பொதுத்தேர்தலிலும் , ஜனாதிபதித் தேர்தலிலும் அர்ப்பணிப்புடன் செயற்பட்டுள்ளன. இருப்பினும் பொதுஜன பெரமுனவின் ஒரு சில உறுப்பினர்களின் கருத்துக்களும், செயற்பாடுகளும் பங்காளிக் கட்சிகளைப் புறக்கணிப்பவையாகவும் அமைகின்றன.

அரசைப் பலவீனப்படுத்துவது பங்காளிக் கட்சிகளின் நோக்கமல்ல. ஒரு சில வெறுக்கத்தக்க பேச்சுக்களே கூட்டணி யைப் பலவீனப்படுத்துகின்றன. இந்த விடயம் குறித்து கூட்டணியின் சிரேஷ்ட தலைவர்களுக்குப் பல முறை சுட்டிக் காட்டியும் எவ்வித சாதகமான பலனும் கிடைக்கப்பெறவில்லை.

சுபீட்சமான எதிர்கால கொள்கைத் திட்டத்தை முழுமையாகச் செயற்படுத்த வேண்டுமாயின், அனைத்து தரப்பினரும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும்.

அரசின் செயற்பாடுகளில் ஒரு சில குறைபாடுகள் காணப்படுகின்றன. அந்தக் குறைப்பாடுகளைத் திருத்தி, ஒன்றிணைந்து செயற்படுவது அவசியமாகும் - என்றார். (ப-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

---

## போர்க்கால தகவல் வழங்கிகளே ஈஸ்டர் தாக்குதலுக்கும் காரணம்!

### அவர்களது சம்பளம் நிறுத்தப்பட்டதெப்போது? எனக் கேட்கிறார் ஹேரத் எம்.பி.

கொழும்பு, ஏப். 11

போர்க் காலத்தில் புலனாய்வுத் தகவல்களை அரசுக்கு வழங்கியவர்கள்தான் ஈஸ்டர் தாக்குதலுடன் சம்பந்தப்பட்டிருக்கின்றார்கள். அவர்களுக்கு அரசு சம்பளம் வழங்கி வந்தது. அவ்வாறு வழங்கப்பட்டு வந்த சம்பளம் நிறுத்தப்பட்டது எப்போது என்பதை அரசு வெளிப்படுத்த வேண்டும்.

இவ்வாறு கோரியுள்ளார், தேசிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் விஜித ஹேரத்.

அத்துடன், தற்போது அவர்களின் நிலை என்ன என்பது தொடர்பாக இதுவரை அரசு பதிலளிக்கவில்லை. இவ்வாறு சம்பளம் வழங்கி பயன்படுத்தப்பட்டவர்கள் தற்போதும் அரசியலுக்காக பயன்படுத்தப்படுகின்றார்களா என்ற சந்தேகம் எழுகின்றது என்றும் அவர் குற்றம்சாட்டியுள்ளார்.

நாடாளுமன்றில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற, ஈஸ்டர் தாக்குதல் தொடர்பில் விசாரணை மேற்கொண்ட ஜனாதிபதி ஆணைக்குழுவின் விசாரணையின் அறிக்கை மீதான ஆறாவது நாள் சபை ஒத்திவைப்பு வேளை விவாதத்தில் உரையாற்றுகையில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

மைத்திரி, ரணில் அரசு புலனாய்வுத் துறையின் தகவல்களின் பிரகாரம் செயற்பட்டிருந்தால் ஈஸ்டர் குண்டுத்தாக்குதலை தடுத்திருக்கலாம். தகவல் கிடைத்தும் அது தொடர்பில் அசமந்தப போக்கில் இருந்த கடந்த அரசு, இந்த தாக்குதலின் பொறுப்பிலிருந்து தப்பிக்க முடியாது.

அத்துடன் அரசால் சம்பளம் வழங்கப்பட்டவர்கள் ஈஸ்டர் தாக்குதலுடன் சம்பந்தப்பட்டிருக்கின்றார்கள். போர்க் காலத்தில் புலனாய்வுத் தகவல்களை பெற்றுக்கொள்வதற்காக முஸ்லிம் நபர்களை அரசு சம்பளம் வழங்கி வைத்திருந்தமை, அனைவருக்கும் தெரிந்த விடயம். அவ்வாறு புலனாய்வுத் தகவல்களைப் பெற்றுக்கொள்வதற்காக அந்த நபர்களைப் பயன்படுத்தியதும், அவர்களுக்கு சம்பளம் வழங்கியதும் தவறு என நாங்கள் தெரிவிக்கவில்லை.

அத்துடன் நௌபர் மௌலவி 2014 இல் ஐ.எஸ் அமைப்பின் தலைவர் பக்தாதியுடன் இணைந்து கொண்டு, இலங்கையில் அந்த அமைப்பின் உறுப்பினராக செயற்பட்டு வந்துள்ளார் என்று அமைச்சர் சரத் வீரசேகர தெரிவித்திருந்தார். 2014 இல் எமது நாட்டில் பாதுகாப்பு அமைச்சராக இருந்தவர் மஹிந்த ராஜபக்ச. பாதுகாப்பு அமைச்சின் செயலாளராக இருந்தவர் கோத்தாபய ராஜபக்ச. எனவே நௌபர் மௌலவி விடயத்தில் ராஜபக்சக்களால் 2014இல் இதனைத் தடுக்க முடியாமல் போயிருக்கின்றது. - என்று மேலும் தெரிவித்தார். (த-இ)

---

## ஈஸ்டர் தாக்குதல் பற்றி புதுவருடத்தில் புதுத் தகவல்!

### அம்பலப்படுத்தவுள்ளார் அநுர எம்.பி.

கொழும்பு, ஏப். 11



ஈஸ்டர் தாக்குதல் குறித்து பல விடயங்களை, ஜே.வி.பியின் தலைவரான நாடாளுமன்ற உறுப்பினர் அநுரகுமார திஸாநாயக்க அம்பலப்படுத்தப் போகின்றார் என்று பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

இது தொடர்பில் வெளியான பதிவில், புத்தாண்டுக்குப் பின்னர் ஆரம்பமாகவுள்ள நாடாளுமன்ற அமர்வில், நாட்டு மக்களை அதிர்ச்சிக்கு உள்ளாக்கும் வகையிலான தகவல் ஒன்று வெளியிடப்படவுள்ளது.

இதன்படி தாஜ் ஹொட்டலில் தாக்குதல் நடத்த வந்த நபர், பின்னர் தாக்குதல் இடத்தை மாற்றியமை, ஈஸ்டர் தாக்குதலுக்கான பொறுப்புக் கூறலை ஐ.எஸ். தீவிரவாத அமைப்பே ஏற்க வேண்டும் என்பதை வலியுறுத்தி மேற்கொள்ளப்பட்ட தொலைபேசி அழைப்புக்கள் உள்ளிட்ட பல விடயங்களை அவர் சபையில் போட்டுடைக்கவுள்ளார் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. (த-இ)




## பற்சுகாதாரமும் அதன் அவசியமும்

சிரிக்கும் போது பளீச்சென்று அழகூட்டும் அழகுப் பொருளாக, பேசும் மொழியினை சிறப்புடன் உச்சரிக்க உதவும் சாதனமாக மற்றும் உண்ணும் உணவுப் பொருளினை நன்றாக அரைத்துப் பின்னர் அது சமிபாடு அடைவதற்கு உதவும் இன்றியமையாத உறுப்பாக பற்கள் உதவுகின்றன.

"பல் போனால் சொல் போச்சு" என்பார்கள். அத்தகைய மகத்துவமுடைய பற்களை பாதுகாப்பதில் இன்று எம்மில் பலர் தவறுகின்றோம். முரசு நோய்கள், பற்சூத்தை என்பவற்றுக்கு இன்னும் பலரும் ஆட்பட்டுள்ளோம். அல்லது அதன் ஆபத்தில் உள்ளோம்.

முரசு நோய்கள் பற்களிற்குப் பாதுகாப்புத் தரும் இழையங்கள் மற்றும் என்புகள் முதலியவற்றில் ஏற்படும் கிருமித்தாக்க மற்றும் அழற்சி நோயாகும். இது பல் ஈறுகளையும் அதனைச் சுற்றியுள்ள இழையங்களையும் பாதிக்கின்றது. நோயின் தீவிரத்தைப் பொறுத்து பல்வேறு படிகளாக முரசு நோய்கள் காணப் படுகின்றன.

பல் ஈறுகளில் கிருமித்தாக்கத்தால் ஏற்படும் அழற்சி பல் ஈறழற்சி எனப்படுகின்றது. இதில் முரசானது செந்நிறமாக வீங்கிக் காணப்படும். பற்களைத் தீட்டும் போது இரத்தம் கசியும். பெரும்பாலும் இத்தகைய நோயுடையோருக்கு வலி எடுப்பதில்லை, எனவே அதனைப் பற்றி அக்கறை கொள்ளாது உரிய நேரத்தில் சிகிச்சை பெற்றுக்கொள்வதில்லை. இது உருவாகுவதற்குரிய முன்னணிக் காரணியாக பாக்டீரியாக்கள் திகழ்கிறன. பொதுவாகவே பற்களில் முரசுகளில் ஒரு நிறமற்ற படலமாக பக்டீரியாக்கள் படிகின்றன. பற்சூத்தை மற்றும் பற்சுற்றி நோய்களின் ஆரம்ப நிலையில் ஏற்படும் இத்தகைய படலம் "பிளாக்" என்று அழைக்கப்படுகிறது.

இந்தப்படலமானது ஆரம்பத்தில் இலகுவாக விரல் நகம் கொண்டு அகற்றப்படக்கூடியளவு இளகலாகக் காணப்படும். இது அகற்றப்படவில்லை என்றால் 48 மணி நேரங்களுக்குள் கடினமடைந்துவிடும். மேலும் பத்து நாள்கள் சென்ற பின்னர் மேலும் தீவிரமடைந்து அகற்ற முடியாததாகவே ஆகிவிடும். அல்லது தாத்தார் எனப்படும் மஞ்சள் நிறமுடைய நிலையை அடைந்துவிடும். எனவே தான் நாளாந்த வாய்ச் சுகாதாரம் அவசியம். ஒழுங்காக பல் துலக்காதவிடத்து இத்தகைய சிக்கல்கள் பற்சிதைவு, பற்சூத்தை மற்றும் பற்சுற்றி நோய்களைத் தோற்று விக்கும்.

பல்லின் அமைப்பைப் பற்றி பார்த்தோமானால், அது நான்கு வகை இழையங்களால் ஆனது:

1. பற்காரை : பல் வேரின் வெளிப்பகுதியைச் சூழ உள்ளது.
2. காற்றிடை என்பு : தாடையில் பற்களுக்கு ஆதாரமாக விளங்குவது.
3. ஈறு : தொடுப்பிழைய அமைப்பு
4. பல் சுற்றி இணைப்பிழை : பற்காரைக்கும் காற்றிடை என்புக்கும் இடையிலே தொடுப்பாகத் திகழ்வது.

மேற்கூறியவற்றுடன் இன்னும் சில நார்கள், இழையங்கள் சேர்ந்து ஆரோக்கியமான பற்களை உறுதியாக வைத்திருக்க உதவுகின்றன. இந்த அமைப்பினை முரசு தொடுப்புச் சாதனம் என்று அழைப்பர்.

முரசு அழற்சியின் போது பற்களுக்கும் இந்த அமைப்புகளுக்கும் இடையிலான தொடுகையானது இழக்கப்படுகிறது. ஆனால் இது தற்காலிக மாற்றமே, சிகிச்சை பெறப்பட்டால் மீண்டும் பழைய ஆரோக்கிய நிலைக்கு திரும்பி விடும். இங்கு என்புகளோ மற்றைய இழையங்களோ பாதிப்படைவது இல்லை.

எனவே பற்களில் அக்கறை கொண்டவர்களாக அவற்றின் தேவை மற்றும் பெறுதியை உடையவர்களாக பற்சுகாதாரத்தையம் வாய் சுகாதாரத்தையும் பேணுவோம். நோய்களில் இருந்து தூரமாக இருப்போம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பண்ணையாளரின் கால்நடைகளால் செல்வபுரத்தில் அழிகின்றன பயிர்கள்

## விவசாயிகள் குற்றச்சாட்டு

**முல்லைத்தீவு, ஏப்.11**

**முல்லைத்தீவு மாந்தை கிழக்கின் செல்வபுரம் கிராமத்தில் கால்நடை வளர்ப்பில் ஈடுபட்டுள்ள ஒருவரின் கால்நடைகளால் தொடர்ச்சியாக பயிர் அழிவுகள் ஏறபடுகின்றன என்று விவசாயிகளால் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.**

கடந்த 7ஆம் திகதி நடைபெற்ற வவுனிக்குளம் சிறுபோக நெற் செய்கைக் கூட்டத்தில் இது தொடர்பில் விவசாயிகள் அதிகாரிகளிடம் முறையிட்டனர்.

அவர்கள் மேலும் தெரிவித்ததாவது:

கால்நடை வளர்ப்பாளர் பயிர்ச் செய்கையில் ஈடுபடுவதில்லை. 100க்கும் மேற்பட்ட கால்நடைகளை மக்களின் வாழ்விடத்தில் வளர்த்து வருகின்றார். குறித்த கால்நடைகளால் காலபோகம், சிறுபோகங்களில் பெரும் அழிவுகள் ஏற்படுகின்றன.

இதனால் பயிர்களைக் காவல் காக்க வேண்டி உள்ளது. கால்நடைகளால் ஏற்படும் அழிவுகள் தொடர்பாக அதிகாரிகளிடம் முறையிட்டும் நடவடிக்கை எடுக்கப்படவில்லை. பொலிஸாரிடம் முறைப்பாடு செய்தால் அவர்களும் நடவடிக்கை எடுப்பதில்லை. எனவே இது தொடர்பாக நடவடிக்கை எடுக்க வேண்டும் -என்றனர்.

சிறுபோகத்தில் கால்நடைகள் தொடர்பாக இறுக்கமான நடவடிக்கைகள் எடுக்கப்படும். குறித்த பிரச்சினை தொடர்பாக கால்நடை களுடன் தொடர்புடைய அதிகாரிகள் இறுக்கமான நடவடிக்கைகளை எடுக்கவேண்டும். விவசாய முயற்சிகளுடன் கால்நடை வளர்ப்பும் முக்கியமானதாக உள்ளதன் காரணமாக மேய்ச்சல் தரவைகள் உட்பட பல்வேறு பிரச்சினைகளுக்கு எதிர்காலத்தில் தீர்வு காணப்படும் என்று அந்தக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது. (ப-13)

# விற்பனைச் சந்தை வவுனியாவில் திறப்பு

வவுனியா, ஏப்.11

புதுவருடத்தை முன்னிட்டு வவுனியா வேப்பங்குளம் சமுர்த்தி வங்கிக்கு முன்பாக விற்பனைச் சந்தை ஒன்று நேற்றுமுன்தினம் திறக்கப்பட்டது.

வவுனியா பிரதேச செயலர் நா.கமலதாசன் தலைமையில் நடைபெற்ற இந் நிகழ்வில், முதன்மை விருந்தினராக நாடாளுமன்ற உறுப்பினர் கு.திலீபன் கலந்துகொண்டார்.

குறித்த கண்காட்சியில் உள்ளூர் உற்பத்தியாளர்களின் பொருள்கள் காட்சிப்படுத்தப்பட்டுள்ளதுடன்.விற்பனை செய்யப்பட்டும் வருகின்றன. (ஐ-110)



## நீத்தார் நயப்புரை

# சிறந்த சமூக சேவையாளர் கதிரவேலு ஸ்ரீகரன்

காரைநகர் நீலிபந்தனையை பிறப்பிடமாகவும், பிள்ளையார் கோயிலடி சித்தன்கேணியை வசிப்பிடமாகவும் கொண்டு வாழ்ந்து மறைந்த கிராம அலுவலகர் கதிரவேலு ஸ்ரீகரன் ஒரு சிறந்த சமூக சமய சேவையாளர் என்பதனை அவரிடம் சேவை பெற்ற மக்கள் நன்கு அறிவர்.

ஸ்ரீகரன் தனது கிராம அலுவலர் பதவியை அராலி மேற்கு, வட்டுதென்மேற்கு, வட்டு தெற்கு, வட்டு மேற்கு என இப்போது உள்ள கிராம அலுவலர் பிரிவுகளில் முன்பு தனி ஒரு அலுவலராக இருந்தே மேற்கொண்டிருந்தார்.

அவர் தனது கடமைநேரத்தில் மட்டுமல்ல ஓய்வு பெற்ற பின்பும் புதிதாக பதவி ஏற்ற ஆண், பெண் அலுவலர்களுக்கு கடமையை எப்படி செய்ய வேண்டும் என சீறிச் சினக்காது சொல்லிக் கொடுக்கும் சிறந்த மனிதம் கொண்டவர்.

அவர் சமூகப் பணியை மட்டுமல்ல சமயப்பணியையும் சிறப்பாக செய்தவர். வட்டுக்கோட்டை கண்ணகி அம்மன் ஆலய வளர்ச்சிக்கு அவர் பெரும் பங்காற்றினார் என்பதையும் அடியவர்கள் நன்கறிவார்கள். அவர் எதனைச் செய்தாலும் சிரித்த முகத்துடன் சிறப்பாக செய்து முடிக்கும் ஆற்றல் மிக்கவர்.



அவர் தம் நல் ஆத்மா இறைவன் திருவடியில் சாந்தி பெற வேண்டுமென அவரை விரும்பும் மக்களுடன் நானும் இறைவனை வேண்டுகின்றேன்.

○ சி.ஸ்ரீஜீவா

# உணவுப் பொருள்கள் கையளிப்பு

முல்லைத்தீவு, ஏப்.11

பொருண்மியம் நலிந்த மற்றும் பெண் தலைமைத்துவ குடும்பங்கள் சிலவற்றுக்கு உலருணவுப் பொருள்கள் அண்மையில் வழங்கப்பட்டன.

முல்லைத்தீவு ஒட்டுசுட்டான் பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட வசந்தபுரம் மற்றும் முத்துஐயன்கட்டு கிராமங்களைச் சேர்ந்த குடும்பங்களுக்கே கரைதுறைப்பற்று பிரதேச சபை உறுப்பினர் த.அமலனால் இவ் உலர் உணவுப் பொருள்கள் வழங்கப்பட்டன. (ஐ-13)



# வீதி விபத்துக்கள்

## காயமடைந்தோர் மருத்துவமனைகளில்



வவுனியா.ஏப்.11

வவுனியா தபால் நிலையத்துக்கு அருகில் நேற்று முன்தினம் மாலை இடம்பெற்ற விபத்தில் ஒருவர் காயமடைந்துள்ளார்.

கொழும்பு நோக்கிப் பயணித்த கனரக வாகனத்துடன், மோட்டார் சைக்கிள் மோதுண்டதில் குறித்த விபத்து ஏற்பட்டது.

இதில் மோட்டார் சைக்கிளில் பயணித்தவரே காயமடைந்த நிலையில், வவுனியா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். விபத்துத் தொடர்பான விசாரணைகளை வவுனியா பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ஐ-110)

★ ★ ★

சாவகச்சேரி, ஏப்.11

இருவேறு வாகன விபத்துக்களில் சிக்கி காயமடைந்த இருவர் சாவகச்சேரி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு, அவர்களில் ஒருவர் மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா மருத்துவமனைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

இந்த விபத்துக்கள் நேற்றுமுன்தினம் மாலை இடம்பெற்றன .

அல்லாரை தெற்குப் பகுதியில் வீதியின் குறுக்கே ஓடிய நாயுடன் மோட்டார் சைக்கிள் மோதியதில் அப் பகுதியைச் சேர்ந்த 29 வயது குடும்பஸ்தர், ஏ-9 வீதியில் இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் ஒருவரும், விபத்தில் புன்னாலைக்கட்டுவன் கிழக்கைச் சேர்ந்த 35 வயது குடும்பஸ்தர் ஒருவரும் காயமடைந்த நிலையில் சாவகச்சேரி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர். அவர்களில் 35 வயதுடைய கிருஷ்ணன் வினோதரன் என்பவர் மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா மருத்துவமனைக்கு மாற்றப்பட்டார். (ப-9)

# கட்டடத்துக்கு அடிக்கல்

கிளிநொச்சி.ஏப்.11

கிளிநொச்சி வட்டக்கச்சி ஆரம்ப வித்தியாலயத்தில் புதிதாக அமைக்கப்படவுள்ள இரு மாடிக் கட்டடத்துக்கான அடிக்கல் நடும் நிகழ்வு நேற்று முன்தினம் நடைபெற்றது.



பாடசாலை அதிபர் அ.பங்கயற்செல்வன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் முதன்மை விருந்தினராக வடக்கு மாகாண சபையின் பிரதம செயலாளர் அ.பத்திநாதன் கலந்துகொண்டு அடிக்கலை நட்டு வைத்தார்.

நிகழ்வில், கிளிநொச்சி வலயக் கல்விப் பணிப்பாளர் கமலராஜன், கரைச்சிக் கோட்டக் கல்வி அதிகாரி சு.தர்மரட்ணம், முல்லைத்தீவு மாவட்ட பிரதி நீர்ப்பாசனப் பணிப்பாளர் ந.சுதாகரன், சேவைக்கால ஆசிரிய ஆலோசகர்கள், அயல் பாடசாலைகளின் அதிபர்கள் மற்றும் பாடசாலை அபிவிருத்திச் சங்க உறுப்பினர்கள் உள்ளிட்ட பலரும் கலந்துகொண்டனர். (ஐ-13)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கர்ப்பிணிக்கும் மகளுக்கும் கொரோனாத் தொற்று உறுதி

## கணவன் தொற்றிலிருந்து மீண்டுவர மனைவிக்கும் மகளுக்கும் இந்தநிலை



**சாவகச்சேரி, ஏப்.11**

**தென்மராட்சிப் பிரதேசத்தில் நிறைமாத கர்ப்பிணிப் பெண் மற்றும் அவரது 8 வயது மகளுக்கும் கொரோனாத் தொற்று உறுதிசெய்யப்பட்டதையடுத்து, அவர்கள், விசேட வாகனத்தில் ஹோமாகம மருத்துவமனைக்கு அழைத்துச் செல்லப்பட்டனர்.**

யாழ்.நகரப் பகுதி வர்த்தக நிலையத்தில் பணிபுரியும் ஒருவருக்கு கடந்த 26 ஆம் திகதி மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர்.பரிசோதனையில் கொரோனாத் தொற்று உறுதிசெய்யப்பட்டது.

அதனால் அவர் கோப்பாயிலுள்ள கொரோனா சிகிச்சை நிலையத்தில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டிருந்தார். அவரது குடும்பத்தினர் சாவகச்சேரி சுகாதார மருத்துவ அதிகாரி பணியகத்தினரால் தனிமைப்படுத்தப்பட்டிருந்தனர். இந்த நிலையில், தனிமைப்படுத்தப்பட்டிருந்த அவரின் கர்ப்பிணி மனைவிக்கும் எட்டு வயது மகளுக்கும் கடந்த 6ஆம் திகதி மேற்கொள்ளப்பட்ட பரிசோதனையில் கொரோனாத் தொற்று ஏற்பட்டிருந்தமை உறுதிப்படுத்தப்பட்டது.

இதனையடுத்தே அவர்கள் விசேட வாகனத்தில் குடும்ப நல உத்தியோகத்தருடன் ஹோமாகம மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டனர். தொற்றுக்குள்ளான கணவர் சிகிச்சை முடிந்து வீடு திரும்பிய வேளை அவரது மனைவியும் மகளும் சிகிச்சைக்காக வீட்டிலிருந்து அழைத்துச் செல்லப்பட்டுள்ளனர். (த-9)



# கிளி. இந்துக் கல்லூரி ஆசிரியைக்கு மணி விழா

கொடிகாமம்,ஏப்.11

கிளிநொச்சி இந்துக் கல்லூரியில் ஆசிரியையாகக் கடமையாற்றி ஓய்வுபெற்றுச் செல்லும் திருமதி நாமகள் கஜேந்திரகுமாருக்கான மணிவிழா நேற்றுமுன் தினம் பாடசாலை மண்டபத்தில் நடைபெற்றது.

கல்லூரி அதிபர் திருமதி மீனலோஜினி இதயசிவதாஸ் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் திருவையாறு மகா வித்தியாலய அதிபர் கி.விக்னராஜா, ஊற்றுப்புலம் அரசினர் தமிழ் கலவன் பாடசாலை அதிபர் மு.பிறேம்குமார்,கிளிநொச்சி கல்வி வலய ஆசிரிய ஆலோசகர் திருமதி த.கமலவேணி மற்றும் அயல் பாடசாலை அதிபர்கள் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர்.

கல்விச் சேவையில் 33 ஆண்டுகளை பூர்த்தி செய்த மணிவிழா நாயகி கல்லூரிச் சமூகத்தினரால் நினைவுப் பரிசில்கள் வழங்கி கௌரவிக்கப்பட்டார். (ஐ-159)

# வங்கிகளுக்கு நாளை விடுமுறையல்ல

சாவகச்சேரி, ஏப். 11

நாளை 12ஆம் திகதி திங்கட்கிழமையை விசேட பொது விடுமுறையாக அரசு அறிவித்துள்ளபோதும், வங்கிகள் அனைத்தும் வாடிக்கையாளர்களின் நலன்கருதி திறந்திருக்கும் என்று வங்கிகளின் முகாமையாளர்கள் அறிவித்துள்ளனர்.

விசேட விடுமுறை அரச திணைக்களங்களுக்கு மட்டுமே என்றும் வங்கிகள் மற்றும் வர்த்தக நிலையங்களுக்கு அல்ல என்றும் அவர்கள் தெரிவித்துள்ளனர். (த-9)



# முகக்கவசம் இன்றி பயணித்த 80 பேர் வவுனியாவில் சிக்கினர்

வவுனியா, ஏப். 11

வவுனியாவில் தர்மலிங்கம் வீதிச் சந்தியில் முகக்கவசம் அணியாது பயணித்த 80க்கும் மேற்பட்ட நபர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது.

இந்த நடவடிக்கையை சுகாதாரப் பிரிவினருடன் இணைந்து வவுனியா பொலிஸார் முன்னெடுத்தனர்.

தமிழ் சிங்கள புத்தாண்டையொட்டி பொதுமக்களின் நடமாட்டம் அதிகரித்துள்ள நிலையில், அவர்கள் இந்த நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர்.

இதன்போது சீரான முறையில் முகக்கவசம் அணியாதோர் மற்றும் முகக் கவசமின்றி காணப்பட்ட நபர்கள் ஆகியவர்களை மறித்து அவர்களின் பெயர், அடையாள அட்டை இலக்கம் என்பவற்றைப் பதிவுசெய்ததோடு, சுகாதாரப் பிரிவு அலுவலகத்துக்கு வருமாறும் உத்தரவிட்டனர். (த-18)



# கூட்டுறவு வர்த்தக கண்காட்சி

கொடிகாமம்,ஏப்.11

தென்மராட்சி பல நோக்கு கூட்டுறவுச் சங்கத்தின் ஏற்பாட்டில் தென்மராட்சி கோட்ட சங்கங்கள் இணைந்து புத்தாண்டு கூட்டுறவு வர்த்தக கண்காட்சியை கொடிகாமம் எரிபொருள் நிலையத்துக்கு அருகாமையில் நடத்தின.

தென்மராட்சி கிழக்கு பல நோக்கு கூட்டுறவுச் சங்கத் தலைவர் இ.அ.ஆனந்தராசா தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் சங்க பணியாளர்கள், கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர், வர்த்தக முகாமையாளர் மற்றும் கணக்காளர் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். (ஐ-159)

# மல்லாவி மருத்துவமனையின் வளங்களை அதிகரியுங்கள்

## பொது அமைப்புக்கள் கோரிக்கை

முலலைத்தீவு, ஏப்.11

மக்களின் சிரமங்களை நீக்குவதற்கு, முல்லைத்தீவு மல்லாவி ஆதார மருத்துவமனையின் வளங்கள் அதிகரிக்கப்பட வேண்டும் என்று பொது அமைப்புகள் கோரிக்கை விடுத்துள்ளன.

இதுதொடர்பில் பொது அமைப்பினரால் மேலும் தெரிவிக்கப்பட்டதாவது;

மல்லாவி மருத்துவமனை ஆதார மருத்துவமனையாகத் தரமுயர்த்தப்பட்டுள்ளபோதிலும் கூடுதலான நோயாளர்கள் கிளிநொச்சி பொது மருத்துவமனைக்கே அனுப்பப்படுகின்றனர். இது மல்லாவி மருத்துவமனையின் மருத்துவர்கள், உட்பட பல்வேறு வளங்களின் பற்றாக்குறையை வெளிப்படுத்துகின்றது. மல்லாவி ஆதார மருத்துவனையில் வளங்கள் அதிகரிக்கப்படுமானால், மாந்தை கிழக்கு, துணுக்காய் பிரதேச செயலகர் பிரிவுகளின் மக்கள், கிளிநொச்சி பொது மருத்துவமனைக்குச் செல்ல வேண்டிய நிலைமை ஏற்படாது. ஏற்கனவே மாந்தை கிழக்கின் நட்டாங்கண்டல் பிரதேச மருத்துவமனையில் நிரந்தர மருத்துவர் இல்லை, தாதியர்கள் பற்றாக்குறை நிலவுகின்றது, ஐயன்கன்குளம் மருத்துவமனையில் நிரந்தர மருத்துவர் இல்லை.

இத்தகைய நெருக்கடிகளுக்கு மத்தியில் மல்லாவி ஆதார மருத்துவமனையை நம்பிச் செல்லும் மக்கள் கூடுதலாக கிளிநொச்சிக்கு அனுப்பப்படுவதால் பெரும் சிரமங்களை எதிர்கொள்கின்றனர். எனவே மல்லாவி ஆதார மருத்துவமனையை வளம் கொண்ட மருத்துவமனையாக மாற்றுவதற்கு முல்லைத்தீவு பிராந்திய சுகாதாரப் பணிப்பாளர் நடவடிக்கை எடுக்க வேண்டும் - என்றனர். (ஐ-13)

# கண்காட்சியும் விற்பனையும்

கிளிநொச்சி,ஏப்.11

மகளிர் தினத்தை முன்னிட்டு சுயதொழில் முயற்சியாளர்களின் உற்பத்திப் பொருள்களின் கண்காட்சியும், விற்பனையும் கிளிநொச்சி பசுமை பூங்கா வளாகத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்றன.

கிளிநொச்சி மாவட்டச் செயலர் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் முதன்மை விருந்தினராக வடக்கு மாகாண மகளிர் விவகாரம், தொழில்துறையும், தொழில் முனைவோர் மேம்பாடு மற்றும் வர்த்தக வாணிப அமைச்சின் செயலாளர் ரூபினி வரதலிங்கம் கலந்துகொண்டார். (ஐ-6)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அமெரிக்காவிடமிருந்து கொரோனாத் தடுப்பூசி

### இலங்கை அரசு பேச்சு

கொழும்பு,ஏப்.11

அமெரிக்காவிடமிருந்து, ஜோன்சன் அன்ட் ஜோன்சன் தடுப்பூசியைக் கொள்வனவு செய்வது தொடர்பில் அமெரிக்காவுடன் இலங்கை அரசு பேச்சு நடத்தி வருகின்றது என்று சுகாதார அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சி தெரிவித்தார். இலங்கையிலுள்ள அமெரிக்கத் தூதரகம் மூலம் அமெரிக்காவைத் தளமாகக் கொண்ட நிறுவனத்துடன் பேச்சுக்கள் நடத்தப்படுகின்றன. பேச்சுக்கள் வெற்றிகரமாக நடந்தால், தடுப்பூசியைக் கொள்வனவு செய்ய அரசு நடவடிக்கை எடுக்கும் என்றும் அவர் தெரிவித்தார். இந்தத் தடுப்பூசிக்கு அமெரிக்கக் கட்டுப்பாட்டாளர்கள் ஒப்புதல் அளித்துள்ளனர். இந்தத் தடுப்பூசியை இலங்கையில் பயன்படுத்த தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தல் அதிகார சபை அங்கீகரிக்க வேண்டும்.

அமெரிக்கா, தென்னாபிரிக்கா மற்றும் பிரேஸில் ஆகிய நாடுகளில் நடத்தப்பட்ட சோதனைகளின் முடிவுகளில், வைரஸின் மோசமான விளைவுகளுக்கு எதிராக இத் தடுப்பூசியின் செயல்திறன் கண்டறியப்பட்டுள்ளது. கடுமையான நோயைத் தடுப்பதில் 85 வீதத்துக்கும் மேலான பலன் உள்ளது. ஆனால் ஒட்டுமொத்தமாக 66 வீதம் மட்டுமே பயனுள்ளதாக இருந்தது என்றும் கூறப்படுகிறது. இந்தத் தடுப்பூசி பெற்றவர்களிடையே எந்த இறப்பும் இதுவரையில் பதிவாகவில்லை. தடுப்பூசி ஏற்றிக்கொண்ட பின்னர் 28 நாள்களுக்குப் பின்னர் மருத்துவமனையில் எவரும் அனுமதிக்கப்படவில்லை என்றும் தெரிவிக்கப்படுகிறது. (ப-4)



கிளிநொச்சி மாவட்ட கரைச்சி பிரதேச செயலகர் பிரிவில் தெரிவு செய்யப்பட்ட மாற்றுத்திறனாளிகள் 50 பேருக்கு உலருணவுப் பொதிகள் நேற்று வழங்கப்பட்டன.

ஜீவ ஊற்று அன்பின் கரம் அமைப்பின் ஊடாக அஷர் கவின்ராஜின் பிறந்தநாளை முன்னிட்டு இந்த உதவிகள் வழங்கப்பட்டன. (ஐ-222)



புதுவருடத்தை புதிதாக்கிட மக்கள் வங்கிக்கு வாருங்கள்

அரச வங்கியின் பாதுகாப்பு



ரூ.20,000 ஆரம்ப வைப்புடன் 12 மாதங்களில் முதிர்வடையும் புதுவருட சேமிப்பு திட்டத்திற்கு பெறுமதிமிக்க பரிசில்கள்

2021 ஏப்ரல் 15 ஆம் திகதி வியாழக்கிழமை மு.ப 8.30 தொடக்கம் சகல மக்கள் வங்கிக் கிளைகளும் புதுவருட கொடுக்கல்வாங்கல்களுக்கு உங்களுக்காகவே திறந்து வைக்கப்படும்.

கையிருப்பு உள்ளவரை மட்டுமே. நிபந்தனைகள் உண்டு.

www.peoplesbank.lk 1961 PEOPLE'S BANK CALL CENTRE

PEOPLE'S BANK
The Bank of the People

## மாதாந்த உதவிக் கொடுப்பனவுக்கு வெயிலில் காத்திருந்த முதியவர்கள்

### வவுனியாவில் நேற்று இந்த நிலை



வவுனியா, ஏப்.11

வவுனியா கண்டி வீதியிலுள்ள மத்திய அஞ்சல் அலுவலகத்தில் மாதாந்த உதவிப்பணத்தைப் பெறுவதற்காகச் சென்ற 25க்கும் மேற்பட்ட முதியவர்கள் கடும் வெயிலில் காத்திருந்தே அந்தப் பணத்தைப் பெற்றனர் என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. இந்தச் சம்பவம் நேற்று இடம்பெற்றுள்ளது. வவுனியா மாவட்டத்தின் பிரதான அஞ்சல் அலுவலகமாக காணப்படும் இவ் அஞ்சல் அலுவலகத்தில் உதவிப்பணத்தை வழங்கும் செயற்பாட்டில் ஒரு உத்தியோகத்தர் மாத்திரமே ஈடுபட்டதால் முதியவர்கள் இவ் அசௌகரியத்துக்கு முகங்கொடுத்துள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது.

நாட்டின் பல பாகங்களில் கடும் வெப்பத்தினூடனான காலநிலை நிலவி வருகின்ற நிலையில், பாதுகாப்பாக நடமாடுமாறு வளிமண்டலவியல் திணைக்களம் அறிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ-12)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மரண அறிவித்தல்



### பரநிருபசிங்கம் வரதலட்சுமி

நயினாதீவு 7ஆம் வட்டாரத்தை பிறப்பிடமாகவும் கோபால் ஒழுங்கை, வண்ணார் பண்ணையை வசிப்பிடமாகவும் கொண்ட பரநிருபசிங்கம் வரதலட்சுமி அவர்கள் கடந்த (09.04.2021) வெள்ளிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற அமிர்தலிங்கம் - சிவக்கொழுந்து தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற தம்பையா - தையலம்மை தம்பதியரின் மருமகளும், காலஞ்சென்ற பரநிருபசிங்கம் (ஓய்வுபெற்ற அதிபர்) அவர்களின் அன்பு மனைவியும், வசந்தகுமார் (ஓய்வுபெற்ற பிரதம முகாமைத்துவ உத்தியோகத்தர், இந்து கலாசார அமைச்சு), ரவீந்திரா (ஜேர்மனி), சுவர்ணன் (லண்டன்), தவநிதி, சுரேஸ்குமார் (அதிபர், யா/காங்கேசன்துறை றோ.க.த.க. பாடசாலை) ஆகியோரின் அருமைத் தாயாரும், பேரின்பராணி, சசிமாலா (ஜேர்மனி), வைதேகி (லண்டன்), மால்மருகன் (யாழ் பல்கலைக்கழகம்) ரதிதேவி (ஆசிரியர், யா/மூளாய் அ.மி.த.க.பாடசாலை) ஆகியோரின் அன்பு மாமியாரும், காலஞ்சென்ற மாசிலாமணி மற்றும் ஜெயலட்சுமி, இராசலட்சுமி, வேதநாயகி, மருதயினார், புனிதவதி, மகாலிங்கம், திலகேஸ்வரி ஆகியோரின் அருமை சகோதரியும், காலஞ்சென்ற காமாட்சி மற்றும் ஆ.சி.பழனிவேல், மகாதேவா, காலஞ்சென்ற சாம்பசிவம் மற்றும் இரத்தினேஸ்வரி, சுரேந்திரநாதன், நேசமலர், சிவனேசன் காலஞ்சென்ற மனோன்மணி, செல்லத்துரை, யோகம்மா, அன்னம்மா, பாலசிங்கம் ஆகியோரின் அருமை மைத்துனியும், ரஜீவன், கஜாந்தினி, உதயாரணி, காயத்திரி, அஸ்வினி, ராகுல், ராகவி, ராகல்யா, ராதாஞ்சலி, ஹரி ஷாஞ்சலி, ஜனோஷன், ஷாம்பவி, சேயோன், சஞ்சேயன் ஆகியோரின் அருமை பேர்த்தியும், அபிரன், ஆதிரா ஆகியோரின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (11.04.2021) ஞாயிற்றுக்கிழமை மு.ப 10.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் கோம்பயன் மணல் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**29, கோபால் ஒழுங்கை,**
**வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்.**

**தகவல்: குடும்பத்தினர்.**
**021 222 8543**

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

தோற்றம் 01 - 05 - 1938



மறைவு 16 - 03 - 2021

சுதுமலை தெற்கு, மானிப்பாயைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட

### அமரர் கதிரவேலு கணேசதாசன்

(இளைப்பாறிய பிரதி முகாமையாளர், மக்கள் வங்கி, கன்னாதிட்டி)

அவர்கள் கடந்த 16.03.2021 செவ்வாய்க்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார் அன்னாரின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (11.04.2021) ஞாயிற்றுக் கிழமை கீரிமலை புனித தீர்த்தக் கரையிலும், வீட்டுக்கிருத்தியக்கிரியைகள் 13.04.2021 செவ்வாய்க்கிழமைஅன்று அவரது இல்லத்திலும் நடைபெறும்.

அன்னாரது இறுதிக் கிரியைகளில் கலந்து கொண்ட உற்றார், உறவினர், நண்பர்கள் மற்றும் அயலவர்களுக்கும் பல்வேறு வழிகளில் உதவி புரிந்தவர்களுக்கும், தொலைபேசி மூலம் துயர் பகிர்ந்தவர்களுக்கும் குடும்பத்தினர் சார்பாக நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

**சுதுமலை தெற்கு,**
**மானிப்பாய்.**

**குடும்பத்தினர்**
**021 225 5686**

## மரண அறிவித்தல்

பிறப்பு 29 - 02 - 1952



இறப்பு 08 - 04 - 2021

### திருமதி லிர்மலாதேவி கருணைநாயகம்

நல்லூரைப் பிறப்பிடமாகவும், தெஹிவளையை வசிப்பிடமாகவும் கொண்ட லிர்மலாதேவி கருணைநாயகம் (ஸ்பொன்ஸ்) அவர்கள் 08.04.2021 வியாழக் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சிவராஜா பாக்கியலக்ஷ்மி அவர்களின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான இராசநாயகம் புஷ்பம் அவர்களின் மருமகளும், கருணைநாயகம் அவர்களின் பாசமிகு மனைவியும், கிரிஜாதேவி, றூபா, கலாதேவி, லதாதேவி ஆகியோரின் அன்புச் சகோதரியும், சரஸ்வதி இராசநாயகம் (சின்னமாமி) அவர்களின் சகோதரனின் மகளும், பாலசுப்பிரமணியம், அமிர்தகௌரி மோகன், சுரேஷ், பத்மானந்தா ஆகியோரின் மைத்துனியும், முகுந்தன், ராஜி, றுசோத், சனோஜ், ஆரணி, கார்த்திகேயன் ஆகியோரின் சிறிய தாயாரும், நைஜல், ராஷா, யுகேஷ், சஸ்மிதா ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் கல்கிசை மலர்ச்சாலையில் இன்று (11.04.2021) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கல்கிசை பொது மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**30/1, சிவன் கோவில் வீதி**
**திருநெல்வேலி**

**தகவல்:**
**P.A.G மோகன்**

## மரண அறிவித்தல்

பிறப்பு 30 - 08 - 1942



இறப்பு 10 - 04 - 2021

### திருமதி கணேசு மங்கையற்கரசி

புங்குடுதீவு 10ம் வட்டாரத்தை சேர்ந்த கணேசு மங்கையற்கரசி 10.04.2021 சனிக்கிழமை இறைபதம் எய்திவிட்டார்.

அன்னார் அமரர் Dr கணேசு அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற சதாசிவம் நாகம்மாவின் அன்பு மகளும், அமரர் சின்னத்தம்பி சின்னம்மாவின் மருமகளும், சந்திரகௌரி, முரளிதரன், காலஞ்சென்ற கங்காதரன், ஸ்ரீதரன், வித்தியாதரன் ஆகியோரின் அன்புத் தாயாரும் சிவகுமார், செல்வநந்தினி, அமுதா , அன்புச்செல்வி, சசிகலா ஆகியோரின், மாமியாரும், சவிதா, ஹரி பிரசாத், அருண்பிரசாத், சுபேதிகா, சுதன், ஹர்சனா, ஜினோத், கவினயன், விதுஷா, விதுன் ஆகியோரின் பேர்த்தியும், அஸ்வின், ஆதிரா ஆகியோரின் பூட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (11.04.2021) ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று தகனக் கிரியைக்காக பூதவுடல் புங்குடுதீவு மணல்காட்டு மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**தொடர்புகளுக்கு**
**077 820 1195**
**076 4439, 077 879 7677**

**தகவல் : குடும்பத்தினர்**
**Dr.க. ஸ்ரீதரன்**
**கமலா கிளினிக், கொக்குவில்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தே.எண்ணெய் விவகாரம் விசாரணைக்கு சிறப்புக்குழு



கொழும்பு,ஏப்.11

புற்றுநோயை ஏற்படுத்தும் இரசாயனம் அடங்கிய தேங்காய் எண்ணெய் தொடர்பில், விசாரணைகளை மேற்கொள்வதற்கு, குற்றப் புலனாய்வுப் பிரிவினால், சிறப்புக் குழுவொன்று நியமிக்கப் பட்டுள்ளது. சட்டமா அதிபரின் அறுவுறுத்தலின் பேரில், இந்தக் குழு நியமிக்கப்பட்டுள்ளது என்று சட்டமா அதிபரின் ஒருங்கிணைப்பாளரும், சட்டத்தரணியுமான நிஷார ஜெயரத்ன தெரிவித்துள்ளார். தனியார் இறக்குமதி நிறுவனங்க ளால் நாட்டுக்குக் கொள்வனவு செய்யப்பட்டுள்ள தேங்காய் எண்ணெயில் புற்றுநோயை ஏற்படுத்தும் இரசாயனம் கலந்துள்ளமை தர நிர்ணய நிறுவனத்தால் உறுதி செய்யப்பட்டுள்ளது. அதேவேளை கடந்த 28 ஆம் திகதி 55 ஆயிரம் லீற்றர் தேங்காய் எண்ணெய் அடங்கிய இரண்டு தாங்கி ஊர்திகள், தங்கொட்டுவ பகுதியில் வைத்து, பொலிஸாரால் கைப்பற்றப்பட்டன. இந்த நிலையில் நாட்டின் 25 மாவட்டங்களிலும் விற்பனை செய்யப்படும் தேங்காய் எண்ணெய்யின் மாதிரிகள் பெறப்பட்டு பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ப-4)


**இலவச ஆங்கில, கணினி, சிங்கள வகுப்புக்கள்**

**Direct Classes/Zoom Classes**

**பிரிவு-33**

க.பொ.த (சா/த), (உ/த) பரீட்சைக்கு தோற்றிய மாணவர்களுக்கான குறுகிய கால பிரிவுகள் ஆரம்பமாகின்றன.

★ English Courses:
Foundation Diploma /
Diploma in English / Spoken English

★ Computer Courses:
Foundation Diploma / Diploma in ICT / Ms-Office/ Website Development / Programming.
★காலம் : 3 மாதங்கள் ★சான்றிதழ்
★ அடிப்படையிலிருந்து

SINHALA Courses
Diploma in Sinhala
★ அடிப்படையிலிருந்து எழுத்து, பேச்சு, வாசிப்புப் பயிற்சி
★ அரச கரும மொழி திணைக்கள பரீட்சைக்கு ஏற்றவகையில் கற்பிக்கப்படும்.

● ICT வகுப்புக்கள்
பாடசாலை மாணவர்களுக்கானது
Grade 10.11.A/L ஆரம்பமாகின்றன

★ IELTS / LIFE SKILLS - A1,B1
BATCH - V
பிரபல விரிவுரையாளரின் வகுப்புக்கள் ஆரம்பமாகின்றன.
சனி, ஞாயிறு 3.00 - 5.00 PM
● Band Score : 7.5 ● 30% Discount
● Sample papers/Mock Exam
● Smart Class room

HND Courses
● HND IT
● HND ENGLISH
● HND IN SOFTWARE ENGINEERING
● HND IN NETWORK ENGINEERING
★ Certificate ★UK, America, Canada, Srilanka.

OPEN DAYS 14-20/04/2021
10.00 AM, 4 PM

Online பதிவுகள்
076 685 2529
Whatsapp, Viber

IPS CAMPUS

பல்கலைக்கழகம் அண்மையில், திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.
T.P: 0776021794
076 685 2529



அனைவருக்கும் புதுவருட வாழ்த்துக்கள்

பாலன் மில்லினால் தயாரிக்கப்பட்ட சுத்தமான கலப்படமற்ற தேங்காய் எண்ணெய் சில்லறையாக பெற்றிட நாடவேண்டிய ஒரே இடம்.

தேங்காய்எண்ணெய், நல்லெண்ணெய் ஆலை, கொப்பறா, எள், இலுப்பைப் பருப்பு (விதை கோது உடைத்து) சூரியகாந்தி விதை போன்றவற்றை 3Kg முதல் 3000Kg வரை தனித்தனி இயந்திரத்தில் அரைத்து எண்ணெய்யாக உடன் ஊற்றித்தரப்படும்.

**பாலன்மில்**

மாவடிச் சந்தி, வட்டுக்கோட்டை. 021 321 2624



**வேலைவாய்ப்பு**

இலங்கை மற்றும் இந்திய நிறுவனங்களிலிருந்து தருவிக்கப்பட்ட அழகுசாதன பொருட்கள் மற்றும் குழந்தைகளுக்கான உபயோகப் பொருள்களை சந்தைப்படுத்துவதற்கான ஆள் சேர்ப்பு.

1) விற்பனை பிரதிநிதி (யாழ்ப்பாணம், கிளிநொச்சி, மன்னார்)
2) சாரதி (யாழ்ப்பாணம்)
3) கணக்காளர் (பெண்)- QuickBook (யாழ்ப்பாணம்)

மேற்படி பதவிகளுக்கான விண்ணப்பத்தினை கீழ்வரும் முகவரிக்கு தங்களது கடவுச்சீட்டு புகைப்படத்துடனான சுயவிவரக் கோவையினை இம் மாதம் 25 ம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்கவும்.

திரு.வே.பரமசாமி
83C, கல்லூரி வீதி, நீராவியடி, யாழ்ப்பாணம்.



**கடை வாடகைக்கு உண்டு**

பண்டத்தரிப்பு மாதகல் றோட்டில்
மேல் மாடிக் கடை
வாடகைக்கு விடப்படும்
(அலுவலகப் பாவனைக்கு உகந்தது)

077 399 7207


## மரண அறிவித்தல்

தோற்றம் 14 . 01 . 1939



மறைவு 09 . 04 . 2021

### திருமதி சிவபாக்கியம் அப்பாசாமி

ஈவினை தெற்கு, புன்னாலைக்கட்டுவனைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் பத்தாவத்தை இளவாலையை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சிவபாக்கியம் அப்பாசாமி நேற்றுமுன்தினம் (09.04.2021) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற தம்பிப்பிள்ளை அப்பாசாமியின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான அரியகுட்டி - சின்னம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான தம்பிப்பிள்ளை - வள்ளிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற நேசமலர் மற்றும் நேசசிவம் (ஈவினை), சண்முகநேசன் (இ.போ.ச.நடத்துநர்), நேசகுணம் (ஜேர்மனி) ஆகியோரின் அன்புத் தாயும், காலஞ்சென்ற சத்தியபாலன் மற்றும் தேவறஞ்சன், இசைச்செல்வி மற்றும் காலஞ்சென்ற சிவரூபன் ஆகியோரின் பாசமிகு மாமியும், காலஞ்சென்ற தனபாக்கியம் மற்றும் ராதாகிருஷ்ணன், மகேஸ்வரி, யோகேஸ்வரி ஆகியோரின் சகோதரியும், யசோதரன் பவித்திரா (லண்டன்), கிரிதரன் ஹரணி (கனடா), ஜோய்வினோதினி, ஜஸ்மின் அன்ரன் ஞானகுமார், ஜோன்சன், குணாளன், அனாமிகா எடம் (ஜேர்மனி), அமரனாத் (ஜேர்மனி), அபிராம் (ஜேர்மனி) ஆகியோரின் பேர்த்தியும், யஸ்மின்நேசா, பிரணவன், செய்டன், பிறின் சிகா, மிராய்சு, ஜடாஈவ் ஆகியோரின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (11.04.2021) ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சேந்தாங்குளம் பாதர்காடு இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பத்தாவத்தை,
இளவாலை.

தகவல்:
குடும்பத்தினர்

## மரண அறிவித்தல்



### செல்லத்துரை தவமணி

மலர்வு: 26.01.1940 உதிர்வு : 10.04.2021

கட்டுவன் மேற்கு தெல்லிப்பழையை பிறப்பிடமாகவும், வதிவிடமாகவும் கெண்ட செல்லத்துரை தவமணி நேற்று (10.04.2021) சனிக்கிழமை இறைபதம் எய்தினார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நாகலிங்கம் பொன்னம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற வேலுப்பிள்ளை பார்வதி தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற செல்லத்துரையின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான பெற்றம்மா, அருளானந்தம், தங்கவேல், யோகமலர் மற்றும் தர்மபூபதி, கமலாதேவி, விமலாதேவி, இந்திராதேவி ஆகியோரின் அன்புச் சகோதரியும், சந்திரகுலசிங்கம் (பாதுகாப்பு உத்தியோகத்தர்-கோல்டன் ஈகிள்), குமாரகுலசிங்கம், விஜயகுலசிங்கம் (ஜேர்மனி), வர்ணகுலசிங்கம் (ஜேர்மனி), தவராஜசிங்கம் (கொலண்ட்), செந்தில்செல்வி, உதயகுலசிங்கம் ஆகியோரின் அன்புத் தாயாரும், டெய்சிராணி, செல்வவதனா, பொங்கா, மேரிஜடா, கபிலநந்தினி, ராசகுமார், தாமரைச்செல்வி ஆகியோரின் அன்பு மாமியாரும், அஸ்கி, ஜென்சி, லக்சன், கோபிராஜ், குயின்சன், அபிலாஜினி, நிரேஸ், நிசான், நிருஜா, நடினா, நொமினா, நெவினா, கம்சிகா, நிருஜன், நரேந்திரன், லக்சிகன் ஆகியோரின் பாட்டியும், சங்கீதா, சுகானா, ஜேன், அமலா, யோனா ஆகியோரின் பூட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (11.04.2021) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தெல்லிப்பழை கொத்தியாலடி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர்.
077 498 6362, 076 301 3569

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மரண அறிவித்தல்

பிறப்பு 10 . 04 . 1934



இறப்பு 10 . 04 . 2021

### திருமதி இராசையா பரமேஸ்வரி

செட்டிக்குடியிருப்பு, வைரவர் கோயிலடி, வதிரி, கரவெட்டியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி இராசையா பரமேஸ்வரி அவர்கள் நேற்று (10.04.2021) சனிக்கிழமை இறைவனடி சேர்ந்து விட்டார்.

அன்னார் அமரர் செல்லையா - மாணிக்கம் தம்பதியரின் அன்பு மகளும், அமரர் வீரவாகு தெய்வானைப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகளும், அமரர் வீரவாகு இராசையாவின் பாசமிகு மனைவியும், தருமலிங்கம், சுப்பிரமணியம் அமரர் பரராசசிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரியும், இலங்கரத்தினம் அவர்களின் பாசமிகு தாயாரும், இலங்கரத்தினம்- சந்திரகலாதேவியின் அன்பு மாமியாரும், தருமலிங்கம்-பத்தினி, சுப்பிரமணியம்-சிவபாக்கியம், அமரர் பரராசசிங்கம் மனோன்மணி ஆகியோரின் அன்பு மைத்துனியாரும், மாலதி, இந்துமதி, மாணிக்கரதி, நாகேந்திரன், நரேந்திரன், ரஜினி, அமரர் சிவா செல்லையா, வசந்தி, சுகந்தி, செல்வஇளங்கோ ஆகியோரின் மாமியாரும், சிந்து, பைரவி, லஷ்மன் ஆகியோரின் பாசமிகு அப்பம்மாவும் ஆவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (11.04.2021) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் இடம்பெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக ஆலங்கட்டை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர்
021 226 1541

# உள்ளூராட்சிமன்றத் தேர்தலில் பெண்களுக்கு 25 வீத ஒதுக்கீடு

## பெப்ரல் கோரிக்கை



கொழும்பு,ஏப்.11

உள்ளூராட்சி மன்றத் தேர்தல் முறைமையைத் திருத்தம் செய்யும் போது, தேர்தல் தொகுதிகளில், பெண்களுக்கு 25 வீத பிரதிநிதித்துவம் கட்டாயம் வழங்கப்பட வேண்டும் என்று பெப்ரல் அமைப்பு கோரிக்கை விடுத்துள் ளது.

உள்ளூராட்சி மன்றத் தேர்தல் முறைமையைத் திருத்தம் செய்வதற்கு, உள்ளூராட்சி மன்றங்களிலும் மாகாண சபைகள் அமைச்சு ஆகியவை உயர்மட்டக் குழுவை நியமிக்கத் தீர்மானித்துள்ளன. இது தொடர்பில் சில யோச னைகளை பெப்ரல் அமைப்பு முன்வைத்துள்ளது. அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

விகிதாசார முறைமை , பெண்களுக்கு 25 வீத பிரதிநிதித்துவம், தேர்தல் தொகுதிகளின் பாதுகாப்பு மற்றும் உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கை உள்ளிட்டவற்றில் கவனம் செலுத்தப்பட வேண்டும்.

தேர்தல் தொகுதிகளை 20 வீதத்தால் குறைப்பதுடன் , தேசியப் பட்டியலுக்காக வழங்கப்பட்டுள்ள வீதத்தை 40 தொடக்கம் 30 வீதத்தால் குறைக்க வேண்டும். வேட்பாளர்களின் வதிவிடங்களை உறுதிப்படுத்திக் கொள்வதற்கான முறையொன்று பின்பற்றப்பட வேண்டும். வேட்பாளர்கள் தமது சொத்து விபரங்களை வேட்பு மனுவுடன் ஒப்படைக்க வேண்டும். வேட்பாளர்கள் தாம் வசிக்கும் தேர்தல் தொகுதியின் ஆவணங்களைச் சமர்பிக்க வேண்டும்.

அரச சேவையாளராயின் குறித்த தேர்தல் தொகுதியில் கடமையாற்றவில்லை என்று சட்ட ரீதியாக ஏற்றுக் கொள்ளப்பட்ட ஆவணங்களைச் சமர்ப்பிப்பதுடன் , அரச சேவையாளராக இல்லாவிடின் அது தொடர்பில் உறுதிப்பிரமாணம் செய்து கொள்ள வேண்டும். பல்கலைக் கழக உபவேந்தர்கள் மற்றும் நிர்வாக சேவையின் உயர் அதிகாரிகள் இருவரை உள்ளடக்கிய குழு, அரசியல் நோக்கங்கள் இல்லாமல் உள்ளூராட்சி மன்றங்களுக்குத் தேவையான மற்றும் ஜனநாயக அடிப்படைக் கொள்கைக்கு அமைய தேவையான திருத்தங்களைச் செய்ய வேண்டும்.

எதிர்காலத்தில் உள்ளூராட்சி மன்றங்கள் மற்றும் மாகாண சபைகள் அமைச்சு முன்னெடுக்கும் சிறந்த செயற்றிட்டங்களுக்கு எமது அமைப்பு ஒத்துழைப்பை வழங்கும்- என்றுள்ளது.

(ப-4)

சித்திரைப் புத்தாண்டு சிறப்புச் சலுகைகள்!
எதிர்வரும் 12, 13, 14, தினங்களில் எமது வாழிக்கையாளர்களின் நன்மை கருதி சிறப்புச் சலுகைகளை வழங்குகின்றோம் !!!
எமது சித்திரைப் புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்
இலவசம் இலவசம்





மேலும் இலத்திரனியல், வீட்டு உபகரணப் பொருட்களும் மலிவு விலையில் பெற்றுக்கொள்ளலாம் !!!
குறிப்பு: 14ம் திகதி மதியம் 12 மணிவரை மட்டுமே பொருட்கள் விற்பனை செய்யப்படும்
முந்துங்கள்! முந்துங்கள்!! இவ் அரிய வாய்ப்பை நழுவவிடாதீர்கள்
நீர் சுத்திகரிப்பு துறையில் முன்னோடியும், சுற்றாடல் அதிகார சபையினால் அங்கீகரிக்கப்பட்டதுமான
Everpure Hi-Tec (Pvt) Ltd.
Professional in Total Water Management
HOTLINE : 075 331 3310
JAFFNA
NO.581, K.K.S ROAD, JAFFNA, SRI LANKA.
TEL : 021 222 6888
KILINOCHCHI
NO.677, A9 ROAD, KARADIPOKKU JUNCTION, KILINOCHCHI.
TEL : 021 228 4888 HOTLINE:
VAVUNIYA
NO.65, VAIRAVAKOVIL ROAD, VAIRAVAPULIYANKULAM, VAVUNIYA.
HOTLINE: 075 331 3303

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## தேவை
இருபாலை சந்தியில் உள்ள புடைவை கடைக்கு பெண் ஊழியர்கள் தேவை
தொடர்பு 076 049 6031

## விற்பனைக்கு
TATA - 207 Single Pickup வாகனம் விற்பனைக்குண்டு
தொடர்பு 074 186 8437

## தையல் வகுப்புகள்
தையல் வகுப்புக்கள் நடைபெறுகின்றன. இடம் நல்லூர்
தொடர்பு 077 561 1236

## மணமகன் தேவை
1992 யாழிந்து பூராடம் அபிவிருத்தி உத்தியோகத்தர். யாழ்ப்பாணம் பதிவு 5650 Unlimited குறிப்புக்கள் பதிவுக்கட்டணத்தில் 30% கழிவு
Ensured Quality Lanka, Colombo - 04 www.EQMarriageService.com 076 664 9401

## மணமகள் தேவை
1992 யாழிந்து மகம் Doctor, கொழும்பு பதிவு 5522 தரகர் கூலி இல்லை Unlimited குறிப்புக்கள் பதிவுக்கட்டணத்தில் 30% கழிவு
Ensured Quality Lanka, Colombo - 04 www.EQMarriageService.com 076 664 9401

## மணமகள் தேவை
1990 யாழிந்து அனுஷம், Doctor, யாழ்ப்பாணம், பதிவு 5209 தரகர்கூலி இல்லை Unlimited குறிப்புக்கள் பதிவுக்கட்டணத்தில் 30% கழிவு
Ensured Quality Lanka, Colombo - 04 www.EQMarriageService.com 076 664 9401

## மணமகள் தேவை
1989 இந்து பூசம் Doctor, மட்டக்களப்பு பதிவு 4917 தரகர் கூலி இல்லை Unlimited குறிப்புக்கள் பதிவுக்கட்டணத்தில் 30% கழிவு
Ensured Quality Lanka, Colombo - 04 www.EQMarriageService.com 076 664 9401

## தவறிவிட்டது.
WPBFK XXXX இலக்க வாகனத்தின் வாகன வரிப் பத்திரம், காப்புறுதி பத்திரம் ஆகியவை கடந்த 28.03.2021 ஞாயிற்றுக்கிழமை சாவகச்சேரி தனங்கிளப்பு வீதி உள்ளிட்ட நகரப்பகுதியில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தொடர்பு கொள்ளவும்.
சன்மானம் வழங்கப்படும்
077 921 5283

## சேவை
நீங்கள் அடகுவைத்து மீட்டெடுக்கமுடியாத நகைகளை எமது நிறுவனத்தின் ஊழியர்கள் மூலமாக நீங்கள் அடகு வைத்த நிறுவனத்திற்கு வருகை தந்து மீட்டு எடுத்து அதற்கான பெறுமதிப்பணம் அவ்விடத்திலேயே தரப்படும் நாடளாவிய ரீதியில் சிநேக பூர்வமான சேவை.
AAA Gold Center
076 568 4346

## மணமகன் தேவை
1984 யாழிந்து அஷ்வினி Management Officer, உடுப்பிட்டி, பதிவு 5632 Unlimited குறிப்புக்கள் பதிவுக்கட்டணத்தில் 30% கழிவு
Ensured Quality Lanka, Colombo - 04 www.EQMarriageService.com 076 664 9401

## மணமகன் தேவை
யாழ் இந்து கௌரவ குடும்பம் 1981 பூராடம் 10 இல் சூரியன் செவ்வாய் 33 பாவமுடைய மணமகளுக்கு மணமகன் தேவை (சூரியன் செவ்வாய் இல்லமாலும் பார்க்கலாம்)
077 078 3832, வைபர்077 964 9245

## மணமகள் தேவை
யாழ் இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 1987 ஆம் ஆண்டு பிறந்த 7இல் செவ்வாய் உள்ள அரச உத்தியோகமுள்ள மணமகனுக்கு தகுந்த வரனை எதிர்பார்க்கிறோம்.
தொடர்பு 076 083 9341

## மோட்டார் சைக்கிள் விற்பனைக்கு
நல்ல நிலையில் மருத்துவ பீட மாணவியால் பாவிக்கப்பட்ட YAMAHA RAY ZR
மோட்டார் சைக்கிள்
(CP BEL XXXX)விற்பனைக்கு
077 372 2498, 077 535 3824

## வீட்டுப் பணிப்பெண் தேவை
யாழ் நகரின் மத்தியில் வசிக்கும் சிறிய குடும்பம் ஒன்றிற்கு பிள்ளை பராமரிப்புக்கு வீட்டுப் பணிப் பெண் தேவை வயது 45 ற்கு மேற்பட்டவர் தங்கி நிற்றல் விரும்பத்தக்கது.
சம்பளம் 15 000/- ரூபா
தொடர்பு 070 123 3314

## தவறி விட்டது
புத்தூர் வடக்கைச் சேர்ந்த திருமதி இராசதுரை இராசேஸ்வரி (வயது 73) (தேசிய அடையாள அட்டை இலக்கம் 497510163V) ஆகிய எனது கழுத்துச் சங்கிலி (31/2 பவுண்) வசிப்பிடத்திற்கும் புத்தூர் வடக்கு காரைக்கூடல் வைரவர் கோயிலுக்கும் இடையில் தவறிவிட்டது. எடுத்தவர்கள் மற்றும் இது தொடர்பாக தகவல் தெரிந்தவர்கள் தந்து உதவவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும்
தொடர்பு 077 977 3302

## கணினி அறிவுள்ள பெண் வேலையாள்கள் தேவை
யாழ் வணிகர் கழகத்திற்கு கணினி அறிவுள்ள, தமிழ், ஆங்கிலம் தட்டெழுத்து (Typing) தெரிந்த ஓரளவு Accounts தெரிந்த பெண் வேலையாள் தேவை. பொருத்தமானவர்கள் தங்கள் சுயவிபரக்கோவையுடன் விண் ணப்பங்களை யாழ் வணிகர் கழகம், இல 165 மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்கோ அல்லது Jaffnachamberofcommerce@gmail.com என்னும் மின்னஞ்சல் முகவரிக்கோ அனுப்பி வைக்கவும். விண்ணப்பங்கள் 19.04.2021 திங்கட்கிழமை வரை ஏற்றுக் கொள்ளப்படும்.

## காணி விற்பனைக்கு
கே.கே.எஸ். வீதி, தெல்லிப்பளை குருக்கள் கிணற்றடி பிள்ளையார் கோவிலுக்கு அருகாமையில் கே.கே.எஸ் வீதியிலிருந்து 900m தூரத்தில் 15 1/2 பரப்பு பனைகளுடன் கூடிய காணி விற்பனைக்கு உண்டு பிரித்தும் கொடுக்கப்படும்
தொடர்பு 077 676 3409, 076 763 8440

## மணமகள் தேவை
1985யாழிந்து அவிட்டம் Doctor,யாழ்ப்பாணம் பதிவு 5675 தரகர் கூலி இல்லை Unlimited குறிப்புக்கள் பதிவுக்கட்டணத்தில் 30% கழிவு
Ensured Quality Lanka, Colombo - 04 www.EQMarriageService.com 076 664 9401

## மணமகன் தேவை
1993 யாழிந்து கார்த்திகை, Teacher, காரைநகர், பதிவு 5611 Unlimited குறிப்புக்கள் பதிவுக்கட்டணத்தில் 30% கழிவு
Ensured Quality Lanka, Colombo - 04 www.EQMarriageService.com 076 664 9401

## விற்பனைக்கு
தனிப்பட்ட ஒருவரின் பாவனையில் உள்ள நல்ல நிலையில் இருக்கும் மாருதி 800 கார் விற்பனைக்கு உண்டு.
தொடர் இல NPHY.....
தொடர்பு கொள்ள வேண்டியதொலைபேசி எண்
077 347 5255

## வீடு/ காணி தேவை
தொண்டமாறு - சின்னமலை கிழக்குப் பக்கமாக அல்லது வல்வெட்டித்துறை கிழக்குப் பக்கமாக காணியொன்று அல்லது வீடொன்று தேவை.
077 617 8297, 077 734 4882

## வேலை வாய்ப்பு
யாழ்ப்பாணத்தில் உள்ள தொழிற்சாலை ஒன்றில் பணிபுரிவதற்கு க.பொ.த (உயர் தரம்) சித்தியடைந்த, ஆங்கில வாசிப்பு, எழுத்து பேச்சு அறிவுடையவரும், Stores நிர்வகிப்பு அனுபவம் உள்ளோரிடம் இருந்து வேலைவாய்ப்பு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றது.

தர உத்தரவாதம் Quality Assurance GMP போன்றவற்றில் அனுபவம் மேலதிக தகைமைகளாக கொள்ளப்படும்.

Phone Number- 077 200 8484
Email - findjobjaffna@gmail.com

## வீடு வாடகைக்கு
கிளிநொச்சியில் விவேகானந்த நகரில் வீடு வாடகைக்கு உண்டு
077 711 1716, 076 860 4501

## வாடகைக்கு
Hotel and Restaurant முழுமையாக வாடகைக்கு உள்ளது.
அறைகள் வாடகைக்கு உள்ளது.
077 741 2713, 077 724 2427

## மணமகன் தேவை
யாழ். இந்து விஸ்வகுலம் 1984 தை உத்தராடம் மகரராசியில் பிறந்த சைவ போசனமுள்ள அரச தொழில் புரியும் விவாகரத்தான மணமகளுக்கு உள்நாட்டில் பொருத்தமான மணமகனை பெற்றோர் தேடுகின்றனர். தரகர் தேவையில்லை.
தொ.இல-076 152 9198

## வீடு வாடகைக்கு
கொக்குவில் கிழக்கில் அம்மன் வீதியில் 3 அறைகள் கொண்ட மீளமைக்கப்பட்ட வீடு வாடகைக்கு உண்டு. (மருத்துவ பீடத்திற்கு அருகாமையில்)
தொடர்பு 070 608 6209

## நாய்க்குட்டிகள் விற்பனைக்கு
48 நாட்கள் நிரம்பிய பொம்மேரியன் நாய்க் குட்டிகள் விற்பனைக்கு உண்டு. பூச்சி நீக்கி, தடுப்பு ஊசி போடப்பட்டது.
தொடர்பு 077 869 5005

## பணிப்பெண் தேவை
யாழ் நகரில் உள்ள வீடொன்றில் தங்கியிருந்து வயோதிபப் பெண் ஒருவரைப் பராமரிப்பதற்கு பணிப்பெண் தேவை.
சம்பளம் 30 000 ரூபா மேல் வழங்கப்படும்
தொடர்பு 076 929 4696

## மணமகன் தேவை
1988 யாழிந்து விசாகம், கிராம சேவையாளர் யாழ்ப்பாணம், பதிவு 5500 Unlimited குறிப்புக்கள் பதிவுக்கட்டணத்தில் 30% கழிவு
Ensured Quality Lanka, Colombo - 04 www.EQMarriageService.com 076 664 9401

## 9 லட்சம் பேருக்கு இதுவரை தடுப்பூசி

கொழும்பு,ஏப்.11
இலங்கையில் இதுவரை 9 லட்சத்துக்கும் அதிகமானோருக்கு கொரோனாத் தடுப்பூசி செலுத்தப்பட்டுள்ளது என்று தொற்று நோயியல் தடுப்புப் பிரிவு தெரிவித்துள்ளது.

அதனடிப்படையில் கடந்த ஜனவரி மாதம் 29 ஆம் திகதி தொடக்கம், தற்போது வரை 9 லட்சத்து 25 ஆயிரத்து 176 பேருக்கு கொரோனாத் தடுப்பூசி செலுத்தப்பட்டுள்ளது என்று தொற்று நோயியல் தடுப்புப் பிரிவு தெரிவித்துள்ளது. (ப-4)


சித்திரைப் புத்தாண்டை முன்னிட்டு
யாழ். நல்லூரில் இயங்கும்
லிங்கா பெஷன் இன்
மாபெரும் தள்ளுபடி
சேலை வகைகளுக்கு
50% விசேட கழிவுகள்
இரண்டு சேலை வாங்கினால் ஒன்று இலவசம்
மேலும் பல ஆடைகளுக்கான விசேட தள்ளுபடி

இல. 202A, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்
Tel. No : 021221 4999 www.Lingaa.lk
WhatsApp : 076 644 0722 www.Fb.com/Lingaa.lk


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

தோற்றம்
05 . 12 . 1928



மறைவு
12 . 03 . 2021

கடந்த 12.03.2021 அன்று இறைபதமடைந்த

**அமரர் திரு. காசித்தம்பி மயில்வாகனம்**

அவர்களின் 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்தியமும் இன்று (11.04.2021) ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெறும் அவரது பிரிவுச் செய்தி அறிந்து நேரில் வந்து அஞ்சலி செலுத்தியோருக்கும் இரங்கல் தெரிவித்தோருக்கும் மனமார்ந்த நன்றிகளைத் தெரிவிக்கின்றோம்.

மீசாலை வடக்கு,
கொடிகாமம்.

குடும்பத்தினர்
077 692 0171
021 205 0496

## பதவி வெற்றிடம்

1. விற்பனை உதவியாளர்
தங்கிநின்று வேலை செய்யக் கூடிய ஆண்கள்
வயது : 25 - 35
பெண்கள் வயது : 21 - 30
நேர்முகத்தேர்வு : 12.04.2021 - 19.04.2021
9 am - 4 pm
தொடர்புகளுக்கு : 077 623 1295, 077 477 3481

## 31ஆம் நாள் நினைவு நாளும் நன்றி நவிலலும்



பிறப்பு 22.07.1966
இறப்பு 12.03.2021

கடந்த 12.03.2021 வெள்ளிக்கிழமை
அமரத்துவமடைந்த எமது
குடும்பத் தலைவர்

**அமரர் சுகிர்தநாயகம் சுரேந்திரன்**
(Security Guard, Certiz Lanka - Jaffna)

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் 09.04.2021 வெள்ளிக்கிழமை நடைபெற்றது. வீட்டுக்கிரியைகள் இன்று (11.04.2021) ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெறும்.
எமது குடும்பத்தலைவரின் மறைவுச் செய்தி கேட்டு நேரில் வருகை தந்தவர்களுக்கும் தொலைபேசி மூலம் ஆறுதல் தெரிவித் தோருக்கும் ஏனைய வழிகளில் உதவி செய்தவர்களுக்கும் எமது குடும்பத்தின் சார்பில் நன்றியினைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

சுதுமலை,
மானிப்பாய்.

குடும்பத்தினர்
மகன் (074 042 1567)

## 'ஐஸ்' உடன் முதியவர் கைது

கொழும்பு,ஏப்.11
சுமார் 80 லட்சம் ரூபா பெறுமதியான போதைப்பொருளுடன், 62 வயதுடைய முதியவர் கைது செய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.
கொழும்பு மத்திய குற்றத் தடுப்புப் பிரிவினரால் முன்னெ டுக்கப்பட்ட சோதனையில், மாளிகாவத்தைப் பகுதியில் வைத்து முதியவர் கைது செய்யப்பட்டுள்ளார்.
அவரிடம் 80 லட்சம் ரூபா பெறுமதியான 1.2 கிலோக் கிராம் ஐஸ் ரக போதைப்பொருள் கைப்பற்றப்பட்டுள்ளது. மேலதிக விசாரணைகள் முன்னெ டுக்கப்பட்டுள்ளன என்றும் பொலிஸார் தெரிவித்தனர். (ப-4)

## மரண அறிவித்தல்

தோற்றம்
27 . 09 . 1943



மறைவு
09 . 04 . 2021

**திரு. சுப்பிரமணியம் நவரட்ணம் தெட்சனானந்தமூர்த்தி**

(S.N.T. மூர்த்தி ) ஓய்வு பெற்ற உதவிப்பாதுகாப்பு அத்தியட்சகர் - மக்கள் வங்கி வடபிராந்தியம் , ஓய்வு பெற்ற முன்னைநாள் முகாமையாளர் றோயல் தியேட்டர் - வவுனியா, முன்னைநாள் பகுதி நேர விற்பனைப்பிரதிநிதி இலங்கை, உலோகப்பொருட் கூட்டுத்தாபனம் ( LANKA LOHA ) வடமாகாணம், முன்னைநாள் பகுதி நேர Reserve Sub - Inspector of Police - வன்னிபிராந்தியம் , முன்னைநாள் பகுதி நேர நிர்வாக முகாமையாளர் மனோகரா தியேட்டர் - யாழ்ப்பாணம் , மக்கள் வங்கி ஓய்வூதியர் சங்கம் யாழ்ப்பாணம், வன்னிப்பிராந்திய ஒருங்கிணைப்பாளர்)

"நவம்ஸ்" பிள்ளையார் கோவில் வீதி, சித்தன்கேணியை பிறப்பிடமாகவும் "நவம்ஸ்" ஜோசப்வாஸ் வீதி, இறம்பைக்குளம் வவுனியாவை வசிப்பிடமாக்கொண்ட திரு. தெட்சனானந்த மூர்த்தி (S.N.T மூர்த்தி) அவர்கள் நேற்றுமுன்தினம் (09.04.2021) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நவரட்ணம் - இராசம்மா தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான நவரட்ணம் - திலோத்தமை தம்பதிகளின் அன்பு மருமகனும் காலஞ்...றவர்களான இராசரட்ணம், சிவசுப்பிரமணியம், ஆகியோரின் அன்புச் சகோதரனும் ...வரட்ணத்தின் (செல்வம்) அன்புக் கணவரும், சுதர்சினி (ஆசிரியர் - வவுனியா தமிழ் ...ய மகாவித்தியாலயம்) ரேவதி (வைத்தியர் R.D.H.S - வவுனியா) மயூரன் (மக்கள் வங்கி ...வுனியா) ஆகியோரின் அன்புத் தந்தையும், கோகிலதாசன் (ஆசிரியர்- வவுனியா தமிழ் ...ய மகாவித்தியாலயம்), அற்புதராஜா (பீடாதிபதி யாழ் . பல்கலைக்கழக பொறியியல் பீடம் - ...நாச்சி), பிரியதர்ஜினி (ஹோட்டல் ஓவியா - வவுனியா ) ஆகியோரின் பாசமிகு மாமனாரும் ...கன், அபிசிகன், நர்மிதா, ஜதுர்சன், சப்தனா ஆகியோரின் பாசமிகு பேரனுமாவார் .

...னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (11.04 2021) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 1 .00 ...ளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக இறம்பைக் ...இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை ... ...கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும் .

தகவல்
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

அன்னை மடியில்
11 . 03 . 1945



இறைவன் அடியில்
10 . 04 . 2021

**திருமதி வீரசிங்கம் பரமேஸ்வரி**

நாவலடி லேன் கொக்குவில் மேற்கை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி வீரசிங்கம் பரமேஸ்வரி அவர்கள் நேற்று (10.04.2021) சனிக்கிழமை காலை இறைவனடி சேர்ந்தார்.
அன்னார் காலஞ்சென்ற சபாபதி வீரசிங்கம் (யாழ் மாநகர சபை சாரதி) அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான சபாபதி சின்னப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்றவர்களான செல்லத்துரை இராசம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற கைலாசபிள்ளை மற்றும் சரஸ்வதி ஆகியோரின் அன்புச் சகோதரியும், சித்திரா, சுரேந்திரன், சுமித்திரா (மீரா) கல்பனா, றமனேந்திரன் (றமணன்), பாலரூபன் (கண்ணன்), பிரதீபா (தீபா), பிரமிளா ஆகியோரின் அன்புத் தாயாரும், சுவேந்திரன், ஜெயக்குமாரி, கிருபாகரன், ஶ்ரீஸ் கந்தராஜா, கஜனி, தர்சினி, மோகனகுமார், ஜனார்த்தனன் ஆகியோரின் பாசமிகு மாமியாரும், சுஜந்தன், சுலக்ஷன், டிலக்ஷன், லக்ஷன், நிக்ஷன், மதுநிகா, இலக்கியா, லக்ஷன், இந்துஜன், ரஜீனா, ரஜிந்தன், லதுஜா, ஜஸ்மிகா, ரூஷானிகா, சிவானி ஆகியோரின் பாசமிகு பேர்த்தியாரும் ஆவார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (11.04.2021) ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12.30 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.
இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர்.
(லதுஜா ஸ்ரோர்ஸ்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுற்றாடலுக்கு தீங்கு: 323 பேர் கைது

கொழும்பு,ஏப்.11

சுற்றாடலுக்குத் தீங்கு விளைவித்தனர் என்ற குற்றச் சாட்டில் நாடளாவிய ரீதியில் 323 பேர் கைது செய்யப் பட்டுள்ளனர். நாடளாவிய ரீதியில் கடந்த புதன்கிழமை அனைத்து பொலிஸ் நிலையங்கள் மற்றும் பொலிஸ் விசேட செயலணி மூலம் முன்னெடுக்கப்பட்ட சோதனை நடவடிக்கைகளின் போது இவர்கள் கைது செய்யப்பட்டனர்.

கைது செய்யப்பட்டவர்களில் பெரும்பாலானோர் வட மத்திய மாகாணத்தைச் சேர்ந்தவர்கள். அந்த மாகாணத்தில் 57 சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். 16 வாகனங்களும் பறிமுதல் செய்யப்பட்டன என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

(ப-4)


## விடுதி காப்பாளர் தேவை

சிவனருள் இல்லத்திற்கு (திருக்கேதீச்சரம்) ஆண் விடுதிக் காப்பாளர் தேவை. விரும்பியவர்கள் 20.04.2021 க்கு முன் விண்ணப்பிக்கவும். முன் அனுபவமுள்ளவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.

முகவரி:-

பணிப்பாளர், சிவனருள் இல்லம், திருக்கேதீச்சரம்.

தொடர்புகளுக்கு : 077 5815 998


## 01ம் ஆண்டு நினைவஞ்சலி



பிறப்பு : 01.02.1930 இறப்பு : 24.03.2020

திருமதி

### செல்லமுத்து பத்மநாதன்

(ஆசிரியை யா/ நாயன்மார்கட்டு மகேஸ்வரி வித்தியாசாலை)

அன்னாரின் ஆத்மா சாந்திபெற
பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி

இல.14, செல்வபதி
கடுக்காயடி ஒழுங்கை,
நல்லூர், யாழ்ப்பாணம்.

குடும்பத்தினர்.
ஸ்ரீமுருகன் களஞ்சியம்
வட்டுக்கோட்டை

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

பிறப்பு 27 - 07 - 1936



இறப்பு 12 - 03 - 2021

அமரர்

### நாகலிங்கம் சுந்தரலிங்கம்

(ஓய்வுபெற்ற பொலிஸ் உத்தியோகத்தரும், வலிகிழக்கு தென்பகுதி பல நோக்கு கூட்டுறவுச் சங்கத்தின் தலைவரும் யாழ்ப்பாண மாவட்ட கூட்டுறவுச் சபையின் முன்னாள் பணிப்பாளரும்)

குடும்பத்தின் ஒளிவிளக்காய், தலைமகனாய், கணவனாய், தந்தையாய், சகோதரனாய், மாமனாய், மைத்துனனாய், தாத்தாவாய், சங்கத்தலைவனாய், மக்கள் சேவகனாய், வாழ்ந்தீர்கள். கண்ணிமைக்கும் காலத்துள் காலனுமைக் கவர்ந்து சென்ற கொடுமையை எண்ணிக்கலங்குகின்றோம்.

கற்பகப்பிள்ளையார் வீதி,
இருபாலை.

குடும்பத்தினர்


## கட்டட வேலைகள் செய்துதரப்படும்

✓சகலவிதமான திருத்த வேலைகள் மற்றும் பழைய வீடுகளை நவீனப்படுத்தல்
✓அனைத்து விதமான கட்டட நிர்மான வேலைகள் செய்து தரப்படும். தொடர்புகளுக்கு:
076 477 5532, 076 188 2809

## தேவை

யப்பான் லான்சர் 50 அல்லது 90
(மூன்று ஆங்கில இலக்கம்)
0777 361215

## வீட்டுப் பணிப்பெண் தேவை

யாழ்ப்பாணத்தில் உள்ள வயோதிபரைப் பராமரிப்பதற்கு வீட்டுப் பணிப்பெண் தேவை.
தொடர்பு: 077 051 1654

## தேவை

பழைய கதவு, மரங்கள், ஓடு, வீடு விலைக்கு வாங்கப்படும்.
தொடர்பு: 077 6250 779

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் கோவில் வீதி (Temple Road) யில் ஒன்பது அறைகளுடன் இரு தளங்களைக் கொண்ட வீடு கிணறு ஆகியவற்றுடன் 1 1/2 பரப்பு காணி விற்பனைக்குண்டு.
தொடர்பு:
076 8560 594, 077 871 5430


## மரண அறிவித்தல்

தோற்றம் 06 05 1956



மறைவு 03 04 2021

### திரு. கந்தையா விஜயகுமார்

வசாவிளானை பிறப்பிடமாகவும் கொல்லங்கலட்டி, அபுதாபியை வசிப்பிடமாகவும் கொண்டிருந்த மகாஜனக் கல்லூரியின் பழைய மாணவருமான கந்தையா விஜயகுமார் 03.04.2021 அன்று அபுதாபியில் இறைவனடி சேர்ந்தார். அன்னார் காலஞ்சென்றவர்களான டாக்டர் கந்தையா, திருமதி பரமேஸ்வரி கந்தையா தம்பதிகளின் புதல்வரும் காலஞ்சென்ற குமாரசாமிப்பிள்ளை (புகையிரத நிலைய அதிபர்), திருமதி மகேஸ்வரி தம்பதிகளின் அன்பு மருமகனும் கொல்லங்கலட்டியை சேர்ந்த ரஞ்சினியின் (அபுதாபி) அன்பு கணவரும் பிரஷானி (அபுதாபி) மதுஷானி (அபுதாபி) ஆகியோரின் பாசமிகு தந்தையும் ஆவார். கதிர்காமநாயகி, ஆனந்தகுமார், யோகநாயகி, சியாமளநாயகி, செந்தில்நாயகியின் அன்பு சகோதரரும் காலஞ்சென்ற கணகரட்ணம், ஜரானி, சிவக்குமார், காலஞ்சென்ற சத்தியானந்தன், விதுரன், ராஜன், ராஜி, ரோகினி, சாந்தினி, சுகிர்தா ஆகியோரின் அன்பு மைத்துனரும் லதா பிரியதர்ஷினி, சிறீநடனசோதி, பாலசந்திரன், நிமலேந்திரன், டிலிப்குமார் ஆகியோரின் சகலனும் ஆவார். அன்னாரின் இறுதிக் கிரியைகள் 05.04.2021 திங்கட்கிழமை அபுதாபியில் நடைபெற்றது. இவ் அறிவித்தலை உற்றார் உறவினர்கள் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

தகவல் - குடும்பத்தினர்:
00971 50 3167983 (மனைவி ரஞ்சினி)
00971 50 7802968 (மகள் பிரஷானி)
00971 50 6998732 (மகள் மதுஷானி)

## மரண அறிவித்தல்

பிறப்பு 13 . 06 . 1942



இறப்பு 10 . 04 . 2021

### திருமதி பிரியதர்சினி ஈஸ்வரானந்தன்

மன்னாரை பிறப்பிடமாகவும் நல்லூரை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பிரியதர்சினி ஈஸ்வரானந்தன் நேற்று (10.04.2021) சனிக்கிழமை காலமானார். அன்னார் காலஞ்சென்றவர்களான நவரட்ணம் டெய்சி தம்பதியரின் ஏக புதல்வியும், காலஞ்சென்றவர்களான சம்பந்தர் பாக்கியம் தம்பதியரின் மருமகளும், காலஞ்சென்ற ஈஸ்வரானந்தனின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற நாகேஸ்வரன் மற்றும் நகுலேஸ்வரியின் மைத்துனியும், காலஞ்சென்ற விக்கினராஜா (விக்கி) மற்றும் தயாளினி (தயா-USA), மகிந்தன் (பனை அபிவிருத்திச் சபை, யாழ்ப்பாணம்), மகேந்திரன் (கண்ணா-கொமர்ஷல் வங்கி, யாழ்ப்பாணம்), ஜனகன் (ஜனா-பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம், யாழ்ப்பாணம்) ஆகியோரின் பாசமிகு தாயாரும், உதயதாஸ் (USA), ஹம்சா (நெல்லியடி மத்திய கல்லூரி-ஆசிரியை), ஜமுனா (ஆசிரியை - வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை) ஆகியோரின் அன்பு மாமியும், லக்சிகா, கம்சிகா, கஜானி, அபிநயா, கேசரன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (11.04.2021) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 1.00 மணியளவில் அன்னாரின் நாவலர் வீதி இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக செம்மணி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

528, நாவலர் வீதி,
நல்லூர்,
யாழ்ப்பாணம்.

தகவல்: குடும்பத்தினர்
077 5018 189
077 390 5115
077 630 4334

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வழமைக்கு திரும்பின ரயில் சேவைகள்

கொழும்பு,ஏப்.11
ரயில் சாரதிகள் மற்றும் கட்டுப்பாட்டாளர்கள் உள்ளிட்ட 3 தொழிற்சங்கங்கள் முன்னெடுத்த பணிப்புறக்கணிப்புப் போராட்டம் கைவிடப்பட்டுள்ள நிலையில், ரயில் சேவைகள் வழமைக்குத் திரும்பியுள்ளன என்று போக்குவரத்து அமைச்சர் காமினி லொக்குகே தெரிவித்துள்ளார்.
ரயில்வே பொது முகாமையாளரை நியமிப்பதற்கான நேர்முகப் பரீட்சையை நடத்துவதற்கு எதிர்ப்புத் தெரிவித்து, நேற்றுமுன்தினம் திடீர் தொழிற்சங்க நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டது.
இதனால் கொழும்பு கோட்டையிலிருந்து புறப்படும் ரயில் சேவைகள் நிறுத்தப்பட்டன.
எனினும் தொழிற்சங்கப் பிரதிநிதிகளுடன் நடத்தப்பட்ட கலந்துரையாடலை அடுத்து பணிப்புறக்கணிப்புக் கைவிடப்பட்டுள்ளது என்றும் அவர் தெரிவித்தார். (4)


### மரண அறிவித்தல்



**திரு. பொன்னையா கந்தசாமி**

முன்னாள் யாழ். பண்டத்தரிப்பு இந்துக்கல்லூரி உப அதிபர், வட்டுக் கோட்டை தொகுதி ஆசிரியர் சங்கத் தலைவர், வடமாகாண ஆசிரியர் சங்க உப தலைவர், புதறானை ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலய பரிபாலன சபையின் உப தலைவர், பத்திரிகை ஆசிரியர்.
யாழ். ஆவரங்காலைப் பிறப்பிடமாகவும், வடலியடைப்பு, கனடா ஆகிய இடங்களை வதிவிடமாகவும் கொண்ட பொன்னையா கந்தசாமி கடந்த 28.03.2021 ஞாயிற்றுக் கிழமை சிவபதம் அடைந்தார். அன்னாரின் வடலியடைப்பு அரசடி வீதியில் இருக்கும் அவரது இல்லத்தில் இன்று (11.04.2021) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில் அஞ்சலி நிகழ்வு நடைபெறும்.

தகவல்: குடும்பத்தினர்.

தொடர்புகளுக்கு

| | | |
|---|---|---|
| சிவா - மகன் | * Phone | : + 4420 8501 2400 |
| ஸ்ரீ - மகன் | * Mobile | : + 141 6917 4381 |
| ராசன் - மகன் | * Mobile | : + 141 6820 0258 |
| றமேஸ் - மருமகன் | * Mobile | : + 164 7609 6421 |
| துஷா - மகள் | *Mobile | : + 141 6665 6159 |

### மரண அறிவித்தல்

**நல்லையா நாகராசா**




அன்னை மடியில் 13.04.1950 — ஆண்டவன் அடியில் 10.04.2021

சித்தன்கேணியை பிறப்பிடமாகவும் பண்ணாகத்தை வசிப்பிடமாகவும் கொண்டிருந்த நல்லையா நாகராசா அவர்கள் நேற்று (10.04.2021) சனிக்கிழமை காலமானார்.
அன்னார் நாகரத்தினத்தின் அன்புக் கணவரும், நந்தினி, ராசகுமார் ஆகியோரின் பாசமிகு தந்தையும், கணேசமூர்த்தி, ஜெயந்தி ஆகியோரின் அன்புச் சகோதரனும், குலேந்திரராசா, சாளினி ஆகியோரின் அன்பு மாமனாரும், பவித்திரனின் அன்புப் பேரனும் ஆவார்.
அன்னாரின பூதவுடல் பண்ணாகம் மகளின் இல்லத்தில் இறுதி அஞ்சலிக்காக வைக்கப்பட்டுள்ளது. இன்று (11.04.2021) ஞாயிற்றுக் கிழமை மு.ப11.30 மணியளவில் இறுதிக்கிரியைகள் இடம்பெற்று பின்னர் விளாவெளி இந்து மயானத்தில் தகனக்கிரியை இடம்பெறும் என்பதை துயரத்துடன் தெரிவித்து கொள்கின்றோம். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள், அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: மகன் - ராசகுமார்
076 300 3649
மருமகன்- குலேந்திரராசா - 077 866 9323

### மரண அறிவித்தல்

பிறப்பு 22 . 12 . 1949



இறப்பு 10 . 04 . 2021

**ஆறுமுகம் தங்கராசா**

வேலாயுதம் வீதி, காளிகோவிலடி நுணாவில் மத்தியை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட ஆறுமுகம் தங்கராசா அவர்கள் நேற்று (10.04.2021) சனிக்கிழமை காலமானார்.
அன்னார் காலஞ்சென்றவர்களான ஆறுமுகம் முத்தாச்சி தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான கந்தையா திரவியம் தம்பதியரின் மருமகனும், கனகமணியின் அன்பு கணவரும், நாகராசா, கலாயினிதேவி, கமலாம்பிகை ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்ற செல்வராணி, சோமசுந்தரம், காலஞ்சென்றவர்களான குணபாலசிங்கம், இராசபுஸ்பம், இராசதுரை, தங்கராசா ஆகியோரின் மைத்துனரும், கமலாம்பிகையின் உடன்பிறவா சகோதரனும் ஆவார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (11.04.2021) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு வேலாயுதம் வீதி, நுணாவில் மத்தி, காளிகோவிலடியில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக சாவகச்சேரி கண்ணாடிபிட்டி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும் என்பதை உற்றார், உறவினர், நண்பர்களுக்கு அறியத் தருகின்றோம்.

தகவல்: குடும்பத்தினர்
கனகமணி (077 134 9580)


# தூய்மை பேணுவது பயங்கரவாதமானால் அதைத் தொடர்ந்தும் முன்னெடுப்பேன்

## யாழ்.மாநகர முதல்வர் தெரிவிப்பு



யாழ்ப்பாணம், ஏப்.11

**பொலிஸாரின் அச்சுறுத்திப் பணியவைக்கும் கேவலமான அராஜகச் செயற்பாடுகளுக்கு ஒருபோதும் இடமளிக்கப் போவதில்லை எனத் தெரிவித்துள்ள யாழ். மாநகர முதல்வர் வி.மணிவண்ணன், நகரின் தூய்மையைப் பேண நடவடிக்கை எடுத்தமை அவர்களின் பார்வையில் தவறென்றால், அதே தவறைத் தொடர்ந்தும் செய்வோம் எனவும் தெரிவித்தார்.**

பயங்கரவாத குற்றத்தடுப்பு பிரிவால் கைது செய்யப்பட்டு பிணையில் விடுவிக்கப்பட்ட அவர் மேலும் தெரிவித்ததாவது;
என்னை யாழ் பொலிஸ் நிலையம் அழைத்த பொலிஸார் நீண்ட நேரம் விசாரணை செய்தனர்.
பின்னர் இன்று (கடந்த வியாழன்) அதிகாலை 2 மணி அளவில் உங்களைக் கைதுசெய்து பயங்கரவாத தடுப்பு பிரிவிடம் ஒப்படைக்கிறோம் எனத் தெரிவித்தனர். பின்னர் என்னை வவுனியா கொண்டு சென்று தடுத்து வைத்து வாக்கு மூலம் பெற்றனர்.
மாநகர சபை பணியாளர் நியமனம் மற்றும் அவர்களின் சீருடை விடயத்தில் புலிகளை மீள உருவாக்கம் செய்ய முயல்வதாக என்மீது குற்றச் சாட்டப் பட்டது.
மாநகர சபையின் சட்டவரம்பின் கீழ் செயற்பட்டது பயங்கரவாதமா? வாக்குமூலத்தின் பின் பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் என்மீது வழக்குப் பதிவு செய்யாமல் தண்டனைச் சட்டக் கோவையின் கீழ் வழக்குப் பதிவு செய்தனர்.
மாநகர சபையின் சுயாதீனச் செயற்பாடுகளில் தலையிடுகின்ற எந்த அதிகாரமும் பொலிஸாருக்கு இல்லை. பொலிஸாரின் இவ்வாறான அராஜக செயற்பாட்டுக்கு எதிராகத் தொடர்ந்து சட்ட ரீதியாகப் போராட நான் தயார்.
பொலிஸ் அராஜகத்தை ஒரு போதும் அனுமதிக்கப்போவதில்லை. எனது விடுதலைக்காக குரல் எழுப்பிய எனது ஆதரவாளர்கள் உள்ளிட்ட அனைவருக்கும் நன்றி கூறுகிறேன் என்றார். (ப-26)

# கைதிகளைப் பார்வையிட குடும்பத்தினருக்கு அனுமதி

கொழும்பு, ஏப். 11
சித்திரை வருடப்பிறப்பையொட்டி எதிர்வரும் 13 மற்றும் 14 ஆம் திகதிகளில் சிறைக் கைதிகளை, அவர்களுடைய குடும்பத்தினர் பார்வையிட முடியும். எனினும், அவர்களுக்கு உணவுப் பொருள்களை வழங்க முடி யாது என்று சிறைச்சாலைகள் திணைக் கள ஊடகப்பேச்சாளரும், ஆணையாளருமான (புனர்வாழ்வு மற்றும் நிர்வா கம்) சந்தன ஏக்கநாயக்க தெரிவித்தார்.
கொவிட் 19 வைரஸ் பரவல் காரணமாக கைதிகளின் குடும்பத்தினர் உணவுப் பொருள்களை வழங்குவது தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளது. அவர்களுக்கு சிறைச் சாலையின் உணவகத்திலிருந்தே உணவு வழங்கப்படுகின்றது.
அதற்காக கைதிகளின் குடும்பத்தின ரால் வாரத்துக்கு 2 ஆயிரம் ரூபா பணத்தை உணவகம் பெறுக் கொண்டிருந்தது. இதன்போது சிறைக் கைதிகளை மாதத்துக்கு ஒரு முறையும், சந்தேகத்தின் பேரில் சிறை வைக்கப்பட்டுள்ள கைதிகளை வாரத்துக்கு ஒருமுறையும் அவர்களது குடும்பத்தினர் பார்வையிடுவதற்கு அனுமதி வழங்கப்பட்டிருந் தது.
இதேவேளை, கைதிகளுக்கு தயார் செய்யப்பட்ட உணவுகள், சிற்றுண்டி கள் மற்றும் சுகாதார பாதுகாப்பு பொருள்கள் என்பவற்றைப் பெற்றுக் கொடுப்பதற்காக சிறைச் சாலையின் உணவகத்துக்கு ஆயிரம் ரூபா பணத்தை செலுத்த முடியும். இந்த பணத் தொகை எதிர்வரும் 14 ஆம் திகதிக்குள் செலுத்தப்பட வேண்டும். என்று மேலும் தெரிவித்தார். (த-இ)

## உப தலைவராக உமாச்சந்திரா

கொழும்பு,ஏப்.11
ஐக்கிய மக்கள் சக்தியின் பிரதிச் செயலாளரான உமாச்சந்திரா பிரகாஷ், ஐக்கிய பெண்கள் சக்தியின் உப தலைவர்களில் ஒருவராக நியமிக்கப் பட்டுள்ளார்.
எதிர்க்கட்சித் தலைவரும், ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவருமான சஜித் பிரேமதாச வால் அவருக்கான நியமனக் கடிதம் வழங்கப்பட்டது. (4)

## மாணவர்கள் தாக்கப்பட்டமைக்கு சைவத்தமிழர் பேரவை கண்டனம்

யாழ்ப்பாணம், ஏப்.11
தெல்லிப்பழை யூனியன் கல்லூரி மாணவர்கள் மீதான கிறிஸ்தவ மிஷனரிக் குழுவின் மிலேச்சத்தனமான இத் தாக்குதலை சைவத்தமிழர் பேரவை வன்மையாகக் கண்டிக்கின்றது என அந்த அமைப்பு தெரிவித்துள்ளது. இது தொடர்பாக அந்த அமைப்பு விடுத்துள்ள அறிக்கையில் மேலும் உள்ளதாவது,
யூனியன் கல்லூரிக்குச் சொந்தமானது என கல்வித் திணைக்களம், பிரதேச செயலகம் என்பவற்றால் உறுதிப்படுத்தப்பட்ட கல்லூரி வளாகத்துக்கு உட்பட்ட காணியினுள் கிறிஸ்தவ மிஷனரிக் குழு அடாத்தாகப் புகுந்து மாணவர்களின் கற்றல் நடவடிக்கைகளுக்கு இடையூறு விளைவித்தது. இது மட்டுமல்லாமல் கிறிஸ்தவ மதகுரு ஒருவரின வழிகாட்டலில் அவரது பிரசன்னத்துடன் அந்தச் சபையைச் சார்ந்த பெண்கள், ஆண்கள் அடங்கிய குழுவினர் பொல்லுகளாலும் கற்களாலும் மாணவர்களைத் தாக்கிக் காயப்படுத்தினர்.
இது தொடர்பாக வெளிவந்துள்ள காணொலி சைவத் தமிழர்களின் மனதை ஆழமாகக் காயப்படுத்தியுள்ளது. மிலேச்சத்தனமான இச் செயலில் ஈடுபட்ட அமெரிக்கன் மிஷன் கிறிஸ்தவ மதக் குழுவினர் உடனடியாக கைது செய்யப்பட வேண்டும். மனிதத்தை நேசிக்கும் சைவத் தமிழ் மக்கள் சார்பாக யூனியன் கல்லூரி சமூகத்துக்கு எமது முழுமையான ஆதரவை வெளிப்படுத்துகின்றோம்- என்றுள்ளது. (ப)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## இழுத்து....

பண்டிகைக் காலமான இக்காலத்தில் நாடெங்கிலும் புதிய கொரோனாக் கொத்தணிகள் உருவாகக்கூடிய வாய்ப்புக்கள் உள்ளன என்று ஏற்கனவே எச்சரிக்கப்பட்டிருந்தது. இதனால் ஒவ்வொரு மாவட்டங்களிலும் விசேடமாக கட்டுப்பாடுகள் நடைமுறைப்படுத்தப்படலாம் என்று கருதப்பட்ட நிலையில் யாழ்ப்பாணம் மாவட்டத்தில் திரையரங்குகள் மூடப்பட்டுள்ளன.

இது தொடர்பில் வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் ஆ.கேதீஸ்வரன் மேலும் தெரிவித்ததாவது:

'யாழ்ப்பாணம் மாவட்டத்தில் கொரோனா வைரஸ் தொற்றுப் பரவல் தீவிரமாக உள்ள நிலையில் தனியார் கல்வி நிலையங்கள் மற்றும் திருமண மண்டபங்கள் ஆகியவற்றின் செயற்பாடுகள் இடைநிறுத்தப்பட்டுள்ளன. எனினும் திரையரங்குகளை மூடவில்லை என்று எமக்கு பல முறைப்பாடுகள் கிடைத் துள்ளன.

அது தொடர்பில் ஆராயப்பட்டது. அதனால் யாழ்ப்பாணம் மாவட்டத்தில் உள்ள அனைத்து திரையரங்குகளும் மறு அறிவித்தல்வரை மூடப்படுகின்றன' என்றார். (ம-26)

## தடை....

மூவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர்.

குறித்த வியாபார நிலையத்தில் தடை செய்யப்பட்ட மாத்திரைகள் உள்ளன என்று இராணுவ புலனாய்வுப் பிரிவினருக்குக் கிடைத்த இரகசியத் தகவலையடுத்து குறித்த மூவரும் கைது செய்யப்பட்டனர். அவர்களிடம் இருந்து தடை செய்யப்பட்ட 100 மாத்திரைகள் மீட்கப்பட்டன. மேலதிக விசாரணைகள் இடம் பெற்று வருகின்றன. (ம-110)

## 100 கோடி...

குவதற்கான ஏற்பாடுகள் முழுவீச்சில் நடைபெற்று வருகின்றன என காங்கேசன்துறை லங்கா சிமெண்ட் தொழிற்சாலையின் பொறுப்பு வாய்ந்த உத்தியோகத்தர் பொன்னையா விமலநாதன் குற்றஞ்சாட்டியுள்ளார்.

யாழ் ஊடக அமையத்தில் நேற்று இடம் பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே இந்தத் தகவலை அவர் வெளிப்படுத்தியுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

திறந்த விலை மனுக்கோரல் இன்றி சிமெந்துத் தொழிற்சாலையின் இரும்புகளை தெற்கைச் சேர்ந்தவர்களுக்கு விற்பனை செய்யும் முயற்சிகள் இடம் பெற்று வருகின்றன. தெல்லிப்பழை பிரதேச செயலரும் இதற்கு உடந்தையாக உள்ளார். லங்கா சிமெந்து நிறுவனத்தில் சுமார் 250க்கு மேற்பட்டவர்கள் இருக்கின்ற நிலையில் அவர்களுக்கு தெரியாமல் இரும்புகளை எடுத்துச் செல்வதற்கான முயற்சிகள் முழுவீச்சில் இடம் பெற்று வருகின்றன.

யாழ்ப்பாணத்தில் இரும்பின் கொள்முதல் விலை சுமார் 60 ரூபாக்கு மேல் காணப்படுகின்ற நிலையில் 20 தொடக்கம் 25 ரூபாவுக்கு லங்கா சிமெந்துத் தொழிற்சாலையின் இரும்புகளை தென்னிலங்கைக்கு எடுத்துச் செல்வதற்கான முயற்சிகள் இடம்பெறுகின்றன.

இவ்வாறு திறந்த விலை மனுக் கோரல் இன்றி இரும்புகளை எடுத்துச் செல்லும் நோக்கமானது தமது தேர்தல் பரப்புரைகளுக்கு நிதியை செலவு செய்தவர்களைத் திருப்திப்படுத்துவதற்காகவா? என்ற சந்தேகம் எழுகின்றது.

ஆகவே திறந்த விலை மனுக்கோரல் இன்றி திருட்டுத்தனமாக தமக்கு இசைந்தவர்களுக்கு வழங்கப்படவுள்ள இரும்புகள் தொடர்பில் சம்பந்தப்பட்ட தரப்பினர்கள் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் - என்றார். (ம-20,319)

## போராளியினுடைய...

டில் கைது செய்யப்படுவீர்கள் என்று கரைச்சிப் பிரதேச சபையின் தவிசாளரை பொலிஸார் நேற்று மிரட்டி யுள்ளனர். உள்ளூராட்சி மன்றங்கள் தங்கள் அதிகார வரம்புக்குட்பட்டு பணிகளைச் செய்யும்போது, பயங்கரவாத முத்திரை குத்தி அவற்றை முடக்கும் பொலிஸாரின் செயற்பாடுகள் தொடர்பில் உள்ளூராட்சி மன்றத் தவிசாளர்கள் கண்டனம் வெளியிட்டுள்ளனர். யாழ்ப்பாணம் மாநகர சபை மேயரை இதேபோன்றதொரு குற்றச்சாட்டை முன்வைத்து கைது செய்திருந்த நிலையில், கரைச்சி பிரதேச சபைத் தவிசாளரையும் கைது செய்வோம் என்று பொலிஸார் மிரட்டியமை தமிழ் அரசியல் வட்டாரங்களில் கொந்தளிப்பை ஏற்படுத்தியுள்ளது.

கரைச்சி பிரதேச சபைக்கு சொந்தமான வீதிக்கு 'வெற்றி' வீதி என்று பெயர் சூட்டப்பட்டு அதற்கான பெயர்ப்பலகை நடப்பட்டு அண்மையில் திறந்து வைக்கப்பட்டது.

இந்த விடயம் தொடர்பில் பயங்கரவாதத் தடுப்பு பிரிவின் அறிவுறுத்தலுக்கு அமைய கிளிநொச்சிப் பொலிஸார், கரைச்சி பிரதேச சபையின் தவிசாளரை நேற்று அழைத்து விசாரணை மேற்கொண்டனர்.

நேற்றுக் காலை 8 மணியளவில் விசாரணைக்காக அழைக்கப்பட்ட தவிசாளரிடம் சுமார் ஒரு மணிநேரம் விசாரணைகள் இடம்பெற்றன. இதன்போது, குறித்த பெயருக்குச் சொந்தமானவர் புனர்வாழ்வ ளிக்கப்பட்ட முன்னாள் போராளி எனவும், புனர்வாழ்வ ளிக்கப்பட்டு சமூகமயப்படுத்தப்பட்டதன் பின்னர் அவர் சமூக மட்ட செயற்பாடுகளில் முன்னின்று உழைத்தமைக்காக அவரது பெயரை பொதுமக்கள் சூட்டினர் எனவும் விசாரணைகளின்போது பொலிஸாருக்கு தெரிவித்தேன் என கரைச்சி பிரதேச சபையின் தவிசாளர் அருணாசலம் வேழமாலிகிதன் தெரிவித்தார்.

வீதிப்பெயர்ப்பலகையை அகற்றுவதற்கான நடவடிக்கையை மேற்கொள்ளுமாறும் தவறும் பட்சத்தில் பயங்கரவாத தடுப்பு சட்டத்தின் கீழ் விடுதலைப்புலிகளை மீள் உருவாக்கும் வகையில் செயற்பட்டனர் என கைது செய்யவேண்டி வரும் என்றும் பொலிஸார் மிரட்டினர் என தவிசாளர் குறிப்பிட்டார். இதனைத் தொடர்ந்து அந்தப் பெயர் பலகையை அகற்றுவதற்கு கரைச்சிப் பிரதேச சபை நடவடிக்கை மேற்கொண்டுள்ளது. (ஒ.ப,6)

## பாரதிபுரத்தில்...

லிருந்து நாளை திங்கட் கிழமை காலை 6 மணி முதல் விலக்கப்படுகின்றன என்று வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

'திருநெல்வேலி பாற்பண்ணை கிராமம் 14 நாள்களாக கண்காணிப்பு வலயமாக நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. அந்த கிராமத்தில் முன்னெடுக்கப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனையில் பாரதிபுரம் பகுதியில் 88 பேருக்குக் கொரோனாத் தொற்று உள்ளமை உறுதிப்படுத்தப்பட்டது.

அதனால் பாரதிபுரம் தொடர்ந்தும் கண்காணிக்கப்படும். ஏனைய பகுதிகள் நாளை திங்கட்கிழமை காலை 6 மணி தொடக்கம் கண்காணிப்பு வலயத்திலிருந்து விலக்கப்படுகின்றன' என்றார். (ம-26)

## நீதிமன்றத்தினுடைய...

வாறுதான் நீதிமன்றத்தில் நடந்து கொள்வார்கள் என்றும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா முன்னதாகவே ஊடகங்களுக்கு கூறியிருப்பது, இந்த நாட்டில் பொலிஸ் திணைக்களமும் நீதிமன்றங்களும் எந்தளவுக்குச் சுயாதீனத்தை இழந்து செயற்பட்டுக் கொண்டிருக்கின்றன என்பதற்கான ஆதாரமாக உள்ளது என்று தெரிவித்தார் நாடாளுமன்ற உறுப்பினரான க.வி.விக்னேஸ்வரன்.

இது தொடர்பில் அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:

யாழ். மாநகர சபை முதல்வர் விஸ்வலிங்கம் மணிவண்ணன், நேற்று(நேற்று முன்தினம்) வெள்ளிக்கிழமை இரவு யாழ்ப்பாணம் நீதிமன்றத்தில் பிணையில் விடுதலை செய்யப்படுவதற்கு முன்னதாகவே அமைச்சரான டக்ளஸ் தேவானந்தா, மணிவண்ணனுக்கு ஜனாதிபதி மன்னிப்பு அளிப்பதாகத் தன்னிடம் கூறினார் என்று ஊடகம் ஒன்றுக்குத் தெரிவித்துள்ளார்.

அத்துடன், மணிவண்ணன் நீதிமன்றத்தால் பிணையில் விடுதலை செய்யப்படுவதற்கு முன்னராகவே, மணிவண்ணன் பிணையில் விடுதலை செய்யப்படுவார் என்றும் அவர்மீது பயங்கரவாத தடை சட்டத்தின் கீழ் வழக்கு தொடரப்படமாட்டாது என்றும் சாதாரண சட்டத்தின் கீழேயே வழக்கு தொடரப்படும் என்றும் அமைச்சர் கூறியுள்ளார்.

அமைச்சரின் இந்தக் கூற்று இந்த நாட்டில் நீதிமன்றங்களும், பொலிஸாரும் பெயரளவில் மட்டுமே இருக்கின்றனவா என்ற கேள்வியையும் ஜனாதிபதியினதும் அவரின் அரசாங்கத்தினதும் தனிப்பட்ட விருப்பு வெறுப்புக்களுக்கு ஏற்பவே அவை செயற்படுகின்றனவா என்ற கேள்வியையும் ஏற்படுத்தி உள்ளது.

அதேவேளை, மணிவண்ணன் அரசியல் உள்நோக்கம் கருதி, வேண்டும் என்றே கைது செய்யப்பட்டிருக்கின்றார் என்ற உண்மையையும் அமைச்சரின் கூற்று வெளிப்படுத்தி நிற்கின்றது.

மணிவண்ணனுக்கு ஜனாதிபதி மன்னிப்பு அளித்தது உண்மை என்றால், மணிவண்ணன் ஏதோ தவறு செய்துள்ளார் என்று அர்த்தப்படும். ஆனால், மணிவண்ணன் செய்தது தவறு என்று பொலிஸாரால் நீதிமன்றத்தில் நிரூபிக்க முடியவில்லை.

ஆகவே, ஜனாதிபதி என்ன அடிப்படையில் மணிவண்ணனுக்கு 'மன்னிப்பு' வழங்கியுள்ளார்?

அமைச்சர் ஏற்கனவே கூறியது போலவே, மணிவண்ணன் பிணையில் விடுதலை செய்யப்பட்டுள்ளதுடன் அவர் மீது பயங்கரவாத தடை சட்டத்தின் கீழ் வழக்கு பதிவு செய்யப்படவில்லை. ஆனால், யாழ்ப்பாண நீதிமன்றத்தில் பொலிஸார் மற்றும் மணி வண்ணன் தரப்பு வாத பிரதிவாதங்க ளைக் கேட்டு அறிந்த பின்னரேயே மணிவண்ணன் பிணையில் விடுதலை செய்யப்பட்டதாக அறிவிக்கப்பட்டது.

அமைச்சரின் கருத்தை பொலிஸ் திணைக்களத்தையும் நீதிமன்றங் களையும் அவமதிக்கும் செயற்பாடுகளாகவும் கொள்ள முடியும். இதுதொடர்பில், ஜனாதிபதியும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவும் மக்களுக்கு விளக்கம் அளிக்க வேண்டும்.

அதிகாரத்தில் உள்ளவர்களின் விருப்பு வெறுப்புகளுக்கேற்பவே பொதுமக்கள் இம்சைப்படப் போகின்றார்கள் என்றால் நீதிமன்றங் கள் எதற்காக? பொலிஸார் மக்களுக்கானவர்களா? ஜனாதிபதியின் ஏவலாளர்களா? விடை வேண்டும் என்றுள்ளது. (ம-319)

## சைவ....

தவிர்ப்புப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. நேற்றுக் காலை 6 மணி தொடக்கம் மாலை 6 மணி வரை உணவு தவிர்ப்புப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இந்தப் போராட்டம் தொடர்பில் மறவன்புலவு சச்சிதானந்தம் ஊடகங்களுக்குக் கருத்து தெரிவிக்கையில்,

**'புதிதாக உருவாக்கப்படவுள்ள அரசமைப்பில் சைவ சமயத்துக்கு முன்னுரிமை வழங்கக் கோரி இலங்கையின் 11 மாவட்டங்களில் இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்படுகின்றது. சைவ சமயத்துக்கு** முன்னுரிமை வழங்கப்பட்டால் மதம் மாற்றிகள் மூலமாக சைவ சமயத்திலிருந்து வேறு மதத்துக்கு மக்கள் செல்ல மாட்டார்கள்.

அத்தோடு சைவத்துக்கு முன்னுரிமை வழங்கப்பட்டால் பௌத்த மதமும் இந்து மதமும் பாதுகாக்கப்படும், இல்லாவிட்டால் இரண்டு மதங்களும் மதம்மாற்றிகளால் மாற்றப்பட்டுவிடும். குறிப்பாக கிழக்கு இலங்கையில் மதம் மாற்றிகளின் செயற்பாடுகள் அதிகரித்துக் காணப்படுகின்றன.

அதேபோல் இந்து மக்கள் பசுவை கோமாதா என வணங்குகின்றோம். ஆனால் இங்கே மாடுகளை வெட்டி உண்கிறார்கள் அதனையும் நிறுத்தக் கோருகின்றோம். பாலைவனங்களில்தான் மாடுகளை அறுத்து உண்பார்கள்.

ஆனால் இலங்கை ஒரு சோலைவனம். இங்கே மாடுகளை கோமாதாவாக வணங்கி அவைகளைப் பாதுகாக்க வேண்டும். எனவே இலங்கையில் மாடுகள் வெட்டுவதை நிறுத்த வேண்டும்' என்று தெரிவித்தார். (த-இ)

## 17 பேருக்கு...

ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் ஆய்வுகூடம் மற்றும் யாழ்ப்பாணம் பல்கலைக்கழக மருத்துவபீட ஆய்வு கூடம் இரண்டிலும் 640 பேரின் மாதிரிகள் இன்று (நேற்று) பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டன.

அவர்களில் 18 பேருக்குத் தொற்று உள்ளமை கண்டறியப்பட்டுள்ளது. இந்தப் 18 பேரில் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவர்கள் 17 பேர். ஒருவர் கிளிநொச்சியைச் சேர்ந்தவர்.

யாழ்ப்பாணத்தில் இனங்காணப்பட்ட 17 பேரில், கரவெட்டி சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் 5 பேர் அடையாளம் காணப்பட்டுள்ளனர். அவர்களில் நால்வர் சுய தனிமைப்படுத்தலில் உள்ளவர்கள். மற்றைய ஒருவர் யாழ்ப்பாணம் வீதி அபிவிருத்தி அதிகார சபையில் பணியாற்றுபவர்.

யாழ்ப்பாணம் சிறைச்சாலையில் நால்வருக்குத் தொற்று உள்ளமை கண்டறியப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை நோயாளர் விடுதியில் சிகிச்சை பெற்ற இருவருக்கு கோரோனாத் தொற்று உள்ளமை கண்டறியப்பட்டுள்ளது.

உடுவில் சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் சேர்க்கப்பட்ட நால்வருக்கு கோரோனாத் தொற்று உள்ளமை கண்டறியப்பட்டுள்ளது.

அவர்கள் நால்வரும் சுயதனி மைப்படுத்தப்பட்டவர்கள். சங்கானை வைத்திய சாலை வெளிநோயாளர் பிரிவுக்கு சிகிச்சைக்குச் சென்ற இருவருக்கு கொரோனாத் தொற்று உள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. கிளிநொச்சி வைத்தியசாலையில் ஒருவருக்கு கொரோனாத் தொற்று உள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது' - என்றார். (ம-26)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org
© 2000 Agfa-Gevaert N.V.

# பாதை அறிந்தே பயணம்; எந்தச் சூழலிலும் அஞ்சேன்

## முதல்வர் மணிவண்ணன் அறிக்கை

யாழ்ப்பாணம், ஏப். 11

என்னைக் கைது செய்ததன் பின்னர் எழுப்பப்பட்ட குரல்கள், வலியுறுத்தல்கள் அனைத்துக்கும் நன்றி. பாதையை அறிந்தே பயணத்தை ஆரம்பித்தேன். எந்தக் சூழ்நிலையிலும் அது நிற்கப்போவதில்லை இவ்வாறு தெரிவித்தார் யாழ். மாநகர முதல்வர் மணிவண்ணன்.



இது தொடர்பில் அவரால் அனுப்பிவைத்துள்ள அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:

யாழ். மாநகரை தூய்மையாகப் பேணும் ஒரு நன்நோக்கில் எம்மால் முன்னெடுக்கப்பட்ட முன்மாதிரியான நடவடிக்கை தொடர்பில் தவறான வியாக்கியானம் செய்து என்னைப் பொலிஸார் கைது செய்தபோது, எனக்காகக் குரல் கொடுத்த அத்தனை உள்ளங்களுக்கும் நான் சிரம் தாழ்த்தி நன்றிகளைக் கூறிக்கொள்கிறேன்.

'தூய்மையான நகரம், தூய்மையான கரங்கள்' என்று நாங்கள் மக்களுக்கு கொடுத்த வாக்குறுதிகளுக்கு அமைவாக நடந்துகொள்வதே யாழ். மாநகர மக்களுக்கான எனது பணியாகும். அந்தப் பணியை செம்மையாகவும், முன்மாதிரியாகவும் செய்வதற்கு எடுத்த முயற்சியை மிகத் தவறாக வியாக்கியானம் செய்து என்னை கைது செய்தார்கள். மிக நெருடலான அந்தச் சூழலில் மக்கள், உள்நாட்டு வெளிநாட்டு அரசியல் தலைவர்கள், சட்டத்தரணிகள், தூதரகத்தின் பிரதிநிதிகள் மற்றும் ஊடகர்கள் என எனக்காகக் குரல் கொடுத்த அனைவருக்கும் நன்றிகள் என்றுள்ளது. (ம)


**காணி விற்பனைக்கு**

சாவகச்சேரி - தனங்களப்பு வீதியிலும், சாவகச்சேரி சந்தையில் இருந்து 150 m தூரத்தில் (கால்நடை வைத்திய சாலைக்கு முன்பாக)

**200 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.**

(தரகர் தேவையில்லை)

தொடர்புகளுக்கு:

077 348 1379

**மலிவு விற்பனை**

முகக் கவசங்கள் (Oneday Mask (S.L), KN 95 மாஸ்க் (வெள்ளை, கறுப்பு ஏனைய கலரிலும் பெறலாம்) மற்றும் KN 95 பில்டர் கறுப்பு வெள்ளை மாஸ்க், KN 95 சிறியது கலர், பிறின்ற் மற்றும் தொற்று நீக்கிகளையும் மொத்தமாக பெற்றுக் கொள்ளலாம்.

தொடர்பு: 077 879 4148

**வேலையாட்கள் தேவை**

சுன்னாகத்தில் இயங்கும் பிரபல மொத்த சில்லறை விற்பனை நிலையத்திற்கு வேலையாட்கள் தேவை.

077 459 8289

**தேவை**

கிளிநொச்சியில் அமைந்துள்ள வேலை தளம் ஒன்றுக்கு தங்கி இருந்து மேற்பார்வை செய்ய கூடிய ஆண் ஒருவர் தேவை.

தொடர்பு 076 826 7703

**இன்று முதல் மலிவு விற்பனை**

சித்திரை புதுவருடத்தை முன்னிட்டு ஏசியன் தளபாடத்தின் மாபெரும் மலிவு விற்பனை.

230, நாவலர் றோட், யாழ்ப்பாணம்.

076 8219 416, 076 8219 418

**பணிப்பெண் தேவை**

சுண்டுக்குளியில் வசிக்கும் சிறு குடும்பத்திற்கு வீட்டில் தங்கி நின்று பணிபுரியும் (பெண்) வேலையாள் தேவை. கவர்ச்சிகரமான சம்பளம் வழங்கப்படும். (தங்கி நிற்பவர் மட்டும்),

077 061 0651

**வேலையாட்கள் தேவை**

திருநெல்வேலியில் புதிதாக திறக்கப்படவுள்ள Restaurantக்கு வேலையாள்கள் தேவை.

1) முகாமையாளர் / காசாளர்
2) சமையல்
3) யூஸ் தயாரிப்பாளர்கள்
4) உணவு பரிமாறுபவர்கள்

ஆண்/ பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கவும்

தொலைபேசி இல: 077 342 7132

**ALLIANCE FRANCAISE DE JAFFNA**

**af பிரெஞ்சு மொழி**

- யாழ்ப்பாணத்தில் French Embassy கீழ் இயங்கும் சர்வதேச நிறுவனம் Alliance Francaise மட்டுமே.
- அங்கீகரிக்கப்பட்ட Certificates International Diplomas (delf)
- தமிழ் மொழிமூலம் பிரஞ்சு நாட்டு ஆசிரியரினாலும் கற்பிக்கப்படும்
- French Embassy இன் அனுமதியுடன் திருமண அத்தாட்சிப் பத்திரங்கள் தமிழ் மொழி மூலம் மொழி பெயர்ப்புச் செய்து கொடுக்கப்படும். (இங்கே மட்டும்).



021 222 8093 17, Kandy Road, Jaffna

**தேவை**

யாழ் நிறுவனம் ஒன்றுக்கு web page create பண்ணி Fbயில் போட ஆண் / பெண் தேவை.

Full time அல்லது Part Time

076 821 9414

**உடனடி வேலை வாய்ப்பு**

Helper, Driver (Heavy Vehicle), Sales Rep, Field officer, Salesman, Sales Girl, Laborer

தொடர்பு 074 138 3368

**வேலைவாய்ப்பு**

வயதெல்லை - 25 இற்கு மேற்பட்டவர்கள் ஆண், பெண் இருபாலாரும் தகைமை: A/L

076 724 0506

**முச்சக்கர வண்டி விற்பனை**

புத்தம் புதிய (UNREGISTERED) TVs முச்சக்கர வண்டிகள் விற்பனைக்கு உண்டு லீசிங் வசதிகள் செய்து கொடுக்கப்படும்

தொடர்பு 077 129 0712 077 715 1101

**Techno World**

**தொழில்நுட்பக் கல்லூரி**

வெலிங்டன் சந்தி, லிங்கம் கூல்பார் அருகாமை, யாழ்

**A/L 2023**

**தொழிநுட்பப்பிரிவு ஆரம்பம்**

2021 ஞாயிற்றுக்கிழமை காலை 9.00

- பொறியியல் தொழிநுட்பம்
- தொழில்நுட்பவியலுக்கான விஞ்ஞானம்
- உயிர் முறைமைகள் தொழிநுட்பம்

77 017 5346


**31ம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்**

தோற்றம் 22 . 09 . 1944



மறைவு 12 . 03 . 2021

**அமரர் சுப்பிரமணியம் நாகேஸ்வரி**

அன்பின் இலக்கணமாய், அறிவின் சிகரமாய்
பண்பின் உறைவிடமாய், பாசத்தின் பிறப்பிடமாய்
எம்மோடு வாழ்ந்த நீங்கள், இன்று மறைந்து போனாலும்
எம் நினைவுகளில் என்றும், எம்மோடு நிலைத்திருப்பீர்கள் அம்மா.

அன்னாரின் வீட்டுக் கிருத்திய கிரியைகள் இன்று (11.04.2021) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்களும் தங்கள் குடும்பசகிதம் வருகைதந்து அன்னாரின் ஆத்மசாந்திப்பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

கைதடி தெற்கு. குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் ... த்தில் உள்ள அவர்களது பணிமனையில் 11.04.2021 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Registered as a Newspaper

பக்கங்கள்: 24


# சஞ்சீவி

மலை 33: வள்ளுவர் ஆண்டு : 2051 பங்குனி 29 ஞாயிற்றுக்கிழமை (11.04.2021) சிகரம் : 43

நக்கிற நாய்க்கு செக்கென்ன சிவலிங்கமென்ன எண்டு
நிக்கிற பொலிஸுக்கு நீலக்கலர் யுனிபோர்ம் கண்டாலே — விக்கலெடுத்து
பயங்கரவாதம் திரும்பவும் தலைதூக்குதென
மயங்கி விழுவதெல்லாம் தொடருமென்றே காண் இனி!

*ஒட்டுக்குழு சுவாமிகள்*

# நிலமிழந்து போதல்



மகாவலி "எல் வலயத்துக்குள் முல்லைத்தீவு மாவட்டத்தின் நாயாறு,கொக்கிளாய்,கருநாட்டுகேணி,கொக்குத்தொடுவாய் போன்ற பூர்வீகத்தமிழ் கிராமங்கள் உள்வாங்கப்பட்டுள்ளன.

திருகோணமலை, முல்லைதீவு,வவுனியா, ஆகிய மாவட்டங்களின் மையப்பகுதி மணலாறு. தமிழர்களின் இதய பூமி என்று அழைக்கப்பட்ட மணலாற்றில் சிங்களக்குடி யேற்றங்கள் பரவலாக மேற்கொள்ளப்பட்டு, வெலிஓயா என்று பெயர்மாற்றப்பட்டது.

○ பா.குமுதன்

போர்முடிவுற்று 12 வருடங்கள் கடக்கின்ற நிலையிலும் அபிவிருத்தி மற்றும் அரசியல் உரிமை சார்ந்த விடயங்களில் வடக்கு, கிழக்குப் பகுதிகள் இலங்கை அரசினால் தொடர்ந்தும் புறக்கணிக்கபட்டே வருகின்றன. போரால் பெரிதும் பாதிக்கப்பட்ட தமிழ்மக்கள் போருக்குப் பின்னராவது தங்கள் வாழ்வு வளம்பெறுமென நினைத்தார்கள். அபிவிருத்தி, புனரமைப்பு போன்ற விடயங்களை அதிகம் எதிர்பார்த்திருந்தனர். அந்த எதிர்பார்ப்புக்களை எல்லாம் புறம்தள்ளி , தமிழர்தாயகப்பகுதியில் நீடித்த சமாதானத்தையோ அல்லது நிலைத்தலான அபிவிருத்தியையோ ஏற்படுத்துவதில் இலங்கை அரசு தவறியிருக்கின்றது.பேரின மக்கள் வாழ்கின்ற பகுதிகளில் அள்ளிக் கொடுப்பதும்,வடக்கு, கிழக்கு பகுதிகளில் கிள்ளிக் கொடுப்பதுவுமே அரசின் நிலைப்பாடாகத் தொடர்ந்தது. அப்படி ஓரவஞ்சனையோடு நடந்து கொள்ளும் இலங்கை அரசாங்கத்தின் நிகழ்ச்சிநிரலின் ஓர் அங்கம் தான் கடந்தவாரம் ஜனாதிபதி கோத்தாபயவின் வவுனியா வருகை.

கடந்தவாரம் வவுனியாவுக்கு விஜயம் செய்த ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச, சிங்களக் குடியேற்றக் கிராமமாக மாற்றப்பட்ட "கலாபோகஸ்வெவ " என்று அழைக்கப்படும் கிராமத்துக்கே சென்றிருந்தார்.அது தமிழ்மக்களிடம் இருந்து ஆக்கிரமிக்கப்பட்ட கிராமம். "கிராமத்துடன் கலந்துரையாடல்" என்ற தேசிய வேலைத்திட்டத்துக்காக கோத்தாவும், சிரேஷ்ட அமைச்சர்களும் கலாபோகஸ்வெவவில் கால் பதித்திருந்தனர்.

ஜனாதிபதியின் வருகையையொட்டி ஒரு வாரத்துக்கு முன்பாகவே குறித்த கிராமம் விழாக்கோலம் பூண்டிருந்தது.மாவட்ட அரச அதிபர் மற்றும் ஆளும்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்களின் நேரடியான கண்காணிப்பில் நிகழ்வுக்கான ஏற்பாட்டுப்பணிகள் தடல்புடலாக முன்னெடுக்கப்பட்டன. கோத்தாவின் ஒரேயொரு நாள் வருகைக்காக பல்வேறு அபிவிருத்திப்பணிகளும் அவசரஅவசரமாக அந்தக் குடியேற்றக் கிராமத்தில் மேற்கொள்ளப்பட்டன.

நிகழ்வில் கலந்துகொள்வதற்காக மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் இருந்தும் பொதுமக்கள் (பெரும்பாலும் சிங்களவர்கள்) அழைத்துச் செல்லப்பட்டிருந்தனர். வடக்கில் குறிப்பாக வன்னியில் போரினாலும் வறுமையாலும் பாதிக்கப்பட்ட ஏராளமான கிராமங்கள் உள்ள போதும், சிங்கள மக்கள் பெரும்பான்மையாக வசிக்கும் புதிய குடியேற்ற மொன்றுக்கு, ஒரு நாட்டின் ஜனாதிபதி நேரடியாக வந்து பலமணி நேரம் அவர்களின் தேவைகள் குறித்து ஆராய்வதை அவ்வளவு இலேசாகக் கடந்துவிட முடியாது. கிட்டத்தட்ட, வேற்று நாட்டுக்குள் ஊடுருவி வெற்றிக்கொடி நாட்டிய படைத்தரப்பை , நாட்டின் தலைவர் சந்தித்து தன் மகிழ்வை வெளிப்படுத்தி, தொடர்ந்தும் முன்னேறுங்கள்' என்ற உத்வேகத்தை அளிப்பது போன்றே , கோத்தாபய "கலாபோகஸ்வெவ " வந்தமையையும் கொள்ளமுடியும்.

21


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆயரும் அரசியல்வாதிகளும்

நிலாந்தன்

- தமிழ் மக்கள் பிரதிநிதிகளையும் சிவில் சமூ கங்களையும் சந்திக்கும் பெரும்பாலான வெளி நாட்டுத் தூதுவர்கள் ஒரு குரலில் பேசுங்கள் ஓரணியாக வாருங்கள் என்று கேட்கிறார்கள்.
- தமிழ்த்தரப்பை ஒரு பெரும் திரளாகக் கூட்டிக் கட்டவல்ல சிவில் கட்டமைப்புக்கள் எவையும் கிடையாது. சிவில்தலைவர்களும் கிடையாது.
- மறைந்த ஆயர் அப்படியொரு ஆளுமையாக காணப்பட்டார்.
- கட்சிகளை அழைத்து கூட்டம் கூட்டி தன் கருத்தை வலிமையாக முன்வைக்கத்தக்க பலம் அவருக்கு இருந்தது.

**2013** ஆம் ஆண்டு தமிழ் சிவில் சமூக அமையம் தமிழ்த்தேசிய நிலைப்பாட்டைக் கொண்ட கட்சிகளுக்கிடையே ஒரு சந்திப்பை மன்னாரில் ஒழுங்குபடுத்தியது. அப்பொழுது மன்னார் மறை மாவட்டத்தின் ஆயராக இருந்த அமரர் இராயப்பு ஜோசப் ஆண்டகை சிவில் சமூக அமையத்தின் அழைப்பாளராக இருந்தார்.அவருடைய தலைமையில் நடந்த கூட்டத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி ஆகிய கட்சிகளின் தலைவர்களும் சிவில் சமூகத்தில் பிரதிநிதிகளும் ஆர்வமுடையவர்களும் பங்குபற்றினார்கள். இந்தக்கூட்டத்தில்தான் ஒரு தமிழ் தேசியப்பேரவையை உருவாக்குவது என்று முடிவெடுக்கப்பட்டது. அதற்காக ஒரு ஏற்பாட்டுக்குழு உருவாக்கப்பட்டது.அதில் கூட்டமைப்பின் சார்பாக சுமந்திரனும் மக்கள் முன்னணியின் சார்பாக கஜேந்திரகுமாரும் சிவில்சமூகத்தின் சார்பாக சட்டவாளர் புவிதரனும் குருபரனும் அடங்கிய ஒரு குழு உருவாக்கப்பட்டது. ஆனால் அந்தக் குழு தொடர்ந்தும்



செய்யப்படவில்லை. தமிழ்த் தேசிய பேரவை உருவாக்கப்படவில்லை.

அப்படி ஒரு தமிழ்த் தேசியப் பேரவை உருவாக்க வேண்டிய தேவை ஏன் ஏற்பட்டது ? ஏனெனில் 2009 ஆம் ஆண்டுக்குப்பின் கூட்டமைப்பு செல்லும் வழி பிழையானது என்ற காரணத்தால் எனைய கட்சிகளும் சிவில் சமூக பிரதிநிதிகளோடும் இணைத்து ஒரு மக்கள் அமைப்பை உருவாக்குவதன் மூலம் கூட்டமைப்பை மாறாத கொள்கைகளுக்கும் இலக்குகளுக்கும் பொறுப்புக்கூறவைப்பதே தமிழ் மக்கள் பேரவை என்ற ஒரு கனவின்நோக்கமாகும்.

இந்த கனவுக்குள் கூட்டமைப்பைத் திருத்தலாம்; கூட்டமைப்பை அரவணைத்து மாற்றலாம் என்ற ஒரு நப்பாசை உண்டு என்பதை இந்தக்கட்டுரை ஏற்றுக்கொள்கிறது. கூட்டமைப்பின் வர்க்கக் குணமது; அதை மாற்ற முடியாது; அதனிடம் புரட்சிகரமான மாற்றங்கள் எதனையும் எதிர்பார்க்க முடியாது; அந்த கட்சிக்கு பதிலாக ஒரு புதிய கட்சியை அல்லது அமைப்பை உருவாக்குவதே புரட்சிகரமான மாற்றுத் தெரிவாக இருக்கும் என்ற விவாதத்தை இந்தக்கட்டுரை நிராகரிக்கவில்லை. ஆனால் அப்பொழுது மக்கள் ஆணையைப் பெற்ற ஏகப்பிரதிநிதியாக கூட்டமைப்பே காட்சியளித்தது. எனவே மக்கள் ஆணையை மீறி ஒரு புதிய கட்டமைப்பை உருவாக்க தேவையான வாழ்க்கை ஒழுக்கமோஅல்லது அரசியல் ஒழுக்கமோ அப்பொழுது சிவில் சமூக பிரதிநிதிகளிடம் இருக்கவில்லை என்ற இயலாமையையும் இங்கே சுட்டிக்காட்ட வேண்டும்.

ஆனால் கூட்டமைப்பு அதன் ஏகப் பிரதிநிதித்துவம் காரணமாகவே அந்தக் கனவோடு சேர்ந்து உழைக்க மறுத்தது. கடந்த ஆண்டு நடந்த பொதுத் தேர்தல் வரையிலும் அக்கட்சி ஏனைய கட்சிகளுடன் இணைந்து செயற்படத் தயாராக இருக்கவில்லை.கடந்தபொதுத்தேர்தலில் ஏற்பட்ட தோல்விகளின் விளைவாகத்தான் அது ஏதோ ஒரு இணக்கத்துக்கு வருவது போல ஒரு தோற்றத்தைக் காட்டியது. எனவே கூட்டமைப்பு தமிழ்மக்களின் ஏக பிரதிநிதியாக தோற்றம் காட்டிய ஒரு காலகட்டத்தில் அக்கட்சியைமாறாஇலட்சியத்துக்கும் அரசியல் இலக்குகளுக்கும் பொறுப்புக்கூற வைக்கும் உள்நோக்கத்தோடு திட்டமிடப்பட்டதே தமிழ்தேசிய பேரவை ஆகும். ஆனால் அந்தக் கனவு இன்று வரையிலும் நிறைவேறவே இல்லை.

அதன்பின் 2015ஆம் ஆண்டு ஆட்சி மாற்றத்தின் பின்னணியில் தமிழ் மக்கள் பேரவை உருவாக்கப்பட்டது. ஆனால் அது தமிழ்த் தேசியப் பேரவை அல்ல. தமிழ் மக்கள் பேரவையில் கூட்டமைப்பு இணையவில்லை. எனினும் அதன் பங்காளிக் கட்சிகள் சில இணைந்திருந்தன. கூட்டமைப்பின் பிரதான கட்சி ஆகிய தமிழரசுக் கட்சி அந்த தமிழ் மக்கள் பேரவைக்குள் சேரவில்லை. தமிழ் மக்கள் பேரவையின் தொடக்கமும் ஏறக்குறைய கூட்டமைப்புக்கு எதிரானது தான். ஏனெனில் கூட்டமைப்பில் அதிருப்தியடைந்த விக்னேஸ்வரனே பேரவையின் மையமாக இருந்தார்.

அதாவது 2013 ஆம் ஆண்டு சிந்திக்கப்பட்டதைப் போன்று ஒரு தமிழ்த் தேசிய பேரவையை உருவாக்க முடியவில்லை. அதற்கு கூட்டமைப்பு குறிப்பாக தமிழரசுக் கட்சி ஒத்துழைக்கவில்லை. அதனால் கூட்டமைப்பில் அதிருப்தி கொண்ட விக்னேஸ்வரனை மையமாகக் கொண்டு ஒரு தமிழ் மக்கள் பேரவை உருவாக்கப்பட்டது.

2018 ஆம் ஆண்டு உள்ளூராட்சிசபைத் தேர்தலின்போது பேரவையில் அங்கம் வகித்த இரண்டு கட்சிகளையும் ஒருங்கிணைக்க பேரவையால் முடியவில்லை. தமிழ் தேசிய மக்கள் முன்னணியும் ஈ.பி.ஆர்.எல்.எப் பும் ஒன்றுக்கொன்று முரண் நிலைக்கு போயின. தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி விக்னேஸ்வரனுக்கு எதிராக திரும்பியது.அதன் தர்க்கபூர்வ விளைவாக பேரவைக்கும் எதிராகத் திரும்பியது. அதோடு உள்ளூராட்சி சபைத் தேர்தலில் அந்தக்கட்சி பேரவை என்ற பெயரை தனது அணிக்கு பயன்படுத்தியது. எனினும் அதற்குப்பின்னரான தேர்தல்களில் அந்த பெயரை அக்கட்சி பயன்படுத்தவில்லை.

அதற்கும் சில ஆண்டுகளுக்குப்பின் அதாவது கடந்த ஆண்டு நடந்த பொதுத் தேர்தலில் கூட்டமைப்பின் பிரமுகர்கள் சிலர் தோல்வியடைந்தனர். இவ்வாறு தோல்வியடைந்த மாவை சேனாதிராசா கட்சிக்குள்ளேயே தனது தலைமைத்துவத்தை காப்பாற்றுவதற்காக தமிழ்த் தேசியப் பேரவை என்ற பெயரில் ஓர் அமைப்பை உருவாக்க போவதாகவும் அதில் வெளிநாடுகளில் வசிக்கும் தமிழ் மக்களுக்கு ஆதரவான அரசியல் மற்றும் சட்ட செயற்பாட்டாளர்களையும் இணைக்கப் போவதாகவும் ஒரு தகவலை தனது நேர்காணல் ஒன்றில் தெரிவித்திருந்தார். எனினும் அது மாவை கண்ட ஒரு கனவாகவே முடிந்தது.

இவ்வாறாக தமிழ்ப் பேரவை அல்லது தமிழ் மக்கள் பேரவை அல்லது தமிழ்த் தேசிய பேரவை போன்ற வெவ்வேறு பெயர்களால் அழைக்கப்படும் ஏதோ ஒரு அமைப்பை உருவாக்க வேண்டும் என்ற கனவு தமிழ் தேசிய அரசியலில் கடந்த ஒரு தசாப்த காலத்துக்கும் மேலாக நிலவிவருகிறது. ஆனால் அது தொடர்ந்தும் ஒரு நிறைவேறாத கனவாகவே காணப்படுகிறது.அந்தக் கனவை கருக்கொண்ட தமிழ் சிவில் சமூக அமையத்தின் அழைப்பாளராக இறக்கும் வரையிலும் பொறுப்பை வகித்த ஆயர் இராயப்பு ஜோசப் இப்பொழுது இல்லை. கனவு மட்டும் தொடர்ந்தும் நிறைவேறாமலே தொங்கிக் கொண்டிருக்கிறது.

தமிழ் சிவில் சமூக அமையம்தான் அந்தக் கனவை கருக்கொண்டது. அதேசமயம் பலஸ்தீன விடுதலை இயக்கத்திடம் பயிற்சி பெற்ற ஈ.பி.ஆர்.எல் .எப் உள்ளிட்ட இயக்கங்களிடமும் அதுபோன்ற ஒரு கட்டமைப்பை குறித்த சிந்தனை ஏற்கனவே இருந்துள்ளது. பலஸ்தீனத்தில் பல்வேறு அமைப்புக்களையும் ஒன்றிணைத்து ஒரு தேசியப் பேரவை உருவாக்கப்பட்டதைப் போன்று தமிழ் அரசியலிலும் அப்படி ஒரு கட்டமைப்பை உருவாக்க வேண்டும் என்று கனவு காணப்பட்டது.

அப்படி ஓர் ஐக்கியத்தை முதலில் ஏற்படுத்தியது இந்தியாதான் என்பது இங்குள்ள முரண்நகை ஆகும். திம்புப் பேச்சுவார்த்தையின்போது தமிழ்த் தரப்பை ஓரணியாக திரட்டுவதற்கு இந்தியாவும் பின்புலமாக நின்றது ஆயுதப் போராட்ட காலகட்டத்தில் முதலில் தோன்றிய குறிப்பிட்டுச் செல்லக்கூடிய ஓர் ஐக்கியம் அதுவெனலாம். எனினும் அதில் இணைந்த இயக்கங்களுக்குள் புளொட் இருக்கவில்லை. ஆனால் 2015 இல் உருவாக்கப்பட்ட தமிழ் மக்கள் பேரவைக்குள் புளொட் இருந்தது.பின்னாளில் அது விலகிச் சென்றது. தமிழ் மக்கள் பேரவையின் உருவாக்கம் என்பது ஒருவிதத்தில் விக்னேஸ்வரனின் எழுச்சியின் விளைவுதான். இன்னொருவிதமாகச் சொன்னால் கூட்டமைப்பின் பலம் உடையும்போது இப்படிப்பட்ட அமைப்புகள் தோன்றுகின்றன. அல்லது இப்படிப்பட்ட அமைப்புகளைப் பற்றி சிந்திக்கப்படுகிறது. மாவை சேனாதிராசாவின் பேரவையும் அப்படிப்பட்டதுதான். அதாவது தொகுத்துப் பார்த்தால் கூட்டமைப்பு பலவீனம் அடையும் பொழுது இப்படிப்பட்ட அமைப்புகளுக்கான தேவை அல்லது ஏதோ ஒரு ஐக்கியம் உருவாக வேண்டிய கட்டாயம் ஏற்படுகிறது. இது தான் கடந்த ஜனவரி மாதம் நடந்தது. ஜெனிவாவை நோக்கி மூன்று கட்சிகள் அனுப்பிய கூட்டு ஆவணமும் அப்படிப்பட்டதுதான்.கடந்த பொதுத் தேர்தலில் பெற்ற தோல்விகள் கூட்டமைப்பின் ஏகபோகத்தை கேள்விக்குள்ளாக்கின. எனவே மாற்று அணியைச் சேர்ந்த மூன்று நாடாளுமன்ற உறுப்பினர்களுடன் சேர்ந்து ஐ.நா.வுக்கு ஒரு பொதுஆவணத்தை அனுப்ப கூட்டமைப்பு ஒப்புக்கொண்டது.

தமிழ்த் தேசியப் பரப்பில் உள்ள எல்லாத் தரப்புகளையும் ஒன்றிணைக்கும் முயற்சிகள் என்று பார்த்தால் கடந்த 12 ஆண்டுகளில் அதை ஒரு முக்கியமான அடைவு எனலாம். ஆனால் அது 2013ல் கனவு காணப்பட்ட தமிழ்த் தேசியப் பேரவை அல்ல. அதுமட்டுமல்ல அந்த அடைவு தற்காலிகமானதே என்பதனை அடுத்த மாதம் வெளிவந்த பூச்சிய வரைபுக்கு எதிர்வினையாற்றும் விடயத்தில் கூட்டமைப்பு நிரூபித்தது. அத்தோடு அந்தப்பொது ஆவணத்தை தயாரிக்கும் சந்திப்புகளின் போது இனப்படுகொலை என்ற வாசகத்தை இணைக்க ஒப்புக்கொண்ட சுமந்திரன் இப்போது பழைய பல்லவியைப் பாடத்தொடங்கிவிட்டார்.

எனவே கடந்த பத்தாண்டுகளில் தமிழ்த் தேசிய அரசியலை ஒரு பொது அடித்தளத்தின் மீது கூட்டிக்கட்டும் முயற்சிகளை தொகுத்துப் பார்த்தால் மிகத் தெளிவாக சில விடயங்கள் தெரியவரும். முதலாவது, கூட்டமைப்பு பலவீனமடையும் பொழுது அல்லது அதில் உடைவு ஏற்படும் பொழுது இது போன்ற முயற்சிகளுக்கு அவர்கள் ஒத்துக் கொள்வார்கள். இரண்டாவது, அவ்வாறு ஏதோ ஓர் உடன்பாட்டுக்கு வந்த பின்னரும் அந்த ஐக்கியத்தை கூட்டமைப்பே பெரும்பாலும் உடைக்கிறது. கடந்த ஜனாதிபதி தேர்தலின்போது பல்கலைக்கழக மாணவர்களின் ஏற்பாட்டில் உருவாக்கப்பட்ட பதின்மூன்று அம்ச ஆவணத்துக்கு அதுதான் நடந்தது. கடந்த ஜனவரி 15ஆம் திகதி அனுப்பப்பட்டஜெனிவாவுக்கான பொது ஆவணத்துக்கும் அதுவே நடந்தது.அதாவது எந்த ஒரு பொது ஏற்பாட்டுக்கும் கூட்டமைப்பை பொறுப்புக்கூற வைப்பதில் அடிப்படையான சவால்கள் தொடர்ந்தும் காணப்படுகின்றன.

(மறுபக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கண்ணுக்கு தெரியும் சர்வாதிகாரம்



**ஏப்ரல் 9 ஆம் திகதி யாழ்.மாநகர முதல்வர் மணிவண்ணன் கைது செய்யப்பட்டிருந்த போது, அதனடிப்படையில் தயான் ஜயதிலகவினால் எழுதப்பட்ட கருத்துக்கள் இவை**

○ தமிழில்: ந.பரமேஸ்வரன்

போர் நடைபெற்ற காலத்தில் வடக்கு, கிழக்கில் ஒரு முதல்வரைக் கூட அரசாங்கத்தால் தெரிவுசெய்ய முடியவில்லை. புலிகள் சில யாழ்ப்பாண முதல்வர்களை கொலை செய்தார்கள் .ஆரம்பத்தில் அல்பிரட் துரையப்பா,திருமதி சரோஜினி யோகேஸ்வரன் ஆகியோர் இத்தகையவர்களே. இப்போது யாழ்.மாநகர முதல்வர் மணிவண்ணன் பயங்கரவாத தடுப்பு பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளார். அவர் எந்தவிதமான வன்முறையிலும் ஈடுபடவில்லை, அவரது அலுவலகத்திலிருந்து எந்தவித வெடிபொருட்களும் மீட்கப்படவில்லை. அவர் தனது மாநகரசபையில் ஒருபிரிவை உருவாக்க முயற்சித்துள்ளார் .அவர்களது (அந்தப்பிரிவினரின்) சீருடை புலிகளின் காவல்துறையினரின் சீருடையை ஒத்ததாகக் காணப்படுகிறது.புகைப்படங்களைப் பார்த்தால், சீருடையில் இராணுவ அடையாளங்கள் இல்லை.

இலங்கையில் வேறு எந்த நகராட்சி மன்றத்திலும் அத்தகைய ஊழியர்கள் இல்லை, அல்லது, அவ்வாறு அணிந்திருக்கும் ஊழியர்கள் இல்லை என்றால், நிச்சயமாக உள்ளூராட்சி அமைச்சர் யாழ்ப்பாணத்தின் இளம் மேயருடன் இது பற்றி கேட்டறிந்திருக்கலாம். அல்லது அவருக்கு எச்சரிக்கை விடுத்து அதிகாரபூர்வ கடிதம் ஒன்றை அனுப்பி இருக்கலாம். அதற்குபதிலாக, முதல்வர் கடுமையான பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டுள்ளார். உலகெங்கிலும், தீவிரமயமாக்கல் மற்றும் எதிர் தீவிரமயமாக்கல் உத்திகளின் அடிப்படைகளில் ஒன்று, அதிருப்தி அடைந்த மக்கள் வாழும் பகுதிகளின் தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் பிரதிநிதிகளுடன் இணைந்து செயற்படுவது. இது குறிப்பாக மேயர்களின் மட்டத்தில் உள்ளது, ஏனென்றால் மேயர்கள் சேவைகள் மூலம் இயக்கப்படும் அலகுகள். இஸ்ரேலில் கூட, அதிகாரிகள் பலஸ்தீனிய மேயர்களுடன் நல்ல உறவை வளர்த்துக்கொள்கிறார்கள்.

ஆனால் கோத்தாபய அரசாங்கத்தின் கீழ், அப்படியல்ல,. தீவிரமயமாக்கலைத் தடுப்பதற்கான உலகளாவிய கையேடுகள் கிழிக்கப்பட்டு மீண்டும் எழுதப்படுகின்றன. எதைச் செய்யக்கூடாதெனப் பரிந்துரைக்கப்பட்டனவோ, அந்த நகர்வுகள் இங்கே இப்போதும் பயன்படுத்தப்படுகின்றன.

யாழ்ப்பாண மேயரை திடீரென கைது செய்வது தாராளவாதிகள் அல்லது மிதவாதிகள் அல்லர். அவர்களின் கருத்து என்னவென்றால், அதிகாரப்பகிர்வு அலகு மாகாணமாக இருக்கக்கூடாது, ஆனால் மாவட்டம் அல்லது பிரதேசசபை போன்ற சிறியதாக இருக்கவேண்டும் என்பதே.

வன்முறையற்றதாகக் கூறப்படும் குற்றம் தொடர்பாக யாழ்ப்பாண மேயரைக் கைதுசெய்வது, உண்மையில் ஒரு நடைமுறை அல்லது ஒழுங்குமுறை என்றால், சிறுபான்மையினருக்கு தன்னாட்சி இடமளிக்காது என்பதற்கான சமிக்ஞையை இது காட்டுகிறது எனலாம்.

மனித உரிமைகள் பிரச்சினைகளில் இலங்கை அரசாங்கம் உலகளாவிய ஆய்வுக்கு உட்பட்டுள்ள ஒரு கட்டத்தில், இந்த கைது நிகழ்ந்துள்ளது. இந்த கைது தமிழக தேர்தலுக்கு சில வாரங்களுக்கு முன்பே நடந்திருந்தால், இந்தியப் பிரதமர் மோடியின் அரசியல் நிலைமை கொஞ்சம் சிக்கலாகியிருக்கும். யாழ்ப்பாண மேயரின் கைதை வைத்தே சீமானின் கட்சி லாபம் பார்த்திருக்கும். இவையெல்லாம் கோத்தாபய அரசாங்கத்துக்கு தெரிந்தே இருக்கும்.

ஒரு பிக்கு ,ஒரு மேயர், மற்றும் முன்னாள் அழகுராணியின் கைது, அவற்றில் எதுவுமே அவசியமில்லை என்று தோன்றுகிறது. இவை அனைத்தும் அதிகப்படியான எதிர்வினைகளை உண்டாக்கியுள்ளன. சகிப்புத்தன்மையின் அளவு இலங்கையில் மிகக் குறைவு என்பதையும் குறிக்கிறது. ஐ.நா மனித உரிமைகள் உயர் ஸ்தானிகர் எச்சரித்த குடியுரிமை வெளி சுருங்கி வருவதையே இதுகாட்டுகிறது.

இப்போது இந்தமுறையில் நடந்து கொள்ளும் ஆட்சியாளர்கள் 2024 இல் தேர்தலில் தோல்வியடைந்தால், அதை அவர்கள் ஏற்றுக்கொள்வார்கள் என்று நம்புவது நியாயமற்றது. மியான்மரைப் போல இலங்கையும் மாறும் வாய்ப்புண்டு.

ஹன்னா அரேண்ட் சொன்னது போல, "வரலாற்றில் நாம் சில நேரங்களில் கண்ணுக்குத் தெரியாத கோடுகளைக் கடக்கிறோம், திரும்பிப்பார்க்கும் வரை அவை நமக்குப் பின்னால் சுவர்களாக வளர்ந்திருப்பதைக் காணும் வரை அதைப்பற்றி தெரியாது."

1930 களில் இரண்டாம் உலகப்போருக்கு முந்தைய காலத்தில் ஸ்பெயின் எப்படி இருந்ததோ அப்படித்தான் இப்போது மியான்மரும் செயற்படுகிறது.

இலங்கை அரசியல்கட்சிகள், வலது, இடது மற்றும் மையம் என வெவ்வேறு கொள்கைகளைக் கொண்டிருந்தாலும், தேர்தல் வெற்றி என்ற ஒற்றை நிகழ்ச்சி நிரலிலேயே இயங்குகின்றன. அவர்கள். 'சிங்கள பௌத்த என்ற விடயத்தை பயன்படுத்தி ஒரு புதிய, சர்வாதிகார அரசமைப்பை சர்வஜன வாக்கெடுப்பின் மூலமோ இல்லாமலோ உருவாக்க முயற்சிக்கலாம். ஆனால் இந்த விடயங்கள் மியான்மரை ஒத்தவையாக இருக்கக்கூடாது.

இலங்கையின் ஜனநாயக அரசியல்கட்சிகள், முக்கியமாக எதிர்க்கட்சிகள், இடதுசாரிகள், உலகம் முழுவதும் எதேச்சதிகாரத்துக்கு எதிரான போராட்ட வரலாற்றின் படிப்பினைகளைக் கற்றுக் கொள்ள வேண்டும். பின்னர் அதனைப் பொருத்தமான வகையில் பிரயோகிக்கவும் வேண்டும்.

அரசியல் மற்றும் சமூக இயக்க மட்டங்களில் ஒருங்கிணைப்புக் குழுக்கள்அவசியம். ஜனநாயகத்துக்கு ஆதரவளிப்பதில் அதி நவீன சர்வாதிகாரத்துக்கு எதிரான பரந்த சர்வதேச ஒற்றுமை அவசியம். சர்வாதிகாரத்தை எதிர்ப்பதற்கான சூழல் கனிந்திருக்கும் வேளையில் செயற்பாடு தாமதமாகக் கூடாது. ■

# ஆயரும்....

(02ஆம் பக்கத் தொடர்ச்சி)

இந்தச் சவால்களை கடந்து மேற்படி கட்சிகளை ஒரு பொது மேசைக்கு அழைத்துக்கொண்டு வரத்தக்க சிவில் ஆளுமைகள் தற்பொழுது பலமாக இல்லை என்பதே தமிழ் அரசியலில் உள்ள மிகப் பாரதூரமான ஒரு வெற்றிடம் ஆகும். தமிழ் மக்கள் பிரதிநிதிகளையும் சிவில் சமூகங்களையும் சந்திக்கும் பெரும்பாலான வெளிநாட்டுத் தூதுவர்கள் ஒரு குரலில் பேசுங்கள் ஓரணியாக வாருங்கள் என்று கேட்கிறார்கள். ஆனால் அவ்வாறு தமிழ்த்தரப்பை ஒரு பெரும் திரளாகக் கூட்டிக்கட்டவல்ல சிவில் கட்டமைப்புக்கள் எவையும் கிடையாது. சிவில்தலைவர்களும் கிடையாது. மறைந்த ஆயர் அப்படியொரு ஆளுமையாகக் காணப்பட்டார். கட்சிகளை அழைத்து கூட்டம் கூட்டி தன் கருத்தை வலிமையாக முன்வைக்கத்தக்க பலம் அவருக்கு இருந்தது. அது அவருக்கு பதவி வழியாகக் கிடைத்தது. அதே சமயம் தனது அரசியல் நிலைப்பாட்டின் காரணமாகவும் செயல்பாட்டின் காரணமாகவும் அவரும் தனது பலத்தை அதிகப்படுத்திக்கொண்டார்.

ஆனால் தற்பொழுது அவ்வாறான ஆளுமைகள் இல்லை. அது மட்டுமல்ல தமிழ் சிவில் சமூகங்களில் பெரும்பாலானவை அறிக்கை விடும் அமைப்புக்களாகவும் செயற்பாட்டு ஒழுக்கம் பெருமளவுக்கு இல்லாதவைகளாகவும் காணப்படுகின்றன.

அதிலும் குறிப்பாக கடந்த 12 ஆண்டுகளில் பல்வேறு பெயர்களில் பல்வேறு சிவில் சமூகங்கள் தோன்றி மறைந்துவிட்டன. பல்வேறுதரப்புகளின் நிகழ்ச்சி நிரல்களை முன்னெடுப்பதற்காக இவ்வாறு சிவில் சமூகங்கள் அவ்வப்போது உருவாக்கப்படுகின்றன. பின்னர் காணாமல் போய்விடுகின்றன. சில அமைப்புகள் தொடர்ந்தும்கடிதத் தலைப்பு அமைப்புகளாகக் காணப்படுகின்றன. இதில் ஆகப் பிந்திய ஓர் அமைப்பே அண்மையில் ஜெனிவா கூட்டத் தொடரையொட்டி நல்லூரில் மேடை அமைத்த ஓரமைப்பு ஆகும் .பலமான சிவில் சமூகங்களற்ற ஒரு வெற்றிடத்தில் அதுபோன்ற அரசின் முகவரமைப்புக்கள் உருவாகின்றன.

இதுவிடயத்தில் தமது செயற்பாட்டு ஒழுக்கம் காரணமாக, ஒரு சக்தி மூலமாக மேலெழுந்து அதன் காரணமாகவே அரசியல்வாதிகளையும் செயற்பாட்டாளர்களையும் தன்னை நோக்கி ஈர்க்கவல்ல ஆளுமைகள் அல்லது அமைப்புக்கள் தமிழ் அரசியல் பரப்பில் மிகக் குறைவு .

2015ஆம் ஆண்டு ஆட்சி மாற்றத்தின்போது இலங்கையில் சிவில் சமூகங்களின் பங்களிப்புக் குறித்து பேசும்போது கலாநிதி உயங்கொட அதை "அரசியலின் மீது சிவில் சமூகங்களின் தார்மீக தலையீடு என்று வர்ணித்தார். அப்படி ஒரு தலையீட்டைச் செய்யக்கூடிய பலம் மறைந்த ஆயர் இராயப்பு ஜோசப்பிடம் இருந்த காரணத்தால்தான் அவரால் கட்சிகளை மன்னாருக்கு அழைக்க முடிந்தது. ஆனால் 2013ஆம் ஆண்டு நடந்த அந்தச்சந்திப்பின் முடிவில் உரை நிகழ்த்திய சம்பந்தர் மறைந்த ஆயரை பார்த்து பின்வரும் தொனிப்படச் சொன்னார் பிஷப் நீங்கள் சொல்லுங்கோ, ஆனால் இறுதிமுடிவை நான்தான் எடுப்பேன் என்று.

ஆனால் கடந்த ஜனவரி மாதம் மூன்று கட்சிகளையும் பொது மேசைக்கு கொண்டு வந்தபொழுது அச்சந்திப்பில் பிரசன்னமாகியிருந்த திருமலை ஆயர் நோயல் இமானுவல் கட்சிப்பிரதிநிதிகளை நோக்கி கண்டிப்பான குரலில் உரை நிகழ்த்திய பொழுது யாரும் அவரை எதிர்த்துக் கதைக்கவில்லை.

அதன் அர்த்தம் சிவில் சமூகங்களின் தார்மீக தலையீட்டுக்கு கட்சிகள் அடங்கிப்போயின என்பதல்ல. ஏனெனில் அந்த ஆவணத்தை ஒன்றாக அனுப்பிய கட்சிகள் பின்னர் எவ்வாறு நடந்துகொண்டன?

எனவே தமிழ் அரசியலின் மீது தார்மீகத் தலையீட்டைச் செய்யவல்ல சிவில் சமூகங்களை கட்டியெழுப்ப வேண்டும். அவ்வாறு கட்டியெழுப்புவதுதான் மறைந்த ஆயருக்கு சிவில் சமூகங்களும் அரசியல் செயற்பாட்டாளர்களும் செய்யக்கூடிய மெய்யான அஞ்சலியாக இருக்கும். ■

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இடம்மாறும் இனவாதம்!



## ரணில் பக்கமாக 'அதிஷ்ட'க் காற்று

○ அ.நிக்ஸன்

ஆட்சி மாற்றம் ஒன்றே இலங்கையில் அனைத்துப் பிரச்சினைகளையும் தீர்க்குமென்ற பொய்மைக்குள் 1994ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலில் தமிழ் மக்கள் உட்பட பலரும் விழுந்தனர். 17 ஆண்டுகால ஐக்கிய தேசியக் கட்சியின் ஆட்சி கவிழ்ந்தால், ஈழத்தமிழர்களின் அரசியல் விடுதலை குறித்த பிரச்சினைகள் உள்ளிட்ட பொருளாதார நெருக்கடிகளும் தீர்ந்து வடக்குக் கிழக்கு அடங்கலாக இலங்கைத் தீவு சுபீட்சமடையும் என்ற பரப்புரையும் அன்று செய்யப்பட்டிருந்தது. ஆனால் சந்திரிகா பதவியேற்றுச் சில மாதங்களிலேயே மீண்டும் போர் மூண்டது. அவ்வாறே 1999ஆம் ஆண்டும் ஆட்சி மாற்றம் வரும் என்ற மற்றுமொரு பொய்யான நம்பிக்கை இருந்தது. ஆனாலும் மீண்டும் சந்திரிகா தலைமையிலான சுதந்திரக் கட்சியை மையப்படுத்திய அரசாங்கம் பதவியேற்றது. மூன்றில் இரண்டு பெரும்பான்மை இல்லாததால் சந்திரிகா அரசாங்கம் தடுமாறியது. ஆதரவு கொடுத்த முஸ்லிம் கட்சிகள் எதிர்க்கட்சிக்குச் செல்ல, ஆட்சி கவிழ்ந்தது. இதனால் 2001ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் ஐந்தாம் திகதி மீண்டும் நாடாளுமன்றத் தேர்தல் நடத்தப்பட்டது.

**சந்திரிகா - ரணில் மோதலில் கண்டுகொள்ளப்படாத தமிழர்கள்**

இங்குதான் அமெரிக்கா உள்ளிட்ட மேற்குலகம் விரும்பிய ஆட்சி மலர்ந்தது. அதாவது ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான ஐக்கிய தேசியக் கட்சியை மையப்படுத்திய ஐக்கிய தேசிய முன்னணி ஆட்சியமைத்தது. 1978ஆம் ஆண்டில் இருந்து 1994ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் வரை 17 ஆண்டுகள் ஆட்சிபுரிந்த ஐக்கிய தேசியக் கட்சி ரணில் விக்கிரமசிங்க தலைமையில் 2001ஆம் ஆண்டு புனிதப்படுத்தப்பட்டது.

1994ஆம் ஆண்டு தமிழ் முஸ்லிம் மக்களின் வாக்குகள் உட்பட 62 சதவீத வாக்குகளினால் அமோக வெற்றியடைந்த சந்திரிகாவின் அரசாங்கம் 2001ஆம் ஆண்டு கவிழ்க்கப்பட்டது. ஆனால் சந்திரிகா தொடர்ந்தும் ஜனாதிபதியாகவே பதவி வகித்திருந்தார். இந்தவொரு நிலையில், 2002ஆம் ஆண்டு நோர்வேயின் ஏற்பாட்டோடு ஆரம்பித்த சமாதானப் பேச்சுக்களை சந்திரிகா ஜனாதிபதி என்ற முறையில் ஒப்பாசாரத்துக்காக ஆதரித்திருந்தார்.

இருந்தாலும் ரணில் தலைமையிலான அரசாங்கம் அதனை முன்னெடுப்பதால் அந்தச் சமாதானப் பேச்சுக்களின் முன்னேற்றங்கள் மற்றும் வடக்குக் கிழக்கில் செயற்படுத்தப்பட வேண்டிய உடனடி வேலைத்திட்டங்களுக்கு அவர் இடையூறு விளைவித்துக் கொண்டிருந்தார். இதனை ரணில் விக்கிரமசிங்கவின் அரசாங்கமும் ஒரு சாக்குப்போக்காக எடுத்து தமிழர்களின் அரசியல்தீர்வு மற்றும் இயல்பு நிலைமைகளை உருவாக்கும் விடயத்தி லும் இழுத்தடிப்புச் செய்தது. இந்த இழுபறியின் உச்சமே 2003ஆம் ஆண்டு பாதுகாப்பு அமைச்சு உள்ளிட்ட மூன்று அமைச்சுக்களின் பொறுப்புகளை சந்திரிகா ரணில் அரசாங்கத்திடம் இருந்து பறித்தெடுத்தார். இதனால் அன்று கொழும்பில் ஏற்பட்ட அரசியல் நெருக்கடி மற்றுமொரு நாடாளுமன்றத் தேர்தலுக்கு வழிசமைத்தது. 2004ஆம் ஆண்டு இடம்பெற்ற நாடாளுமன்றத் தேர்தலில் ஜே.வி.பி, ஜாதிக கெல உறுமய உள்ளிட்ட சிங்கள இனவாதக் கட்சிகள் அனைத்தும் ஒன்றிணைந்து சுதந்திரக் கட்சியை மையப்படுத்தி ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பில் போட்டியிட்டுச் சமாதானப் பேச்சுக்களை நிறுத்தும் நோக்கில் ஆட்சியைக் கைப்பற்றின. அத்துடன் 2005ஆம் ஆண்டு இடம்பெற்ற ஜனாதிபதித் தேர்தலிலும் ரணில் தோல்வியடைந்தார். இதன் பின்னர் சுதந்திரக் கட்சி தலைமையிலான ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு மேலும் பலம்பெற்றது. ஐக்கிய தேசியக் கட்சியில் இருந்து கரு ஜயசூரிய தலைமையில் 17 உறுப்பினர்கள் மகிந்த தலைமையிலான அரசாங்கத்துடன் இணைந்து அமைச்சுப் பொறுப்புக்களைப் பெற்றனர். 2006ஆம் ஆண்டு மீண்டும் போர் ஆரம்பித்தவொரு நிலையில் ஐக்கிய தேசியக் கட்சியில் இருந்து மேலும் பல உறுப்பினர்கள் அரசாங்கத்துடன் இணைந்தனர். ஐக்கிய தேசியக் கட்சி மேலும் பலவீனமானது. கட்சிக்குள் தலைமைத்துவப் பிச்சினையும் எழுந்தது.

> ஓராண்டு நிறைவில் ராஜபக்ச அரசாங்கத்துக்குள் ஏற்பட்டுள்ள குழப்பங்கள் மற்றுமொரு ஆட்சி மாற்றத்துக்கு வழிவகுக்கும் சூழலை உருவாக்கியுள்ளது. அத்தோடு தொடர்ச்சியாகப் பதவியை இழந்து வந்த ரணில் விக்கிரமசிங்க மீதும் அனுதாப அலையொன்று வீச ஆரம்பித்திருக்கிறது.

**பொன்சேகாவின் தோல்வியும் ஐ.தே.கவினது சரிவுகளும்**

2009ஆம் ஆண்டு மே மாதத்துக்குப் பின்னரான சூழலில் போர்க்குற்றங்கள், இன அழிப்பு என்ற குற்றச்சாட்டுக்களைக் கடந்து, மகிந்த அரசாங்கத்துக்கு எதிராக அதிகாரத் துஷ்பிரயோகம், மனித உரிமைமீறல் என்ற குற்றச்சாட்டுக்களை முன்வைத்து ஜே.வி.பி மற்றும் சில சிறிய சிங்களக் கட்சிகள் ஒன்று சேர்ந்து ஐக்கிய தேசியக் கட்சி தலைமையிலான எதிர்க்கட்சியோடு சேர்ந்து பயணிக்க ஆரம்பித்தன. இதனால் போரை வெற்றிகரமாக நடத்தி முடித்தவரென அப்போது சிங்கள மக்கள் மத்தியில் புகழ்பாடப்பட்டு ஓய்வுபெற்றிருந்த இராணுவத் தளபதி சரத் பொன்சேகாவை 2010ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலில் எதிர்க்கட்சிகளின் பொது வேட்பாளராகக் களமிறக்கினர். தமிழ்த்தேசியக் கூட்டமைப்பும் இதற்கு ஆதரவு வழங்கியமைதான் அன்று ஆச்சரியமாக இருந்தது. மேற்குலக நாடுகளும் இதனை மறைமுகமாக வரவேற்று ஆதரவு வழங்கிருந்தன. ஆனால் எதிர்பார்த்த ஆட்சி மாற்றம் நிகழவில்லை.

இதனால் ஐக்கிய தேசியக் கட்சிக்குள் மீண்டும் பிளவுகள் எழுந்தன. இலங்கையில் 2009ஆம் ஆண்டுக்குப் பின்னரான சூழலில் ஏற்பட்டுள்ள மனித உரிமைப் பிரச்சினைகளைத் தீர்க்க உரிய தலைமை அவசியம் என்ற அடிப்படையிலேயே பிளவுகளும் ஏற்பட்டிருந்தன. ஆனால் போரால் பாதிக்கப்பட்ட ஈழத்தமிழ்ச் சமூகத்துக்கு உடனடியாகத் தேவைப்படும் அடிப்படை உதவிகள் மற்றும் நிரந்த அரசியல்தீர்வு பற்றியதாக அந்தப் பிளவு இருக்கவேயில்லை. ஆனாலும் 2002 ஆம் ஆண்டு சமாதானப் பேச்சு நடைபெற்றபோது ரணில் விக்கிரமசிங்க புலிகள் இயக்கத்துக்குள் ஏற்படுத்திய பிளவுகள்தான் போரை வெற்றிகொள்ள இலகுவாக இருந்ததென ஐக்கிய தேசியக் கட்சியின் மூத்த உறுப்பினர்கள் நாடாளுமன்றத்தில் பேசி ரணில் விக்கிரமசிங்கவின் தலைமையைக் காப்பாற்ற முற்பட்டனர். இவ்வாறான இழுபறிகளுக்கு மத்தியில் மற்றுமொரு ஆட்சி மாற்றத்துக்கு மேற்குலகம் தயாராகியது.

அதன் பெறுபேறுதான் மைத்திரிபால சிறிசேன மற்றும் சுதந்திரக் கட்சியில் இருந்து வெளியில் எடுக்கப்பட்டு எதிர்க்கட்சிகளின் பொதுவேட்பாளராகக் களமிறக்கப்பட்டார். மேற்குலக நாடுகளின் அழுத்தங்களினால் ரணில் விக்கிரமசிங்கவும் அதற்கு விட்டுக்கொடுத்திருந்தார்.

அன்று மகிந்தவுக்கு ஆதரவு வழங்கிப் பின்னர் முரண்பட்ட இனவாதிகளான ஜே.வி.பி, ஜாதிக ஹெல உறுமய போன்ற கட்சிகளும் முரண்பாடுகளில் உடன்பாடாக மைத்திரிபால சிறிசேனவை ஆதரித்தன. இதனால் 2015ஆம் ஆண்டு ஜனவரி மாதம் ஆட்சி மாற்றம் ஏற்பட்டது. ஆனால் மூன்று மாதங்களில் மைத்திரி - ரணில் மோதல் ஆரம்பித்தது. அதனைப் பயன்படுத்திய ராஜபக்ச குடும்பம் 2016ஆம் ஆண்டு பெரமுனவை ஆரம்பித்து உள்ளூராட்சித் தேர்தலில் வெற்றிநடைபோட்டது.

அன்றிலிருந்து கோத்தாபயவே அடுத்த ஜனாதிபதி வேட்பாளர் என்ற கருத்துக்கள் கசிய ஆரம்பித்தன. 2018ஆம் ஆண்டு அந்தப் பிரசாரம் உச்சம் தொட்டது. இதன் பயனாக 2019ஆம் ஆண்டு நவம்பர் மாதம் கோத்தாபய தேர்தலில் போட்டியிட்டு ஜனாதிபதியாகப் பதவியேற்றார். 2020ஆம் ஆண்டு நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலிலும் தனிப் பெரும்பான்மையோடு சிறிய கட்சிகளின் ஆதரவின்றி பெரமுன ஆட்சியமைத்தது.

**ரணில் பக்கமாக வீசுகிறது காற்று**

ஆனால் ஓராண்டு நிறைவில் ராஜபக்ச அரசாங்கத்துக்குள் ஏற்பட்டுள்ள குழப்பங்கள் மற்றுமொரு ஆட்சி மாற்றத்துக்கு வழிவகுக்கும் சூழலை உருவாக்கியுள்ளது. அத்தோடு தொடர்ச்சியாகப் பதவியை இழந்து வந்த ரணில் விக்கிரமசிங்க மீதும் அனுதாப அலையொன்று வீச ஆரம்பித்திருக்கிறது. 2002இல் ரணில் சமாதானப் பேச்சை ஆரம்பித்த அன்றையநாளே ஈழப்போருக்கும் முடிவு கட்டப்பட்டது என்றதொரு உணர்வு இன்றுவரை சிங்கள மக்கள் மத்தியில் இல்லாமலில்லை.

ரணிலுக்கு ஆதரவான சிங்கள நாளேடுகளில் வெளிவரும் கட்டுரைகள் அதனைப் புடம்போட்டுக் காண்பிக்கின்றன. கடந்த ஓகஸ்ட் மாதம் நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலில் எந்தவொரு ஆசனங்களையும் கைப்பற்றாத நிலையில் கிடைத்த ஒரேயொரு தேசியப் பட்டியல் ஆசனத்துக்குக்கூட எவரும் தெரிவு செய்யப்படவில்லை.

இந்தவொரு சூழலில் தற்போது ரணில் விக்கிரமசிங்க மீது அதிஷ்டக் காற்று வீசுகின்றது. ராஜபக்சவை மையப்படுத்திய பொதுஜன பெரமுனக் கட்சிக்குள் ஏற்பட்டுள்ள குழப்பங்கள் சஜித் தலைமையிலான 54 உறுப்பினர்கள் ஐக்கிய தேசியக் கட்சியில் இருந்து வெளியேறி ஐக்கிய மக்கள் சக்தியாகச் செயற்பட்டாலும் அங்கு ஏற்பட்டுள்ள உறுதியற்ற நிலை போன்ற காரணிகள், ரணில் விக்கிரமசிங்கவுக்குச் சாதகமானதொரு நிலையைத் உருவாக்கியுள்ளதெனலாம். அத்துடன் ரணில் தனித்துச் சுதந்திரமாக ஆட்சியமைத்தால் தமக்கும் வசதியாக இருக்கும் என்றவொரு நோக்கம் அமெரிக்கா போன்ற வல்லாதிக்க நாடுகளுக்கும் உண்டு. எவ்வாறாயினும் தேர்தல் வெற்றிக்கு இனவாதமே பிரதான முதலீடாக இருக்க வேண்டும். அதனால்தான் பாட்டலி சம்பிக்க ரணவக்கவை மையமாகக் கொண்டு ஒரு அணியும் பசில் ராஜபக்சவை பிரதானப்படுத்தி மற்றுமொரு அணியும் 2024ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலை நோக்கிப் பயணிக்க ஆரம்பித்துள்ளன. இதனையே தனக்குச் சாதகமாக்கியுள்ளார் ரணில். ஈழத்தமிழர்களுக்கும் மேற்குலகத்துக்கும் நல்ல பிள்ளையாகவும் 2002ஆம் ஆண்டில் தன்னால் ஆரம்பிக்கப்பட்ட சமாதானப் பேச்சுக்களே 2009இல் போரை முடிவுறுத்தியதெனச் சிங்கள மக்கள் மத்தியில் சொல்லவும் ரணிலிடம் ஆதாரங்கள் உண்டு. ஆக இனவாதம் வெவ்வேறு வடிவங்களில் தேவைக்கு ஏற்ப இடம்மாறுவதை மாத்திரமே இலங்கைத் தீவில் காணமுடிகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இனப்படுகொலையும் 'சேம்சைட்' கோல்களும்

எஸ்.சாதூரியன்



"கட்டமைக்கப்பட்ட இனவழிப்பு என்றால் என்ன? ஒரு இனக் குழுவின் அடிப்படைகளை அழித் தொழிக்கவல்லவாறு ஒருங்கிணைந்த கட்டமைப்புத் திட்டமாக இனவழிப்பு மேற்கொள்ளப் படுவதே கட்டமைக்கப்பட்ட இனவழிப்பு என 1940 களில் அரசறிவியலாளர் லெம்கின் வரையறை செய்துள்ளார்."

**2009** ஆம் ஆண்டு பேரழிவுக்கு பின்னர் இலங்கை அரசியலில் போர்க்குற்றம், இனவழிப்பு தொடர்பான உரையாடல்கள் முதன்மை பெறலாயின. குறிப்பாக ஜெனிவாத் திருவிழாக் காலப்பகுதியில் இலங்கையின் உள்ளக மோதலில் இடம்பெற்ற போர்க்குற்றங்கள் தொடர்பாக கடுமையான வாதப்பிரதிவாதங்கள் இடம்பெற்று வருகின்றன . இந்தநிலையில் இடைக்கிடையே . "இலங்கையில் இனப்படுகொலை நடைபெற்றமைக்கு போதிய சாட்சியங்கள் இல்லை" என்று நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் 'சேம் சைட் ' கோல் அடிப்பதுவும் தொடரவே செய்கின்றது.

2017ஆம் ஆண்டு தமிழ்த்தேசிய கூட்டமைப்பின் ஊடகப்பேச்சாளராக சுமந்திரன் இருந்த காலப் பகுதியிலும், ஜெனிவா மனித உரிமைகள் கூட்டத் தொடரில் இலங்கை அரசாங்கத்துக்கு 2 வருட கால அவகாசம் வழங்குவது தொடர்பில் வவுனியாவில் இடம்பெற்ற கூட்டத்தின் போதும் இப்படி 'இனப்படுகொலைக்கு ஆதாரமில்லை' என்று திருவாய் மலர்ந்திருந்தார். இப்போது கடந்தவாரம் மட்டக்களப்பில் இடம்பெற்ற கூட்டமொன்றில் அதே கருத்தை மீளவும் சொல்லியிருக்கிறார்.

2015 ஆம் ஆண்டு தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் ஆளுகையின் கீழிருந்த வடமாகாண சபையில், இலங்கையில் இடம்பெற்ற இனவழிப்பு சர்வதேச விசாரணை மூலம் உறுதிப்படுத்த வேண்டும் என்று ஏகமனதாகத் தீர்மானம் நிறை வேற்றப்பட்டது. இந்தத் தீர்மானத்தை அப்போதைய வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனால் முன்மொழி யப்பட்டு தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் உறுப்பினர்களின் ஆதரவுடனேயே நிறைவேற்றப்பட்டிருந்தது. அதனைத் தொடர்ந்து தமிழ்த்தேசியக் கூட்ட மைப்பின் ஆளுகைக்குள் இருந்த வேறு சில உள்ளூராட்சி சபைகளிலும் இதே தீர்மானம் நிறை வேற்றப்பட்டிருந்தது. ஆக, இலங்கையில் இடம்பெற்றது இனவழிப்புத் தான் என்பதை தமிழ்த்தேசிய கூட்டமைப்பு வலுவாகவே ஏற்றுக்கொள்கிறது. ஆனால் தமிழ்த்தேசிய கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரன் மட்டும், நீதிக்காக போராடும் மக்களின் உணர்வுகளை வலுவிழக்க செய்யும் வகையில் இனப்படுகொலைக்கு ஆதாரங்கள் இல்லையென ஒற்றைக் காலில் நிற்கிறார். கூடவே , வடமாகாண சபையின் இனவழிப்பு தீர்மானத்தில் பயன்படுத்தப்பட்ட "கட்டமைக்கப்பட்ட இனவழிப்பு" என்ற சொல்லாடல், சர்வதேச இனவழிப்பு நியமங்களுக்குள் உள்ளடங்காது என்ற விசமத்தனமான கருத்தினையும் முன்வைத்து வருகின்றார்.

"கட்டமைக்கப்பட்ட இனவழிப்பு" என்றால் என்ன? ஒரு இனக் குழுவின் அடிப்படைகளை அழித்தொழிக்கவல்லவாறு ஒருங்கிணைந்த கட்டமைப்புத் திட்டமாக இனவழிப்பு மேற்கொள்ளப்படுவதே "கட்டமைக்கப்பட்ட இனவழிப்பு" என 1940 களில் அரசறிவியலாளர் லெம்கின் வரையறை செய்துள்ளார்.

இனவழிப்பு என்பது, தேசிய, இன, மத குழுக்களை முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ அழித்தொழிக்கும் எண்ணத்துடன் , அந்தக் குழுவின் உறுப்பினர்களை கொலைசெய்வது, குழுவின் உறுப்பினர்களுக்கு உடல்ரீதியாகவோ மனரீதியாகவோ தீங்கிழைப்பது, அவர்களின் வாழ்வாதாரங்களை முழுமையாகவோ பகுதியாகவோ அழிக்கும் பொருட்டு மேற்கொள்ளப்படும்வலிந்த தாக்குதல், குழுவில் குழந்தைப்பிறப்புகளை தடுக்கும் பொருட்டு மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் மற்றும் ஒரு குழுவிலிருந்து வேறொரு குழுவுக்கு குழந்தைகளை வலுக்கட்டாயமாக மாற்றுதல் ஆகியவற்றையே குறித்து நிற்பதாக 1948 ஆம் ஆண்டு இனப்படுகொலை குறித்த ஐ.நா. வின் தீர்மானத்தின் சரத்து 2 இன் படி 'இனப்படுகொலை' என்பது வரவிலக்கணப்படுத்தப்பட்டுள்ளது.

கட்டமைக்கப்பட்ட இனவழிப்பு என்கையில், நேரடியாக இராணுவரீதியாக ஏற்படுத்தும் பௌதிகச் சிதைப்புக்குப் புறம்பாக நின்று, அரசாங்க கட்டமைப்புக்கள் மூலமாக இனக்குழுமத்தின் தேசிய அங்கீகாரக் கூறுகள் மீது நிகழும் தாக்கங்களை குறிப்பிடலாம். சமமற்ற ஏற்றத் தாழ்வின் அடிப்படையில் ஒடுக்கப்படும் ஒரு இனத்தின் தேசிய அங்கீகாரக் கூறுகளை தொடர்ச்சியாக சிதைக்கும் இனவழிப்பு வடிவமே கட்டமைக்கப்பட்ட இனவழிப்பு எனலாம். இப்படிப்பட்ட நிலையில் தவறான விளக்கங்களைக் கொடுத்து, தமிழ் மக்களையும் சர்வதேசத்தையும் திசைதிருப்பும் வேலையிலேயே சுமந்திரன் ஈடுபடுகின்றார்.

கடந்த 2009ஆம் ஆண்டு ஆயுதப்போராடம் மௌனிக்கப்பட்டதைத் தொடர்ந்து தமிழ் மக்களுக்கான அரசியல் தலைமையை தமிழ்த்தேசியக் கூட்டமைப்பினர் தமதாக்கிக் கொண்டிருந்தனர். எனவே தமிழ் மக்களின் அரசியல் பிரதிநிதிகளாக உள்ளவர்கள், அந்த மக்கட் கூட்டத்துக்கு நேர்ந்த அநீதிக்கு பரிகாரம் பெறுவதில் தான் கண்ணும் கருத்துமாக இருக்க வேண்டும்.





ஆனால் சுமந்திரன் எம்.பியோ இனப்படுகொலையை நிகழ்ந்தியவர்களுக்கு சாதகமாகக் கருத்துரைத்து, தன் சொந்த இன மக்களை நாட்டாற்றில் தள்ளிவிடும் வேலையையே செய்கின்றார்.

மைத்திரி - ரணில் கூட்டரசாங்கத்தின் நிதியமைச்சராக இருந்த மங்கள சமரவீர 2020 ஆம் ஆண்டு பெப்ரவரியில் நாடாளுமன்ற உரையொன்றில், "மகிந்த ராஜபக்ச அரசாங்கத்தின் இறுதி காலப் பகுதியில் எமது இராணுவம் மற்றும் தலைவர்களுக்கு எதிராக சர்வதேச விசாரணை ஒன்று ஆரம்பிக்கப்பட்டிருந்தது. என்றாலும் 30/1 பிரேரணை மூலமே அதனை நாம் தடுத்தோம்." எனக்குறிப்பிட்டிருந்தார். சுமந்திரன் சொல்வது போல போர்க்குற்றங்கள்/ இனவழிப்பு சார்ந்த சாட்சியங்கள் போதுமானதாக இல்லையாயின், மங்கள சொன்னது போல எவ்வாறு சர்வதேச விசார ணைக்கான முன்னெடுப்புக்கள் மேற்கொள்ளப்பட்டிருந்தன?

மைத்திரி - ரணில் கூட்டரசாங்கத்துக்கு நல்லாட்சி பெயர்ப்பலகை பொறித்து தமிழர்கள் கோரிய சர்வதேச விசாரணைகளை நீர்த்துப் போக செய்த எம்.ஏ.சுமந்திரனும் அவரது சகாக்களுமே இப்போது, 'இனப்படுகொலை நடந்தமைக்கு சாட்சியங்கள் போதியளவு இல்லை' எனக்கூறி தமிழர்களின் நீதிக்கான குரலையும் இல்லாமலாக்க முனைகின்றார்கள்.

அமெரிக்காவின் முன்னாள் ஜனாதிபதி பராக் ஒபாமா கூட, அண்மையில் தான் எழுதி வெளியிட்ட 'வாக்களிக்கப்பட்ட நிலம்' (A Promised Land) என்ற புத்தகத்தில் ஐ.நா.வின் பலவீனம் பற்றிய குறிப்பில் இலங்கையில் இடம்பெற்றது இனவழிப்பு சார்ந்தது எனும் வகையில் கருத்தரைத்துள்ளார்.


" சோமாலியா போன்ற தோல்வியுற்ற அரசுகளை புனரமைக்க அல்லது இலங்கை போன்ற இடங்களில் நிகழ்ந்த இன சங்காரம் (Ethnic Slaughter) போன்றவற்றைத் தடுக்க அதன் உறுப்பு நாடுகளுக்கு வழிமுறைகள் அல்லது கூட்டு விருப்பம்இல்லை "என ஒபாமா கூறியுள்ளார். அத்துடன் அண்மைக்காலத்தில் சர்வதேச நிறுவனங்களில் தலைமை வகித்த நவநீதம் பிள்ளை போன்ற செயற்பாட்டாளர்களும் இலங்கையில் இடம்பெற்றது மற்றும் இடம்பெற்றுக் கொண்டிருப்பது கட்டமைக்கப்பட்ட இனவழிப்பு என்ற கருத்தினை ஏற்கும் வகையிலேயே செயற்பட்டு வருகின்றனர்.

அக்கரையில் இருப்பவர்கள் கூட, எங்கள் நிலத்தில் நடந்தது இனப்படுகொலையே என்று கூறுகையில் போர் நடந்த போது , வசதியாக கொழும்பில் காலாட்டிக் கொண்டிருந்துவிட்டு, இப்போது வந்து 'இனப்படுகொலை நடந்தமைக்கு ஆதாரமே இல்லை" என்று தீர்ப்பிடும் சிலரை, காலம் அவ்வளவு எளிதில் மன்னிக்காது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பரிஸிலிருந்து குமாரதாஸன்

# செவ்வாயில் பறக்கும் ஹெலி!



வேற்றுக்கிரகம் ஒன்றில் மனிதனது முதலாவது வான்பறப்பு முயற்சி இன்று அல்லது நாளை இடம்பெறவிருக்கிறது.

நூறு ஆண்டுகளுக்கும் அதிக காலத் துக்கு முன்னர் பூமியில் ரைட் சகோத ரர்கள்(Wilbur and Orville Wright) நிகழ்த்திய முதலாவது பறப்பு முயற்சிக்கு நிகரான ஒரு பெரும் அறிவியல் பாய்ச்சலாகப் பதிவாகப் போகின்ற சரித்திர நிகழ்வு இது.

மர்மங்கள் நிறைந்ததும் மனிதனது அடுத்த குடியேற்றம் (Martian colony) என்றும் நம்பப்படுகின்றதுமான செவ்வாய்க் கோள், நாளாந்தம் வருகின்ற செய்திகள் ஊடாக மனிதனுக்கு மிகவும் நெருக்கமான பக்கத்து வீடுபோல மாறி வருகிறது.

கடந்த பெப்ரவரி மாதம் அமெரிக்கா பிரான்ஸ் நாடுகளின் அறிவியலாளர் களது முயற்சியால் நாசா அனுப்பிய ப்ரெஸ்வெரன்ஸ்(Perseverance) விண்கலம் சிவப்புக் கிரகத்தின் பல முகங்களை உலகுக்கு அம்பலமாக்கி வருகிறது. படங்களாக, ஒலிப்பதிவுகளாக நாளாந்தம் தகவல்களை அது பூமிக்கு அனுப்பிக் கொண்டிருக்கிறது.

ஏழு மாதங்கள் 292 மில்லியன் மைல்கள் தூரம் பயணம் செய்த ரோபோ விண்கலம் கடந்த பெப்ரவரி 18 ஆம் திகதி செவ்வாய்க் கிரகத்தில் தரையிறங்கியது. அதில் பொருத்தப்பட்டிருக்கின்ற அதி நவீன கமெராக்கள் அபூர்வமான பல காட்சிகளை அனுப்பி வருகின்றன. செவ்வாயில் தினசரி என்ன நடக்கிறது என்பதைக் கூட பூமியில் இருந்தவாறு அவதானிக்க முடிகின்றது. பல அரிய செயல்களைப் புரிந்து வருகின்ற ரோவர் விண்கலத்துடன் இணைக்கப்பட்ட சிறிய புத்திக் கூர்மை கொண்ட மினி ஹெலிக்கொப்ரரின் பெயர்தான் இன்ஹனுயிற்றி Ingenuity.

**இரண்டு கிலோவுக்கு குறைந்த எடை. ஆனால் அதன் நுண்ணறிவோ மிகை. செவ்வாயின் அடர்த்தி மிகுந்த வளி மண்டலத்தில் பறக்கப் போகின்ற முதலாவது வானூர்தி (ஹெலி)இது. இதுவரை நாளும் தாய்க் கலத்துடன் இணைக்கப்பட்டிருந்த இந்தக் ஹெலி பரீட்சார்த்தப் பறப்பு முயற்சியில் ஈடுபடுவதற்காக கடந்த 4ஆம் திகதி முதல் விண்கலத்தை விட்டுவிலகி செவ்வாயின் தரையில் தனியே கால்பதித்து நிற்கின்றது.**


தனது இயக்கத்துக்கான சக்தியை இதுவரை ரோவர் கலத்தின் அணு மின் பற்றரிகளில் (nuclearpowered system) இருந்து பெற்றுவந்த Ingenuity ஹெலி, இனிமேல் தனது சூரிய மின் கலம் மூலம் சேமிக்கப்படுகின்ற சக்தியில் (solar power) தனித்து இயங்கும் என்று நாசா விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர்.

அங்கு நிலவும் கடும் குளிர் காரணமாக அதன் பறப்பு முயற்சி ஏப்ரல் 8ஆம் திகதி யில் இருந்து 11ஆம் திகதிக்கு( இன்று ஞாயிற்றுக்கிழமை) ஒத்திவைக்கப்பட்டிருப்பதாக நாசாவின் ஹெலிக்கொப்ரர் திட்டத்தின் தலைமைப் பொறியியலாளர் பொப் பலராம் ( Bob Balaram) தெரிவித்தருக்கிறார்.

பூமியைப் போலன்றி செவ்வாயில் இரவு நேரத்தில் கடும் குளிர் மைனஸ் 130 F வரை குறைகிறது. Ingenuity ஹெலி அதன் சக்தி மூலம் முதலில் தன்னைத் தானே கடும் குளிரில் இருந்து காத்துக் கொள்ளவேண்டும். அதற்கான வெப்பமூட்டும் செயற்பாடுகள் சரிவர இயங்குகின்றனவா என்பது தற்சமயம் பரிசோதிக்கப்பட்டுவருகின்றது. அதன் கருவிகளும் வெப்ப அளவீடுகளும் சரிபார்க்கப்பட்ட பின் பரீட்சார்த்தப் பறப்பு தொடங்கும்.

கடும் குளிர் மிகுந்த ஓர் இரவை ஹெலி தனித்து வெற்றிகரமாகக் கடந்துள்ளது. அதன் முதலாவது வெற்றி இது என்று நாசாவின் செவ்வாய்ப் பறப்புத் திட்டக் குழு தெரிவித்துள்ளது.





ஜெஸீரோ கிரேட்டர் (Jezero Crater) எனப்படுகின்ற ஆற்றுப் பள்ளத்தாக்கு போன்ற பகுதியில் ஹெலி தனது முதல் பறப்பை மேற்கொள்ளவிருக்கும் சுற்றுப் பாதையின் வரைபடத்தை நாசா வெளி யிட்டுள்ளது. 30 செக்கன்கள் மட்டுமே நீடிக்க உள்ள பரீட்சார்த்தப் பறப்பின் போது ஹெலி சுமார் மூன்று மீற்றர்கள் உயரத்தில் பறக்கும். அதன் பிறகு அடுத்த முப்பது நாள்கள் அதன் பறப்பு உயரமும் தூரமும் அதிகரிக்கப்படும்.


முழு உலகமும் ஆவலுடன் காத்திருக்கி ன்ற Ingenuity ஹெலியின் முதலாவது பறப்பை ப்ரெஸ்வெரன்ஸ் விண்கலம் படம் எடுத்து மறு நாள் பூமிக்கு அனுப்பிவைக்க வுள்ளது.

செவ்வாய்க்கிரகத்துக்கு மனிதர்கள் மேற்கொள்ள ஆசைப்படுகின்ற எதிர்காலப் பயணங்களுக்கெல்லாம் ஒரு தொடக்கமாக இந்த நாள்கள் வரலாற்றில் எழுதப்படவுள்ளன.

1903 ஆம் ஆண்டு ரைட் சகோதரர்கள் (Wright Brothers) என அறியப்பட்ட அமெரிக்க இரட்டையர்கள் மேற்கொண்ட முதலாவது விமானப் பறப்பு முயற்சியே இன்றைக்கு உலகில் பறக்கின்ற எல்லா வானூர்திகளுக்குமான ஆரம்பமாக அமைந்தது. பூமியில் புரியப்பட்ட அந்த அறிவியல் சாதனையை நூற்றாண்டு களுக்குப் பிறகு பூமிக்கு வெளியே வேற்றுக் கிரகம் ஒன்றில் முதல்முதலாகச் சோதித்துப் பார்க்கின்ற நிகழ்வுதான் செவ்வாய்ப் பறப்பு.

ரைட் சகோதரர்கள் கலிபோர்னியாவில் தங்களது பறப்பு முயற்சிக்குப் பயன்படுத்திய முதலாவது விமானத்தின் உடற்பாகங்களில் இருந்து எடுக்கப்பட்ட சிறிய முத்திரை அளவான ஒரு துண்டு (small piece) செவ்வாயில் தரையிறங்கி உள்ள புத்திக்கூர்மைக் ஹெலிக்கொப்ரரில் பொருத்தப்பட்டுள்ளது.

**ரைட் சகோதரர்கள் தங்களது பறப்பு முயற்சிகளுக்குப் பயன்படுத்திய விமானங்களைக் காட்சிப்படுத்தி பேணி வருகின்ற ஒஹியோவில் உள்ள அருங்காட்சியகம் ஒன்று 'Flyer 1' எனப்படுகின்ற முதலாவது விமானத்தின் சிறிய பகுதி ஒன்றை ரைட் சகோதரர்களது குடும்ப வாரிசுகளினது சம்மதத்துடன் தங்களுக்கு வழங்கியது என்ற புதிய தகவலை நாசா வெளியிட்டிருக்கிறது. மனித குலத்தின் இரண்டு பெரும் பறப்பு முயற்சிகளிடையிலான வரலாறு இதன் மூலம் தொடர்புபடுத்தப்படுகிறது.**



இன்ஹனுயிற்றி
Ingenuity

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அவசரமா ஒரு கடுதாசி



சரத் வீரசேகர
மந்திரி ஐயாவுக்கு..

ஆயுபோவன்.

உங்களுக்கு இப்ப ஏழரைச் சனியன் பிடிச்சுட்டுது போல. ஒருக்கா கண்டி ஆமத்துறு விட்டைப் போய் தண்ணி தெளிச்சு பிரித் நூல் கட்டுறது நல்லது எண்டு நான் நினைக்கிறன்.

ஏழரை துவங்கிவிட்டுது எண்டதுக்கு அத்தாட்சி என்ன தெரியுமோ? வீண் சண்டை சச்சரவு வருமாம். உள்ள காடை கடைப்புளி, கண்டது நிண்டதுகள் எல்லாம் வந்து பெவிக்கோல் போட்டு ஒட்டினாப்போலை ஒட்டுமாம். வெறும் சருகுப் புலியைப் பாக்க வரிப்புலி மாதிரித் தெரியுமாம்.

அப்பிடித்தான் யாழ்ப்பாண ரவுணுக்கை காவல்படை ஒண்டை அமைச்சு கஞ்சல் குப்பையைப் போடாமல் பாதுகாக்க வேணும் எண்டு மேயர் மணிவண்ணன் ஒரு திட்டத்தைக் கொண்டாந்தார். ஆனால் ஆரோ அதை உங்களுக்கு 'காவல்துறையை அமைக்கிறார் மணி வண்ணன் எண்டு போட்டுக்குடுக்க, பேஸ்புக்கிலையும் சிலர் அதை மாதிரி எழுத, சின்னப்பிள்ளை மாதிரி நீங்களும் அதை நம்பி ஆளைப் பிடிச்சு உள்ளுக்க போட்டியள். இத்தனைக்கும் மணி செய்த குற்றம் என்ன? நீலக்கலரில உடுப்பு எடுத்துக் குடுத்தது ஒரு குற்றமாசாமி? முந்தி இயக்கம் இருக்கேக்க தமிழீழக் காவல்துறையின்ர கலரும் அதுதான். ஆனால் நீலக்கலரில ஏன் அவை சீருடை வைச்சிருந்தவை? ஏனெண்டால் உங்கட பொலிஸ்காரர் செய்த அநியாயங்களைப் பார்த்து சனத்துக்கு காவிக் கலர் எண்டால் ஒரு அலேர்ஜிக். அதால தூய்மையை குறிக்கிற நீலத்தில காவல்துறை உடுப்பு தைச்சு போட்டது.

அதை மாதிரி யாழ்ப்பாணத்தை தூய்மையா வைச்சிருக்க, தூய்மையைக் குறிக்கிற நீலக்கலரில் மணி காவல் படைக்கு உடுப்பு குடுத்தா அதில எங்க பயங்கரவாதம் ஒட்டிக் கிடக்கு?

அதோட அவர் குடுத்த உடுப்புக்கும் கொழும்பு மாநகரசபை பார்க்கிங் காசு வேண்ட வைச்சிருக்கிற ஆக்களுக்குக் குடுத்திருக்கிற உடுப்புக்கும் வித்தியாசம் இல்லை எண்டு பலர் சொல்லினம்.அதையும் ஒருக்காப் பாருங்கோ. மணியைப் பிடிச்சது சரி எண்டால், கொழும்பு மேயரையும் ஒருக்கா ஏத்தி இறக்குங்கோ. ஏனெண்டால் இஞ்ச ஒரு நாடு, ஒரு சட்டமெல்லோ?

ஆனால் மணியைப் பிடிச்சதுக்குக் காரணம் அவர் காவல் படைக்கு குடுத்த உடுப்பு முந்திப் புலி போட்டது , பூனைபோட்டது எண்டு சொல்லுறது இல்லையாம். வேற சில விசயங்களும் இருக்காம்.

இப்ப கொஞ்ச நாளைக்கு முன்னம் மணி கொழும்பு போனவரெல்லோ. அங்கை அவர் சிலரைச் சந்திச்சு யாழ்ப்பாணக் கலாசார மையம் பற்றிக் கதைச்சவராம். இப்ப இருக்கிற நிலைமையிலை கலாசார நிலையத்தை யாழ்ப்பாண முனுசிப் பலாலை நடத்தேலாது.

அதைக் கொஞ்ச நாளைக்கு நாங்கள் நடத்திப் பேர்ட்டு உங்களுக்கு நடத்திற பக்குவம் வந்தாப் பிறகு தாறம் எண்டு கேட்டவையாம். அதுக்கு மணி ஒத்துக்கொள்ளேல்லை எண்டும் அந்தக் கறள்தான் காரணமாயிருக்குமோ எண்டும் இஞ்சை இருக்கிற சிலர் கதைச்சவை. உப்பிடி இஞ்சை பல கதைகள். வெறுவாய்க் கெட்டதுகள் மொட்டைக்கும் முழங்காலுக்கும் முடிச்சுப் போடுற மாதிரிக் கதைக்கிறதைத் தவிர வேற ஒண்டும் தெரியாது.

ஆனாலும் மணியைப் பிடிச்சா இவ்வளவு கொந்தளிப்பு வருமெண்டு நீங்கள் முதல்ல நினைக்கேல்லை போல, அமெரிக்கத்தூதர், ரொராண்டோ மேயர் எண்டு எல்லாப்பக்கமும் உங்களுக்கு கடும்பிறசர் தந்தபடியால தான் ஒரு நாள் வைச்சிருந்திட்டு அடுத்த நாள் பிணையில விட்டனிங்கள் எண்டு எல்லாருக்கும் தெரியும்.

ஆராவது நல்லது செய்ய வெளிக்கிட்டால் புலிச்சாயம் பூசி , அடைச்சு வைச்சு உதவாத வேலை பார்க்காமல் போய் பிள்ளை குட்டியள்ள படிக்க வைக்கிற வேலையைப் பாருங்கோ அமைச்சர் ஐயா.



# புதிர்மலை மர்மங்கள்

மாயன்

கனகராஜபுரி மன்னன் கவலையில் இருந்தான். காலையில் அவனுக்கு மகன் பிறந்திருந்தான். மன்னனின் மகன் என்றால் அவன் தானே இனி இளவரசன், நாட்டின் எதிர்கால மன்னன். ஆனால் மகன் உதித்த செய்தி கனகராஜனுக்கு அவ்வளவு உவப்பானதாக இருக்கவில்லை. ஏனெனில் மகனின் இரு கால்களும் சற்று உள்ளே வளைந்திருந்தன.



ராஜகுமாரனுக்கு உடலில் ஊறு இருந்தால், அவன் பட்டத்துக்கு தகுதியாக மாட்டான். அதனால் தன் மகனாகப் பிறந்தும் முடிக்குரிய மன்னனாக தன் மகன் வரமுடியவில்லையே என்று அரண்மனைக்குள் மனம் புழுங்கினான் மன்னன்.

புதிர் 37

" என்ன மன்னா, கடும் யோசனை? நாடும் முழுதும் இளவரசனின் பிறப்பைக் கொண்டாடிக் கொண்டிருக்கையில் எதற்காக கவலைபடிந்த முகத்தோடு அங்குமிங்கும் அலைகிறீர்கள்?" எனக் கேட்டபடியே அங்கு வந்தார் நித்யானந்த மகரிஷி.

"முக்காலமும் அறிந்த மகரிஷிக்கு மன்னனின் மனக்குறைக்கு என்ன காரணமென்று தெரியாமலா இருக்கும்?" எனக் கேட்டான் கனகராஜன்.

அவன் அப்படிச் சொன்னதும் சற்று கண்ணை இறுகமூடித் தியானித்து விட்டு, மீண்டும் கண்ணைத் திறந்தார் நித்யானந்த மகரிஷி.

" அரசே, ஊனத்தோடு உங்கள் வாரிசு பிறந்ததுதானே உங்களுக்கு கவலை? உண்மையில் அது ஒரு குறையே அல்ல. உங்கள் மகனாகப் பிறந்துள்ள இந்த உயிருக்கு உரியவன், முற்பிறப்பிலே யாகத்துக்கு சென்ற குதிரைகளின் கால்களை அறுத்து, உடைத்து வேட்டையாடியதால் அவனுக்கு குதிரைகள் சாபமிட்டன. அதனால் இந்தப் பிறப்பிலே அப்படி வளைந்த கால்களோடு பிறந்துள்ளான்" என்று காரணத்தை மகரிஷி விளக்கினார்.

" அப்படியானால் அவன் அப்படியே இருக்க வேண்டியதுதானா? அவன் வளர்ந்து பெரியவனால் ஒரு ராஜகுமாரனுக்கான தகுதிகளை அடையமுடியாதவனாக மாறிவிடுவானே?" என கனகராஜன் கவலை கொண்டான்.

" அப்படியல்ல மன்னா, எல்லாவற்றுக்கும் தீர்வுண்டு. இதற்கும் உண்டு" என்று மகரிஷி சொல்லவும், மன்னனின் முகம் பிரகாசமானது.


" அப்படியா? என் மகன் இந்தக் குறைபாட்டில் இருந்து விடுபடமுடியுமா?"

"முடியும்.முள்ளை முள்ளால் எடுப்பதுபோல, எதனால் அவனுக்கு இந்தச் சாபம் வாய்த்ததோ அதே குதிரைகளை வைத்து , அதுவும் லட்சம் குதிரைகளை வைத்து ஒரு யாகம் நடத்தினால் அவன் சராசரி மனிதர்கள் போல மாறுவான்" என்று மகரிஷி சொல்லிச் சென்றார்.

அவ்வளவுதான், அடுத்த நொடியே யாகத்துக்குத் தேவையான குதிரைகளை கொண்டு வரும்படி தன் வீரர்களுக்கு கனகராஜன் கட்டளையிட்டான். நாலாபுறமும் விரைந்த வீரர்கள் குதிரைகளை வாங்கி வரத் தொடங்கினர். அரண்மனைக்கு முன்னதாக இருந்த வெற்று நிலப்பரப்பு ஒரு மிகப்பெரிய குதிரை லாயமாக மாறத் தொடங்கியது. ஆனால் மன்னன் நினைத்தது போல ஒரு லட்சம் குதிரைகளை அவ்வளவு எளிதாகத் திரட்ட முடியவில்லை. கிட்டத்தட்ட பத்து வருடங்களின் பின்னரே ஒரு லட்சம் குதிரைகள் கனகராஜபுரிக்கு வந்து சேர்ந்தன.

யாகத்துக்கு நாள் குறிக்கப்பட்டது. நாடெங்கும் இருந்து பல முனிவர்கள் யாகத்துக்காக அரண்மனையிலே குவியத் தொடங்கினர்.

அடுத்த நாள் யாகம். ஆனால்..?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அனுப்ப வேண்டிய முகவரி!

**மாணவர்களே!**
நீங்களும்
அனுப்பலாம்
உங்கள்
கைவண்ணங்களை

உதயன் சஞ்சீவி
இல.361, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
0773165555
என்ற எண்ணுக்கும் அனுப்பலாம்.





## பிஞ்சு தூரிகைகள்



கோ.ஆதூரி
தரம் 9,
யா/சாவகச்சேரி
இந்துக் கல்லூரி



க.அபிரன்,
தரம் -03
யாழ்ப்பாணம் இந்து
ஆரம்பப் பாடசாலை.



கே.அக்ஷிதா,
தரம்-03A
சுண்டுக்குளி மகளிர்
கல்லூரி.



# இறைவனால் கொடுக்கப்பட்ட வரமே ஆசிரியர்கள்

கல்வி கற்க ஆரம்பிக்காது, மண்ணில் தவழ்ந்த சிறுவர்களை வானம் வரை உயரச் செய்யும் கருவியாக திகழ்பவர்கள் ஆசிரியர்கள். மாணவர்களை நல்வழிப்படுத்தி சிறந்த குடிமக்களாய் ஆக்க வழங்கும் பெருமை ஆசிரியருக்கு உரியது.

'எழுத்தறிவித்தவன் இறைவன்' என்கிறார் ஔவையார். ஆசிரியர்கள் இறைவனுக்கு சமமாக மதிக்கப்பட வேண்டியவர்கள். ஒழுக்கம்,கல்வியறிவு, நற்பண்புகள் போன்ற பல நற்குணங்களை சிறந்த முறையில் கற்றுக் கொடுத்து மாணவர்களுக்குச் சிறந்த வழிகாட்டியாக திகழ்பவர்கள் ஆசிரியர்.

"வெள்ளத்தால்அழியாது;
வெந்தழலால் வேகாது;
வேந்தராலும் கொள்ளத்தான் முடியாது,
கள்வர்க்கோ பயமுமில்லை.
காவலுக்கோ மிக எளிது.
கல்வி எனும் உள்ளத்தே பொருளிருக்க புறம்பாக பொருள்தேடி உழல்கின்றாரே! " என கல்வி சிறப்பை எடுத்து கூற இதைவிட வேறு செய்யுள் இல்லை.

இத்தகைய மதிப்புக்குரிய கல்வியை மாணவர்களுக்குப் புகட்டி மாணவர்களுக்கு அறிவு கதவை திறக்கும் சாவி ஆசிரியர்கள்!

வகுப்பறை, கரும்பலகை, வாழ்வின் ஒளிரும் இடம் என கரும்பலகையின் மகத்துவத்தை அறியச் செய்பவர்கள் ஆசிரியர்கள் என்கிறார் ஆ.ப.ஜெ அப்துல் கலாம்.

"ஒன்றை செய்ய விரும்பும் போது அதைச் செய்வதற்கு நாங்கள் இருக்கிறோம் என ஊக்கம் கொடுப்பவர்கள் ஆசிரியர்கள் என்கிறார் காமராஜர்.' மாதா, பிதா,குரு, தெய்வம்' என்ற வரிசையில் எமது பெற்றோருக்கு நிகரான கண்கண்ட தெய்வங்கள் ஆசான்கள்!

மாணவ சமுதாயம் இலட்சியம் இன்றிக் காணப்படும் பட்சத்தில் அவர்களது வாழ்வு ஒளி இழந்து விடும் என மாணவர்களை சிறு வயதில் இருந்தே வழிப்படுத்தி, அவர்கள் அடையும் வெற்றியைப் பார்த்து மகிழ்ச்சி அடைபவர்கள் இவ் ஆசிரிய பெருந்தகைகள். சமுதாயத்தின் ஆணிவேராக நின்று தமது அயராத கற்றல்,கற்பித்தல் செயற்பாட்டினூடு மாணவர்களின் வாழ்வை ஒளியூட்டும் இப் பெருந்தகைகளை வணங்குவதும் மதித்து நடப்பதும் எமது தலையாய கடமை ஆகும்.

"நான் உயிரோடு இருப்பதற்கு என் பெற்றோருக்குக் கடமைப்பட்டிருக்கிறேன். ஆனால் நான் சிறப்பாக வாழ என் ஆசிரியருக்குக் கடமைப்பட்டிருக்கிறேன் "என ஆசிரியர்களின் சிறப்பை வெளிப்படுத்துகிறார் மகா அலெக்சாண்டர்.


"கல்வி ஒரு தோட்டம். மாணவர்கள் அதில் செடிகள்; ஆசிரியர்கள் அதில் தோட்டக்காரர்கள்" என்கிறார் ஜிக்ஜேக்ளர். உலகில் இரு புனித இடங்களே உள்ளன. ஒன்று தாயின் கருவறை; மற்றையது ஆசிரியரின் வகுப்பறை. ஏனெனில், கருவறையில் ஒருவன் உயிரைப் பெறுகிறான். ஆசிரியர்களின் வகுப்பறையில் அறிவை பெறுகிறான்.

மெய் வருந்தி, தமது பொன்னான நேரத்தை நம்முடன் செலவிடும், தம் துயர் பாராது, கண் துஞ்சாது அரும் பாடுபட்டு கல்வி புகட்டும் ஆசான் களை நாம் ஒருபோதும் மறக்கலாகாது.

**கல்வி ஒரு தோட்டம். மாணவர்கள் அதில் செடிகள்; ஆசிரியர்கள் அதில் தோட்டக் காரர்கள்"**

**பா.மதுஷனா**
யாழ் .இந்து மகளிர்
கல்லூரி





## சர்வதேச தினங்கள்

| | |
|---|---|
| 1. தேசிய இளைஞர்கள் தினம் | – ஜனவரி 12 |
| 2. உலக சுங்கத் தினம் | – ஜனவரி 26 |
| 3.உலக தாய்மொழி தினம் | – பெப்ரவரி 21 |
| 4. தேசிய அறிவியல் தினம் | – பெப்ரவரி 28 |
| 5. சர்வதேச பெண்கள் தினம் | – மார்ச் 08 |
| 6.உலக நீர் தினம் | – மார்ச் 22 |
| 7. உலக சுகாதார தினம் | – ஏப்ரல் 04 |
| 8.உலக புத்தக தினம் | – ஏப்ரல் 23 |
| 9. உலக தொழிலாளர் தினம் | – மே 01 |
| 10. உலக அன்னையர் தினம் | – மே 10 |
| 11.உலக தகவல் தொடர்பாடல் தினம் | – மே 17 |
| 12. உலக புகைத்தல் ஒழிப்பு தினம் | – மே 31 |
| 13. உலக சிறுமிகள் தினம் | – ஒக்ரோபர் 5 |

**சி.டினோஜன்**, தரம் 5
யா/ இந்து ஆரம்ப பாடசாலை
அங்கத்துவ இலக்கம்181




## பழமொழிகளும் அதன் கருத்துக்களும்

**இரக்கப் போனாலும் சிறக்கப் போ.**
வறுமையிலும் செம்மையாக வாழ வேண்டும்.

**இறைத்த கிணறு ஊறும், இறைக்காத கிணறு நாறும்.**
தருமம் செய்தவன் பெருமை பெறுகிறான்.

**இட்டுக் கெட்டார் யாருமில்லை.**
தர்மம் செய்து யாரும் ஏழையாகவில்லை.

**கண்டது கற்க பண்டிதனாவான்**
முடிந்த போதெல்லாம் படித்தால் வாழ்க்கையில் முன்னேறலாம்.

**எறும்பூரக் கல் தேயும்**
தொடர்ந்து முயற்சி செய்தால் பயன் கிடைக்கும்.

**எடுப்பது பிச்சை, ஏறுவது பல்லக்கு.**
வீண் பெருமை பேசுதல்

**கேள்விச் செவியன் ஊரைக் கொடுப்பான்.**
பிறர் பேச்சைக் கேட்பதால், தீமையே விளையும்.

**குற்றமுள்ள நெஞ்சு குறுகுறுக்கும்.**
தவறு செய்தால் மனச்சாட்சி உறுத்தும்.

**குடிப்பது கூழ், கொப்பளிப்பது பன்னீர்.**
பொய் கூறி பெருமை கொள்ளக் கூடாது.

**வீட்டிற்கு வீடு வாசற்படி.**
ஒவ்வொரு வீட்டிலும் பிரச்சினை உண்டு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நான் சாக முன்னராவது மகனை விடுவியுங்கள்!



நேர்காணல் பொ.சோபிகா



பார்த்தீபன்

மகனின் விடுதலையை எதிர்பார்த்திருந்த தந்தை (எனது கணவர்) இறந்துவிட்டார். எஞ்சியுள்ள எனது உயிர்போகும்முன்னராவது எனது மகனை விடுவியுங்கள்" என அரசிடம் உருக்கமான வேண்டுகோளை முன்வைக்கிறார், தமிழ் அரசியல் கைதிகளுள் அதிக காலம் சிறைத்தண்டனை அனுபவித்து வரும் கைதியான விக்னேஸ்வரநாதன் பார்த்தீபனின் தாயாரான, திருநெல்வேலியில் வசித்து வரும் வாகீஸ்வரி.

தற்போது 77 வயதையுடைய இந்தத்தாய் தனது மகனை நினைத்து அவரது விடுதலையை எதிர்பார்த்து நோயாளியாகிப் போயுள்ளார். இந்த நிலையிலும் தனது மகனின் விடுதலைக்கான கோரிக்கையை உதயன் - சஞ்சீவி வாசகர்களுடன் பகிர்ந்துகொள்கிறார்.

வெளிநாடு செல்வதற்கென கடந்த 1996 ஆம் ஆண்டு எனது மகன் கொழும்புக்குச் சென்றிருந்தார். அப்போது அவருக்கு 19 வயது. அங்கு சென்ற பின்னர் அவருடைய தொடர்புகள் எதுவும் எம்முடன் இருக்கவில்லை. அப்போது நாம் புதுக்குடியிருப்பில் வசித்து வந்தோம். சுமார் ஒரு வருடத்துக்கு பின்னர் ஐ.சி. ஆர். சி ஊடாக எமக்கு ஒரு கடிதம் கிடைத்தது . எமது மகன் கொழும்பில் பொலிஸால் கைது செய்யப்பட்டுள்ளார் என அதில் தெரிவிக்கப்பட்டிருந்தது. அதன் பின்னர் அவரைப் பற்றிய தகவல்கள் எதுவும் எமக்கு கிடைக்கவில்லை.

யாரிடம் சென்று எமது மகன் தொடர்பாக விசாரிப்பது என்றும் எமக்கு தெரியவில்லை. பின்னர் களுத்துறை சிறையில் இருக்கிறார் என எமக்கு ஒரு தகவல் கிடைத்ததைத் தொடர்ந்து முதன் முறையாக 2000 ஆம் ஆண்டு எமது மகனை சிறையில் பார்த்தோம்.

## 25 வருடங்கள் சிறைவாழ்க்கை

நாம் அவரைச் சிறையில் சென்று பார்த்த பின்னர் தான் அவர் என்ன காரணத்துக்காக கைதுசெய்யப்பட்டுள்ளார் என்ற விடயத்தை எமது மகன் ஊடாக அறிந்துகொண்டோம். மத்திய வங்கி குண்டுவெடிப்புடன் தொடர்புள்ளவர் என்ற சந்தேகத்தின் பெயரில் எனது மகனை கைது செய்துள்ளார்கள்.

கைது செய்யப்பட்ட பின்னர் பல கோணங்களில் விசாரணை செய்யப்பட்டுள்ளார். 4 வருடங்களின் பின்னர் இவருக்கு எதிராக வழக்கு பதிவுசெய்யப்பட்டது.

பின்னர் 2002 ஆம் ஆண்டு வழக்கு விசாரணைகளின் பின்னர் குற்றவாளி எனத் தீர்ப்பளிக்கப்பட்டு ஆயுள் தண்டனையும் 20 வருடங்கள் சிறைத்தண்டனையும் விதிக்கப்பட்டது. வழக்கு தொடர்வதற்கு எம்மிடம் பொருளாதார வசதி இல்லை. கொழும்பில் உள்ள ஒரு மனித உரிமைகள் அமைப்பினர் இந்த வழக்கை நடத்தினர். மேன்முறையீடு செய்தும் பயன் கிடைக்கவில்லை. தற்போது உச்சநீதிமன்றில் வழக்குதொடரப்பட்டுள்ளது. தற்போது கொரோனாவைக் காரணம் காட்டி அந்த வழக்குகளும் இடம்பெறுவதில்லை.



## மகனின் விடுதலையை எதிர்பார்த்திருந்த தந்தை மரணம்

எமது மகன் எம்முடன் இருந்த காலத்தை விட சிறையில் இருந்த காலமே அதிகம். எமது மகனின் விடுதலைக்காக எம்மாலான முயற்சிகளை நாம் மேற்கொண்டோம். ஆனால் எந்தப் பயனும் கிடைக்கவில்லை. மகன் விடுதலையாகி விடுவார் என்ற நம்பிக்கை எமக்கு இருந்தது. எனது கணவர் எமது மகனை நினைத்து நினைத்து அவரின் வருகைக்காக காத்திருந்து இறுதியில் உடல் நிலை பாதிக்கப்பட்டு இறந்து போய்விட்டார். இறுதிச்சடங்குக்கு ஒருமணிநேரமே அனுமதி தந்தைமேல் மிகுந்தபாசம் கொண்டவர் பார்த்தீபன். தந்தையின் இறுதிச்சடங்கிலாவது. கலந்துகொள்ள அனுமதி கேட்டதை அடுத்து தந்தையின் இறுதிச்சடங்கில் கலந்துகொள்வதற்காக 2017 ஆம் ஆண்டு யாழ்ப்பாணத்துக்கு கொண்டு வரப்பட்டார். ஒருமணிநேரம் தந்தைக்கான இறுதிக் கடமைகளைச் செய்வதற்கு அவருக்கு அனுமதி அளித்தார்கள். அதன் பின்னர் நான் மனதளவில் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளேன். தற்போது நோயாளி ஆகிவிட்டேன்.

எனது மகன் தனது இளமைக்காலம் முழுவதையும் சிறையிலே கழித்துவிட்டார். எனது இறுதிக் காலத்திலாவது என் மகன் என்னுடன் இருக்க வேண்டும்.19 வயதில் கைதாகிய எனது மகனுக்கு தற்போது 44 வயதாகிவிட்டது. என் மகன் என்னுடன் இருந்த நாட்கள் குறைவு. இளமைக் காலவாழ்க்கையை அவர் வாழவில்லை. இப்போதும் மனதளவில் சிறுவனாகவே இருக்கிறார். எம்மை நினைத்து மிகவும் மனவேதனையில் அங்கு இருக்கிறார். அவரின் விடுதலையை எதிர்பார்த்து எதிர்பார்த்து நான் ஏங்கிக்கொண்டு இருக்கிறேன்.

ஆனால் ஏமாற்றமே மிச்சம்.

அரசியல் கைதிகளின் விடுதலைக்காக பல தரப்பட்ட அமைப்புகள் பணி செய்கின்றன.சில நேரங்களில் போராட்டங்கள் மேற்கொள்கிறார்கள் .

சில நேரங்களில் அரசியல் கைதிகளின் விடுதலை பற்றி மக்கள் பிரதிநிதிகள் தொடர்சியாகப் பேசுகிறார்கள். எங்களிடமும் எமது உறவுகள் தொடர்பான ஆவணங்களைப் பெற்றுக் கொள்கிறார்கள். அவ்வாறான சந்தர்ப்பங்களில் எனது மகன் விடுதலையாகப் போகிறார் என்ற எதிர்பார்ப்பே எனக்கு அதிகமாக இருக்கும். சில அரசியல்வாதிகளது வாக்குறுதிகள் நம்பிக்கையைத் தரும். அந்தநேரத்தில் மிகுந்த எதிர்பார்ப்புடன் இருப்பேன் .ஆனால் எமக்கு எப்போதும்.ஏமாற்றமே மிஞ்சியது.

**25 வருடங்கள் சிறைத்தண்டனை அனுபவித்து விட்டார். தற்போது சிறையில் உள்ள அரசியல் கைதிகளுக்குள் சிறுவயதில் கைது செய்யப்பட்ட வரும், அதி கூடிய வருடங்கள் சிறைதண்டனை அனுபவித்த கைதியும் இவர்தான். எனவே இவர் மேல் இரக்கம் கொண்டும், எனது உடல் உள நிலையை கருத்தில் எடுத்தும் மனிதாபிமான அடிப்படையில் எனது மகனுக்கு பொதுமன்னிப்பு அளித்து இந்த அரசு அவரை விடுதலை செய்யவேண்டும்**

ஒவ்வொரு ஆட்சியிலும் ஒவ்வொரு பதில்களைத் தருகிறார்கள். நம்பி நம்பி ஏமாந்து போய்விட்டேன். எனது மகனுக்கு மன்னிப்பு வழங்குவதற்கும் யாரும் முன்வரவில்லை.

நான் சாவதற்கு முன்னர் மகனை விடுவியுங்கள் கொரோனா காலத்துக்கு முன்னர் எனது மகனைச் சிறையில் சென்று பார்த்துவருவேன்.தற்போது கொரோனா தடுப்பு நடவடிக்கைகள் காரணமாக சிறைக்குச் செல்ல முடியவில்லை. அத்துடன் என்னால் பயணம் செய்யவும் முடியாது. எனது மகனைப் பார்ப்பதற்காக ஏங்குகிறேன். அவர் என்ன நிலையில் இருப்பார் எனத் தெரியாமல் மன உளைச்சலுக்குள்ளாகியிருக்கிறேன்.

இந்த அரசு எனது மகனை பொதுமன்னிப்பு வழங்கியாவது விடுதலை செய்யவேண்டும் என தயவுடன் கோரிக்கை வைக்கிறேன். 25 வருடங்கள் சிறைத்தண்டனை அனுபவித்து விட்டார். தற்போது சிறையில் உள்ள அரசியல் கைதிகளுக்குள் சிறுவயதில் கைது செய்யப்பட்ட வரும், அதி கூடிய வருடங்கள் சிறைதண்டனை அனுபவித்த கைதியும் இவர்தான். எனவே இவர் மேல் இரக்கம் கொண்டும், எனது உடல் உள நிலையை கருத்தில் எடுத்தும் மனிதாபிமான அடிப்படையில் எனது·மகனுக்கு பொதுமன்னிப்பு அளித்து இந்த அரசு அவரை விடுதலை செய்யவேண்டும் எனது மகனின் விடுதலைக்கும் ஏனைய அரசியல் கைதிகளின் விடுதலைக்கும் தமிழ் மக்கள் அனைவரும் ஒன்றிணைந்து அரசிடம் கோரிக்கையை முன்வையுங்கள். அவர்களுக்காக நீதிக்குரல் எழுப்புங்கள்.

முடியுமானவரை அவர்களின் விடுதலைக்காக மக்கள் பிரதிநிதிகள் போராடுங்கள். அவர்களும் உங்களுடையஉறவுகள் தான் எனவே அவர்களை உணர்வுள்ள மனிதராக பாருங்கள். அவர்களின் விடுதலைக்கு உதவுங்கள். இதுவே எனது கோரிக்கை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வன்னித் தெருவெளி அரங்குகள்; ஏனிந்த ஓரவஞ்சனை?

○ பாலா மாஸ்டர்

தேசிய கல்வி நிறுவகத்தின் முன்னைநாள் விரிவுரையாளரும், யாழ் பல்கலைக்கழக கலைமாணிப் பட்டதாரியும், கல்வி முதுமாணிப் பட்டதாரியுமான செ.இளங்கோ எழுதிய, ' இலங்கையின் சமகால தமிழ் அரசியல் அரங்கு' என்ற நூலை வாசிக்கும் சந்தர்ப்பம் எனக்கு ஏற்பட்டது.

1980களுக்குப் பின்னான போர்க்காலச் சூழலில் தமிழர் செறிந்து வாழும் பகுதிகளில் ஆற்றுகை செய்யப்பட்ட தமிழ் அரங்குகள் பற்றி இந்த நூல் பேசுகின்றது. மேலும் க.பொ.த உயர்தர மாணவர்களுக்கான நாடகமும் அரங்கியலும் சார்ந்த பாடத்திட்டத்தில் 80கள் முதலான சமகால அரசியல் அரங்கு என்ற பாட விடயம் உள்ளடக்கப்பட்டிருப்பதால் விரைவாக இந்த நூல் வெளியிடப்பட்டதாக இளங்கோவால் அவரது "பாயிரத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால் இந்த நூலானது 80களுக்குப் பின்னான சமகால தமிழ் அரசியல் அரங்கு பற்றி ஓர் முழுமையான ஆய்வு நூலா என்ற மிகப் பெரிய கேள்வியை இந்த நூல் எழுப்பியுள்ளது.

உண்மையிலேயே இந்த நூலானது 80களுக்குப் பின்னான காலப்பகுதியில் இளங்கோவால் செய்யப்பட்ட நாடகங்களையும், பல்கலைக்கழக சூழலில் அவரது நண்பர்களால் செய்யப்பட்ட நாடகங்களையும் மட்டுமே பதிவு செய்துள்ளது. ஆனால் 1980களுக்குப் பின்னான காலப் பகுதியில் ஆற்றுகை செய்யப்பட்டு கிராமப்புற மக்கள் மத்தியிலே பெரும் எழுச்சியை ஏற்படுத்திய பல நாடகங்கள் இந்த நூலின் மூலம் இருட்டடிப்புச் செய்யப்பட்டுள்ளன. அந்த வகையில் இந்த நூலானது இன்றைய அரங்கில் மாணவர்களுக்கு இலங்கையில் சமகால தமிழ் அரசியல் அரங்கு பற்றிய ஒரு முழுமையான வரலாற்றைக் கற்பிக்கத் தவறியுள்ளது. மாறாக மேற்குலக வெள்ளையர்கள் தமக்குச் சார்பானவர்களின் வரலாற்றை மட்டுமே உலகத்தின் முழுமையான வரலாறாக எமக்கு கற்பிக்க முயன்றது போல இந்த நூலும் எமது மாணவர்களுக்கு 80களுக்குப் பின்னான அரங்கு சார்ந்த வரலாற்றை மிகவும் தவறான முறையில் கற்பிக்க முயன்றுள்ளது.

1980களுக்குப் பின்னான காலப் பகுதியில் வீ.ஜெகநாதன், சி.மகாலிங்கம், ந.நக்கீரன், திருமதி இ.சகிலா, செந்தமிழ்கீரன், எஸ்.பாலா, புதுவை அன்பன், வி.எம் குகராசா போன்ற கிராமத்து நாடக ஆளுமைகள் பல அரசியல் சார் அரங்குகளை கிராமங்கள் தோறும் ஆற்றுகை செய்துள்ளார்கள். புதுவை அன்பனின் 'களத்தில் காத்தான்', 'சதியை வென்ற சாவுகள்' போன்ற நாடகங்கள் பல இடங்களில் மேடையேற்றப்பட்டு போராளிகள் மத்தியிலும், மக்கள் மத்தியிலும் பெரும் தாக்கங்களை ஏற்படுத்தியவை.

மேலும் சமகால விடுதலைப் போராட்ட அரசியலில் கிராமத்து வறிய கூலி மக்களின் பிரச்சினைகளும் உள்வாங்கப்பட வேண்டும் என்ற அடிப்படையில் தயாரிக்கப்பட்ட 'சிந்திக்கத் தொடங்கிவிட்டார்கள்' என்ற நாடகம் கிராமப்புற ஏழை மக்கள் மத்தியில் பேரெழுச்சியை ஏற்படுத்தியது.

மேலும் வி.ஜெகநாதனால், கூலி மக்களின் வாழ்வியல் அவலங்கள் பற்றி எழுதி ஜோன் கபாஸ் இசையமைத்த பாடல்களை கிராமத்து இளைஞர்கள் யுவதிகள் வீடு வீடாக ஊர்வலம் போல் சென்று பாடியும் ஆடியும் நிகழ்த்திக் காட்டியும் மக்கள் மத்தியில் பெரும் எழுச்சியை ஏற்படுத்தினர். இந்த ஊர்வலத்தின் பின்னால் சிறுவர்கள், பெண்கள், பெரியவர்கள் என உணர்வுடன் அணி திரண்டு சென்றனர்.

இது பற்றி எல்லாம் இளங்கோ அறிந்திருக்கவில்லையா? அல்லது அறிய விரும்பவில்லையா? எம்மால் புரிந்து கொள்ள முடியவில்லை. 60 தடவைகள் ஆற்றுகை செய்யப்பட்ட 'மண் சுமந்த மேனியர் 'நாடகத்தின் அரங்கு சார் சாதனைகளை குறிப்பிட்ட இளங்கோ , அதே காலப் பகுதியில் கிராமங்கள் பாடசாலைகள் என 126 தடவைகள் மேடையேற்றப்பட்டு கிராமங்கள் தோறும்



கூலிப் போராட்டம், கசிப்பு ஒழிப்புப் போராட்டம், நிலவுரிமைக்கான போராட்டம் எனப் பல போராட்டங்களுக்கு உந்து சக்தியாக இருந்த "சிந்திக்கத் தொடங்கிவிட்டார்கள் நாடகத்தையும் அந்த நாடகம் வறிய மக்களின் வாழ்வில் ஏற்படுத்திய மாற்றங்களையும் அறிய முடியாமல் போனமை துயரமே.

உண்மையிலேயே 80களுக்குப் பின்னான தமிழ் அரசியல் அரங்க வரலாற்றிலே 1995ஆம் ஆண்டிலிருந்து 2009 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் வன்னி மண்ணில் ஆற்றுகை செய்யப்பட்ட அரசியல் அரங்குகள் மிகப் பெரிய சாதனைகளைப் புரிந்தன என்பது மறுத்துரைக்க முடியாத உண்மையாகும். 2005ஆம் ஆண்டில் வன்னிக்கு வருகை தந்திருந்த பிரபல தென்னிந்திய திரைப்பட இயக்குநரான சீமான் , புத்தரின் வரலாற்றை அடிப்படையாகக் கொண்டு தயாரிக்கப்பட்ட "தர்மத்தின் தீர்ப்பு என்ற தெருவெளி அரங்கைப் பார்த்துவிட்டு "கௌதம புத்தர் பிறந்த இந்தியாவில் கூட இப்படியொரு வித்தியாசமான கோணத்தில் எந்தவொரு கலைஞனும் சிந்திக்கவில்லை.இப்படியொரு முழுமையான கலைப் படைப்பை இதுவரை நான் பார்க்கவில்லை " என்றும் விதந்துரைத்தார். மேலும் வன்னியின் யுத்த சூழலிலே தெருவெளி அரங்கின் சாதனைகளை நேரில் கண்ட எரிக் சொல்ஹெய்ம் , வன்னி அரங்கை ஐரோப்பிய நாடுகளிலும் ஆற்றுகை செய்வதற்கான வாய்ப்பை ஏற்படுத்தித் தந்தார். இவ்வாறான பல சாதனைகளைப் புரிந்த வன்னியின் அரசியல் அரங்கு பற்றி இந்த நூலில் குறிப்பிடும்போது .......

"வன்னியில் ஆற்றுகை செய்யப்பட்ட பெரும்பாலான தெருவெளி அரங்குகள் தெருவெளி அரங்கிற்குரிய பண்புகளை கொண்டிருக்கவில்லை" என்றும், "ஆற்றுகைக்கு முன் பார்ப்போரைத் தயார்படுத்தவும்,ஆற்றுகையின் பின் பார்வையாளருடன் கலந்துரையாட ஆற்றுகைக் குழுக்கள் முயற்சிக்கவில்லை எனவும் மிகவும் மலினப்படுத்தப்பட்ட முறையில் இந்த நூலிலே நூலாசிரியர் குறிப்பிட்டுள்ளார். இது வன்னித் தெருவெளி அரங்குகளின் செயற்பாட்டை முழுமையாக அறிந்துகொள்ளாமல் கூறப்பட்ட ஒரு சிறுபிள்ளைத்தனமான கருத்தாகும்.

வன்னியென்ற யுத்த பூமியிலே வறுமையையும் மலேரியா நோயையும் சுமந்தவாறு எந்த நேரத்தில் என்ன நடக்கும் என்பதை அறிய முடியாமல் எதிர்காலம் பற்றி எந்தவொரு நம்பிக்கையுமில்லாமல் மரணபயத்துடன் வாழ்ந்துகொண்டிருந்த மக்கள் மத்தியில் புதிய புதிய அரங்கப் பரிசோதனைகளை செய்வதற்கு வன்னித் தெருவெளி அரங்குகள் பெரும்பாலும் முயற்சிக்கவில்லை தான் . மாறாக மரணத்துள் வாழ்ந்துகொண்டிருந்த மக்களின் மனங்களிலே தன்னம்பிக்கை ஏற்படுத்தி அவர்களை நம்பிக்கையுடன் வாழச் செய்வதே வன்னி அரங்குகளின் பிரதானமான நோக்கமாக இருந்தது. அன்று கொட்டகைக்குள் நடத்தப்பட்ட சங்கரதாஸ் சுவாமிகளின் இசை நாடகங்களை கொட்டகைக் கூத்தென அழைத்ததைப் போல மேடையிலே நிகழ்த்தப்பட்ட நாடகங்களை மேடை நாடகமென அழைத்தது போல தெருவோரங்களிலும் வெளியான இடங்களிலும் ஆற்றுகை செய்யப்பட்ட வன்னி நாடகங்களை தெருவெளி நாடகமென அழைத்தார்கள். இதனால் நாடகத்துறைக்கு எந்தவொரு பாதிப்பும் ஏற்படப் போவதில்லை.

"இந்தத் தெருவெளி அரங்க ஆற்றுகையாளர்கள், ஆற்றுகைக்கு முன் பார்ப்போரைத் தயார்ப்படுத்தவோ, ஆற்றுகையின் போது பார்ப்போரை ஆற்றுகைக்குத் தொடர்புபடுத்தவோ, ஆற்றுகைக்குப் பின் பார்ப்போருடன் கலந்து கொள்ளவோ முயற்சிக்கவில்லைஎன்ற இளங்கோ வின் கருத்து மிகவும் தவறானதாகும். எமது தெருவெளி அரங்க கலைஞர்கள் சீருடையுடன் துவிச்சக்கர வண்டியில் குடியிருப்புகளுக்குள் நுழைந்ததும் அந்தப் பகுதிச் சிறுவர்கள் ஆரவாரத்துடன் கலைஞர்களுக்குப் பின்னால் ஓடி வருவார்கள். உரிய இடத்தை ஆற்றுகையாளர்கள் அடைந்ததும் சிறுவர்கள் அவர்களைச் சுற்றி வளைத்தபடி அவர்களுடன் உரையாடுவார்கள். ஆற்றுகை செய்யப்படவிருக்கும் இடத்தை ஆற்றுகையாளர் சுத்தம் செய்ய ஆரம்பித்ததும் அயலில் இருப்பவர்கள் அவர்களுடன் இணைந்து துப்புரவுப் பணியில் ஈடுபடுவார்கள். இவ் வேலைகள் எல்லாம் முடிந்து ஆற்றுகையை ஆரம்பிக்கும் போது மக்களுக்கும் ஆற்றுகையாளர்களுக்குமான உறவு பலப்பட்டுவிடும். ஆற்றுகை முடிந்ததும் மக்கள் ஆற்றுகையாளர்களுக்கு சிற்றுண்டி, தேநீர் என வழங்குவார்கள். அப்போது நாடகம் பற்றியும் நாட்டின் தற்போதைய சூழல் பற்றியும் மக்கள் உரையாடுவார்கள். இதுவே வழமையான நிகழ்வாகும்.

"வாருங்கோ என்று தெருவெளி அரங்கு வித்தியாசமானதோர் அரங்கு முறைமையைக் கொண்டிருந்தது. இந்த அரங்கின் ஆற்றுகையாளர்களில் சிலர் ஆற்றுகை தொடங்கி முடியும் வரை பார்வையாளர்களோடு நின்றவாறு எழுதப்பட்ட வசனங்களை அரங்கில் நிற்போரிடம் உரையாடுவார்கள். ஆற்றுகையின் முடிவிலே வீழ்ந்து கிடக்கும் தமிழர் சமூகத்தை பல்லக்கில் ஏற்றி உயர்த்த வருமாறு மக்களைப் பார்த்து பிரதான பாத்திரம் அழைப்பு விடும். அப்போது மக்கள் அரங்கிற்குள் நுழைந்து பல்லக்கில் நிற்கும் சமூகத்தைத் தூக்கி தமது தோள்களில் சுமந்தவாறு ஆரவாரத்துடன் கொஞ்சத் தூரம் நடப்பார்கள். அதன் ஆற்றுகையாளர்களோடு உரையாடுவார்கள். இவ்வாறு மக்களுக்கும் ஆற்றுகையாளர்களுக்கும் இடையிலான உறவு, தாய் – பிள்ளை உறவு போல் அன்று இருந்தது.

ஒருமுறை உடையார்கட்டுப் பகுதிக்கு மதிய நேரம் சென்ற ஆற்றுகையாளர்கள், தமது மதியச் சாப்பாட்டுக்காக வீடுவீடாய்ச் சென்றனர். அப்போது ஒரு அம்மா சாப்பாடு தர முடியாது என்று கூறினார். பின்னர் கலைஞர்கள் அனைவரும் ஒரு மாமரத்தின் கீழிருந்து சாப்பிட ஆயத்தமானபோது சாப்பாடு தர மறுத்த அம்மா மிகுந்த தயக்கத்துடன் அவ் விடம் நோக்கி

(17ஆம் பக்கம் பார்க்க)

**தமது சொந்த வாழ்வின் துயரங்களையும் தமிழ் மக்களின் துன்பங்களையும் சுமந்தவாறு காலை முதல் இரவுவரை தினமும் செயற்பட்டவர்கள் தான் வன்னியின் தெருவெளி அரங்கக் கலைஞர்கள். யாழ். மண்ணிலே நாடகம் செத்துக்கொண்டிருக்கும் போது, தமிழ் நாடக அரங்கை உலக நாடக அரங்கில் தூக்கி நிறுத்திய வன்னித் தெருவெளி அரங்குகள் பற்றி துறைசார்ந்த கல்வியியலாளர்கள் ஒரு முழுமையான ஆய்வை இதுவரை மேற்கொள்ளவில்லை.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

○ எம். இந்திராணி

# புத்தாண்டுப் பரிசு



> நினைச்ச உடனை புறப்பட்டு வரேலாது. எங்களைப் பாராமல் அம்மாவின் மரணச்சடங்கு களைச் செய்யுங்கோ. பிறகு வசதியான நேரம் வாறம் இப்படிப் பதில் சொல்லிச்சினமாம் மூன்று பேரும். இராசம்மாவை இழந்ததிலும் பார்க்க அவா பத்து மாதம் சுமந்து பெற்ற ஒரு பிள்ளையாவது கொள்ளி வைக்க வரவில்லை என்பது தான் தாங்கொணாத் துயரமாக இருந்தது.

சஞ்சீவி சிறுகதை

ஆறுபரப்புக் காணி, அதில் தென்னை, மா, பலா, வாழை, கமுகம் சோலைக்கு நடுவில் அழகான பெரிய வீடு.

இந்த வீடும் வளவும் எனக்கும் என் மனைவி இராசம்மாவுக்கும் உரித்தானது. எனக்கு எழுபது வயதாகுது. இராசம்மாவுக்கு என்னிலும் பார்க்க ஐந்து வயது குறைவு. இரண்டு பேரும் மூப்பும் நோயுமாய் நல்லாய்த் தளர்ந்து போனம்.

'வீடு போ போ என்குது; காடு வா வா என்குது. இந்த நிலைமையில் எங்களுடைய வீட்டை யாருடைய பெயருக்கு எழுதுவதென்பது எனக்குப் பெரிய பிரச்சி னையாக இருந்தது. அப்படி ஒன்றும் பிள்ளை குட்டி இல்லாத ஆட்களில்லை நாங்கள். முத்துப்போல மூன்று புத்திரர்கள். ஆனால் மூன்று பேரும் வெளிநாட்டில். மூத் தவன் ஜெயகுமார் இருபது வருடங்களுக்கு முன்பு ஏதோ ஸ்கொலர்ஷிப் கிடைத்து இங்கிலாந்துக்குப் போனான். அந்த நேரம் அவனைப் பிள்ளையாய்ப் பெற என்ன தவம் செய்தேனோ என்று எனக்குப் பெரிய மகிழ்ச்சிதான்.

மூன்று வருடம் கழித்து ஜெயக்குமார் ஊருக்கு வந்த போது அவனுக்குப் பெண் கொடுக்க நான் முந்தி, நீ முந்தி என்று எத்தனை பேர் முன்வந்தார்கள். மலாயன் பென்ஷனர் சிவலிங்கத்தாருடைய பேத்தி புஷ்பாவுக்கும் ஜெயகுமாருக்கும் தடல்புடலாகத் திருமணம் நடத்தி வைத்தன். மனைவியையும் கூட்டிக்கொண்டு இங்கிலாந்துக்குப் போனவன் அங்கேயே செற்றில் ஆகிவிட்டான்.

தமையனுக்குக் கிடைத்த மதிப்பைப் பார்த்திட்டு இரண்டாவது மகன் தேவகுமாரும் வெளிநாட்டுக்குப் போகத் தீர்மானித்தான் அந்த நேரம் நானும் ஊக்கப்படுத்த ஜேர்மனிக்குப் போனவன், பிறகு, அங்கிருந்து கனடாவுக்குப் போய் விட்டான்.

எங்களுடைய கடைக்குட்டி பாலகுமார் தானும் வெளி நாட்டுக்குப் போகப் போறன் எண்டு சொன்னபோதுதான் எங்களுக்குக் கொஞ்சம் யோசனையாய்ப் போயிட்டுது.

'கூப்பிட்ட குரலுக்கு ஓடி வர பக்கத்திலை ஒரு பிள்ளை கூட இல்லாமல் எல்லாரும் போனால் நாங்கள் தனிச்சுப் போவமே 'நாங்கள் சொல்லியும் கேளாமல் கனடாவுக்குப் போயிட்டான். வீடே வெறிச் சோடிப் போன மாதிரி ஆகிவிட்டுது. எங்களுடைய நாட்டு இளைஞர்கள் வெளிநாடுகளுக்குப் போய்ச் சம்பாதிக்கிறதைப் பற்றி நான் குறையொன்றும் சொல்லவில்லை. பக்கத்து வீட்டு முருகையாவுடைய குடும்பம் சாப்பாட்டுக்கே வழியில்லாமல் கஷ்டப்பட்டுக் கொண்டிருந்தது. அவருடைய மகன் காணித்துண்டை ஈடுவைத்து சவூதிக்குப் போனவன், இப்ப கடனெல்லாம் அடைத்து சகோதரிமாரையும் கரை சேர்த்து அந்தக் குடும்பம் முன்னேறிவிட்டுது.

இப்படி எத்தனையோ குடும்பங்கள் வெளிநாட்டு உழைப்பால் தலை தூக்கி இருக்குதுகள் தான்.

ஆனால் என்னுடைய பிள்ளைகளை நான் ஒரு குறையுமில்லாமல் செல்லப்பிள்ளைகளாய்தான் வளர்த்தனான். அவர்கள் மூன்று பேரும் தாய் தகப்பனைப் பற்றிச் சிந்தியாமல் வெளிநாடுகளில் போய்க் குடியேறியதைத் தான் என்னால் பொறுக்க முடியாமல் இருந்தது. ஆனால் இராசம்மா இதைப் பற்றி அவ்வளவாக அலட்டிக்கொள்ளவில்லை.

"படைத்தவன் எங்களைப் பார்த்துக்கொள்வான் . எங்கடை சுய நலத்துக்காகப் பிள்ளைகளின்ரை முன்னேற்றத்தைத் தடுக்கப்படாது. கனடாவிலே சாப்பாட்டுக்கு என்ன செய்கிறாங்களோ. தேவகுமாருக்கு கலியாணம் செய்துவைக்க வேண்டியது எங்கடை பொறுப்பு."என்று எனக்குப் புத்தி தொடங்கிவிட்டாள்.

உடனே நான் ஒரு புறோக்கரைப் பிடித்து தேவகுமாருக்கு கல்யாணம் பேசிப் பொருத்திவிட்டு , பெண்ணுடைய போட்டோவையும் அனுப்பி, உடனே தேவகுமாரை வரும்படி கடிதம் எழுதி விட்டு வருவான் என்ற நம்பிக்கையோடு காத்திருந்தன். அவன் எழுதிய பதில் என் நம்பிக்கையைத் தகர்த்துவிட்டது. "அவனுக்கு இங்க வந்திட்டுப் போறது சிரமமும் செலவுமாம். பொம்பிளையை அங்க அனுப்பி விடட்டாம்". எங்களது கடமையைச் சரியாய்ச் செய்ய வேண்டுமென்று நினைத்து பெண்ணைக் கனடாவுக்கு அனுப்பிவைத்தேன். பாலகுமாருக்கும் அதே போல் கல்யாணம் பேசி பெண்ணை அனுப்பினேன். இரண்டு பேரும் கனடாவில் கல்யாணத்தை நடத்தி வீடியோவில் எடுத்து எங்களுக்கு அனுப்பினார்கள்.

ஏதோ எங்களுடைய பிள்ளைகள் வெளிநாட்டில் நல்லாய் இருக்கிறார்கள் என்ற திருப்தியோடு நானும் இராசம்மாவும் ஒருத்தருக்கொருத்தர் துணையாய்க் காலத்தை ஓட்டினோம்.

வயோதிபமும் வந்து நோயும் முற்றி, எங்களுக்கு ஒரு துணை தேவை என்ற கட்டம் வந்தபோது தான் கலங்கிப்போனம். எங்களுடைய நிலையை விளக்கி தள்ளாத காலத்தில் ஒரு பிள்ளையாவது எங்களுக்குத் துணையாய் வந்து இருக்கவேண்டும் என்று மூன்று மைந்தர்களுக்கும் உருக்கமாய்க் கடிதம் எழுதிப்போட்டோம். மூன்று பேரும் சொல்லி வைத்த மாதிரி இப்படி பதில் எழுதினார்கள்.

வெளிநாட்டில் பிறந்து வளர்ந்து ஆங்கில மொழியில் கல்வி கற்கிற தங்கடை பிள்ளைகளுக்கு எங்களது கிராமத்தில் வந்து இருக்கச் சரிப்பட்டு வராதாம். வேலைக்காரரை வைத்து எங்களைச் சமாளிக்கட்டாம். அல்லது எங்களையும் கனடாவுக்கு வரட்டாம். இராசம்மா இருதய நோயாளி. நானும் நோயாளி. நாங்கள் அவ்வளவு தூரம் பயணம் செய்து கனடாவுக்குப் போகமுடியுமே?

ஒரு பெடியனை வீட்டு வேலைக்கு அமர்த்தினோம் . பாரதியாருடைய "கண்ணன் என் சேவகனில்" வாற கண்ணனைப் போலிருப்பான் என்று நம்பி அவனோடு அன்பாய்ப் பாசமாய் நடந்தோம். மேசையில் வைத்த 100 ரூபா காசையும் எடுத்துக் கொண்டு ஒரு மாதத்தில் ஓடிப்போயிட்டான்.

தூரங்களில் போய் ஒரு மருந்தோ வேறு பொருளோ வாங்கிறதென்றால் அக்கம் பக்கத்தில் ஒரு பெடியளும் இல்லை. ஒரு பொது இலட்சியத்துக்காகத் தம் வாழ்வைப் பலி கொடுத்தவர்கள் போக மற்றவர்கள் வெளிநாடுகளுக்குப் போய் விட்டார்கள். எங்களுக்கோ ஆதரவற்ற நிலை. சொந்தபந்தம் என்று சொல்லிக் கொள்பவர்களும் ஊர்ப் புதினம் பேச வருவார்களே அன்றி உதவி செய்ய வரமாட்டார்கள். இப்படியான நிலையில் எங்களுக்கு உதவி செய்ய முன்வந்தான் பொன்னன்.

நோயாலும், மூப்பாலும் தளர்ந்து அநாதவராய் நின்ற எங்களுக்கு பொன்னனும் அவனுடைய மனைவியும் அன்போடும், அக்கறையோடும் தேவையான உதவியெல்லாம் செய்தனர். பொன்னனிடம் கள்ளம், கபடம் , பொய் , புரட்டு ஒன்றும் கிடையாது.

'பொன்னன்! ஒருவருடைய நடத்தையைக் கொண்டு தான் உயர்வு தாழ்வைக் கணிக்கிறவன் நான். என்னைப் பொறுத்தவரை உன்ரை நேர்மை, நாணயம், இரக்கம் இந்தக் குணங்களைப் பார்த்த பிறகு உன்னை மிக உயர்ந்தவனாகத் தான் மதிக்கிறன்" என்று சொல்லச் சொல்ல பொன்னன், என்னோடு நெருங்கி வந்து பெற்ற பிள்ளை மாதிரிப் பழக ஆரம்பித்தான்.

அவனுடைய உதவியும், ஆதரவும் என் மனதில் நம்பிக்கையையும் மகிழ்ச்சியையும் ஏற்படுத்தியது. எங்களது வீட்டைப்பற்றியும் ஒரு தீர்மானம் பண்ணி வைத்திருந்தன்.

எங்கள் இரண்டுபேரில் யாருடைய மூச்சு முன்னுக்கு நிற்குதோ தெரியவில்லை.

அப்படி ஒரு நிலை ஏற்பட்டவுடன் எங்களது மூன்று பிள்ளைகளுக்கும் அறிவிக்க வேண்டும் என்று பக்கத்திலிருக்கிற உறவினர்களிடமும், பொன்னனிடமும் சொல்லி வைத்தன். கொள்ளி வைக்கிறதுக்கென்றாலும் ஒருபிள்ளையாவது வருமென்று ஒரு நம்பிக்கை. அப்படி வருகிற பிள்ளைக்குத்தான் இந்த வீட்டைக் கொடுக்கிறதென்று புரொக்டரிடம் சொல்லி வைச்சன்.

ஒரு வெள்ளிக்கிழமை இராசம்மா பொன்னனுடைய, மனைவியைக்கொண்டு சுடுநீர் வைப்பித்துக் குளித்திட்டு வரும்போது, படியில் தடா லென்று விழுந்திட்டா. பொன்னன் ஓடிப் போய் டொக்டரை அழைத்து வந்தான்.

டொக்டர் பார்த்திட்டு எல்லாம் முடிஞ்சுதென்று கை விரித்திட்டார். பொன்னனும் மனைவியும் உருண்டு புரண்டு கத்தி அழுதார்கள். உடனே, ஓர் ஆளைக் கொழும்புக்கு அனுப்பி, எங்களது மூன்று புத்திரர்களுக்கும் 'ரெலெக்ஸ் மூலம் தகவல் சொல்லப்பட்டது. "நினைச்ச உடன் புறப்பட்டு வரேலாது. எங்களைப் பாராமல் அம்மாவின் மரணச்சடங்குகளைச் செய்யுங்கோ. பிறகு வசதியான நேரம் வாறம்" இப்படிப் பதில் சொல்லிச்சினமாம் மூன்று பேரும். இராசம்மாவை இழந்ததிலும் பார்க்க அவா பத்து மாதம் சுமந்து பெற்ற ஒரு பிள்ளையாவது கொள்ளி வைக்க வரவில்லை என்பது தான் தாங்கொணாத் துயரமாக இருந்தது. ஒரு வைராக்கியம் ஏற்பட்டது. அதனுள் என் மனதிலும் ஒரு வைராக்கியம் ஏற்பட்டது.

இராசம்மாவின் காரியங்களெல்லாம் முடிந்த பிறகு ஒரு நல்ல நாளில் புரொக்டரை வரச் செய்து வீடு வளவை என்பேரிலிருந்து மாற்றி எழுதிவித்தன். அன்றைக்கு பின்னேரம் பொன்னன் கேட்டான்.

"பிறக்குறாசியர் வந்திட்டு போறார். வீடு வளவை மூத்த மகனுக்குத் தானே எழுதிருப்பியள். ஆருக்கும் மூத்த பிள்ளையிலை தானே பிடிப்புக் கூட"

"ஓ.. அப்ப நல்லாய்ப் பிடிச்ச ஆளுக்குத் தானே வீட்டை எழுத வேணும். என்கிறாய். எனக்கு நல்லாய்ப் பிடிச்ச ஆள் நீ தான் பொன்னன் " என்றேன். விசயம் புரிந்த மாதிரி அவன் திகைத்து வாயடைத்து நின்றான்.

"ஓம் பொன்னன். இந்த வீடு வளவை உன் பெயருக்குத் தான் எழுதியிருக்கிறன். அதோட என் உடல், பொருள் ஆவியெல்லாம் உன்னிடமே ஒப்படைக்கிறேன். நான் சாகும் வரை மகனைப் போல் இருந்து பாதுகாக்க வேணும்" நாத்தழுதழுக்க கூறிய படி பொன்னனுடைய கைகளைப் பற்றிக் கொள்கிறேன்.

என் நடுங்கும் கரங்களைத் தன் கைகளில் ஆதரவாய் அடக்கிக்கொண்டான் அவன். எனது 70 வருட வாழ்க்கையில் என் மனைவிக்கு, பிள்ளையளுக்கு, நண்பர்களுக்கு என்று பலருக்குப் பலவித புத்தாண்டுப் பரிசு கொடுத்திருக்கிறன். ஆனால் இந்த வருடம் என் வீடு வளவைப் பொன்னனுக்கு எழுதிக் கொடுத்ததை இந்தச் சமுதாய மறுமலர்ச்சிக்கு கொடுத்த புத்தாண்டுப் பரிசாக எண்ணிப் பெருமையடைகிறேன்.


**(15.04.1989 அன்று சஞ்சீவியில் பிரசுரமானது)**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சஞ்சீவி
11 ஏப்ரல் 2021

# குழைக்காட்டு கதைகள் II

கோகுலராகவன்



உறவினர் வீடுகளுக்கு செல்லுதல் மூன்று வகைப்படும். ஒன்று ,சொந்தம் கொண்டாடிக் கொண்டு போதல். மற்றது, வருத்தம் பார்க்கச் செல்லுதல். இன்னொன்று, விசேடங்களுக்கு செல்லுதல். அந்தக் காலங்களில் உறவு முறையானவர்கள் எல்லா வீடுக ளுக்கும் செல்வார்கள். இரண்டு, மூன்று நாள்கள் தங்கி இருந்து, கதைத்து பேசி ,கோயில் குளத்துக்கு போய்த்தான் வீடு திரும்புவார்கள். சலிப்புக் கிடையாது, பாரபட்சம் கிடையாது.

எங்கள் வீட்டுக்கு யாராவது இவ்வாறு வந்தால் எங்களுக்கு மிகவும் கொண்டாட்டமாக இருக்கும். பெரியப்பாவின் பிள்ளைகள், ரதி அக்கா, பிறை அக்கா அடிக்கடி வருவார்கள். அநேகமாக ஓ. எல், ஏ.எல் பரீட்சை எழுத வந்து பத்து பன்னிரண்டு நாள்கள் நிற்பார்கள். இதில ரதி அக்கா " வா படிக்க" என்று இருத்தி விடுவார். இதனால் ரதி அக்காவின் வருகை எனக்கு அவ்வளவு இனிப்பாக இருக்காது. ஆனால் பரீட்சை முடிந்து அவர்கள் போகும் போது மிகவும் கவலையாக இருக்கும்.

"இரண்டு நாள் நிண்டிட்டுப் போ'

என்று அம்மாவும் மறிப்பா. ஆனால் பெரியப்பா ஏத்திக் கொண்டு போக வந்து விடுவார்.

இவற்றை விட உறவினர் வீட்டு நிகழ்வுகளுக்கு போவது என்பதும் ஆனந்தமான விடயம்தான். முந்திய நாள்களில் நிகழ்வு அழைப்பிதழ்களில்

"கொண்டாட்டம் மூன்று நாள்கள் வரை நடைபெறும்"

என்று அச்சடிப்பார்கள்

ஆனால் கொண்டாட்டமோ உண்மையில் பத்து பதினைந்து நாள்கள் நடக்கும். வீடு வாசல் எல்லாம் அமர்க்களமாக இருக்கும். உறவினர்கள் நிறைந்து விடுவார்கள். கொட்டகை போடுதல், வேலி அடைத்தல், பலகாரச் சூடு என்று ஆள்கள் நிறைந்து காணப்படுவார்கள். பலகாரச் சூட்டு வாசம் மூக்கைத் துளைக்கும். பயற்றம் பணியாரம், அரியதரம், முறுக்கு, சிப்பி என்று வாயூற வைக்கும் பலகாரங்கள் சுடப்படும். ஆனால் ஒன்றையும் வாயில் வைக்க விடமாட்டார்கள். எல்லாம் முகூர்த்த பலகாரங்கள் என்று சொல்லி, கலைத்து விடுவார்கள். எங்களுக்குக் கிடைப்பது என்னவோ சீனிப் பாணி காய்ச்சிய சட்டிதான். வழித்து நக்குவோம்.



கொட்டகை எனப்படும் பெரிய கிடுகால் கட்டப்பட்ட பந்தலே மணவறையாக இருக்கும். இது பிடுங்கப்படும் வரை எங்கள் வாழ்க்கை அதனுள்தான். வெள்ளை கட்டி, மணிமாலை, மணவறை கட்டி முடித்தால் அது கோயில் மாதிரித்தான் இருக்கும். விசேட நாளில் கொட்டகைக்குள் நிறைகுடம் வைத்து பலகாரம், வாழைப்பழம் படைத்த பிறகுதான் எமக்கு பலகாரம் சாப்பிடத் தருவார்கள்.

மூன்று நாள்களுக்கு முன்னரே ஒலி பெருக்கியைக் கட்டிவிடுவார்கள். பாட்டு ஊருக்கெல்லாம் கேட்கும்.

"யாருக்காக இது யாருக்காக? இந்த மாளிகை வசந்த மாளிகை..."

இப்படி பலவகைப் பாட்டுக்கள் காதைக் கிழித்துக் கொண்டிருக்கும். நாங்கள் ஸ்பீக்கர் காரரோடு சிநேகம் வைத்து விடுவோம். களவாக பலகாரம் கொண்டு போய் கொடுப்போம். ஏனென்றால் எமக்கு பிடித்த பாட்டைப் போடுவிக்க வேண்டுமே. பாட்டு முடிய 'ஒலிச்சித்திரம்' எனப்படும் திரைப்பட ஒலிப்பதிவைப் போடுவார்கள். இதில் எமக்கு ஈடுபாடு இல்லை. 'வசந்த மாளிகை' 'ரயில் பயணங்கள்' 'ஒரு தலை ராகம்' ஆகிய திரைப்படங்கள் அப்போது மிகவும் பிரபல்யம் . ஒலிச்சித்திரம் போட்டால் எங்களை விளையாட விடமாட்டார்கள். ஏனென்றால் சத்தம் போட்டு குழப்பி விடுவோம். அடித்து அமர்த்தி விடுவார்கள்.

இப்போது எல்லாம் மாறிப் போய்விட்டது. வீட்டுக்கு வரும் உறவினர் எப்போது கிளம்புவார் என எதிர்பார்க்கும் நிலை உருவாகிவிட்டது. ஒரு பிளேன்ரீ அல்லது பால் தேநீர் கொடுத்து ,அவர்கள் அதைக் குடிக்க முன்னரே எழும்பிப் போனாலும் மிக மகிழ்ச்சியாகி விடுகின்றது.

விசேடங்களை எல்லாம் மண்டபங்களை நோக்கி நகர்த்திவிட்டோம். எல்லாம் ரெடிமேட் வேலையாகிவிட்டது. பலகாரம் சுடுவது எங்கோ, சமைப்பது எங்கோ என்று எல்லாமே தனித்தனி ஆகிவிட்டது . உறவுகள் மண்டபத்தோடு கலைந்து விடுகின்றனர்.

மைத்துனனின் மகளின் கல்யாண வீட்டுக்கு பளையில் இருந்து கோண்டாவிலுக்கு ஒரு திருமண மண்டபத்துக்கு போனார் சிவராசண்ணை . அவரது கெட்டகாலம் ,பஸ் பிடிக்க தாமதமாகிவிட்டது. பின்னர் எப்படியோ ஒரு பஸ்ஸைப் பிடித்து யாழ்ப்பாணத்தில் இறங்கி, பின்னர் பலாலி ரூட் பஸ் பிடித்து, கோண்டாவிலில் இறங்க கிட்டத்தட்ட மதியம் தாண்டி 1.30 மணியாகிவிட்டது. 10 மணிக்கு கல்யாணம் . ஒரு மணிக்கு எல்லாம் முடிந்து எல்லோரும் மண்டபத்தை விட்டுப் போய்விட்டார்கள்.

"என்னடா தம்பி கலிகாலம். 1.30 மணிக்கு வாச்சர்தான் அங்க நிண்டான்"

பின்னொரு நாளில் அந்தச் சம்பவம் பற்றி என்னிடம் முறையிட்டார்.

"பிறகு என்னண்ணை செய்தனீங்கள்?"

"மனுசி மாப்பிள்ளை பொம்பிளைக்கு குடுக்கத் தந்த காசிலை, மலாயன் கபேயிலை புரியாணி சாப்பிட்டுட்டு வீட்டை வந்தன்ராப்பா"

[illegible] புரியா [illegible]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மணிக் கதை

# ஒரு பிள்ளையாரின் கதை



மௌனா

பக்தர்களின் கோரிக்கைகளை பக்குவமாக நிவர்த்தி செய்பவர் என்ற பெயர் அந்தக் குளத்தங்கரைப் பிள்ளையாருக்கு உண்டு.

பிரார்த்தனைகள் நிறைவேறுகின்றனவோ இல்லையோ, பிள்ளையார் மீது நம்பிக்கை இருக்கிறதோ இல்லையோ அந்த ஊராருக்கு மட்டுமல்ல அயல் கிராமங்களைச் சேர்ந்தவர்களுக்கும் அவர் மீது ஒரு விதமான பயபக்தி ,ஒரு பாரம்பரிய வழக்கமாகவே இருந்தது.

அதனால் ஒரு அரை நூற்றாண்டுக் கதைகள் பிள்ளையார் பற்றியும் இருக்கவே செய்தன.

இந்த அரை நூற்றாண்டுக் காலத்தில் ஊரும் அயல் கிராமங்களும் எவ்வளவோ மாற்றம் கண்டு விட்டிருந்தன. எஞ்சியுள்ள பழைய தலைமுறையினருடன் புதிய தலைமுறையினரும் பிள்ளையாருடனான தமது பாரம்பரிய பக்தி உறவைத் தொடரவே செய்தனர்.

பிள்ளையாரும் அப்படியே இருந்தார். மாறவே இல்லை. அதே குளத்தங்கரை. அதே அரசமரத்தடி, அது என்னவோ பிள்ளையாருக்கும் அந்த வாழ்க்கை சலிக்கவே இல்லை.

ஒருநாள் திடீரென்று குளத்தங்கரையில் ஊர்ப் பழசுகளும், சில இளைஞர்களும் கூடினார்கள். கூட்டம் போட்டார்கள். குளத்தங்கரை பிள்ளையாரின் மீது இது நாள் வரை எவரும் காட்டாத அக்கறையும் பரிவும் கொண்டவர்களாக அவருக்கு ஒரு கோவில் கட்டுவது பற்றி கலந்துரையாடினார்கள்.

பல லட்ச ரூபா செலவில் திட்டம் போட்டார்கள்

பிள்ளையாருக்கு ஆச்சரியம்!

மௌனமாக அனைத்தையும் அவதானித்துக் கொண்டிருந்த பிள்ளையார். புதிதாக அமைக்கப்பட்ட அறங்காவலர் சபையினரின் தன் மீதான அக்கறையை நம்பமுடியாது ஆச்சரியப்பட்டார். தான் இத்தனை வருடங்களாக ஊர் மக்களுக்கு கருணை காட்டியதற்கு நன்றியாக மக்கள் தனக்கு ஆலயம் அமைக்க விரும்புவதாக நம்பினார்.

கூட்டம் திட்டம் போட்டதுடன் கலைந்தது.

பிள்ளையார் தனித்திருந்தார். ஊர்ப் பழசுகளில் அதி பழசான கந்தையா என்பவர் வழக்கம்போல் பிள்ளையார் இருந்த மண் பீடத்தின் கீழ் அமர்ந்திருந்தார்.

"என்னப்பா.. பிள்ளையாரப்பா நடந்ததை எல்லாம் பார்த்துக் கொண்டு இப்படியே மௌனமாக இருந்தால் எப்படி?" எனப் பிள்ளையாரைப் பார்த்து நினைத்துக் கொண்டார்.

பிள்ளையார் மௌனம் கலைப்பதாக இல்லை.

"நாளைக்கு உன்னை எடுத்துச் சென்று வேறொரு இடத்தில் வைத்து விட்டு உனக்குப் பதிலாக வேறொரு புதுச் சிலையை கொண்டு வந்து வைத்து விட்டு கோவில் கட்டப் போகிறார்களாம். நூற்றாண்டு கால ஓட்டத்தில் நீ தேய்ந்து விட்டாயாம். அவர்கள் சொல்கிறார்கள் ... புதிய சிலையின் பெறுமதி லட்சம் ரூபாவாம்

ஊராக்களுக்குத் தெரியாது உன் புராதன தன்மையின் பெறுமதி பல லட்சங்கள் என்று... உன்னைக் கொண்டு போய் விற்கப் போகிறார்கள்.... உனக்குத் தெரியாததா? "கந்தையர் பெருமூச்சு விட்டார்.

அன்று இரவு பேய் மழை ... சூறைக் காற்று .. கடும் வெள்ளம்...

அதிகாலை ஊரை அதிர வைக்கும் ஒரு பெரும் சப்தம்

அதிகாலை விடிந்த போது குளத்தங்கரை அரசமரம் தன் நூற்றாண்டு கால வரலாற்றை முடித்துக் கொண்டு பிள்ளையார் இருந்த பீடத்துடன் குளத்துக்குள் முற்றாக மூழ்கியிருந்தது.

சுற்றியிருந்த சனத் திரளுள் ஒருவர் சொன்னார் "இதுவோ ஆழம் தெரியாத இடி குண்டு விழுந்த குளம். ... பிள்ளையாரை எங்கே தேடுவதாம்!?"

அதன் பின்னர் அங்கு கோயிலும் இல்லை, குளமும் இல்லை, பிள்ளையாரும் இல்லை.... குளத்தங்கரைப் பிள்ளையாரைப் பற்றி ஏராளம் புதுக் கதைகள் ஊரில் உயிர்த்தே உள்ளன.

# மூட்டை விடு தூது

ம.பா. மகாலிங்கசிவம்

தமிழிலுள்ள தொண்ணூற்றாறு வகைப் பிரபந்தங்களில் தூதுப் பிரபந்தமும் ஒன்றாகும். தலைவன் அல்லது தலைவி இயற்கைப் பொருள்களையோ, உயிரினங்களையோ எதிர்ப்பாலாரிடம் தூதாக அனுப்பித் தனது காதலைத் தெரிவித்து வருமாறு அனுப்புவதாகப் பாடப்படுவது தூதுப் பிரபந்தம் ஆகும்.

இவ்வகையில் சங்கப்புலவரான சத்திமுற்றப் புலவர் பாடிய "நாராய் நாராய் செங்கால் நாராய்" எனத் தொடங்கும் நாரையைத் தூதுவிடும் பாடல் தமிழ் இலக்கிய உலகில் மிகப் புகழ் பெற்றதாகும். பல்லவர் காலத்தில் வாழ்ந்த ஆழ்வார்களுள் புகழ் பெற்றவரான ஆண்டாளும் தூதுப் பொருளில் அமைந்த பல பாடல்களைப் பாடியுள்ளார். கண்ணன் மேற் காதல் கொண்ட ஆண்டாள் தனது காதலைக் கண்ணனுக்குத் தெரிவித்து வருமாறு கூறிப் பாடிய பாடல் இங்கே தரப்படுகிறது.

**மின் ஆகத்து எழுகின்ற மேகங்கள்!**
**வேங்கடத்துத்**
**தன் ஆகத்து இரு மங்கை தங்கிய சீர்**
**மார்பிற்கு**
**என் ஆகத்து இளம் கொங்கை விரும்பித்தாம்**
**நான்தோறும்**
**பொன் ஆகம் புல்குதற்கென் புரிவுடைமை**
**செப்புமினே.**

அதாவது மின்னல் மின்றும் வானத்தில் எழுகின்ற மேகங்களே, திருவேங்கடத்திற் கோயில் கொண்டவரும், ஏற்கனவே தன் மார்பில் பூதேவி, சீதேவி என்னும் இரு பெண்களைத் தாங்கி இருப்பவருமான கண்ணனிடம் செல்லுங்கள்.
அவரிடம் எனது நெஞ்சிலிருக்கும் இளமையான மார்பகங்களை அவரது அழகான மார்போடு சேர்த்து அணைப்பதற்கு எனக்கு ஆசையாக உள்ளது எனச் சொல்லிவிடுங்கள் என்பதே பாடலின் பொருள். அந்தக் காலத்தில் இவ்வளவு துணிச்சலாகப் பாலியல் சார் விடயங்களை ஆண்டாள் பாடியிருக்கிறாரே என்று உங்களுக்கு ஆச்சரியம் ஏற்படுகிறதா?
ஆண்டாளின் தூதுப் பாடலின் பின்னணியில் சமகாலத் தூதுப் பாடல் ஒன்றினுட் செல்லலாம். இராஜ பாரதியின் மூட்டைவிடுதூது என்னும் கவிதை இன்றைய தேன்கூட்டில் இடம்பெறுகிறது.

**கட்டில் இடுக்கிற் கதவோர் மூலைக்குள்**
**ஒட்டி மறைந்தூரும் வட்ட உடற்**
**பெட்டகமே**
**கெட்டுயிர்த்தே நள்ளிருட்டில் நீளக் குறட்டைவிடும்**
**பெட்டையவள் காதிற்போய்ப் பேசு.**

**என்னைக் கடித்தே எடுத்த இரத்தத்தைப்**
**பொன்னைப் பழித்தாள் தன் பூவுடலில்**
**சின்னக்**
**கொடுக்காலே குற்றிக் கொடுத்தயரத் தூங்கல்**
**அடுக்கா துனக்கென்றறை.**

**மின்னுடலில் என் உதிரம் மேவியதும் கண்ணாளன்**
**தன்னுடைய எண்ணம் தலைக்கேறும்,**
**வண்ணமகள்**
**நெஞ்சிற் கடித்தே நினைப்பூட்டி அன்னானைக்**
**கொஞ்சப்போ என்றிடித்துக் கூறு.**

**கிள்ளாமற் கிள்ளு; கிளுகிளுப்பைப் பட்டாடை**
**உள்ளாலே ஊட்டின் உறங்காள் அக்**
**கள்ளி;கடை**
**வாயில் திறந்தே வருவாள் எனைத்தேடி!**
**போ அப்பா, ஊராமற் போ!**

**கொட்டும் பனியிலெனை விட்டுத் துயில்வாளை**
**மட்டும் கடி; மாமா மாமியரைத்**
**தொட்டாயேல்**
**கெட்டுவிடும் எம்கூத்து! கேட்டுக் கொண்டாயன்றோ!**
**எட்டி நட தூதுக் கியைந்து!**

கவிஞர் ராஜபாரதி கிழக்கு மாகாணம் கல்லாற்றைப் பிறப்பிடமாகக் கொண்டவர். சிறந்த கவிஞராக அறியப்பட்டவர்.
'ஈழத்துக் கவிதைக் கனிகள்' என்னும் தொகுப்பிலிருந்து மூட்டைவிடுதூது கவிதை பெறப்படுகிறது. அன்னம், கிளி, மேகம், தென்றல்,தமிழ் முதலியவற்றைத் தூதுவிட்ட தமிழர் மரபில் மூட்டைப்பூச்சியைத் தூதுவிடும் புதிய சிந்தனை கவிஞர் ராஜ பாரதியின் மனதில் கருக் கொள்கிறது. மரபுவழி வெண்பா யாப்பில் தூது பாடப்பட்டுள்ளது.



**கட்டில் இடுக்கிற் கதவோர மூலைக்குள்**
**ஒட்டி மறைந்தூரும் வட்ட உடற்**
**பெட்டகமே**
**நெட்டுயிர்த்தே நன்னிருட்டில் நீளக் குறட்டைவிடும்**
**பெட்டையவள் காதிற்போய்ப் பேசு**

என முதற்பாடல்
மூட்டையின் இயல்பையும், காதலியின் இயல்பையும் வெளிப்படுத்துகிறது. கட்டில் இடுக்கிலும் கதவோர மூலைக்குள்ளும் ஒட்டிமறைந்து ஊரும் இயல்பையும் வட்ட உடலமைப்பையும் உடையது என மூட்டை வர்ணிக்கப்படுகிறது.
அதேவேளை காதலியோ, தான் காதலனைச் சேரமுடியவில்லையே என எப்போதும் பெருமூச்சு விடுபவள். இப்போது குறட்டை விட்டுத் தூங்கிக் கொண்டிருப்பாள் என்றும் கூறிக் கிராமப்புறப்பேச்சு வழக்கான பெட்டை என்ற சொல்லைப் பயன்படுத்துகிறார். நெருக்கமான அன்பையும் உரிமையையும் இச் சொல் வெளிப்படுத்துகிறது.
மேலும் தனது இரத்தத்தை எடுத்துச் சென்று காதலியின் உடலில் ஏற்றுமாறும் அவ்வாறு ஏற்றப்பட்டால் அவளுக்குத் தனது நினைவு வரும் என்றும் கவிஞர் மூட்டையிடம் கூறுகின்றார். அதுமட்டுமன்றி

## தேன் கூடு

**"வண்ண மகள்**
**நெஞ்சிற் கடித்தே நினைப்பூட்டி**
**அன்னானைக்**
**கொஞ்சப்போ என்று இடித்துக் கூறு."**

என்று கவிஞர் தூதுவரிடம் வேண்டுகிறார். இங்கு சொல்ல வந்த செய்தி காதலனைக் கொஞ்சப்போ என்று காதலியிடம் மூட்டை கூற வேண்டும் என்பது. அதற்காகக் கடிக்கச் சொல்லும் இடம் தான் கவிஞரின் உளவியல் நுட்பத்தை வெளிப்படுத்துகின்றது.

தான் செய்ய விரும்புவதை எல்லாம் மூட்டையிடம் சொல்லித் தனது ஆற்றாமையைத் தீர்த்துக் கொள்கிறாரோ என்ற ஐயத்தை அடுத்த பாடல் ஏற்படுத்துகிறது.

**"கிள்ளாமற் கிள்ளு; கிளு கிளுப்பைப் பட்டாடை**
**உள்ளாலே ஊட்டின் உறங்காள் அக்**
**கள்ளி; கடை**
**வாயில் திறந்தே வருவாள் எனைத்தேடி!**
**போ அப்பால் ஊராமற் போ!"**

... ஊராமல் அங்கே போய் ஊர் என்று கேட்கிறது பாடல்.

கவிஞரின் காதல் உணர்ச்சி மூட்டைப் பூச்சியைத் தூதனுப்புவதுடன் மட்டும் தீர்ந்து விடவில்லை. தூதைத் தொடர்ந்து காதலி வீட்டுக்குத் தானும் செல்லவே விரும்புகின்றார். அதற்கான திட்டங்களையும் மூட்டையிடமே சொல்லிவிடுகிறார்.

**"கொட்டும் பனியில் எனை விட்டுத் துயில்வாளை**
**மட்டும் கடி; மாமா மாமியரைத்**
**தொட்டாயேல்**
**கெட்டுவிடும் எம்கூத்து"**

என மாமா, மாமியர்க்குக் கடித்துத் தூக்கத்தைக் கெடுத்து விடாதே. நான் இரகசியமாகப் போக முடியாமல் செய்து விடாதே என்றும் கேட்டுக் கவிதையை நிறைவு செய்கிறார். மரபுவழியில் அமைந்த வெண்பா யாப்பில், தூதுப்பிரபந்தம் என்றும் இலக்கிய வடிவில் காதல் உணர்ச்சிகளைக் கொட்டும் சிறந்த கவிதையாக இக்கவிதை அமைகிறது.



# பேருந்து பேசுகிறேன்

இது என்னுடைய கதை
சொந்தக் கதை
நிதர்சனமான கதை
நானொரு பயணிகள் பேருந்து....
தினந்தோறும் பக்குவமாய்
பக்தியோடு தொடங்கி
சொந்த பந்தங்கள் ஊர் உறவுகள்
அறியாதோர் தெரியாதோர் என்று
பலரையும் சுமந்து செல்வேன்
சுத்தமான மனதோடு....

இனம் சனம் பேசும் எவ்வளவு கதைகள்
ஊர்ப்புதினங்கள் என்று
நிரம்பி வழியும் என் காதுகளில்......
எவ்வளவு மகிழ்ந்திருக்கிறேன்
மாணவர்களைக் கண்டால் நான்
மகிழ்ச்சியில் திளைத்திருப்பேன்
நான் என்ன செய்ய? மானிடா
உன் வேகத்தின் அசுரத்தனத்தால்
என்னையும் வேகமாக்கி விட்டாயே
உன் செயலால் இன்னமும்
அழுதுகொண்டிருக்கிறேன் தனிமையில்

எனக்கென்ன கோபம் உங்கள் மீது
நான் கோபக்காரனா?
பழிவாங்கும் எண்ணம் எனக்கில்லை
இரவு பகலாக ஓய்வு உறக்கமின்றி
உழைத்திருக்கிறேன் உங்களுக்காக....
ஓரளவுக்குத் தானே என்னாலும் முடியும்
வாய் பேச முடிந்திருந்தால்
நிச்சயமாக குளறியிருப்பேன்

வாழ்க்கையில் ஏன் இந்த வேகமோ?
எனக்குத் தெரியாது
மானிடர்களே உங்களிடம் இருக்கலாம்
பழிவாங்கும் எண்ணம்
ஆனால் என்னிடமில்லை.
பேதம் பார்ப்பதும் எனக்குத் தெரியாது
எனக்கும் கஸ்டமாகத் தான் இருக்கிறது
நான் பழிகாரனா? கொலைகாரனா?
உங்கள் இரத்த வெள்ளத்தில் நீந்துவதிலும்
கொடுமை வேறுண்டோ எனக்கு.....

**த.ஐங்கரன்**
கிளி. பூநகரி ஸ்ரீ வி.வித்தியாலயம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கருணைப் பயிர்ச்செய்கையும், விதானையார் வீட்டு கருங்காலியும்

○ வடகோவை வரதராஜன்





வெளியே மழை கொட்டிக் கொண்டிருந்தது. வானத்தில் ஆயிரம் ஆயிரம் யானைகள் கூடி, அவற்றின் தும்பிக்கைகள் கீழ் இறங்கினாற் போல், கிழக்கே கருமேகங்கள் கூடி பூமியைத் துழாவிக்கொண்டிருந்தன. பெரு முழக்கம் ஓய்ந்து, இரண்டு அசுரர்கள் ஒருவரை ஒருவர் எச்சரிக்கை செய்வது போல் வானம் கள்ளக்குரலில் உறுமிக்கொண்டிருக்க என்ன அழகாகப் பெய்கிறது இந்த மழை. மழை பெய்வதை மணிக்கணக்காக என்னால் இரசிக்க முடியும் .

யாரோ வருவதை உணர்ந்து சிங்காரியும் நாச்சியாரும் கள்ளக் குரலில் உறுமினார்கள். நான் அவற்றை எச்சரிக்க, படுத்தபடி முன்னம்கால்களை நீட்டி அவற்றில் முகத்தை வைத்தபடி நிலையெடுத்தபடி இருந்தார்கள். செல்லையா அண்ணை குடைபிடித்தபடி வந்து கொண்டிருந்தார்.



"வாங்கோ அண்ணை"

"ராத்திரி தொடங்கின மழை இன்னும் நிக்காமல் அடிச்சு ஊத்துது. தோட்டவெளிப் பக்கமும் போகேலாது, சும்மா உன்னோடை கதைப்பம் எண்டு வந்தன்" என்றபடி கதிரையில் அரைக்குண்டியில் அமர்ந்தார் செல்லையா அண்ணர்.

"வசதியாய் இருங்கோ அண்ணை. தொத்துப் பொறியிலை இருக்கிறமாதிரி இருக்கிறியள்"

"மூலமடா தம்பி, சரியாய் இருக்கேலாது. நேற்றுத் தொடக்கம் ஒரே வேதனை"

"சூடண்ணை. உங்களுக்கு எல்லாச் சூடும் இருக்கெல்லோ?"

"நான்படுகிற பாட்டிலை உனக்கொரு நளினம்"

"இல்லையண்ணை, மருமோன் வெளிநாட்டாலை வந்திருக்கிறான் , அவன் கொண்டு வந்த போத்திலில நேற்று காலோ அரையோ அடிச்சிருப்பியள், அதோடை ஊர்க் கோழி பிடிச்சு சமைச்சிருப்பியள் ரெண்டும் சூடெல்லோ?"

"உண்மைதானடாப்பா. நேற்றுக் கொஞ்சம் கூடித்தான் போச்சு"

"அண்ணை! 'உள்மூலத்துக்கு துத்தி, வெளி மூலத்துக்கு கருணை' என்று ஒரு சொலவடை இருக்கு. கருணைக் கிழங்கு சாப்பிடுங்கோ. எல்லாம் சரியாய்ப் போகும்"

"மெய்யாய்த்தான் சொல்லுறியோ?"

"மெய்தான். மூலத்துக்கு கருணை காட்டுகிறபடியால்த்தான் அதை கருணைக் கிழங்கு எண்டு சொல்லுறது. கருணைக்கிழங்கு ஒரு அற்புத மூலிகை அண்ணை 'குண்டுடல் கொடுக்கும் உருளை, குண்டுடல்கெடுக்கும் கருணை' என்று இன்னுமொரு சொலவடை இருக்கு."

"நல்ல விசயமெல்லாம் சொல்லுறாய், மேலை சொல்லு"

"மண்ணுக்கு கீழை விளையுற கிழங்குகளிலை கருணை மட்டும்தான் சாப்பிடலாமாம், மற்றக் கிழங்கெல்லாம் உடம்புக்கு கூடாதென்று தேரையர் என்ற சித்தர் சொல்லியிருக்கிறார் .

'மண்பரவு கிழங்குகளில் கருணையன்றி வேறெதுவும் புசியோம், வாழை இளம் பிஞ்சொழிய காயருந்தல் செய்யோம்' என்று தேரையர் பாடி இருக்கிறார் .

மூல நோயை கட்டுப்படுத்துகிறத்துக்கும், கெட்ட கொழுப்பை அகற்றி உடலை மெலியப் பண்ணுகிறதுக்கும் , குடலை சுத்தம் செய்யிறதுக்கும் கருணையைப்போல ஒரு சாமான் இல்லையண்ணை.

இந்த அற்புதமான மூலிகையை நாங்கள் செய்கை பண்ணுறதையும் விட்டிட்டம் , சாப்பிடுகிறதையும் விட்டிட்டம் "

"உண்மைதானடா மோனை. முந்தி, கலியாணவீடு, சவுண்டிவீடுகளுக்கு , சுட்டகத்தரிக்காய்ச் சம்பல், கருணைக் கிழங்குக்கறி இதுகளைச் சாப்பிட வெண்டே போறனாங்கள் .

கருணைக் கிழங்கை பொரிச்சுப் பிரட்டல் கறி வைச்சால், இறைச்சிக்கறி தோத்துப்போகும் கண்டியோ. இப்ப பகோடாவிலை ஒரு கறி, அன்னாசிப் பழத்திலை ஒரு கறி, ச்சாய், ச்சாய் என்ன கோதாரி கறிபுளியளோ தெரியாது. ஓங்காளிச்சுக்கொண்டு வரும், பழமாய் ருசிச்சுத் தின்னுற அன்னாசிப் பழத்தை கறியாக்கி, நாசமறுக்கிறாங்களடாப்பா"

"இந்த உணவுப் பழக்கத்திலை ஏற்பட்ட மாற்றம்தான் இண்டைக்கு இவ்வளவு வருத்தத்துக்கும் காரணம்

"அதெண்டால் உண்மை கண்டியோ .அப்ப நாங்கள் இந்தமுறை கருணை வைப்பமே?"

"வையுங்கோ அண்ணை .கருணையிலை ஒரு சிறப்பு, இதை வெங்காயத்துடன் ஊடு பயிராய்ச் செய்யலாம்"

"அது சோக்கெல்லோ. அப்ப இம்முறை வெங்காயதுக்கை கருணை ஊண்டுகிறது தான். நீ பயிர் செய்யிற முறையைப்பற்றி சொல்லு ராசா"

"வெங்காயத்துக்கு என்னமாதிரி எருப் போட்டு உழுது தறை பண்படுத்துகிறீர்களோ அதே மாதிரி பண்படுத்தி , வெங்காயத்துக்கு பாத்தியை அமையுங்கோ. பிறகு அதுக்குள்ள வரிசைகளுக்கிடையில் 90 செ.மீ இடைவெளி இருக்கத்தக்கதாக, பயிர்களுக்கிடையில் 90 செ.மீ இடைவெளி வரத்தக்கதாக 45 x45 x45 செ.மீ பரிமாணத்தில் குழி வெட்டுங்கோ"

"உதென்ன புது விண்ணாணம் பறையிறாய். அங்க ஈவினை, புன்னாலைக்கட்டுவன் பக்கமெல்லாம், வெங்காயத் தறையிக்கை கறணைக் குட்டியை சும்மா தாட்டெல்லோ விடுகிறாங்கள்."






13

"சுகமாய் செய்யறவை அப்பிடிச் செய்வினம். உருப்பம் பருப்பமான,, கரடு முரடாய் இல்லாத அழுத்தமான கிழங்கு வேண்டும் என்றால் குழி எடுத்து நடுவதுதான் சிறந்தது. இப்படி குழி எடுத்து நட்டால் ஒரு அடியில் இருந்து ரெண்ரரை தொடக்கம் 4 கிலோ வரை விளைச்சல் வரும் 10 கிலோ கிழங்கும் விளைஞ்சி ருக்கண்ணை. இந்தக் குழியில் எருவை போட்டு அதில் விதை கிழங்கை நடவேண்டும்."

"அப்ப உரம் ஒண்டும் போடுறேலையே?"

" உங்கடை கால் ஏக்கருக்கும் யூரியா 2கிலோ, செறி சூப்பர் பொஸ்பேற் 3கிலோ, மியூரியேற் ஒப் பொடடாஸ் 8கிலோ,இவற்றைக் கலந்து ஒவ்வொரு குழிக்கும் பங்கிட்டு போட வேண்டும் .

பின்பு கிழங்கு நட்ட 45ஆம் நாள் இதே அளவு உரங்களை கலந்து ஒவ்வொரு கண்டுக்கும் பிரிச்சுப் போட வேண்டும்."

"கருணைக் குட்டிக்கு எங்கையடா போறது மோனை?"

"வழமையாக கருணைப் பயிர் செய்பவர்களிடம் வேண்டலாம் .

தாய்க் கிழங்கிலை இருந்து வாற விரலிக் கிழங்குகளை பிரிச்சு விதை கிழங்காக எடுத்து வைச்சிருப்பினம். அதை வாங்கி நடலாம் .

இல்லாவிட்டால் தாய்க்கிழங்கை இரண்டு மூன்று முளை இருக்கத்தக்கதாக சின்ன துண்டுகளாக வெட்டி நடலாம் . எதெண்டாலும் விதை கிழங்கு 200 தொடக்கம் 250 கிராம் வரை இருக்க வேணும். இந்த விதை கிழங்குகளை காற்றோட்டம் இல்லாத இருட்டான இடத்தில் வைத்து முளை வந்தவுடன் நடவேணும். இதன்பின் நீங்கள் வழமையான மாதிரி வெங்காயத்தை நடலாம் .

விதை கருணை நட்டு 45 ஆம் நாள் முளைக்குருத்து வரும் , 120 ஆம் நாள் தளிர் வரும் .

120 ஆம் நாளுக்கிடையில் உங்கள் வெங்காய அறுவடை முடிந்திருக்கும் .

இப்போ கண்டுக்கு மண் அணைக்க வேணும்"

"அப்ப இறைப்பு என்ன மாதிரி?"

"தரை எப்பவும் ஈரமாய் இருக்கவேணும் .

ஆனால் நீர் தேங்கக்கூடாது. நாலு நாளுக்கொரு தரம் முறையிறைப்பு இறைச்சால் போதுமானது"

"எத்தனை மாதத்திலை கிழங்கு கிண்டலாம் ?"

"கருணை எட்டு ஒன்பது மாதப் பயிர் அண்ணை. இலைகள் மஞ்சளாகி தண்டு மடிஞ்சு விழ ,நீங்கள் அறுவடை செய்யலாம்"

"என்ரை நாலு பரப்பிலையும் குத்து மதிப்பாய் எவ்வளவு கிழங்கு கிண்டலாம் ராசா ?"

"உங்கடை கால் ஏக்கரிலையும் ஐந்து தொன் கிழங்கை விளைச்சலாய் பெறலாம் ."

"அப்ப இந்த முறை ஆடிப் போகத்திலை வெங்காயம் வைக்கேக்கை கருணையும் வைக்கத்தான் வேணும்"

" அண்ணை! கருணைக்கிழங்கு பூ பாத்திருக்கிறியளே?"

"இல்லையாடா மோனை"

"ஒருமுறை ஒரு கருணைக் கிழங்கை எங்கடை களஞ்சிய அறைக்குள் வைச்சிட்டு மறந்திட்டன். சில மாதத்திற்கு பின் களஞ்சிய அறைக்குள் ஏதோ மல நாற்றம் மாதிரி நாற்றம் வந்தது. இலையான்களும் அறைக்குள் போய் வந்து கொண்டிருந்தன.

எலி செத்துப்போய் கிடக்காக்கும் என்று தேடத் தொடங்கினேன் . பார்த்தால் இந்த கருணை ஒரு பென்னாம் பெரிய பூவாய் பூத்துக் கிடக்கு .அந்த பூவில் இருந்துதான் இந்த மல நாற்றமும் இலையான் மொய்ப்பும். என்ன அழகான பெரிய பூ . ஆனால் கிட்ட நிற்க முடியாத அளவுக்கு நாற்றம்"

"மெய்யாய்தானே சொல்லுறியோ?"

"மெய்தான் அண்ணை .இப்ப நினைச்சாலும் குமட்டிக்கொண்டு வருகுது" மழை சற்று வெளித்தது . நான் வாங்கி போட்டிக்கோவில் வைத்திருந்த மரக்கன்றைப் பார்த்த செல்லையா அண்ணை,

"உது என்னடாமோனை புதுவிதமான மரமாய்க் கிடக்கு" என்று கேட்டார் .

"இது 'கருங்காலி' மரக்கன்று அண்ணை. யாழ்ப்பாணத்தில் , ஒரு இடமும் நான் கருங்காலி மரத்தைக் காணேல்லை. என்ரை சிநேகிதன் ஒருத்தன் எங்கையோ இருந்து ரெண்டு கண்டு கொண்டு வந்து வைச்சிருந்தான். அவனிட்டைக் கெஞ்சிக் கூத்தாடி ஒரு கண்டை நட என்று வேண்டிக் கொண்டந்தனான்.

"இவற்றை கேட்டுக்கொண்டு தேநீரை கொண்ட வந்த என் மனைவி, "என்ன கருங்காலியோ? ஒரு வீட்டுக்கு ரெண்டு கருங்காலி வேண்டாம். உதைச் செல்லையா மாமாட்டை குடுத்து விடுங்கோ" என்றார். நான் ஒருவாய் வெற்றிலையை எடுத்து வாய்க்குள் அதக்கிக் கொண்டேன். ■

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# தலை போகிற விடயம்!

○ மயூ

இந்திய சட்டமன்றத் தேர்தல் பரபரப்புகள் ஒரு புறம் இருக்க, மற்றொரு விடயம் இப்போது பெரும் சர்ச்சையை கிளப்பியிருக்கிறது. அப்படி என்ன தலை போகிற விடயம் என்று கேட்காதீர்கள். இது தலை சம்பந்தமான பிரச்சினைதான்.


திருப்பதியில் பக்தர்கள் காணிக்கை அளிக்கும் முடி மியான்மர் எல்லையில் கைப்பற்றப்பட்டிருப்பதுதான் இப்போது பெரும் பரபரப்புக்குரிய விடயம்.

ஆமாம், அதில் என்ன இருக்கிறது? கைப்பற்றப்பட்ட முடி மூடைகளின் மதிப்பு இந்திய ரூபாவில் 1.8 கோடி. இப்போது புரிகிறதா இதில் ஏதோ ஒரு விடயம் இருக்கின்றது என்று?

இரண்டு மாதங்களுக்கு முன்னர் அசாமின் துணை இராணுவப் படையின் ஒரு பிரிவே இவற்றைக் கண்டு பிடித்தது. இந்தத் தகவல் அப்போது ஊடகங்களில் வந்திருந்தாலும் பெரிதாகப் பேசப்படவில்லை. கடந்த மாதம் 7 ஆம் திகதி இது தொடர்பாக நடந்த தேடுதல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

மிசோரம் மாநிலத்தில் உள்ள இந்தோ - மியான்மார் எல்லையில் இந்த முடி மூடைகள் கண்டுபிடிக்கப்பட்டன. எல்லைப் பகுதியில் இதுவரை தங்கம், போதைப் பொருள் எனக் கண்டுபிடித்துக் கொண்டிருந்த இராணுவத்தினர் முதன்முறையாக முடி மூடைகளைக் கண்டுபிடித்திருந்தனர். இது அவர்களுக்கே அப்போது புதிராகத்தான் இருந்திருக்கிறது.

இது தொடர்பாக கடந்த மாதம் 20 ஆம் திகதி இராணுவம் உத்தியோகபூர்வமான அறிவித்தல் ஒன்றை



விடுத்திருக்கிறது. 120 பொதிகளில் முடி கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. ஒவ்வொன்றும் 50 கிலோ நிறையுடைய பொதிகள். பாரவூர்தி ஒன்றில் இருந்து இவை கண்டுபிடிக்கப்பட்டிருக்கின்றன.

அந்தப் பாரவூர்தியின் ஓட்டுநர் இந்த முடி மூடைகள் திருப்பதியில் இருந்து கொண்டுவரப்பட்டன என்று விசாரணையில் தெரிவித்த பின்னர்தான் இந்த விடயம் சூடு பிடிக்க ஆரம்பித்தது. இந்திய ஊடகம் ஒன்றில் கடந்த மாதம் 21ஆம் திகதி வந்த செய்தியொன்றில் இந்த முடி மூடைகள் மிசோரமில் உள்ள பெண் ஒருவருக்கே கொண்டு செல்லப்படுகின்றன என்று விசாரணையில் ஓட்டுநர் தெரிவித்தார் என்று கூறப்பட்டிருந்தது. இந்தியாவின் பல கோயில்களில் இருந்து இவ்வாறு முடிக் கற்றைகள் கொண்டு செல்லப்படுகின்றன என்றும், இப்போது கைப்பற்றப்பட்ட பாரவூர்தி திருப்பதி யில் இருந்து சென்றிருக்கின்றது என்றும் இந்த விடயத்தை விசாரணை செய்யும் அதிகாரிகளை மேற்கொள்காட்டி தகவல்கள் வெளிவந்திருக்கின்றன. எல்லைப் பகுதியில் இருந்து 7 கிலோமீற்றர் தூரத்தில் வைத்து இந்தப் பாரவூர்தி கைப்பற்றப்பட்டிருக்கின்றது. அந்தப் பாரவூர்தியில் இருந்த முடி மூடைகளின் பெறுமதி இந்திய நாணய மதிப்பில் சுமார் 1.8 கோடி ரூபா என்கின்றனர் அதிகாரிகள்.

இங்குள்ள பிரச்சினை என்னவென்றால் ஆலயங்களில் இருந்து ஏலத்தில் எடுக்கப்படும் முடிக் கற்றைகளை எல்லைகள் ஊடாகக் கடத்தி பிற நாடுகளுக்கு விற்றுச் சில நிறுவனங்கள் கொள்ளை லாபம் சம்பாதிக்கின்றன என்பதுதான். இந்த முடிக் கற்றைகள் இந்தியாவில் இருந்து மியான்ம ருக்குக் கொண்டு செல்லப்பட்டு, அங்கிருந்து தாய்லாந்து கொண்டு செல்லப்பட்டு அங்கு பதப்படுத்தப்பட்டு சீனாவுக்கு அனுப்பப்படுகின்றது என்கின்றனர் இந்திய அதிகாரிகள். சீனாவில் இந்த முடிக்கற்றைகளைக் கொண்டு “விக்” தயாரிக்கப்பட்டு உலகின் பல நாடுகளுக்கு அனுப்பப்படுகின்றதாம். “விக்” வணிகத்தில் சீனாவுக்கு 70 சதவீத பங்கு உண்டு. அது மட்டுமல்லாது தலை முடிக்கு உலகம் முழுவதும் கிராக்கி இருக்கின்றது. இந்தியாவில் மத வழக்கங்களின்படி முடி காணிக்கை செலுத்துவோர் அதிகம் என்பதால் தலைமுடிக்கான இலகுவான சந்தையாக இந்தியா இருக்கின்றது.

இந்தியாவில் திருப்பதியில்தான் அதிகமான முடி, காணிக்கையாகக் கொடுக்கப்படுகின்றது. நாளொன்றுக்குச் சராசரியாக 50 ஆயிரம் பேர் முடிக் காணிக்கை செலுத்துகிறார்களாம். காணிக்கை கொடுக்கப்படும் தலைமுடி ஒவ்வொரு மாதமும் ஏலம் விடப்படும். அதிக தொகை ஏலம் கேட்பவருக்கு முடி வழங்கப்படும். 2019ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் திருமலை தேவஸ்தானத்துக்கு முடிக்கற்றை மூலம் 74 கோடி ரூபா (இந்திய நாணய மதிப்பு) வருமானம் வந்துள்ளது என்றால் பார்த்துக் கொள்ளுங்கள்.

ஏலத்தில் எடுப்பவர்களே இந்த முடிக் கடத்தலில் ஈடுபடுகின்றார்கள் என்று சந்தேகிக்கப்படுகின்றது. ஆனால் தங்களிடம் ஏலம் எடுப்பவர்கள் விவரத்தை வெளியிட திருப்பதி தேவஸ்தானம் மறுத்து வருகின்றது. அத்தோடு முடிக் கற்றைகளை வாங்குவோர் அவற்றை எங்கு விற்க வேண்டும் என்று சொல்லத் தங்களுக்கு அதிகாரம் இல்லை என்று திருமலை

**இந்தியாவில் திருப்பதியில்தான் அதிகமான முடி, காணிக்கையாகக் கொடுக்கப்படு கின்றது. நாளொன்றுக்குச் சராசரியாக 50 ஆயிரம் பேர் முடிக் காணிக்கை செலுத்துகிறார்களாம். காணிக்கை கொடுக்கப்படும் தலைமுடி ஒவ்வொரு மாதமும் ஏலம் விடப்படும்.**

தேவஸ்தானம் கூறியிருக்கின்றது.

முடிக்கற்றைகளை வாங்கும் நபர் அவற்றை பிற நாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதற்கான அனுமதி வைத்துள்ளாரா அல்லது எங்கு அதை விற்கிறார் என்பதெல்லாம் திருப்பதி தேவஸ்தானத்துக்கு தொடர்பில்லாத விடயங்கள் என்று திருப்பதியின் செய்தித் தொடர்பாளர் கூறியிருக்கிறார். மியான்மர் எல்லையில் கடத்தல் தலைமுடி கைப்பற்றப்பட்ட விவகாரத்துக்கு திருமலை திருப்பதி தேவஸ்தானம்தான் பொறுப்பேற்க வேண்டும் என்று பல தரப்புக்கள் வலியுறுத்துகின்றன. ஆயிரக்கணக்கான பக்தர்களின் நம்பிக்கையோடு தொடர்புடைய ஒரு விடயத்தில் தங்களுக்கு எந்த தொடர்பும் இல்லை என திருமலை திருப்பதி தேவஸ்தான அதிகாரிகள் தெரிவிப்பது வெட்கப்பட வேண்டிய ஒன்று என்கிறன அங்குள்ள அரசியல் கட்சிகள்.

திருமலை திருப்பதி தேவஸ்தான ஒப்பந்த ஊழியர்கள் கூட்டமைப்பின் தலைவர் கருத்துத் தெரிவித்தபோது, “2006 2008 ஆண்டுகளில் முடிக் கற்றைகள் மூலம் 250 கோடி ரூபா (இந்திய நாணய மதிப்பு) வருமானம் பெற்றிருந்த நிலையில் இப்போது ஏன் அந்த வருமானம் குறைந்திருக்கிறது? திருமலை திருப்பதி தேவஸ்தானம் தனது பொறுப்பைத் துறக்க முடியாது. சமீபத்திய கைப்பற்றப்பட்ட மயிர்க் கற்றைகள் பல சந்தேகங்களை எழுப்பியுள்ளன “என்று கூறியிருக்கிறார்.

சட்ட மன்றத் தேர்தல் பரப்புக்கள் குறைய இந்த விவகாரம் பூதாகரம் எடுக்கலாம். ஏனென்றால் இது இது கடவுள் நம்பிக்கை சார்ந்த விடயம் என்பதால் மக்கள் மத்தியிலும், சமூக வலைத்தளங்களிலும் அதிகம் பேசப்படுகின்றது. ஆக இந்த விடயத்தில் இன்னும் அதிர்ச்சி தரக் கூடிய விடயங்கள் வெளியாகலாம்.

○ அகமது பைசல்

# கிளிகளின் இரத்தம் பச்சை

ஒரு 'நிமிடக்கதை'

வன்னியனார் வயலுக்குள் இறங்கி வேலை செய்துகொண்டிருந்தார். இன்றோடு இரண்டு நாட்களாகிவிட்டன. முதல் நாள் அதிகாலையையும், இரண்டாம் நாள் அதிகாலையையும் அவர் வேறுபடுத்திக் காட்டிய விதமே தனி. பக்கத்து வயற்காரர்களையெல்லாம் வியப்பில் மூழ்கடித்தது. முதல் நாள் காலையில் 101 கிளிகளும், 60 காகங்களும் மற்றும் சில கொக்குகளும் ஆகாயத்தில் பறந்தன என்றார். 'அதோ இன்னமும் வருகிறது கிளிகளின் பட்டாளம் என்றான் அருகில் நின்ற வயற்காரன்.

ஓமப்பா முதல்லை நான் சொல்றதைக் கேளு என்ரை வேலையெல்லாம் உட்டுப்போட்டு பறவைகளை எண்ணிக் கணக்கெடுக்கும் ஆர்வத்தில் இருந்துவிட்டேன். கிளிகளெல்லாம் காணிக்குள்ள இறங்கிவிட்டன. இதை காணிக்காரன் கண்டால் ஏசுவான் என்று பயந்துபோய் தொலைபேசியில் அவன் கூப்பிட்ட குரலுக்கு; வயலை உழுது நெல் விதைத்தேன் கிளிகள் முளைத்துவிட்டன முதலாளி என்றேன். என்றார் வன்னியனார்.

என்னைக் கண்ட மாத்திரத்தில் கிளிகள் சிறகை அசைத்து பறக்க முயற்சித் தன ஆனாலும் ஒரு கிளிக்கே னும் பறக்க மனமில்லை. அதுகள் கூடி இருந்து போடும் சத்தம் என்னவொரு அற்புதமப்பா. இப்ப இந்தக் கிளிக் காணிக்குள்ள இரண்டாவது நாளாக இறங்கி வேலை செய்கிறேன் என்றார்.

இரண்டாம் நாள் காலை ஆகாயத்தில் மான்கள் பட்டாளமும், யானைகள் பட்டாளமும் பறக்கத் தொடங்கின. இந்த முறை அவர் யானைகளையோ, மான்களையோ எண்ணிக் கணக்கெடுக்கும் எண்ணத்தில் இல்லை. மாறாக வயல் வரம்புகளில் நடந்து திரிந்தார். அப்போது வாடியில் ஒலித்துக்கொண்டிருந்த இலங்கை வானொலியில் ஒரு பாடல் ஒலித்து நிறைவுக்கு வந்தது. பாடல் நிறைவுக்கு வந்து சில நொடிகள் வானொலியும் பேசாமல் மௌனமாக இருந்தது. பிறகு; ஒரு முக்கிய அறிவிப்பு இன்று அதிகாலை மான்களும், யானைகளும் நடித்த சிறுவர்களுக்கான கார்ட்டுன் திரைப்படம் ஆகாயத்தில் ஒளிபரப்பாகிக் கொண்டிருக்கின்றது அனைவரும் ஆகாயத்தைப் பார்த்து மகிழுங்கள். என்ற அறிவிப்பு அந்த வானொலியில் ஒலித்தது.

அறிவிப்பைக் கேட்ட வன்னியனார் அவசரமாக வானத்தை அண்ணாந்து பார்த்தார். வானத்தில் “வணக்கம்” என்ற எழுத்து மட்டும் பெரிதாக இருந்தது. “டே…. ஏய்…மரைக்கார்…. இந்த வானத்தைப் பாருடோ…ஓ ஓலகம் அழியப்போகுதுடோ…. ஓ” என்று வன்னியனார் கூவென்றதில் பச்சை இரத்தம் ஒழுக கிளிகளெல்லாம் பறந்தன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சஞ்சீவி
11 ஏப்ரல் 2021

மருத்துவர் ப்ரியா கமலசிங்கம்
(யாழ்.போதனா மருத்துவமனை,
- சிலாபம் மாவட்டப்
பொது மருத்துவமனை)



# நலம் அறிய... மூடக்குவாதம் (Arthritis)

எனது அம்மாவுக்கு 62 வயது. வீட்டு வேலைகள், பூந்தோட்டப் பராமரிப்பு, செல்லப்பிராணி வளர்ப்பு, அதீத சமையல் என்ற விதத்தில் 24 மணிநேரமும் வேலை செய்தவாறு இருப்பார். இப்பொழுது அதிகாலையிலும் குளிர்காலங்களிலும் மூட்டுகளில் அதீத வலியால் அவஸ்தைப்படுகிறார். கைவிரல்களை நீட்டி மடக்குவதில் சிரமம். நடக்கும்போது டிக் டிக் என்று மூட்டுக்களில் சத்தமும் கேட்கிறது. இது எதனால் வருகிறது. அவர் மருத்துவ சிகிச்சை பெற்றாலும் வீட்டில் என்ன வழிமுறைகளை பின்பற்றி வலியைக் குறைக்கலாம்?'

**க.பிரியா**, வவுனியா.



வயது முதிர்வு என்றாலே முதலில் எட்டிப் பார்க்கும் நோய்களில் முதலிடத்தில் உள்ளது மூட்டுவலி.
உலக சனத்தொகையில் ஒரு வீதமானோர் முடக்கு வாதத்தால் பாதிக்கப்படுகின்றனர் என கருத்துக் கணிப்புக்கள் தெரிவிக்கின்றன.
பெண்களே ஆண்களைக் காட்டிலும் மும்டங்கு அதிகமாக பாதிக்கப்படுகின்றனர். முடக்கு வாதத்தை நாட்பட்ட மூட்டுவலியின் தொடர்ச்சி எனக் குறிப்பிடலாம். அதாவது பெரும்பாலும் இதுவளையக் கூடிய மூட்டுக்களில் உள்ள சதைப் பகுதி மற்றும் திசுக்களை பாதிப்பதன் மூலம் அதன் செயற்பாடுகளை குறைத்துவிடும். மேலும் நுரையீரல், இதயத்தை சுற்றியுள்ள பெரிகார்டியம், நுரையீரலை சுற்றியுள்ள ப்ளியூரா, கண்ணின் வெள்ளைப் பகுதியான ஸ்கிளிரா போன்ற இடங்களில் அழற்சியுடன் கூடிய வீக்கத்தை ஏற்படுத்தும்.

### அதிகமாக மூட்டுவாதத்தால் பாதிக்கப்படும் இடங்கள்

1. முழங்கால்
2. தோள்பட்டை மற்றும் முழங்கை
3. கண்கள் - (வறட்சி, கருவிழி வீக்கம், கண்ணின் வெள்ளைப் பகுதிக்கு செல்லும் இரத்தக் குழாய்களில் வீக்கம்)
4. கழுத்து மற்றும் தாடை
5. நுரையீரல் மற்றும் இதயம் (இவற்றுக்கு இரத்தத்தை கொண்டு செல்லும் குழாய்களில் வீக்கம் ஏற்பட்டு இரத்த ஓட்டம் தடைப்பட்டு, வீக்கம் மற்றும் இதயநோய் ஏற்படும்)
6. கைகள், மற்றும் மணிக்கட்டு
7. பாதம் மற்றும் கண்ணுக்கால்



### ஆர்த்ரைட்டிஸின் அறிகுறிகள்:

1. மூட்டுகளில் வலி ஏற்படும்,
2. மூட்டுகளை நீட்ட, மடக்க இயலாத தன்மை காணப்படும்.
3. காலையில் எழுந்தவுடன் இரண்டு மணி நேரத்துக்கு எந்த வேலையும் செய்ய முடியாது.
4. மூட்டுகள் சூடாக இருக்கும், தொட்டால் வலிக்கும்.
5. உள்ளேயும் வலி காணப்படும். இதனால் மூட்டை அசைக்கவோ, நீட்டவோ இயலாது.
6. மூட்டுகள் வளைந்து காணப்படும்.
7. காய்கறிகள் வெட்டுதல், சில பொருட்களை தூக்குதல், எழுதுவது, நாற்காலியிலிருந்து எழுந்திருப்பது,நடப்பது போன்ற செயல்களைச் செய்யும் போது ஏற்படும் அசைவுகளினால் மூட்டு இணைப்பு/ எலும்பு இணைப்புகளில் ஏற்படுகின்ற வலி அல்லது அழுத்தம் அதிகரித்தல்
8. இணைப்புகளில் வீக்கம், இணைப்புகள் வளையும் தன்மையை இழந்து விறைப்பாக காணப்படும்.
9. வீக்கம் கண்ட பகுதி சிவந்தும் வெப்பமாகவும் இருக்கும்.
10. தோல்:
முடக்குவாத முடிச்சுகள் (rheumatoid nodule) முடக்குவாதத்தின் ஒரு குறிப்பிடத்தக்கத் தோற்றமாகக் கருதப்படுகிறது. இது ஒரு வகையான அழற்சி வினைகளால் உருவானதாகும்

11.பிற அரிதான தோல் அறிகுறிகள்
தோல் சீழ்நோய் (Pyoderma gangrenosum)
கொழுப்பிழைய அழற்சி (Panniculitis)
கண்டு செந்தடிப்பு (erythema nodosum)
அங்கையச் செந்தடிப்பு (palmar erythema)
விரலிலுள்ள தோல் நலிவு
மருந்துகளினால் ஏற்படும் விளைவுகள்
பரவலான மெலிவு (மரஉரி தாள் போன்ற தோல்),
தோல் உடையுமை
சுவீட்டின் நோய்க் குறித்தொகுப்பு (Sweet's syndrome)

12.நுரையீரல்:
முடக்குவாத நோயாளிகள், கூடுதலாக நிலக்கரிப் புழுதிக்கு ஆட்படும்போது நுரையீரல் முடிச்சுகள் காணப்படுவதாக ,புடைச்சவ்வு ஊறணியும் (Pleural effusion) முடக்குவாதத்துடன் தொடர்புடையதாக உள்ளது. முடக்குவாத நுரையீரல் நோய் இவ்வாத நோயின் பிற சிக்கல்களுள் ஒன்றாகும். நான்கில் ஒரு பங்கு வாதநோயாளிகளில் முடக்குவாத நுரையீரல் நோய் உருவாவதாகக் கணக்கிடப்பட்டுள்ளது.

13.இதயம் மற்றும் குருதிக் குழல்கள் :
முடக்குவாத நோயாளிகள் தமனித் தடிப்பினால் (atherosclerosis) அதிகம் பாதிப்படுவதுமட்டுமல்லாமல் மாரடைப்பு, பக்கவாதம் (பாரிசவாதம்) ஆகிய நோய்களுக்கான இடரையும் அதிக அளவு பெறுகிறார்கள்
பின்வரும் சிக்கல்களும் நிகழக்கூடும்: இதயஉறையழற்சி (pericarditis), அகவிதயவழல் (endocarditis),
இடது இதயக்கீழறை செயலிழப்பு,
இதழ் அழற்சி (valvulitis),
பல முடக்குவாத நோயாளிகள் இதயவலி, மாரடைப்பின்போது ஏற்படும் நெஞ்சுவலியைப் போன்ற வலியை உணருவதில்லை.

## மூடக்குவாதம் வகைகள்

**ஒட்டியோ ஆத்தரைட்ஸ் (Osteo arthritis)**
முதுமையில் வரும் மூட்டு அழற்சி. இங்கு கசியிழையம் சிதைவடையும். பெரும்பாலும் மூட்டு மாற்று அறுவைசிகிச்சைக்கு இட்டும் செல்லும். பாதிக்கப்பட்ட மூட்டில் Crepitus என்ற சத்தம் கேட்கும். குளிர்காலத்தில் வலி அதிகரிக்கும்.


**ருமட்டாயட் ஆத்தரைட்ஸ் Rheumatoid arthritis**
1. பெரும்பாலும் பெண்கள் பாதிக்கப்படுவர்
2. மூட்டுவலி > 1 மாதம்
3. உடல்சோர்வு , காய்ச்சல்
4. கண்வீக்கம், இதயப் பாதிப்பு


**கீல்வாதம் GOUT**
யூரிக்கமிலம் எனும் உப்பு உடலில் அதிகரிப்பதால் ஏற்படுவது. > வாரங்களுக்கு மேற்பட்ட எலும்பு/ மூட்டுவலி.

**ஸ்கிலிரோடேர்மா Scleroderma**
தோல் இறுகிப் போகும். சிலருக்கு நுரையீரல், இதயம் போன்ற உள்ளுறுப்பு பாதிக்கும் சில நேரத்தில் தகுந்த சிகிச்சை அளிப்படாவிடில் உயிராபத்தில் முடியும்.

**லூப்பஸ் Lupus**
**செம்முருடு**
**பெண்கள் அதிகம் பாதிக்கப்படுவர்**
1. உடல் சோர்வு
2. மூட்டுவலி > 1 மாதம்
3. சொறிதல்
4. நீண்டகாலம் காய்ச்சல்
5. முகத்தில் வண்ணத்துப்பூச்சி வடிவில் அழற்சி
6. வெயில் ஒவ்வாமை
7. தலைமுடியுதிர்வு
8. மூச்சுவிடுகையில் மார்பில் வலி.

**முதுகெலும்பு முடக்குவாதம் Spondylo artritis**
முதுகெலும்பிலுள்ள மூட்டுக்கள் ஒன்றுடன் ஒன்று இணைந்து இறுகிப் போதல்
முதலில் முதுகுவலியில் தொடங்கி கழுத்து வலி வரை பரவும்
கால் மூட்டுக்களிலும் வலி தொடங்கும்
முதுகு கூன் விழும்
முற்றிய நிலையில் கண்களையும் பாதிக்கும்
பரம்பரையாக ஏற்படலாம்.






(18ஆம் பக்கம் பார்க்க)

## வீட்டில் மேற்கொள்ளக் கூடிய வலி நிவாரணிகளும் வாழ்க்கை முறை மாற்றியமைப்பும்

**1.எடை குறைவு நல்ல வழி**
உங்களுடைய கூடுதல் எடையானது, உங்களின் முழங்கால் மூட்டுகளில் சுமார் 4 மடங்கு அழுத்தத்தை தரும்.
எனவே சிறிய அளவிலான எடை குறைப்பு கூட உங்களுடைய முழங்கால் வலிக்கு நல்ல நிவாரணம் தரும்.
நீங்கள் ஒரு சில கிலோ கூடுதல் எடையைக் குறைத்தால் அது உங்களுடைய மூட்டுகளின் ஆரோக்கியத்தை மேம்படுத்தும். மேலும் அது உங்களுக்கு ஆர்த்ரிடிஸ் நோய் வரும் வாய்ப்பை சுமார் 30 சதவீதம் வரை குறைக்கும்.

**2.தவிர்க்க வேண்டிய உணவுப் பொருட்கள்;**
ஒரு சில உணவுப் பொருட்கள் ஆர்த்ரிடிஸ் நோயுடன் நேரிடையாக தொடர்புடையது. குறிப்பாக இரவு நிழல் குடும்பத்தில் உள்ள தாவரங்களான தக்காளி, கத்திரிக்காய், உருளைக்கிழங்கு மற்றும் மிளகு போன்றவை சிலருக்கு ஒவ்வாமை மற்றும் ஆர்த்ரிடிஸ் கோளாறுகளை அதிகரிக்கலாம்.

**3.கல்சியம் அவசியம்!!!**
எலும்புகள் சீராக வளர கல்சியம் சத்து அவசியம். கல்சியம் குறைபாடு ஏற்பட்டால், எலும்புகளின் வளர்ச்சி பாதிக்கப்படும். மேலும் விற்றமின் டி சத்து கிடைக்கப்பெறாதவர்களுக்கு வெறும் கால்சியம் மட்டும் உடலில் கிடைத்தால், கல்சியம் எலும்பில் சேராமல் கழிவு வழியாக வெளியே வந்துவிடும். எனவே கால்சிய குறைபாடு நீங்க பால், பன்னீர், கேழ்வரகு மற்றும் எள் ஆகியவைகளை உணவில் சேர்த்துக்கொள்ளலாம்.

**4.உடல் வலிமையை அதிகரிக்கும் உடற்பயிற்சி**
உங்களுடைய வளர்ச்சிதை மாற்ற செயல்முறையை அதிகரிக்கின்றது. அது உங்களுடைய உடலில் பல்வேறு அதிசயங்களை உருவாக்கும்.
எனவே, இங்கே கூறிய சில வழி முறைகளைப் பின்பற்றி உங்களுடைய ஆர்த்ரிடிஸ் நோயின் கடுமையை வீட்டில் இருந்தபடியே குறைக்கலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மௌன மொழி 42 இற்கான கவிதைகள்



தாய்ப் பறவை தன்
குஞ்சோடு கொஞ்சி
மகிழும் இல்லறத்தாள்
மகனே ஏழ்மையிலும்

உள்ளங்கலங்காமல்
உள்ளன்போடு காப்பேன்
ஊர்போற்றக் கல்வி ஒளி
ஊட்டி உறவு வாழ்த்த வைப்பேன்

*முல்லையூர் கர்மயோகி*

தரணியில் படரும் துளிர்விடும் கொடி
தாயாள் கரங்களில் தவழும் மலர்
பஞ்சுப் பாதம் பிஞ்சுக் கரங்கள்
கொஞ்சும் மழலை எழிலாய் வதனம்
வஞ்சம் இல்லா புன்னகை அழகு
வல்லமை கொண்டு வலிகள் சுமக்கும்
அன்பின் வடிவம் அன்னை இதயம்
கண்கள் காக்கும் இமைகள் போலே

*கார்த்திகாயினி*, வற்றாப்பளை

துயரங்கள் மறந்து சிரித்திடுவோம் மகனே
உயரங்கள் அடைந்திட வேண்டுமொன்றோ
வியத்தகு சாதனை புரிந்திட நீயுமே
முயன்றிடு என்றுமே மாநிலம் கூறுதே
பயத்துடன் வாழ்ந்த பரம்பரை இல்லையடா
சுயத்துடன் நிமிர்ந்துமே சுதந்திரம் காணுவோம்

***பரிதிகா றொபேட்***, ஈச்சமோட்டை

கூவும் குயிலின் இசையின் இனிமை
பேசும் மழலையின் இயலின் இன்பம்
விழிகள் நடனம் கலையின் அழகாய்
வலிகள் சுமந்த தாயும் மகிழ்ந்து
கோலம் காட்டும் புன்னகை வதனம்
மாயம் செய்யும் மயக்கும் சிந்தை
தாயின் கரங்கள் தவழும் மலரே
தீயாய் இருப்பாய் தீமைகள் எதிர்த்து

***ச.ரண்குமார்***, வற்றாப்பளை

**பரிசு பெறும் கவிதை**

**வட்டக் கருவிழிகள் அபிநயக்க**
**வதனமிரண்டும் நிலவாய் மொழிய**
**மழலை மொழி கேட்டு அதிசயிக்க**
**கனிவுடன் பார்வைகள் சங்கமிக்க**
**தாயும் சேயும் அகமிழந்து**
**அன்புக் கரம் நீட்டி உரிமையுடன்**
**பாசத்தால் உறவாடும் பொழுதுகள்**
**பாரினிலே காணும் சொர்க்கமே**

***சிவரம்யா***, யாழ்ப்பாணம்

அணிகலம் அணிந்த கையால்
அள்ளி முடித்த கொண்டையும்
தாய் பாதத்திற்கு இலக்கணமாய்
மலர்ந்த முகத்தோடு
மாலை அணிந்த பொற்கிண்ணத்தை
மார்போடு அணைக்கும் ஆசையுடன்
தளிர்கரம் பற்றும் – தாய்

***நிலா. இரா. மணி***, கொக்குவில்

நீ செய்யும் சேட்டையை
தடுக்க வந்தவளை
உன் கள்ளம் கபடம் அற்ற
பிஞ்சு முகத்தாள் ஈர்த்து
கனிவான மழலைப் பேச்சால்
கவர்ந்தது ஏனே!

***லக்சிகா***, யாழ்ப்பாணம்

பூவாய் மலர்ந்த புன்னகையாய்
புனிதக் காதல் சின்னமதாய்
குமுதம் விரிந்த அமுத வதனம்
குயிலைப் பழித்த குரலின் ஜனனம்
மழலை மொழியில் வலிகள் தளர்ந்து
மனதின் வயலில் செழுமை விளைந்து
உதிரப் பாலை சொரிந்த உறவு
சிசுவின் உயர்வில் சிறகை விரித்து

**க.விஜயன்,** வேலணை

சின்னஞ்சிறு மழலை தனை
தன் இரு கைகளாலும் கட்டியணைத்து
காதல் என்ற பூமழை சொறிகிறாள் அன்னை
இவரின் வாடியிருக்கும் வதனம் தனை
புன்னகை பூக்க செய்கிறது
பச்சிளம் குழந்தையின் ம்ழலை மொழிகள்
இருவருக்கும் இடையில் பிணைந்து இருப்பது
அன்பு என்ற ஒற்றை வார்த்தை

**ஆ.பாலமதுஜா**
யா/ மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை

அழகான பார்வை அன்பான பார்வை
உள்ளத்தில் கபடங்கள் இல்லாத பார்வை
அளவற்ற ஆனந்தம் அலைமோதும் பார்வை
களவாடி இதயத்தை மயக்கிடும் பார்வை
தாய்மையும் தூய்மையும் அகலாத பார்வை
வாய்மை உலகில் வரைந்திட்ட பார்வை

**றொபேட் சந்ததன்,** ஈச்சமோட்டை

**உங்கள் கவிதைகள் எங்கள்**
**கதவைத் தட்ட**
**வேண்டிய கடைசி நாள்:**
**16.04.2021**

*அனுப்ப வேண்டிய முகவரி:*
**உதயன் சஞ்சீவி**
**இல.361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.**
மின்னஞ்சல் முகவரி: *sanjeevi@uthayan.com*
0773165555

# மௌன மொழி 43






# 11 திருவள்ளுவரின் தேநீர்க்கடை

இ.சு.முரளிதரன்

பின்னிகழ்வுகளுக்கேற்ப தம்மைத் தகவமைத்துக்கொண்டு, மாற்று நுட்பத்தோடு வாழுகின்ற பண்பு மனிதர்களைக் காட்டிலும், ஏனைய உயிரிகளிடம் அதிகமாகவே காணப்படுகின்றது. குளிர்காலங்களில் பறவைகள் முன்னேற்பாடாகச் சில செயற்பாடுகளைச் செய்து தம்மைக் காத்துக் கொள்கின்றன.

குறிப்பிட்ட சில பறவைகள் குளிர்காலங்களில் வெப்பமான பிரதேசங்களை நோக்கி இடம்பெயர்கின்றன. வடமுனை ஆலா (Artic tern) உலகிலேயே அதிக தூரம் புலம்பெயரும் பறவையாகக் காணப்படுகின்றது.

பென்குயின் பறவைகள் ஒன்றின் உடலோடு மற்றொன்று ஒட்டிக் கொண்டு வெப்பத்தைக் கடத்திக் கதகதப்பைப் பேணுகின்றன.

றொபின் பறவை, தனது சிறகுகளுக்கு இடையே காற்றைத் தேக்கி வைக்கிறது. வளியானது அரிதிற்கடத்தியாகக் காணப்படுவதால் வெப்பக்கடத்தல் குறைவாகவே நிகழ்கிறது. இதனூடாக றொபின் பறவை குளிரில் இருந்து தன்னைப் பாதுகாத்துக் கொள்கின்றது.

திருவள்ளுவர் அறிவுடைமை என்ற அதிகாரத்திலே அமைகின்ற 429 ஆவது குறட்பாவில்,

**"எதிரதாக் காக்கும் அறிவினார்க்கு இல்லை**
**அதிர வருவதோர் நோய்"**

என்று குறிப்பிடுகின்றார். முற்கூட்டியே அறிந்து காக்கவல்ல அறிவுடையோர்க்கு பின்னர் நடுங்கச் செய்கின்ற துன்பமானது வந்துசேர்வதில்லை என்ற பொருளானது, குளிர்காலத்திலே வெகுநுட்பத்தோடு தம்மைக் காத்துக் கொள்கின்ற பறவைகளுக்கு மிகவும் பொருந்திப் போகிறது.

# வன்னித் தெருவெளி ...

(10ஆம் பக்கத் தொடர்ச்சி)

வந்தார். "பிள்ளையள் சாப்பாடு கேட்டு வந்த போது எனது வசதியீனம் காரணமாக கொடுக்காமல் அவர்களை திருப்பி அனுப்பிவிட்டேன். தயவுசெய்து ஒருவரை சாப்பிட எனது வீட்டுக்கு அனுப்ப முடியுமா?" என அவர் தயக்கத்துடன் கேட்டார். இவ்வாறு கேட்ட அந்தத் தாயின் வீட்டுக்கு, நெறியாளரே சென்றார். அங்கே மேய்ச்சல் காலங்கள் தவறவிடப்பட்ட அந்த அம்மாவின் வீட்டுக் கூரையிலே கிடுகுக ளுக்குப் பதிலாக ஈர்க்குகளே எஞ்சியிருந்தன. தமது கிழிந்த ஆடைகளை மறைப்பதற்காக மழையால் கரைந்து கொண்டிருக்கும் சுவருக்குப் பின்னால் இரண்டு வளர்ந்த பெண் பிள்ளைகள் ஒளிந்து கொண்டார்கள். ஆனால் விறாந்தைச் சுவரிலே ஒரு மாவீரரின் படம் தகரத்தால் அடைக்கப்பட்ட சிறு கூரையின் கீழ் பத்திரமாக மாட்டப்பட்டிருந்தது. அந்த அம்மாவின் கணவர் ஸ்ரீலங்கா இராணுவத்தால் சுடப்பட்டிருந்தார். தனது தந்தை சுடப்படும் போது நேரில் கண்ட அவரது ஒரேயொரு மகனும் மாவீரனாகிவிட்டான். இப்போது இரண்டு பெண்பிள்ளைகளோடு அந்தத் தாய் பெரும் வறுமையைச் சுமந்தவாறு வாழ்ந்துகொண்டிருந்தார். அந்தத் தாயின் துயரக் கதையால் பெரும் துன்பத்துக்குள்ளான கலைஞர்கள் தமது ஆற்றுகை முடிந்ததும் அந்தக் குடியிருப்பைச் சார்ந்த பல இளைஞர்களையும் தம்முடன் இணைத்துக்கொண்டு அந்தப் பகுதியின் பிரதேசப் பொறுப்பாளரின் உதவியையும் பெற்று அந்த அம்மாவின் குடிசையைத் திருத்தி அமைத்துக் கொடுத்ததோடு பொருண்மிய நிறுவனத்துடன் தொடர்பு கொண்டு அந்த அம்மாவின் ஒரு மகளுக்கு வேலை வாய்ப்பையும் பெற்றுக் கொடுத்தார்கள்.

இவ்வாறு தமது சொந்த வாழ்வின் துயரங்களையும் [illegible] பங்களையும் சுமந்தவாறு காலை முதல் இரவு வரை [illegible] வர்கள் தான் வன்னியின் தெருவெளி அரங்கக் [illegible] ணிலே நாடகம் செத்துக்கொண்டிருக்கும் போது [illegible] உலக நாடக அரங்கில் தூக்கி நிறு[illegible] பற்றி துறைசார்ந்த கல்வியியலா[illegible] வரை மேற்கொள்ளவில்லை. அ[illegible] பது போல் ஒரு சில நாடகங்களைப் ப[illegible] டி ருந்தால் தமிழ் நாடக அரங்கு எ[illegible] ஒரு காலத்தில் கிராமங்கள் தோறும் [illegible] நாடகங்களும் மக்களும் இரண்டறத் [illegible] நாடக அரங்கியலும் ஒரு கல்விய[illegible] களும் நாடக முறைமைகளுமே முத[illegible] தமிழ் நாடக ஆளுமைகள் புறக்க[illegible]. அது [illegible] லேயே இன்றை தமிழ் நாடக அரங்கி[illegible] அவலமான சாவுக்கு ஒரு [illegible] வையுடன் எழுதப்படும் இப்படியான நாடக நூல்கள் தான் காரணம். அறிவி[illegible] வளர்ச்சி ஏற்றத்தைத் தரவேண்டும். ஆனால் அரங்குசார் அறிவின் வள[illegible]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வித்துவான் பதில்கள்!





**வித்தூ... உங்கள் இறுதி ஆசை என்ன?**

கரிகாலன், உடுப்பிட்டி.

உலகக் கோப்பை, உலகக் கோப்பை என்கிறார்களே. அதிற் போட்டு ஒருவாய் சோறு சாப்பிட வேண்டும்.

**உங்கள் காதலிக்காக தாஜ்மஹால் கட்டுவீர்களா?**

சுதர்சினி, சண்டிலிப்பாய்.

செல்வி மஹால், லக்ஸ்மி மஹால் இப்படி ஏதாவது ஒரு திருமண மண்டபத்தில் தாலிதான் கட்ட முடியும்....



**அணில் கடித்த கனியை உண்ணலாமா?**

மதி. கோண்டாவில்.

உபாதைகள் ஏற்படாவிட்டால் சரி.



**திருமணத்தில் எந்தப் பொருத்தம் அவசியமானது?**

ஹரீஸ், தொண்டமானாறு.

மனப்பொருத்தம் தான். இல்லாவிடில் பிறகு நிறைய அடிகள் வாங்க நேரிடலாம்.

**வித்தூஸ் பல கோழிகளுடன் ஒரு சேவல் இருப்பதைப் பார்க்கப் பொறாமையாக இருக்கிறதே?**

சுமோகரன், சங்கானை

சேவலுக்குப் பின்னால் கறிச்சட்டி தயாராக இருப்பதை மறந்து விட்டீர்களா?

# முடக்குவாதம்....

(தொடர்ச்சி)

முடக்குவாதம் வெறும் எலும்பு தொடர்பான நோயல்ல.

அவதானமாக இருங்கள். மூட்டு தசைகள், இணைப்பு திசுக்களில் இது ஏற்படலாம். உடலின் பல்வேறு உறுப்புக்களை பாதிக்கக் கூடியது.

உதாரணம்: கண்முடக்குவாதம்

இதயம், நுரையீடல் போன்றவற்றுக்கு இரத்தத்தை கொண்டு செல்லும் இரத்தநாடி அழற்சி. இவ்வாறு 300-500 வகையான முடக்குவாத வகைகள் உள்ளன.

உடலின் கை, கால், தசை மூட்டுக்கள் என எங்கே யாவது வலி+வீக்கம் ஒரு மாதத்துக்கு மேலி ருந்தால் உடனடியாக மருத்துவரை நாடுங்கள்.

ஆத்தரைட்டிஸ் என்பது உடலில் உள்ள 170 இற்கும் மேற்பட்ட எலும்பு இணைப்புக்களில் ஏற்படக் கூடிய நோயைக் குறிக்கும்.

பொதுவாக முடக்குவாத நோயை முற்றிலும் குணப் படுத்த இயலாது. சர்க்கரை நோய்போல் கட்டுப் பாட்டுக்குள் மட்டுமே வைத்திருக்க முடியும். அதுவும். ஆரம்ப நிலையில் இருந்து மருத்துவம் செய்தால் மட்டுமே சாத்தியம்.

மூட்டு வாதத்துக்காக கொடுக்கப்படும் மருந்துகளை, பரிந்துரைத்த நாள்கள் வரை தொடர்ச்சியாக உட்கொள்ள வேண்டும். வலி குறைந்து விட்டது என நீங்களாகவே நிறுத்தக் கூடாது.

# சொற்சிலம்பம் போட்டி 42

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | | 2 | 3 | ■ | 4 | 5 | |
| | ■ | 6 | | 7 | | | ■ |
| 8 | 9 | | ■ | 10 | | ■ | 11 |
| 12 | | ■ | 13 | | | 14 | |
| ■ | 15 | 16 | | | ■ | 17 | |
| 18 | | | | ■ | 19 | | |
| 20 | | ■ | 21 | 22 | | ■ | |
| | ■ | 23 | | | | | ■ |

அனுப்புபவர் பெயர்:........................................

முழுமையான தபால் விலாசம்: ............................

..............................................................

கையொப்பம்:................................................

ஒவ்வொரு போட்டியிலும் ஏராளமான வாசகர்கள் ஆர்வத்துடன் கலந்துகொள்வதுடன், அவர்களில் பெரும்பாலானோர் முற்றிலும் சரியான விடைகளை அனுப்பி வருகின்றமையால் பரிசுக்கும் பாராட்டுக்கும் உரிய அதிர்ஷ்டசாலிகள் குலுக்கல் முறைமூலம் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.

## இடமிருந்து

1. இணங்கு 4. பாதைக்கு குறுக்காக இதன் வழியாக நீர் பாயும் 6. கோவில்களில் கடவுள் உருவத்தை நேரில் பார்த்து வணங்குதல் 8. பகுதி/ நீரின் ஆழத்தை அளவிடும் அலகு 10. அதிகமான/ பாரமான 12. வலிமை/ பலம் 13. தேவையற்ற வார்த்தை வெளிப்பாடு/ துணியை நீரில் கழுவுதல் 15. காமநோக்குடன் செயற்படுபவன். 17. ஒன்றுடன் மற்றொன்றைச் சேர்க்குமாறான ஏவல் 18. வெளிச்சத்தால் ஈர்க்கப்பட்டு விளக்கில் வீழ்ந்து மடியும் பூச்சி. 19. அனைத்து/ சகல 20. பனி பெரிய அளவில் பொழியும் மாதம் 21. குறிப்பிட்டதொன்றுக்கு மேலதிகமாக என்பதை விளக்கப் பயன்படுத்தப்படும் சொல். 23. பல வருடங்கள் என்பதை விளக்கும் ஒற்றைச் சொல்.

## மேலிருந்து கீழ்

1. உறைத்துத் தேடு 2. சமயம்/ யானைக்கு ஏற்படும் வெறித்தனம் 3. மூன்று 4. பூட்டாக்கல்/ மனதில் பதிதல் 5. தமது/ தங்களுடைய 7. சகோதரிகளின் கணவர்மார்களுக்கு இடையேயான உறவுமுறை. 9. பொதுமக்களது பார்வைக்கு வைக்கும் நிகழ்வு 11. வலிமை/ திறமை மிக்கவன் 13. நீங்குதல்/ விலகிச் செல்லல் [illegible] 16. கிரீடம் 18. விமான ஓட்டி 19. [illegible]

**சொற்சிலம்பம் போட்டி 40 க்கான விடைகள்**

**இடமிருந்து வலம்**

1. விவாகம் 4. பாதம் 6. வேட்டு 7. முல்லை 8. கடுக்கன் 10. வித 12. காவி 13. மாதிரி 14. பேய் 15. பாசி 16. தர 17. அணி 18. அதி 19. சம்சாரி 21. நகர 22. விசித்திரம்

**மேலிருந்து கீழ்**

1. விவேகம் 2. வாட்டு 3. கடுக்காய் 4. பால் 5. தலைவிதி 7. முன் 9. கவி 11. தரித்திரம் 13. மாசி 14. பேரம் 15. பாணி 16. தசம் 17. அரிசி 18. அகர 20. சாவி 21. நதி

சொற்சிலம்பம் போட்டி இல.42

பூர்த்தி செய்யப்பட்ட கூப்பன்கள்

**உதயன் சஞ்சீவி**

**இல.361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.**

என்னும் முகவரிக்கு

17.04.2021 இற்கு முன்னர் கிடைக்கத்தக்கதாக தபாலட்டையில் ஒட்டி அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

## போட்டி விதிகள்

- வாசகர் எவரும் சொற்சிலம்பம் போட்டியில் கலந்து கொள்ளலாம்.
- ஒருவர் எத்தனை கூப்பன்களையும் நிரப்பி அனுப்பலாம்.
- சஞ்சீவியில் பிரசுரமாகும் கூப்பன்களே போட்டிக்கு ஏற்கப்படும்.
- போட்டி தொடர்பாக ஆசிரியரின் தீர்ப்பே முடிவானதாகும்.
- வெற்றி பெறும் முதல் ஐந்து அதிர்ஷ்டசாலிகளுக்கு முறையே

ரூபா 300/=, ரூபா 250/=, ரூபா 200/=, ரூபா 150/=, ரூபா 100/=

பரிசாக வழங்கப்படும்.

**1 ஆம் பரிசு**

**சி.சித்திரா**

இல.21 A, கற்குழி வீதி, வவுனியா.

**2 ஆம் பரிசு**

**திருமதி. [illegible]**

இல.5 [illegible]

**3 ஆம் பரிசு**

**வேலு. [illegible]**

திருக்கேதீஸ்வரம் கோயில், திருக்கேதீஸ்வரம், மன்னார்.

**4 ஆம் பரிசு**

**திருமதி.வி.சுகன்யா**

உரும்பிராய் கிழக்கு, உரும்பிராய்.

**5 ஆம் பரிசு**

[illegible]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## காயங்களுடன் களமாடுகிறேன்

தேவதையவள் நினைவுகள்
தேன்வதையதன் சிற்றறைகள்
தேசாந்திரியாகி ஏகிடவே
தேள்முனைகளின் வரவேற்பு...

பலாச்சுளையுள் முளைவிட்ட கன்று
பதியமாகி மண்ணோடு பிணையாதே
பருவக்காதல்கட்டிளமை அவ்வாறே
பத்திரமாய் உறவாகி நிலையாதே...

தொடரிசையில் கண் கசிகையில்
படரும் மனக்காட்சிகள் என்றென்றும்
பதிவிறக்கமும் ஏற்றமுமாய் நகர
மதிமயங்கும் நொடியில் சில குரூரம்...

நகரும் என் காலக்கோட்டினில்
ஆங்காங்கே பல காயங்கள்
அவைகளை சில புன்னகையுடன்
சிகரம் நோக்கி...

பழனிநாதன் நிரோசன்!

## உன் காதலின் வடிவமாய்...

சற்றென என்னை
ஆட்கொள்ளும் ஒரு சுடர்
உன் காதலின் வடிவமாய்
என் நினைவுகளில்
படர்கின்ற அந்தப் புலரி
ஆன்மாவின் சுவாசத்தையும்
வதைத்து எறிகின்றது

என் தீரா பிரார்த்தனையில்
திளைத்திருக்கும்
குரல் கேட்கா தொலைவில் நீ
பெருங்கடல் சூழ்ந்து
வார்த்தைகள் மோதுகின்ற
அண்ட வெளியில்
அகப்படாத பேரருளை
புதிரின் சூட்சுமம்
சலனப்படுத்தி காத்திருக்கின்றது

மிஸ்ரா ஜப்பார்



## என் கானல் வெளிதனில்...

வெளிர்மஞ்சளில்
கவியும் அந்திக் கணங்கள்
அழுக்கின் கடைசி ஒழுகுதல்களில்
மெல்லிய விரல்களால்
பற்றுகிறது வன்மையாக

எதுவுமேயில்லாத சூனிய வெளிகளில்
உறைந்து போகிறது கானல்கள்
அப்போதே
மொட்டவிழ எத்தனிக்கும் மலரைத்
தழுவத் தவிக்கிறது பட்டாம்பூச்சி

விழியில்லாப் பறவைச்சிறகுகள்
ஊடுருவி நீலத்தில் கரைகின்றன
பிடரி சிலிர்க்கும் ஆயுள்
அணுக்களின்
வெம்மைக்கு குளிர்மை
பரப்பி கிளை நீட்டுகிறாய்
ஆசுவாசமாய்
அருகமர்கிறது என் நிழல்

கயூரி புவிராசா

## ஏது என்னுலகு!

ஏது என்னுலகு
எங்கது உள்ளது
காரிருளின் கரையிலா
கரு முகிலின் நடுவிலா
ஒப்பற்ற ஒளியிலா
ஓர் ஓலைக் குடிலிலா...

வந்தவர் போனவர்
இதுகாலும் பலர்
வாழ்வெனும் பிம்பத்துக்குள்
வசப்பட்டவர்கள் சிலர்
எனினும் என்னுலகு
ஏதோவொரு இருண்மையாய்...

ஆறறிவு ஜீவன்களில்
அகப்படாத என்னுலகு
அதீத மேன்மைக்காய்
அன்றாடம் கொள்கிறது தவம்
கடல்மேல் சிறு துரும்பாய்
கானல் நீரின் பரிதவிப்பாய்

தூரத்தில் சில உருவங்கள்
நிச்சயம் ஜடங்கள் அல்ல
அசைகின்றன, குழைகின்றன
என் நாய்கள் என் நாய்களேதான்
இறைவா நீ இருப்பாயெனில்
இவ்வுலகேனும் எஞ்சட்டும்

ஆர்.பிரகாஷ்



## அன்னையின் மொழி கேளாய்...

பொன் மனம் கொண்ட என் மகனே உன்
அன்னையின் மொழி கேளாய்
உன் மனம் ஒன்றே உள்ளொளியாய் அந்த
ஒலியதன் வழி வாழ்வாய்

தன்னிகரில்லாத் தாய் மண்ணே அது
உன்னுயிர் போலாகும்
இன்னலின் போதும் மறவாது தாய்
மண்ணினை மனம் கொள்வாய்

இன்மொழி பேசு என்நாளும் நீ
எவருக்கும் உறவாகும்
நன்மைகள் செய்வாய் நாளெல்லாம் வெற்றி
நாயகன் நீ யாகும்.

புன்னகை ஒன்றே ஆயுதமாய் எப்
போதிலும் பகை வெல்வாய்
மின்னலைப் போலே உறவாகி பிறர்
நேர்மைக்கு வழி செய்வாய்

தன்னலம் கருதா மனம் தானே ஒரு
தாழ்விலும் வாழ்வு தரும்
உன்னையே உலகம் தேடி வந்து மிக
உதவிடும் மேன்மை வரும்

அன்பினில் யாரும் இணைவதுவே நல்
ஆனந்தக் கலையாகும்
பண்பினில் உயர்ந்து பழகுவதே மன
பக்குவ நிலையாகும்

உண்மையைப் பேசி வாழ்வதுவே தூய
உள்ளத்தின் நெறியாகும்
தண்ணளி நிலவாய் பிறர்க்குதவும் பண்பு
தர்மத்தின் குறியாகும்.

கண்ணிலும் மேலாய் கொள்கையினை
எண்ணி காப்பதும் கடனாகும்
விண்ணிலும் பெரிதாய் மேலுயரும் வாழ்வு
வெற்றியின் படி நகரும்

இளையூர் கவிராயர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆரபி




# அடையாளத்துக்காக போராடும் சாமானியன்

வழக்கமாகவே அரசியல் சார்ந்த கதைக்களம் என்றால், திரையில் ரத்தம் தெறிக்குமளவுக்கு வன்முறைக்காட்சிகள் நிறைந்திருக்கும். ஆனால் தொடங்கியதில் இருந்து முடியும்வரை வாய் நிறையச் சிரிப்போடு, 'சீரியஸான' அரசியல் விடயங்களை அநாசயமாகச் சொல்லிச் சென்றிருக்கும் படம் தான் 'மண்டேலா'.

அறிமுக இயக்குநர் மடோன் அஷ்வின் இயக்கத்தில் யோகி பாபு நடித்துள்ள மண்டேலா திரைப்படம், வழக்கம்போல கொரோனாவின் தாக்கத்தால் திரையரங்குகளில் வெளியாக முடியவில்லை. எனவே ஸ்டார் விஜய் தொலைக்காட்சியிலும், பின்னர் நெட்பிளிக்ஸ் தளத்திலும் வெளியானது. தமிழக சட்டசபைத் தேர்தல் காலத்தில் இந்தப் படம் வெளியானமை, அரசியல் அரங்கிலும் ஒரு தாக்கத்தை ஏற்படுத்தவே செய்தது.

சூரங்குடி என்கிற ஒரு கிராமம், அது வடக்கூர், தெக்கூர் என இரண்டு சாதிகளாக பிரிந்து கிடக்கிறது. அந்த ஊரில் தலைவருக்கான உள்ளாட்சி தேர்தல் நடைபெற, அந்த ஊர் மக்களால் ஒடுக்கப்பட்டுள்ள சிகை அலங்காரம் செய்யும் நெல்சன் மண்டேலா (யோகிபாபு), யார் வெற்றியாளர் என்பதை தீர்மானிக்கும் ஒருவராக மாறுகிறார். மண்டேலாவின் ஒரு வாக்குக்காக என்னவெல்லாம் நடக்கிறது? இறுதியில் வெற்றி பெற்றது யார்? என்பதை வைத்து மீதமுள்ள கதை சுவாரசியமாக நகர்கிறது.

குறும்படங்களை இயக்கி வந்த மடோன் அஷ்வின், மண்டேலா படத்தின் மூலம் பெரிய திரையில் இயக்குநராக அறிமுகமாகியுள்ளார். முதல் படத்திலேயே தனது தெளிவான சிந்தனைகளின் மூலம் கவனிக்க வைக்கிறார். தற்போதுள்ள அரசியல் சூழலை நம்மிடையே திணிக்காமல் கதையோடு இயல்பாக கொண்டு சென்று சிந்திக்க வைக்கிறார். மொத்தத்தில் தான் சொல்ல வந்ததை மிகக் கச்சிதமாக சொல்லியுள்ளார். இயக்குனர் மடோன் அஷ்வினுக்கு பிரமாதமான தொடக்கமாக அமைந்துள்ளது இந்தப் படம்.

நெல்சன் மண்டேலாவாக கதைநாயகனாக வரும் நடிகர் யோகிபாபு வழக்கம் போல நகைச்சுவைக் காட்சிகளில் எந்த வித குறையும் இல்லாமல் நடித்துள்ளார். நாயகனாக இதற்கு முன் சில படங்களில் நடித்திருந்தாலும் இந்தப் படத்தில் தனது கதாபாத்திரத்தை உள்வாங்கி தான் ஒரு தேர்ந்த கலைஞன் என்பதை யோகி பாபு நிரூபித்திருக்கிறார். பல விருதுகளை இந்த படத்துக்காக யோகிபாபு வெல்வார் என எதிர்பார்க்கலாம்.

சங்கிலி முருகன், ஜி.எம்.சுந்தர், கண்ணா ரவி ஆகியோர் முக்கியமான கதாபாத்திரத்தில் யதார்த்தமான நடிப்பை வெளிப்படுத்தியுள்ளனர். தபாலக அலுவலராக வரும் ஷீலா ராஜ்குமார் கவனிக்க வைக்கிறார். எந்தப் கதாபாத்திரமும் தேவையில்லாமல் தோன்றியது போலில்லாமல் சரியான பங்களிப்பையே வழங்கியுள்ளனர்.

கிர்தாகான் என்று யோகிபாபுவுடன் கூடும் செய்யும் சிறுவனின் சில்மிஷம் சூப்பர் .

படத்துக்கு பரத் சங்கரின் இசை பக்கபலமாக அமைந்துள்ளது. ஒளிப்பதிவாளர் வித் அய்யண்ணா படத்தில் வரும், கிராமத்தை நேர்த்தியாக படம்பிடித்துள்ளார். வசனங்களும் ரசிகர்களை கவர்ந்திழுக்கின்றன.

ஆங்கங்கே கதையின் வேகத்தில் சிறிது தொய்வு ஏற்பட்டாலும் ஃபிலோமின் ராஜின் எடிட்டிங் படத்தை தூக்கி நிறுத்துகின்றது.

யோகி பாபுவுக்கு எத்தனையோ பெயர்களை யோசித்து கடைசியில் நெல்சன் மண்டேலா எனப் பெயர் சூட்டுகிறார் ஷீலா. அப்போது "மண்டேலா யார்? என்று யோகி பாபு கேட்கிறார். அதற்கு ஷீலா "நீ எப்படி உன் அடையாளத்துக்காக போராடுகிறாயோ அதே போன்று அவரும் தன் இனத்தின் அடையாளத்துக்காகப் போராடியவர்" என்று சொல்லும் ஒரு காட்சியே போதும், மண்டேலா படத்தின் சிறப்பைச் சொல்ல.






# வாளேந்திய வீரன்

ஒடுக்கப்பட்ட தனது கிராமத்தின் உரிமைகளை மீட்க வாளேந்தும் வீரனின் புராணமே , மாரி செல்வராஜ் இயக்க தனுஷ் நடிப்பில் வெளியாகியிருக்கும் 'கர்ணன்'.

பொடியன் குளம் என்ற சிறிய கிராமத்தை ஒடுக்குகிறது அருகிலிருக்கும் மேலூர் கிராமம். பேருந்துகூட நிற்காத அந்தக் கிராமத்தின் உரிமைகளை மீட்டெடுக்க நெஞ்சை நிமிர்த்துகிறது அதன் இளம் தலைமுறை. வாளேந்தும் கர்ணனை தங்களின் மீட்பராகப் பார்க்கும் கிராமம், ஒரு கட்டத்தில் அதிகாரத்துக்கு எதிராகவும், சாதிய ஒடுக்குமுறைக்கு எதிராகவும் திமிறி எழுகிறது. இந்த மாபெரும் யுத்தத்தின் இறுதியில் வென்றது காவல்துறையின் அதிகாரமா மக்களின் போராட்டமா என்பதை அரசியலும் அழகியலும் கலந்து சொல்லும் படமே 'கர்ணன்'.

'பரியேறும் பெருமாள்' மூலம் இரு தரப்புக்குமான ஓர் உரையாடலைத் தொடங்கிவைத்த மாரி செல்வராஜின் இரண்டாவது படம் 'கர்ணன்'. தமிழகத்தின் தென் மாவட்டங்களில் நிகழும் சாதியப் பிரச்சினைகள், எளிய மக்களிடமிருந்து பறிக்கப்படும் உரிமைகள், இதில் கலந்திருக்கும் அரசியல் என அனைத்தையும் சிறப்பாக பதிவு செய்திருக்கிறார் இயக்குநர். காலங்காலமாக ஒடுக்கப்படும் ஒரு சமூகம் வன்முறையை எதிர்க்க வாள் ஏந்த அதனால் ஏற்படும் அதிர்வுகளை அதற்குரிய பதைபதைப்புடன் படமாக்கியிருக்கிறார்.

கர்ணனாக தனுஷ். 'அசுரன்' படத்துக்காக இரண்டாவது தேசிய விருதை வாங்கியிருப்பவருக்கு மீண்டும் அதே போன்றதொரு கனமான கதாபாத்திரம். சாரத்துடன் ஊரில் திரியும் தைரியமான இளைஞன். தன் மக்களுக்கு அநீதிகள் நடக்க, தன்கிராமத்தை அதிகார வர்க்கம் இழிவுபடுத்த, அதனால் கோபம் கொண்டு எழுவது, நேசித்தவர்களின்இழப்பைக் கண்டு வருந்துவது என தன் நடிப்பில் பல பரிமாணங்களை வெளிப்படுத்தியிருக்கிறார் தனுஷ்.

'வாள் தூக்கி நின்னான் பாரு' என்ற வரிக்கு ஏற்றவாறு வரும் காட்சிகள் அனைத்திலும் நம் மனதில் நிற்கிறார். இன்னொரு தேசிய விருது காத்திருக்கிறது கர்ணா!

படத்தின் மற்றொரு முக்கிய பாத்திரம் எமராஜாவாக வரும் லால்.

இதுவரை வணிகப் படங்களில் வில்லனாகத் திரிந்தவருக்குப் பல காலம் கொண்டாடப்படும்படியான ஆழமான பாத்திரம். வேறு மொழி வேறு கலாசாரம் வேறு வாழ்வியல் என்பதெல்லாம் வெளிப்படாதவாறு பொடியன் குளத்தின் எமனாகவே வாழ்ந்திருக்கிறார்.

வயது வித்தியாசம் பார்க்காத நண்பனாக, அதே சமயம் பல இடங்களில் பொறுப்பான தாத்தாவாக என அத்தனை எதார்த்தமான பாத்திரப்படைப்பு. தன் மஞ்சனத்திக்காக உருகும்போதும், கர்ணனுக்கு வழிகாட்டும் குருவாக மிளிரும்போதும், வெள்ளாந்தியாக திட்டுவாங்கும்போதும் நடிப்பில் தனி முத்திரை பதிக்கிறார். உச்சந்தலை முத்தமிட்டு வீரநடை போட்டுவரும் அந்தக் காட்சி தமிழ் சினிமா இதுவரை பதிவு செய்யாத காதல் கவிதை!

காவல்துறை அதிகாரியாக நட்ராஜ் (நட்டி), கர்ணனின் அக்காவாக லக்ஷமிப்ரியா சந்திரமௌலி, அரசியல்வாதியாக அழகம்பெருமாள், யோகிபாபு, கர்ணனின் காதலி திரௌபதையாக மலையாள நடிகை ரஜிஷா விஜயன், சண்முகராஜன், கௌரி கிஷன், ஜி.எம். குமார், 'பூ' ராமு எனப் பல தெரிந்த முகங்கள் தங்களின் பணியைச் சிறப்பாகச் செய்திருந்தாலும் அவர்களையும் தாண்டி நடிப்பில் மின்னுகிறார்கள்கிராமத்து மனிதர்கள். 'கோழிக் குஞ்சு' பாட்டி, குதிரை சிறுவன், தனுஷுடன் நிற்கும் ஊர் இளைஞர்கள், பஸ் மேல் கல் எறியும் சிறுவன் என எல்லா பாத்திரங்களும் மனதில் நிற்கின்றன.

புராணக் கர்ணனுக்குப் பலம் கவச குண்டலம் என்றால் இந்தக் கர்ணனின் பலம் தேனி ஈஸ்வரின் ஒளிப்பதிவும் சந்தோஷ் நாராயணின் இசையும். 'கண்டால் வரச் சொல்லுங்க', 'மஞ்சனத்திப் புராணம்', 'தட்டான் தட்டான்' என பாடல்களின் ஒளிப்பதிவில் அத்தனை அழகியல். குறிப்பாகப் பதைபதைப்பைக் கிளப்பும் 'கண்டால் வரச்சொல்லுங்க' பாடலில் தோன்றும் அந்தக் கிராம மனிதர்களின் முகங்கள் இறுதிவரை நம் மனதிலிருந்து அகல மறுக்கின்றன.

கலை இயக்குநர் ராமலிங்கத்தின் உழைப்பு, 90களின் அச்சு அசல் கிராமம் ஒன்றை நம் கண்முன்னே நிறுத்தியிருக்கிறது.

இறந்தவர்களைத் தெய்வமாகக் கும்பிடும் வழக்கம், நாட்டார் தெய்வ வழிபாடு, அது தொடர்பான சடங்குகள் போன்றவை தமிழ் சினிமாவில் புதியதொரு பதிவு. தலை வெட்டப்பட்டு இருக்கும் பௌத்த சிலை, தலையில்லா சுவர் ஓவியம், பேருந்து தொடர்பான வன்முறைக்குப் பின்னால் ஒளிந்திருக்கும் அரசியல், பெயர்களை வைத்துப் பேசும் சாதி அரசியல், குதிரையில் வலம் வரும் கர்ணன், கால் கட்டப்பட்டுச் சுற்றும் கழுதை, படம் நெடுக எல்லாக் காட்சிகளிலும் தோன்றும் விலங்குகள் எனப் படம் முழுவதும் ஏகப்பட்ட குறியீடுகள். ஆனால் இவை எதுவும் துருத்திக்கொண்டு தெரியாமல் கதையின் போக்கோடே வருவது படத்தின் பலம்.

படத்தின் பெரிய குறை அதன் நீளம். குறிப்பாக முதல் பாதியின் தொடக்கத்தில் அந்த கிராமத்தின் வாழ்வியல், அந்த மனிதர்களின் வாழ்க்கை முறை போன்றவற்றை நீளமாகப் பதிவு செய்திருப்பது சற்றே அயர்ச்சியை ஏற்படுத்துகிறது. ஆனாலும், மின்னல் வேகத்தில் நகரும் இரண்டாம் பாதி அதற்கு ஈடு செய்திருக்கிறது.

இப்படியொரு ஆழமான அரசியல் படத்தில் பெண் பாத்திரங்களுக்கு உரிய முக்கியத்துவம் கொடுக்கப்பட்டிருந்தாலும் நாயகி பாத்திரத்துக்குக் கர்ணனைக் காதல் செய்வதைவிட வேறு எதுவும் வேலையில்லை. ஒடுக்கப்பட்ட சமூகம் அவர்களுக்கான உரிமைகளைப் பெற ஒன்றாகப் போராடாமல் மீட்பராக வரும் நாயகனின் பின்னால் நிற்பது வழக்கமான தமிழ் சினிமா பாணியே!

இயக்குநர் மாரி செல்வராஜ் மற்றும் மொத்தப் படக்குழுவும் 'கர்ணன்' படத்துக்குப் போட்டிருக்கும் உழைப்பு அளப்பரியது. தமிழ் சினிமாவில் பேசப்படாத மனிதர்களின் கதைகளைப் பேசும் படங்களில் மிக முக்கியமானதொரு படம் இந்த 'கர்ணன்'.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதலாம் பக்கத் தொடர்ச்சி


கொக்கடிச்சான்குளம்

## கொக்கச்சான்குளம்

வவுனியாவின் எல்லைக்கிராமங்களில் ஒன்றான கொக்கச்சான்குளம் சில வருடங்களுக்கு முன்னர் வரை தமிழ் மக்களின் பூர்வீகப் பூமி. ஆரம்பத்தில் கொக்கடிச்சான்குளம் ( கொக்கு அடிச்சான் குளம்) என்று அழைக்கப்பட்டுவந்த இந்தப்பகுதி, காலப் போக்கில் மருவி கொக்கச்சான்குளம் என்று அழைக் கப்படலாயிற்று. வளம் மிக்க பிரதேசமான இங்கு வற்றாத குளம்,250 ஏக்கருக்கும் மேற்பட்டவயல்நி லங்கள்,குடியிருப்புக் காணிகள் என்பனவெல்லாம் தமிழ்மக்களுக்கே சொந்தமானதாகவிருந்தன. இங்கு விவசாயச் செய்கையில் ஈடுபட்டுவந்த மக் கள் செழிப்பாக வாழ்ந்தனர்.காலப்போக்கில் போர் காரணமாக இடம்பெயர்ந்த மக்கள் பல்வேறு பகு திகளுக்கும் பிரிந்து சென்றுவிட, கொக்கச்சான்கு ளம் பகுதி பற்றைக்காடாக மாறியது. இதனைச் சாதகமாகப் பயன்படுத்திய அன்றைய ஜனாதிபதி மஹிந்த, அந்தப் பகுதியில் சிங்கள மக்களை குடி யேற்றுவதற்கான காரியங்களை முன்னெடுத்தார்

## குளத்தை புனரமைத்த படைகள்

போர் ஒய்ந்திருந்தது. மக்கள் அகதி முகாம்க ளில் அடைக்கப்பட்டிருந்தனர். போரின்வலிக ளும்,வடுக்களும் ஆறுவதற்கு முன்பாக 2010ஆம் ஆண்டு கொக்கச்சான் கிராமத்தில் அமைந்துள்ள குளத் தின் அணைக்கட்டு இராணுவத்தால் புனரமைப்புச் செய் யப்பட்டது. உரிய அரச திணைக்களங்களுக்கு தெரியாம லேயே இந்தப் புனரமைப்புப் பணிகள் இரவு பகலாக இடம் பெற்றன. குளக்கட்டு மீளமைக்கப்பட்ட கையோடு 2010 ஆம் ஆண்டின் பிற்பகுதியில் தென்பகுதியில் இருந்து 65 சிங்களக்குடும்பங்கள் முதற்கட்டமாக இங்கு குடி யேற்றப் பட்டன. அவர்களுக்கு தற்காலிக காணிஉறுதிகளும் அந்தக் காலப்பகுதியில் வழங்கப்பட்டன. கொக்கச்சானின் பூர்வீ கக்குடிகளான தமிழ்மக்கள் அகதிமுகாம்களில் முடக்கப் பட்டிருந்த காலத்திலேயே இந்தச் சிங்களக் குடியேற் றம் அவசர அவசரமாக நிறுவப்பட்டது. காலப் போக்கில் இதனை அண்டிய பகுதிகளில் நந்தி மித்திரகம,நாமல்கம,சலினிகம போன்ற உபகுடியேற்றங்களும் தோன்றின.

## தடுக்கப்பட்ட ஆக்கிரமிப்பு

கொக்கச்சான்குளம் மீதான ஆக்கிரமிப்பு இன்று நேற்று ஆரம்பமாகியதல்ல.1985 ஆம் ஆண்டே அதற்கான அத்திபாரம் போடப்பட்டு ,அந்தப் பிரதேசத்தினை ஆக்கிரமிப்பதற்கான நடவடிக் கைகள் முன்னெடுக்கபட்டன. எனினும் அன் றைய தமிழ் அரசியல்வாதிகளின் கடும் எதிர்ப்பு மற்றும் ஆயுதப்போராட்ட இயக்கங்களின் கை ஓங்கியிருந்தமையால் சிங்கள அரசுஅதிலிருந்து பின்வாங்கியிருந்தது. ஆயுதப்போராட்டம் மௌனிக்கச் செய்யப்பட்டதன் பின்னர் மீண் டும் கொக்கச்சான் குளத்தை கபளீகரம் செய்யும் திட்டம் வேகமெடுக்கத்தொடங்கியது.




## விஸ்தரிக்கப்பட்ட குடியேற்றம்

தற்போது வவுனியா வடக்கு பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட வெடி வைத்தகல் தமிழ்க்கிராமசேவகர் பிரி வுடன் மற்றொரு தமிழ்க்கிராமமான கோவில்புளியங்குளத்தையும் சேர்த்து போகஸ்வெவ1,2,கம்பிலிவெவ,வெக ரதென்ன என்ற சிங்களகுடி யேற்றக்கி ராமங்கள் இணைக்கப்பட்டுள்ளன. நிகழ்காலத் தரவுகளின் அடிப்படை யில் வெடிவைத்தகல் கிராமசேவகர் பிரி வில் 478 குடும்பங்களை சேர்ந்த 1520 பேர்வசித்துவருகின்றனர்.

அந்தப் பிரிவில் வெடிவைத்தகல் மற் றும், கோவில்புளியங்குளத்தில் 19 தமிழ்க் குடும்பங்கள் மாத்திரமே பதிவு செய்துள்ள நிலையில், மேற்குறிப் பிட்ட சிங்களக் கிராமங்களில் 459 குடும்பங்களை சேர்ந்த சிங்கள மக்கள் வசித்து வருகின்றனர்.இந்தப்பகுதிக்கே ஜனாதிபதி கோத்தாபய ஏப்ரல் 3 ஆம் திகதி வந்திருந்தார்.

## சூழ்ச்சிக்கு பின்னால்..

வெடிவைத்தகல் என்ற தமிழ்க் கிராமத்துடன் போகஸ்வெவ இணைக்கப்பட்டுள்ளமைக்கு பின்னாலும் அரசாங்கத்தின் சூழ்ச்சி புதைந் துள்ளது. தமிழ்மக்களின் எல்லைக்கிராமங்க ளான வெடிவைத்தகல் ,கோவில்புளியங்கு ளம் பகுதிகளிலிருந்து போர்ச்சூழல் காரண மாக தமிழ்மக்கள் இடம்பெயர்ந் துள்ளநிலையில் தற்போது அங்கு வெறும்19 குடும்பங்களே பதிவில் உள்ளன.அதிலும் 10 குடும்பங்களே அந்தப் பகுதியில் தற்போது வசித்து வருகின்றன .

வெடிவைத்தகல் பகுதியில் தமிழர் கள் எவருமே தற்போது வசிக்காத நிலையில் விவசாயிகள் மாத்திரம் அங்கு சென்று வருகின்றனர்.வெடி வைத்தகல்லில் இருந்து இடம்பெ யர்ந்தமக்கள் கடந்த மாதம் தமது பூர்வீகக் காணிகளை துப்புரவாக்கி குடியேறச்சென்ற போது இராணு வமும் வனவளத் திணைக்களமும் அவர்களைத் தடுத்து நிறுத்தி அச்சு றுத்தியிருந்தனர். துப்புரவாக்குவ தற்காக பிரதேச செயலாளரால் வழங்கப்பட்டிருந்த அனுமதிக் கடிதத்தை இராணு வத்துக்கு காண்பித்தபோதும் இராணுவம் அதனை ஏற்க மறுத்துவிட்டது.இவ்வாறான செயற்பாடுகள் மூலம் காலப்போக்கில் அந்தப்பகுதியையும் கப ளீகரம் செய்து சிங்களக்குடியேற்றங்களை விஸ் தரிக்கவே , இப்படி தமிழ்க் கிராமங்களோடு சிங்களக் கிராமங்களின் இணைப்பை மேற் கொண்டிருப்பதாக அந்தப் பகுதியின் பூர்வீக தமிழ் மக்கள் சந்தேகிக்கின்றனர். போகஸ் வெவவுக்கு வந்த ஜனாதிபதி, "தொல்பொ ருள் மரபுரிமைகளைபாதுகாக்கும் வகை யில் விகாரைகள் புனரமைக்கப்பட வேண்டும்" என்றும் சொல்லிவிட்டுச் சென்றமை இந்தச் சந்தேகத்தை இன் னும் அதிகப்படுத்துகின்றது.

## 10 சிங்கள உறுப்பினர்கள்

தமிழர் பகுதிகளில் முன்னெடுக்கப்பட்டுள்ள சட்ட விரோதக் குடியேற்றங்களால் வவுனியா வடக்கு பிர தேச சபையும் கையை விட்டுப் போய்க்கொண்டிருக் கிறது. 2018 ஆம் ஆண்டு இடம்பெற்ற தேர்தலில் 10 சிங்கள உறுப்பினர்கள் அங்கு தெரிவு செய்யப்பட் டுள்ளனர். வவுனியா வடக்கு பிரதேசசபை 14 வட் டாரங்களை கொண்டுள்ளது.அவற்றில் கயபாபுர,கல் யாணபுர,ஏத்தாவெட்டுனுவெல,சம்பத்நுவர போன்ற நான்கும் முழுமையாக சிங்கள வாக்காளர்களை உள்ளடக்கியுள்ளன. மேற்குறித்த 4 வட்டாரங்களின் வாக்காளர்களும் வவுனியாத் தேர்தல் காரியாலயத் துடன் இணைக்கப்பட்டுள்ளனர்.ஆயினும் நிர்வாக ரீதியாக முல்லைத்தீவு மாவட்டத்தின் வெலிஓயா பிரதேச செயலர்பிரிவுக்குள் அந்தகிராமங்கள் இருக் கின்றன என்பதும் குறிப்பிடத்தக்கது.




## போகஸ்வெவ வட்டாரம்

மேற்கூறிய நான்குவட்டாரங்களை விட ஐந்தா வதாக(புதிதாக) உருவாக்கப்பட்ட கலாபோகஸ் வெவ பகுதியுடன் தமிழ் மக்களின் எல்லைக் கிராமங்களான வெடிவைத்தகல்,கோவில்புளி யங்குளம்,ஊஞ்சல்கட்டி போன்றவை இணைக் கப்பட்டு ஒரு வட்டாரமாக உருவாக்கப்பட்டது. போகஸ்வெவ கிராமத்தில் 350 சிங்களவாக்குகள் பதிவுசெய்யப்பட்டுள்ளன. மற்றைய மூன்று தமிழ்க்கிராமங்களிலும் 175 வாக்குகளே இருக் கின்றன. இதனால் அந்தத் தேர்தலில் சிங்களப்பி ரதிநிதி ஒருவரே வெற்றி பெற்றிருந்தார், அவர் ஜனாதிபதி கோத்தாபயவின் கட்சியைச் சார்ந்த வர். எனவே அவர் தமிழ்க் கிராமங்களுக்கு சேவை செய்வார் என்பதை எதிர்பார்க்க முடியாது. அத்துடன் தற்போது ஒரே வட்டாரத்துக்குள் உள்வாங்கப்பட்ட கலாபோகஸ்வெவ சிங்கள கிரா மத்துக்கும், தமிழ்க்கிராமங்களுக்கும் இடைப் பட்ட பகுதியை சுமார் 10 கிலோமீட்டருக்கும் நீளமான காடு பிரித்து நிற்கின்றது. அபப்டியிருக் கையில் எப்படி, எந்தத் தர்க்க ரீதியில் இந்தக் கிராமங்களை ஒரே வட்டாரத்துக்குள் உள்வாங் கினர் என்பது புரியாத புதிரே.

## மறைக்கப்பட்ட வரலாறு



வவுனியா மாவட்டத்தின் நடுத்தரக் குளங்களின் பட்டியலில் ஒன்றாக கொக்கச்சான்குளமும் இணைக்கப்பட்டிருந்தது. அது தொடர்பான தரவுகள் மாவட்டசெயலகத்தினால் வருடம்தோறும் வெளியிடப்படும் புள்ளி விபரக்கோவையிலும் குறிப்பி டப்பட்டுள் ளன . இறுதியாக 2009ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட கோவை யில் கூட, அந்தக்குளத்தின் பெயர் கொக்கச்சான்குளம் என பதிவுசெய்யப்பட்டிருந்தது. எனினும் திடீரென அது கைவிடப்பட் டகுளமாக வகைப்படுத்தப்பட்டு 2011ஆம் ஆண்டு வெளியாகியி ருந்த கோவையில் கொக்கச்சான்குளம் என்ற பெயர் நீக்கப்பட்டி ருந்தது. கொக்கச்சான்குளத்தின் வரைபடங்களும் தரவுகளும் அரசதிணைக்களங்களின் கோவைகளில் இருந்தும் நீக்கப்பட்டி ருந்தன .அப்படித் தரவுகள் நீக்கப்பட்டவிடயம் தொடர்பாக அந்தக் காலப்பகுதியில் வன்னி நாடாளுமன்றஉறுப்பினர்களாக இருந் தவர்கள் நாடாளுமன்றின் கவனத்துக்கும் கொண்டு சென் றார்கள்.

அதன்பிறகு கொக்கச்சான்குளம், வவுனியா சிங்களப் பிரதேச செயலகத்தின் கீழுள்ள ஈரப்பொத்தானை கமக்காரர் அமைப்பி டம் திருத்துவதற்காக பொறுப்பளிக்கப்பட்டது. ஆயினும் அது இராணுவத்தின் முயற்சியில் திருத்தப்பட்டு 'கலாபோகஸ்வெவ' என பெயர் மாற்றப்பட்டது.காட்டரச மரத்தடிக்குளம்'என்பது 'கலா போகஸ்வெவ' என்பதன் தமிழ்ப் பதம்.

அஜித்குமார் நடித்த 'சிட்டிசன்' என்ற படத்தில் அத்திப்பட்டி என்ற ஒரு ஊரே நாட்டின் வரைபடத்திலிருந்து அழிக்கப்பட்டது போல , கொக்கச் சான்குளமும் தமிழ்மக்களிடம் இருந்து பறிக்கப்பட்டு,அழிக்கப்பட்டு 'போகஸ்வெவவாக 'மாற்றப்பட்டுள்ளது. பேரினவாத அரசாங்கத்தின் இந்தக் கபடத்தனத்தை, போருக்குப் பின்னர் துவண்டு போயிருந்த தமிழர் தரப்பு எதிர்க்கத் துணியவில்லை.

(மறுபக்கம் பார்க்க)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**அஜித்குமார் நடித்த 'சிட்டிசன்' என்ற படத்தில் அத்திப்பட்டி என்ற ஒரு ஊரே நாட்டின் வரைபடத்திலிருந்து அழிக்கப்பட்டது போல , கொக்கச்சான்குளமும் தமிழ் மக்களிடம் இருந்து பறிக்கப்பட்டு,அழிக்கப்பட்டு 'போகஸ்வெவவாக 'மாற்றப்பட்டுள்ளது. பேரினவாத அரசாங்கத்தின் இந்தக் கபடத்தனத்தை, போருக்குப் பின்னர் துவண்டு போயிருந்த தமிழர் தரப்பு எதிர்க்கத் துணியவில்லை.**



## மணலாறு

திருகோணமலை,முல்லைதீவு,வவுனியா,ஆகிய மாவட்டங்களின் மையப்பகுதி மணலாறு. தமிழர்களின் இதய பூமி என்று அழைக்கப்பட்ட மணலாற்றில் சிங்களக்குடியேற்றங்கள் பரவலாக மேற்கொள்ளப்பட்டு, வெலிஓயா என்று பெயர்மாற்றப்பட்டது.
எல்லைப் பிரதேசமாகவிருந்த மணலாறு பகுதியை 1987 அநுராதபுரம் மாவட்டத்தின் பதவியா பிரதேச செயலகத்தின் நிர்வாகத்தின் கீழ்கொண்டுவந்து, அங்கு பரவலான சிங்களக்குடியேற்றங்களை மேற்கொண்டுவிட்டு, வெலிஓயா என பெயரிட்டு 2011ஆம்ஆண்டு முல்லைத்தீவுடன் இணைக்கப்பட்டது.அதன்பின்னர் வெலிஓயாவுக்கு தனியான பிரதேசசெயலாளர் பிரிவு உருவாக்கப்பட்டது.1988 ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட சிறப்புவர்த்தமானி மூலம் மணலாறு மற்றும் வவுனியா மாவட்டத்தின் சில பகுதிகள் அதற்குள் உள்ளீர்க்கப்பட்டிருந்தன



பெயர் மாற்றப்பட்ட தமிழர் பகுதிகள். வன்னியில் சிங்களபெயர்மாற்றம் செய்யப்பட்ட தமிழ்மக்களின் பூர்வீகக் கிராமங்கள் இவை:

மணலாறு – வெலிஓயா.
மண்கிண்டிமலை – பன்சல்கந்த
முந்திரிகைகுளம் – நெலும்வெவ
ஆமையன்குளம் – கிரிப்பென்வெவ
மயில்குளம் – மொனரவெவ
கொக்கச்சான்குளம் – கலாபோகஸ்வெவ
கச்சல்சமணங்குளம் – சபுமல்கஸ்கந்த.

### ஜே.ஆரின் குள்ளநரித்தனம்

1977ஆம் ஆண்டு ஜனாதிபதியாகவிருந்த ஜே.ஆர். ஜெயவர்த்தனவின் காலத்திலேயே மணலாறு பகுதியில் மகாவலி அபிவிருத்தி என்ற போர்வையில் சிங்களக் குடியேற்றத்திட்டங்களுக்கான பிள்ளையார் சுழி போடப்பட்டது. அதன் அதன் பின்னர் ஆட்சிக்கு வந்தவர்களும் ஜே.ஆர் ஆரம்பித்த பணியை சிரமேற் கொண்டு தொடர்ந்தனர். இதன் பயனாக வெலிஓயாவில் தற்போது 18 கிராமங்களை கொண்ட ஒன்பது கிராமசேவகர் பிரிவுகள் ஒன்றிணைக்கபட்டுள்ளதுடன், 3500 குடும்பங்களை சேர்ந்த 12 ஆயிரம் சிங்களமக்கள் வாழ்ந்து வருகின்றனர். மணலாறுபகுதி வடக்கு கிழக்கைஇணைக்கும் எல்லைப் பகுதியாக உள்ளமையால், அதனைப் பிரித்து வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்கு இடையிலான நிலத்தொடர்பை துண்டிக்கசெய்வதும், . வடக்கு= கிழக்கு இணைப்பு என்ற கோரிக்கையை வலுவிழக்கச்செய்வதுமே பேரினவாதத்தின் பிரதான நோக்கங்களாக இருந்தன. இப்போது அதில் வெற்றியையும் கண்டிருக்கின்றன.

### முல்லைத்தீவு முற்றுகைக்குள்!

இறுதியாக வெளியிடப்பட்ட வர்த்தமானி அறிவித்தலின் பிரகாரம் மகாவலி "எல் வலயமானது முல்லைத்தீவின் பல பகுதிகளுக்கும் விஸ்தரிக்கப்பட்டுள்ளது. முல்லைத்தீவு மாவட்டத்தின் எல்லைக் கிராமங்களான மண்கிண்டிமலை, ஆமையன்குளம், முந்திரிகைக்குளம் ,சிலோன் தியேட்டர்ஸ் பண்ணை,கென்பண்ணை,மற்றும் வவுனியாவடக்கின் ,மயில்குளம்,கொக்கச்சான்குளம், போன்ற தமிழரின் பூர்வீக கிராமங்கள் ஏற்கனவே சிங்களக்குடியேற்றங்களாக மாற்றப்பட்டு சிங்களப்பெயர்களும் சூட்டப்பட்டுவிட்டன.
அந்தநிலையில் மீண்டும் மகாவலி "எல் வலயத்துக்குள் முல்லைத்தீவு மாவட்டத்தின் நாயாறு,கொக்கிளாய்,கருநாட்டுகேணி,கொக்குத்தொடுவாய் போன்ற பூர்வீகத்தமிழ் கிராமங்கள் உள்வாங்கப்பட்டுள்ளன. இங்கு வாழ்ந்த மக்களின் 2150 ஏக்கர் வயல்காணிகள் சிங்கள மக்களுக்கு பிரித்து வழங்கப்பட்டுள்ளன. மேற்குறித்த பகுதிகளை உள்ளடக்கிய கிராமங்களில 1984 இல் அரசபடையினரால் தமிழ்மக்கள் வெளியேற்றப்பட்டிருந்தனர். மணலாறு காட்டுப்பகுதியில் னவிடுதலைப்புலிகள் பதுங்கியிருப்பதாகவும் அவர்களுக்கெதிரான இராணுவநடவடிக்கை ஒன்றைமேற்கொள்ள வேண்டியுள்ளதால் கொக்கிளாய் கிழக்கு,மேற்கு,கருநாட்டுகேணி,கொக்குத்தொடுவாய் போன்ற கிராமங்களினது மக்களை 24 மணித்தியாலங்களுக்குள் வெளியேறுமாறும் இலங்கை அரசபடையினரால் 1984 ஆம் ஆண்டு மார்கழி மாதம் ஒரு அறிவித்தல் விடுக்கப்பட்டது. உயிருக்குப் பயந்து தமிழ்மக்கள் வெளியேறிய நிலையில் அந்தபிரதேசங்கள் அனைத்தும் இராணுவத்தின் வசமாகின.ஆயினும் இராணுவ நடவடிக்கைகள் எவையும் இடம் பெறாத நிலையில் சிங்களக்குடியேற்றங்கள் முளைவிடத்தொடங்கின. போர்முடிவுற்று 2011ஆம் ஆண்டுக் காலப்பகுதியில் மீளக்குடியேறியபோதே, தமிழ்மக்கள் தமது நிலங்கள் பறிபோனதை உணர்ந்தனர்.

### புதிய மாவட்டத்துக்கு திட்டமா?

முல்லைத்தீவு, திருகோணமலை, வவுனியா, அனுராதபுரம், ஆகிய எல்லைகளின் மையப்பகுதியில் அரசினால் முன்னெடுக்கப்பட்டுள்ள சிங்களக் குடியேற்றங்களால் அரச திணைக்களங்களுக்கிடையே பல்வேறுவிதமான நிர்வாகச் சிக்கல்கள் ஏற்பட்டு வருகின்றன.அங்கு குடியேற்றப்பட்டுள்ள மக்கள் ஒவ்வொரு தேவைக்கும் வெவ்வேறு மாவட்டங்களுக்குச் செல்கின்றனர். வெலிஓயா பிரதேச செயலக கட்டடம் முல்லைத்தீவு எல்லைக்குள் அமைந்திருக்கின்றது.அதன் சில கிராமசேவகர் பிரிவுகள் வவுனியாவின் எல்லைக்குள் வருகின்றன. எனவே குடியேற்றப்பட்டசிங்களமக்கள் சிலதேவைகளுக்காக அனுராதபுரத்துக்கும் சென்றுவருகின்றனர்.அந்தப் பகுதிகளுக்கு எல்லை நிர்ணயம் சரிவரச் செய்யப்படவில்லை.அல்லது இப்படி நிர்வாகச் சிக்கல் என்று காரணம் காட்டி, வடக்கு மாகாணத்தில் புதிதாக ஒரு சிங்கள மாவட்டத்தை உருவாக்கும் திட்டமாகவும் இருக்கலாம். எனவே நில ஆக்கிரமிப்புக்கெதிரான ஒரு கட்டமைப்பை தமிழர் தரப்பு விரைவாக முன்னெடுக்கவேண்டும். இல்லாவிடில் வடக்கின் இனவிகிதாசாரத்தில் விரைவில் மாற்றங்கள் ஏற்படும்.

## மகாவலி'எல்' வலயம்

தமிழர் பகுதிகளில் முன்னெடுக்கப்படும் அநேகமான குடியேற்றத் திட்டங்கள் மகாவலி அபிவிருத்தி என்றபோர்வையிலேயே மேற்கொள்ளப்பட்டன.
1979 ஆம் ஆண்டு இலங்கைஅரசால் மகாவலிஅதிகாரசபை உருவாக்கப்பட்டது. மகாவலி கங்கையின் நீரைப் பயன்படுத்தி முன்னெடுக்கக்கூடிய செயற்திட்டங்களுக்காக அடையாளப்படுத்தப்படும் நிலங்களை வர்த்தமானி அறிவிப்பின் மூலம் விசேடநிலப்பகுதியாக சுவீகரிக்கலாம் என்பது அதன் அடிப்படை அமைப்பு.
அதன்மூலம் 1988 ஆம் ஆண்டு வடக்கு, கிழக்கின் எல்லைப் பகுதிகளை குறிவைத்து “எல்” வலயம் உருவாக்கப்பட்டது. 'எல்' வலயத்தினூடாக மாவட்ட நிர்வாகத்திடம் எவ்வாறான அனுமதிகளும் பெற்றுக்கொள்ளாமல் உச்சஅதிகாரத்தை பயன்படுத்தி ஆக்கிரமிப்புச் செயற்பாடுகளை முன்னெடுத்து வருகின்றது பேரினம். வவுனியாவின் சேமமடுக்குளத்துக்கு மகாவலிநீரைக் கொண்டுவருவதாக ஆரம்பிக்கப்பட்ட 'எல் 'வலயத்தில் இன்னமும் ஒரு சொட்டு நீரும் வந்துசேரவில்லை. மாறாக வெலிஓயா என்ற சிங்களபிரதேச செயலாளர் பிரிவே வந்து சேர்ந்துள்ளது.

### 'கிபுள்' ஓயாத்திட்டம்”

மகாவலி அதிகாரசபையால் புதிதாககிபுள்ஓயா என்ற பெயரில் நீர்தேக்கம் ஒன்றை வவுனியா வடக்கில் அமைப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. அந்தத் திட்டத்துக்காக 7 ஆயிரம் மில்லியன் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. அதனடிப்படையில் 62 அடி உயரத்துக்கு பிரமாண்ட அணை அமைத்து நீரைத் தேக்கி வைக்கவுள்ளதாகத் திட்டவரைபுகளில் தெரிவிக்கப்பட்டுள்ளது. எனினும் அந்த விடயம்தொடர்பாக மாவட்டநிர்வாகத்திடம் எந்தவித அனுமதியும் பெற்றுக்கொள்ளப்படவுமில்லை, எவ்வித தகவலும் வழங்கப்படவுமில்லை.
மகாவலி அதிகார சபையினூடாக அந்தப் பணிகள் ஆரம்பிக்கப்படவுள்ளன. அதன்மூலம் 2 ஆயிரத்து 500 ஏக்கர் காடுகள் அழிக்கப்பட்டு கலாபோகஸ்வெவ மற்றும் சம்பத்நுவர பகுதிகளைச் சேர்ந்த சிங்களமக்களுக்கு காணிகள் வழங்கப்படவுள்ளன.
இந்த அணையின் நீரேந்துப்பகுதி மற்றும் அணைக்கட்டு தமிழர் பகுதிக்குள்ளும், அதன் பயனாளர்கள் சிங்களகுடியேற்றப்பகுதிக்குள்ளும் தெரிவுசெய்யப்பட்டமை இதன் நோக்கத்தை தெளிவாகவே காட்டுகின்றது. அந்த நீர்த்தேக்கத்தை அமைப்பதற்கு பெரும்பகுதி நிலம் அவசியமாகவிருப்பதனாலேயே தமிழ்மக்களின் பூர்வீகக் காணிகள் அமைந்துள்ள காஞ்சூரமோட்டை பகுதியை வனவளத்திணைக்களம் முழுமையாக விடுவிக்காமல் இழுத்தடித்து வருவதாகச் சொல்லப்படுகின்றது.அத்துடன் போகஸ்வெவவுக்கு விஜயம்செய்த கோத்தாபய, கிபிள் ஓயாத்திட்டம் விரைந்து செயற்படுத்தப்படும் என்ற வாக்குறுதியையும் அந்த மக்களுக்கு வழங்கியிருந்தார். அதன்மூலம் மேலும் சில புதியகுடியேற்றங்களும் முளைக்கவுள்ளன என்று உறுதியாகியுள்ளது.



**“நிலமிழந்து போனால் பலமிழந்து போகும்
பலமிழந்துபோனால் இனமழிந்து போகும்”**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அறிந்தும் அறியாமலும்



○ சுழியன்

## மைத்திரி பக்கம் தாவும் எஸ்.பி.!



ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் தலைவரும் முன்னாள் ஜனாதிபதியுமான மைத்திரிபால சிறிசேனவுக்கும், ஸ்ரீலங்கா பொது ஜன பெரமுனவின் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.பி.திஸாநாயக்கவுக்குமிடையில் இரகசிய சந்திப்பொன்று நடைபெற்றுள்ளது.

கொழும்பிலுள்ள மைத்திரிபால சிறிசேனவின் இல்லத்தில் நடைபெற்ற இந்தச்சந்திப்பின்போது இருவரும் மனம்விட்டு பல விடயங்கள் தொடர்பில் கலந்துரையாடியுள்ளனர் என தகவல் வெளியாகியுள்ளது.

அரசியல் களத்தில் கட்சித் தாவலுக்குப் பேர்போன எஸ்.பி. திஸாநாயக்க, நல்லாட்சியின்போது மைத்திரிபால சிறிசேனவின் விசுவாசியாகவே செயற்பட்டார். இதனால்தான் பொதுத்தேர்தலில் தோல்வியுற்றிருந்தாலும் தேசியப்பட்டியல் ஊடாக எஸ்.பிக்கு வாய்ப்பு வழங்கப்பட்டு அமைச்சுப் பதவியையும் மைத்திரி வழங்கினார்.

எனினும், மைத்திரிபாலவுக்கு நெருக்கடி ஏற்பட்டு, ராஜபக்ச அலை மீண்டும் உருவானபோது, மைத்திரியை கைவிட்டு ராஜபக்சக்களுடன் சங்கமித்தார் எஸ்.பி. இதனால் சுதந்திரக்கட்சியின் உறுப்புரிமையில் இருந்தும் நீக்கப்பட்டார்.

2020 இல் நடைபெற்ற பொதுத்தேர்தலில் நுவரெலியா மாவட்டத்தில் மொட்டு கட்சியின் சார்பில் போட்டியிட்டு வெற்றிபெற்றிருந்தாலும் எஸ்.பிக்கு இராஜாங்க அமைச்சு பதவிகூட வழங்கப்படவில்லை. அரசியலில் நெடுநாள் அனுபவம் கொண்ட பல அமைச்சுப் பதவிகளை வகித்த எஸ்.பிக்கு மாவட்ட தலைவர் பதவி மட்டும் வழங்கப்பட்டமை பெரும் ஏமாற்றமாக அமைந்தது.

அதேபோல் அண்மைக்காலமாக அரசின் செயற்பாடுகளையும் அவர் விமர்சித்து வருகின்றார். எனவே, விரைவில் அவர் சுதந்திரக்கட்சியில் மீண்டும் இணையக்கூடும் என தகவல் வெளியாகியுள்ளது. எஸ்.பியுடன் செல்வதற்கு சில மாகாண சபை உறுப்பினர்களும் தயார் நிலையில் இருப்பதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

## குழப்பத்தில் அமைச்சர்கள்

இலங்கையில் சிறப்பாகச் செயற்படும் புகழ்வாய்ந்த அமைச்சர்கள் யாரென முகநூலொன்றில் நடத்தப்பட்ட கருத்துக்கணிப்பில் சுகாதார அமைச்சர் பவித்ராதேவி வன்னியாராச்சி முதலிடம் பிடித்துள்ளார். அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ 2ஆவது இடத்தையும், விளை யாட்டுத்துறை அமைச்சர் நாமல் ராஜபக்ச மூன்றாவது இடத்தையும் பிடித்துள்ளனர்.

முகநூலில் ஏன் திடீரென இவ்வாறானதொரு கருத்துக் கணிப்பு நடத்தப்பட்டது. இதன் பின்புலம் என்னவென அரசியல் களத்திலும் ஆராயப்பட்டுள்ளது. ஏனெனில் முக்கியமான சில புள்ளிகளும் இதில் வாக்களித்துள்ளதாலேயே அரசியல் வாதிகளின் கவனத்தையும் ஈர்த்துள்ளது.

எனினும், மேற்படி கருத்துக் கணிப்பால் அமைச்சர்கள் சிலர் குழப்பமடைந்துள்ளனர் எனவும் தகவல் வெளியாகியுள்ளது.



## அரசியலுக்குள் நுழையும் அழகி

கொழும்பில் கடந்தவாரம் இடம்பெற்ற "திருமதி இலங்கை" அழகு ராணி போட்டியானது தேசிய ரீதியில் மட்டுமல்ல சர்வதேசத்தின் கவனத்தையும் ஈர்த்தது. போட்டி சுமூகமாக இடம்பெற்றிருந்தால் அது தொடர்பில் உள்ளூர் ஊடகங்கள்கூட கூடுதல் கவனத்தைச் செலுத்தியிருக்கா.

எனினும், வெற்றியாளருக்கு அணிவிக்கப்பட்ட கிரீடத்தை திருமதி உலக அழகு ராணி பறித்தெடுத்த சம்பவமானது பெரும் சர்ச்சையாக உருவெடுத்தது. அதுவும் கிரீடம் கழற்றப்பட்டதற்கு அவர்கூறிய காரணமும் கடும் கண்டனத்துக்கு உள்ளானது. கடைசியில் விடயம் சர்வதேசம் வரை சென்றது.

திருமதி உலக அழகியின் செயலுக்கு கண்டனங்கள் குவிந்ததால், திருமதி இலங்கை அழகி போட்டியில் முதலில் வெற்றிபெற்ற புஷ்பிகா டி சில்வாவுக்கே மகுடம் மீண்டும் சூட்டப்பட்டது. எனினும், இப்பிரச்சினை இன்னும் தீரவில்லை. திருமதி உலக அழகி தன்னிடம் பகிரங்கமாக மன்னிப்பு கோரவேண்டும் என்பதில் திருமதி இலங்கை அழகி உறுதியாக இருக்கிறார். இதனை திருமதி உலக அழகி ஏற்க மறுத்துள்ளார். இதனால் நீதிமன்றம் ஊடாகவே இந்தப்பிரச்சினைக்கு முடிவு கட்டப்படும்.

இது ஒருபுறம் இருக்கட்டும். திருமதி இலங்கை அழகியாக தெரிவுசெய்யப்பட்ட புஷ்பிகா டி சில்வா, தான் அரசியலுக்கு வரப்போவதாக அறிவித்துள்ளார். அதற்கான கால எல்லையை அவர் அறிவிக்காவிட்டாலும் அரசியலில் ஈடுபடுவது உறுதி என தெளிவாக அறிவித்துள்ளார்.

பொலனறுவை மாவட்டமே அவரின் இலக்காக இருக்கின்றது. எந்தக் கட்சி என அவர் அறிவிக்காவிட்டாலும், ரோஸி சேனாநாயக்கவின் வழியில் செயற்படவுள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளார். எனினும் கடந்த ஜனாதிபதித் தேர்தலில் புஷ்பிகா, கோத்தாபயவுக்கு ஆதரவாக பிரசாரத்தில் ஈடுபட்டார் என்பது குறிப்பிடத்தக்கது.

'திருமதி அழகி', அரசியலுக்கு வரும் அறிவிப்பை விடுத்துள்ளதால், மாகாணசபைத் தேர்தல் நெருங்கும்வேளையில் அரசியல் கட்சிகள் அவருக்கு அழைப்பு விடுக்கக்கூடும் என எதிர்பார்க்கப்படுகின்றது.



## அசுத்தமாகிவரும் அதிஉயர் சபை



ராஜபக்சக்கள் மற்றும் பொன்சேகாவுக்கிடையிலான பகைமை இன்னும் பொங்கிக்கொண்டு தான் இருக்கின்றது, 2010 ஆம் ஆண்டில் ஆரம்பமான அரசியல் ரீதியான மோதல் இன்னும் தணியவில்லை. அவ்வப்போது மேடைகளில் இரு தரப்புக்களும் சரமாரியாக சொற்கணைகளைத் தொடுத்துக் கொண்டாலும் மோதல் உச்சம் தொட்ட சம்பவம் கடந்த வியாழனன்று பதிவானது. ரஞ்சன் ராமநாயக்கவின் நாடாளுமன்ற உறுப்புரிமையை நீக்குவது தொடர்பில் சபாநாயகர் எடுத்த தீர்மானத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்து கடந்த வியாழக்கிழமை பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி சபைக்குள் போராட்டத்தில் ஈடுபட்டது. இதன்போது ஆளும் மற்றும் எதிரணி உறுப்பினர்களால் கருத்துகளும் முன்வைக்கப்பட்டன. இதன்போது எழுந்த முன்னாள் இராணுவத் தளபதி பீல்ட்மார்ஷல் சரத் பொன்சேகா,

" இராணுவத்திலுள்ள காட்டு நீதிமன்றமொன்றால் எனக்கு தண்டனை வழங்கப்பட்டது. சிறை வைக்கப்பட்டேன். குறித்த தீர்ப்புக்கு எதிராக 3 நீதிமன்றங்களில் மேன்முறையீடு செய்திருந்தேன். இவ்வாறு மேன்முறையீடு செய்திருந்தும் எனக்கு நாடாளுமன்றம் வருவதற்கான வாய்ப்பை அப்போதைய சபாநாயகர் (சமல் ராஜபக்ச) வழங்கவில்லை. என்றார். இதன்போது எழுந்த அமைச்சர் சமல் ராஜபக்ச, "நாடாளுமன்றம் வருவதற்கு அனுமதி வழங்கினேன்" என்றார். பதிலுக்கு " நான் என்ன சொன்னேன் என்று விளங்கியதா?" என பொன்சேகா கேட்டார்.

"என்ன என்று கேட்கிறாயா, நான் உமக்கு அனுமதி வழங்கவில்லையா?" என சமல் பதிலளித்தார்.

"நான் சொல்வதை கேளும்" என்றார் பொன்சேகா.

"என்ன ஐசே கேட்பது, உன்னுடைய பலத்தை காட்ட முற்படுகின்றாயா?. நீதான் மடையன். வெளியில் வா காட்டுகின்றேன்" என்றார் சமல் ராஜபக்ச. இடையிடையே மடையன், கழுதை உள்ளிட்ட சொற் பிரயோகங்களும் இடம்பெற்றன. இருவருமே முஷ்டியை முறுக்கிக்கொண்டு முன்நோக்கி பாயமுற்பட்டாலும் உறுப்பினர்கள் கட்டுப்படுத்தினர். சமல் ராஜபக்சவை அமைதியான அரசியல்வாதியாகவே பார்த்த பலருக்கு அவர் நடந்துகொண்ட விதம் பெரும் அதிர்ச்சியாக அமைந்தது. சம்பவம் நடைபெற்ற பின்னர் இருவரும் கவலை வெளியிட்டிருந்தாலும் பகைமை இன்னும் தணிய வில்லை. அதேவேளை, ஆசனங்களில் உரிய வகையில் அமர்வதில்லை, நாடாளுமன்ற நிலையியற் கட்டளைச்சட்ட திட்டங்களுக்கு எதிராக செயற்படுகின்றமை உட்பட பல விடயங்கள் இடம்பெற்றுவருகின்றன. எனவே, ஜனநாயகத்தின் கோவிலான நாடாளுமன்றத்தின் புனிதம் பாதுகாக்கப்படவேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சஞ்சீவி
11 ஏப்ரல் 2021



# தென்சீன கடலில் ஒரு போர்முனை!

ஆர்.பிரகாஷ்

உலகில் தீராப் பிரச்சினைகளில் ஒன்றான தென்சீனக் கடல் விவகாரம் மீண்டும் பூதாகரமாக எழுந்திருக்கின்றது. ட்ரம்பின் ஆட்சிக்காலப் பிற்பகுதியில் நெருப்புக்கு முன்னான தணல் போன்று இருந்த இந்த விவகாரம் சீனா - தாய்வான் இடையிலான முறுகலோடு தற்போது மெல்ல மீண்டும் பற்றியெரிய ஆரம்பித்திருக்கின்றது. தென்சீனக் கடல் பகுதியில் இராணுவ மேலாதிக்க அச்சம் வல்லரசுகளால் வலிந்து ஏற்படுத்தப்பட்டிருக்கிறது.

**சர்ச்சைக்குரிய தென்சீனக் கடல்**

கடந்த மூன்று தசாப்தங்களாக தென்சீனக் கடல்பகுதி சர்ச்சைகளுக்குப் பஞ்சம் இல்லாத பூமிதான். மேற்படி கடல்பரப்பு தனக்குச் சொந்தமானது என்று சீனா சொந்தம் கொண்டாடிவரும் நிலையில், தாய்வான், பிலிப்பைன்ஸ் உள்ளிட்ட நாடுகள் சீனாவுக்கு அதில் உருத்தில்லை என்று வாதாடி சர்வதேசத் தீர்ப்பாயத்தில் வெற்றியும்



டுள்ளன. ஆனால், தீர்ப்பை ஏற்காமல் சீனா தென்சீனக் கடல்பரப்பில் தொடர்ந்தும் அத்துமீறி வருகின்றது. தென்சீனக் கடல்பகுதியில் ஒரு குட்டித் தீவை செயற்கையாக உருவாக்கியுள்ள சீனா, அந்தத் தீவை இராணுவத் தளபாடங்களால் நிரப்பியுள்ளது. ஆக, சீனத்தின் இராணுவக் கட்டமைப்பால் தென்சீனக் கடலுடன் தொடர்புடைய நாடுகளுக்கு எந்நேரமும் ஏதோவொரு தலைவலி இருந்துகொண்டுதான் உள்ளது. அத்துமீறிய போர்ப் பயிற்சி, அண்டைய நாடுகளின் வான்வெளியால் போர் வானூர்திகளைப் பறக்கவிடுதல் என்றவாறாக நீள்கின்றது சீனாவின் நடவடிக்கை.

தென்சீனக் கடலில் ஆதிக்கம் செலுத்துவதுடன் சீனா தன் செயற்பாடுகளை நிறுத்துவதில்லை. ஏனைய நாடுகளை ஆக்கிரமிப்பதும் அதன் நோக்கம்தான். ஹொங்கொங் பகுதியை தன் அதிகாரத்துக்கு உட்பட்ட பகுதியாகப் பேணிவரும் சீனா, அதே வகையறாவுக்குள் தாய்வானையும் கொண்டு செல்ல அண்மைக்காலமாக காய்நகர்த்தல்களை மேற்கொள்கின்றது. இதன் ஆகப்பெரிய பாய்ச்சலாக, 'தாய்வானை அமைதியாக அல்லது இராணுவ பலத்தால் வெல்வோம்' என்று விடுத்துள்ள எச்சரிக்கை, போர்ப் பதற்றத்தை இரட்டிப்பாக்கியுள்ளது.

**அமெரிக்கத் தலையீடு**

சீனாவின் இந்த மிரட்டலை தாய்வானால் தனியாகச் சமாளிக்க முடியாது. எனவே இந்த விவகாரத்தில் அமெரிக்காவின் உதவியை நாடியுள்ளது தாய்வான்.

சீனாவுக்கு எதிராக எப்போது என்ன தலையீட்டை மேற்கொள்ளலாம் என்று கழுகுப் பார்வையைச் செலுத்திக் கொண்டிருக்கும் அமெரிக்காவுக்கு தாய்வானின் அழைப்பு மிகப்பெரும் 'சுவீப் ரிக்கெற்'தான். தற்போது தென்சீனக் கடலில் அமெரிக்காவும் தாய்வானும் இராணுவ போர்ப் பயிற்சியை கூட்டாக மேற்கொண்டுள்ளன. அத்துடன், 'தாய்வான் தன்னைத் தற்காத்துக்கொள்ளத் தயாராக உள்ளது. போரில் ஈடுபட வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டால் நிச்சயம் போரில் ஈடுபடுவோம். இறுதி நாள் வரையில் போரிடுவோம்" என்று தாய்வான் வெளிவிவகார அமைச்சர் ஜோசப் வூ தெரிவித்துள்ளார்.

இந்த விவகாரம் தாய்வானுடன் நிற்காது. அடுத்ததாக வியட்நாம், பிலிப்பைன்ஸ், கம்போடியா போன்ற நாடுகள் இந்த விவகாரத்தில் தலையிடும். ஏனெனில் தாய்வானுக்கு ஆதரவாக சீனாவுக்கு அவை வெளிப்படுத்தும் எதிர்ப்புத்தான் தமது இருப்பு என்பதுதான் தென்சீனத்துத் தேசங்களின் நிலைப்பாடு. அவ்வாறு அந்த நாடுகள் அனைத்தும் ஓரணியில் நின்று எதிர்ப்பை வெளிப்படுத்தும் பட்சத்தில் சீனா அதற்கு தக்க துலங்கலை ஆற்றியே தீரும். ஆக, இன்னொரு போர்முனை தென்சீனத்தில் விரைவில் திறக்கப்படும்.






# எல்லாம் பணமயம்!

ஆர்.லயனல்


இந்தியன் பிரீமியர் லீக் (ஐ.பி.எல்.) தொடர் ஆரம்பமாகியுள்ளது. இந்தத் தொடர் ஆரம்பமாகும்போது வழக்கம் போல அதற்கு ஏதேனும் எதிர்ப்புக்காட்டும் பாகிஸ்தான், இம்முறையும் தன் எதிர்ப்பை வலுவாகப் பதிவுசெய்துள்ளது. ஆனால் இந்த வருடம் பாகிஸ்தான் முன்வைத்துள்ள கருத்துக்களில் நியாயம் இருக்கவே செய்கின்றது.

தென்னாபிரிக்கா - பாகிஸ்தான் அணிகளுக்கு இடையில் ஒருநாள் தொடர் அண்மையில் நடைபெற்றது. இந்த இரு அணிகளுக்கும் இடையிலான ரி=20 தொடர் தற்போது நடைபெற்று வருகின்றது. எதிர்வரும் 16 ஆம் திகதி வரை இந்த ரி...20 தொடர் நடைபெறவுள்ளது. ஒருநாள் தொடரின் முதல் இரு ஆட்டங்களின் நிறைவில் இரு அணிகளும் தலா ஒவ்வொரு வெற்றியைப் பெற்றிருந்தன. தொடரின் மூன்றாவது ஆட்டமே சம்பியனைத் தீர்மானிக்கும் என்ற நிலையில் தென்னாபிரிக்க அணியின் முன்னணி வீரர்கள் பலர் குறித்த தொடரில் இருந்து விலகி தத்தம் ஐ.பி.எல். அணிகளுடன் இணைந்தனர். மூன்றாவது ஆட்டத்தில் பாகிஸ்தான் வெற்றிபெற்று கிண்ணத்தைக் கைப்பற்றியது.

தென்னாபிரிக்க அணியின் மூத்த வீரர்களின் இந்தப் புறக்கணிப்பு பாகிஸ்தானை கோபம் கொள்ளச் செய்துள்ளது. குறிப்பாக பாகிஸ்தான் அணியின் முன்னாள் தலைவரான அப்ரிடி, 'தேசிய அணியில் இருந்து வீரர்களை விடுவித்து ஐ.பி.எல். தொடரில் விளையாட வைத்தமை தென்னாபிரிக்க கிரிக்கெட் சபையின் முட்டாள்தனமாக முடிவு. இது பிற்போக்கானது' என்று விமர்சித்துள்ளார். அப்ரிடி மட்டுமல்ல பணபலம் கொண்ட இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையை ஏனைய கிரிக்கெட் சபைகள் எதிர்க்க அஞ்சுகின்றன என்று பாகிஸ்தான் கிரிக்கெட் சபையின் அதிகாரிகள், பாகிஸ்தான் அணியின் முன்னாள் வீரர்கள் எனப் பலரும் விமர்சித்து வருகின்றமையும் இங்கே கவனிக்கத்தக்கது. தேசியப் பிரச்சினைகள் மற்றும் இன்னபிற காரணங்களால் பாகிஸ்தான் வீரர்கள் ஐ.பி.எல். தொடரில் விளையாட இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை அனுமதிக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

**" காசே தான் கடவுளப்பா
கிரிக்கெட்டுக்கும் அது பொருந்துமப்பா"**

# கம்பீரே சொல்லிட்டார் அப்ப அது நடக்காது




கிரிக்கெட் ரசிகர்களின் தற்போதைய பொழுதுபோக்காக மாறியுள்ளார் இந்திய அணியின் முன்னாள் நட்சத்திர வீரரான கம்பீர்.

ஐ.பி.எல் தொடர் ஆரம்பமாகியுள்ள நிலையில், இந்தத் தொடர் தொடர்பில் கருத்துத் தெரிவித்த கம்பீர் சென்னை அணி பிளே ஓப் சுற்றுக்குத் தகுதி பெறாது என்று தெரிவித்திருந்தார். இதையடுத்தே சென்னை அணி ரசிகர்களின் அன்புக்குரியவராக மாறியுள்ளார் கம்பீர். சென்னை ரசிகர்கள் பலர் கம்பீருக்கு தற்போது நன்றியும் தெரிவித்து வருகின்றனர்.

சென்னை வெளியேறும் என்று தெரிவித்த கம்பீருக்கு எதற்காக நன்றி சொல்ல வேண்டும். ஏனென்றால் கம்பீர் இதுவரை கணித்த எதுவும் இடம்பெற்றதில்லை. ஒரு அணி வெற்றிபெறும் என்று கம்பீர் சொன்னால் அது அடுத்த ஆட்டத்திலேயே தோல்வியடையும். ஒரு வீரர் நன்றாக விளையாடுகின்றார் என்று கம்பீர் சொன்னால் அடுத்த ஆட்டத்திலேயே அவர் குறைந்த ஓட்டங்களுடன் ஆட்டமிழந்துவிடுவார். ஆதலால் சென்னை அணி வெளியேறும் என்று கம்பீர் சொல்லியுள்ளார். அப்படியென்றால் சென்னை பிளேஓவ் சென்றுவிடும் என்பதுதான் ரசிகர்களின் கருத்து.

**நினைப்பதெல்லாம் நடந்துவிட்டால்
தெய்வம் ஏதுமில்லை"**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org